
விடுதலையும் வீடுபேறும்



கி. ஞானசூரியன்
M.Sc. (LONDON)

மணிவாசகாது "திருவாசகம் என்னும் தேனி"லுள்ள
பக்தி நெறியின் பண்பையும், முத்தி நெறியின்
மாண்பினையும் விளக்கும் சைவ
சித்தாந்த தத்துவ ஞான விருந்து

விடுதலையும்
வீடுபேறும்

கி. ஞானசூரியன் M. Sc. (Lond)

லண்டன் சைவ சித்தாந்த நிலையம்
London Saiva Siddhanta Centre

First Edition : July 1981

விலை: ரூபா 15
Price in U. K. and abroad £ 3

Available from

London Saiva Siddhanta Centre
72, King Edward Road
London E 17
&
PAARI NILAYAM, MADRAS-1

Printed at

Novel Art Printers
137, Jani Jan Khan Road
Royapettah, Madras-600 014
Phone : 82731

திருவாசகச் சிறப்பு

1. அருள்வாத வூரர்சொல அம்பலவர் தாமெழுதும்
திருவாசகத்தைத் தெளிந்தால்— கருவாம்
பவகதியும் நீங்கிப் பரமரரு ளாலே
சிவகதியும் உண்டாம் சிவம்.

2. கற்பாந்த காலம் கடவாக்கடல் கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே—அப்பன்
உருவா சகங்கொண் டுரைத்த தமிழ்மாலை
திருவாசக மென்னும் தேன்.

3. தொல்லை யிரும் பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல்அறுத்து ஆனந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசக மென்னும் தேன்.

மணிவாசகர் மொழிந்த மூன்று மாமந்திரங்கள்

1. நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!

2. ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்பு உனக்குஎன்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் எம் உடையானே

3. ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையில்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய்.



படையல்

''மூகத்துக் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்''

என்ற திருமந்திரப் பாடலை விளக்கி,
எனக்கு ஞானோபதேசம் செய்த,

எனது அருமைத் தந்தையார்
ஈழத்து அளவையூர் சிவத்திரு அ. கிருட்டிண
பிள்ளை அவர்கட்கும்,

பல அரிய, பெரிய சமய தத்துவ நூல்களைத்
தமிழில் வெளியிட்டுவரும்

தவத்திரு சுவாமி சித்பவானந்தர்
அவர்கட்கும்
இந்நூல்
படையல்

அணிந்துரை

ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

அடையாறு, சென்னை

விடுதலையால் அடைவது வீடுபேறு; அப்படியானால் விடுதலை வேறு அதனால் அடையும் வீடுபேறு வேறு என்பதாகுமா? இல்லை. விடுதலையே வீடுபேறாகும். விடு என்பதிலிருந்து விடுதல் என்ற சொல்லும் விடுதல் பெறுவது விடுதலை என்றும் வரும். விடுதல் பெறுவதே வீடுபேறாகும். அப்படியானால் வீடு பேறு எனத் தனித்துக் கூறுவானேன்? விடுதலையால் பெறும் இன்பங்கருதி அவ்விடுதலையையே வீடுபேறு எனத் தனித்துக் கூறுகிறோம். இதனையே முத்தி பெறுதல் என்பர். வடமொழியில் மோட்சம் என்பர்.

விடுதலை பெறுவது எதிலிருந்து? உலகப் பொருள்களிலுள்ள பற்றுதலிலிருந்து—ஏன் தன் உடம்பில் வைக்கும் பற்றுதலிலிருந்தும் விடுதலை பெற வேண்டும். இவ்விடுதலையை அறிவினால்தான் பெறமுடியும்.

மக்களுக்கு மாக்களைவிடப் பகுத்தறியும் அறிவு மிகுதியும் உண்டு. என்றாலும் பொய்யை மெய்யென்று காணும் அறிவே மிகுதி. அதனால் அவ்வறிவு அறியாமை எனப்படும். அறிவு என்பதற்கு ஞானம் என்ற சொல்லும் உண்டு. அதற்கு ஞான் (நான்), என்பதையுணரும் தன்மை என்பது பொருள். அத்தமிழ்ச் சொல் வடமொழியில் அப்படியே சென்றது. அதனுடன் வடமொழி எதிர்மறைச் சொல்லாகிய ‘அ’ என்பதைச் சேர்த்தால் அஞ்ஞானம் என ஆகும்; அது அறியாமையைக் குறிக்கும். எனவே அறிவு ஞானம் என்றும் அறியாமை அஞ்ஞானம் என்றும் வடமொழியில் வழங்குவனவாயின.

அஞ்ஞானம் நமக்கு இருவகையில் செயல்படுகின்றது. அதனைப் போக்கிக் கொள்ளல் வேண்டும். அதற்கும் இரண்டு வகையுண்டு.

ஒளியுடன் வெண்மையாய் இருப்பது வெள்ளி என்பது யாவரும் அறிந்ததே. ஒரு வெள்ளைக் கிளிஞ்சலைக் கண்ட மாத்திரத்தில் வெள்ளையாயும் சற்று ஒளியுடையதாயும் இருத்தலினால் அதனையே வெள்ளி என்னும் பொருள் எனக் கருதுவது ஒருவகையான அஞ்ஞானம். இந்த அஞ்ஞானத்தை எப்படிப் போக்கிக் கொள்வது? வெள்ளி என்ற பொருளின் வெண்மைத் தன்மையையும் அது பயன்படுமாற்றையும் நன்முக அறிந்திருந்தால் அதனினின்றும் மாறுபட்ட கிளிஞ்சலினை வெள்ளி எனக் கருத மாட்டோம். கிளிஞ்சலை வெள்ளி என நினைத்தது அஞ்ஞானம். இல்லை என்று நிறுவியது ஞானம். எனவே அஞ்ஞானத்தை ஞானத்தால் போக்கிக் கொள்ளவேண்டும். இங்கு கிளிஞ்சலின் உண்மைத் தன்மையை அஞ்ஞானம் மறைத்தது. ஞானம் தெளிவுபடுத்தியது.

'காமாலை கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்' என்று ஒரு பழமொழியுண்டு. காமாலை நோய் உள்ளவனுக்குப் பார்க்கும் பொருள்கள் எல்லாம் மஞ்சளாகத் தெரிகின்றன; வெள்ளைப் பொருளும் மஞ்சளாகத் தெரிகின்றது. வெள்ளை மலர் ஒன்று மஞ்சள் நிறமாக அவனுக்குத் தெரிகின்றது; அவனிடத்துள்ள காமாலை என்ற நோயால் மலரின் வெண்மைத் தன்மை—உண்மைத் தன்மை மறைக்கப்படுகின்றது. அதனால் வெண்மலரிடமாக அவனிடத்தில் அஞ்ஞானம் அமைகின்றது இந்த அஞ்ஞானத்தை எதனால் போக்க முடியும்? ஞானத்தால் போக்க முடியாது. ஞானம் உடையவனாக இருந்தாலும் அவனுக்கு அம்மலர் காமாலை நோயால் மஞ்சளாகவே தெரியும். ஓர் மருத்துவனைக் கொண்டு அக்காமாலை நோயைப் போக்கிக் கொண்டால் மலர் வெள்ளையாகத் தெரியும். ஒரு பொருளால் உண்டாகும் அஞ்ஞானத்தை அப்பொருளைப் போக்குவதன் மூலமே போக்க முடியும்.

கிளிஞ்சல் உதாரணத்தினுல் ஞானத்தால் அஞ்ஞானத்தைப் போக்கிக் கொள்ளலாம் என்பதும், வெண்மலர் உதாரணத்தால் அஞ்ஞானத்துக்குக் காரணமான பொருளைப் போக்குவதன் மூலம் அஞ்ஞானத்தைப் போக்கிக் கொள்ளலாம் என்பதும் பெறப்படும்.

அஞ்ஞானத்தைப் போக்கிக் கொள்வதே விடுதலை. உலகப் பற்று அஞ்ஞானத்தால் விளைவது. உலகப் பற்றைப் போக்கிக் கொள்வதே விடுதலை. உலகம் என்பதில் தன்னை ஒழிந்த மற்றை மனைவி மக்கள் சுற்றம் முதலிய யாவும் ஆகும். இவர்களிடத்தில் வைத்த பற்றை—அஞ்ஞானத்தைப் போக்கிக் கொள்வது புறப்பற்றைப் போக்கிக் கொள்வதாகும்.

தன்னிடமே பற்றுக் கொள்வது அகப்பற்று எனப்படும். தன்னையும் விரும்பாமல்—பற்றுக் கொள்ளாமல் நீங்குவது அகப் பற்றைப் போக்கிக் கொள்வதாகும். புறப்பற்றைச் சித்தாந்திகள் 'எனது' என்ற சொல்லால் குறிப்பிடுவர். அகப்பற்றை 'யான்' என்ற சொல்லால் குறிப்பிடுவர். யான் எனது என்ற இவ்விரண்டும் இருப்பவன் எக்காலத்தும் ஞானம் அடையான். ஞானம் அடையானுயின் வீடுபேறு கிட்டாது. சிவம் வெளிப்படாது. உலகப் பற்றிலேயே உழல வேண்டும்.

யான்எனது என்பது இருந்திடு காறும்
ஞானம் உறுன் அது நண்ணிலனுயின்
தான்நிலை யாத சகந்திகழ் கிற்கும்
ஈனமிலாத சிவம்திகழா தே.

என்ருர் சிவப்பிரகாச அடிகளார்.

யான் எனது அறுதல் வேண்டும் எனின் உலகப் பற்றுதல் வேண்டும். அஞ்ஞானம் காரணமாக உலகப்பற்று வலுப்பெறுகிறது.

பொருளின் உண்மைத் தன்மையை மறைக்கும் அஞ்ஞானத்தை குணத்தால் போக்கிக் கொள்ளல் வேண்டும் என முன்னர்க் கூறப்பட்டது.

"உற்ருரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன் கற்ருரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்" (திருவாசகம் 556) என்றெல்லாம் அவற்றின் பொய்மையுணர்ந்து மெய்மையறிவது ஞானத்தால் அஞ்ஞானத்தைப் போக்கிக் கொள்வதாம்.

சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் படிமுறையில் அஞ்ஞானத்தைப் போக்கிக் கொள்வதும் ஞானத்தால் போக்கிக் கொள்வதாகும். இதை மாணிக்கவாசகர்,

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்கு
    அன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை
    பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை
    துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
    செய்வதொன் றறியேனே   (திருவாசகம். 35)

என்று கூறுவதனால் அறியலாம்.

காமாலை நோயால் விளைந்த அஞ்ஞானத்தைக் காமாலையைப் போக்குவதன் மூலம் போக்கிக் கொள்ளுதல் போல் ஞானத் தாலும் உண்மையை அறிய ஒட்டாமல் தடுக்கும் ஆணவத்தை மருத்துவன் போலஇறைவனே முன்னின்று போக்குவதன் மூலமே போக்கிக் கொள்ளமுடியும். இன்னும் ஞானத்தால் அஞ்ஞா னத்தைப் போக்கிக் கொள்வதற்கும் இறைவன் திருவருளே முன்னிற்க வேண்டும். "அவனருளாலே அவன் தாள் வணங்கி" (திருவாசகம் 1:18) என்றார் மணிவாசகர்

இருவகை அஞ்ஞானத்தையும் இறைவ ர் தமக்கு முன் வந்து போக்கி ஆட்கொண்ட திறத்தினை மணிவாசகப் பெருமான் கூறு வதைக் காண்போம்.

கயல் மாண்ட கண்ணின் பங்கன் எனைக்
    கலந்தாண்டலுமே
அயல்மாண்டு அருவினைச் சுற்றமும் மாண்டு
    அவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகம்மாண்டு
    என்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணம்
    கொட்டாமோ.   (திருவாசகம். 245)

சிவபிரான் மணிவாசரிடம் கலந்தாண்டது மருத்துவன் நோயை நீக்கியது போலாம். நோய் நீங்கியதும் பொருளின் உண்மைத் தன்மை தெரிவது போல—அதாவது காமாலை நீங்கும் போதே கொஞ்சம் கொஞ்சமாக மஞ்சள் மாறி மலரின் வெண்மை தெரிவது போல மணிவாசகரிடம் இறைவன் கலந்தாண்டலும் பற்றுகள் சிறுகச் சிறுக விலகின. தம்மையும் உலகையும் பற்றிய பற்றுகள்—அஞ்ஞானம்—அயல், அருவினை, சுற்றம், அவனியின்

மேல் மயல், தம் பேச்சு, தம் செயல் யாவும் ஒன்றலின் ஒன்றாக மாண்டன என்றார். சிவபிரானாகிய மருத்துவன் அயல், அருவினை, சுற்றம் முதலிய நோய்களைச் சிறுகச் சிறுக பக்குவ நிலைக்கேற்பப் போக்கினார். இவ்வாறு போக்குவதைக் 'கோதாட்டுதல்' என்பர் மணிவாசகர்.

கோதாட்டுதல் என்றால் சிறுகச் சிறுகப் பிரித்தல். கிளி கோதிய பழம் என்னும் வழக்கிலும், 'என்னடா கிளிகோது மாதிரி சோற்றைக் கோதுகிறாய்', 'கிளிகோதுகிற மாதிரி சாப்பிடுகிறான்' என்னும் வழக்குகளிலும் கோதுதல் என்றால் சிறுகச் சிறுகப் பிரித்தல் என்ற பொருளைக் காணலாம்.

இப்படிச் சிறுகச் சிறுகப் பற்றுதல் நீங்குவதே விடுதலை பெறுவதாகும். இவ்விடுதலைப் பேறே வீடு பேறாகும்—இன்பப் பேறாகும். "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்பர் ஆன்றோர்.

இதுகாறும் கூறிய கருத்தைக் கொண்ட நூல் விடுதலையும்—வீடுபேறும் என்னும் இந்நூல்.

இந்நூலாசிரியர் இலண்டன் மாநகரத்திருந்து கொண்டு தமிழ்ப் பணிபுரிபவர். ஆன்மீகத்துறையிலும் ஆற்றலுடையவராக விளங்குபவர் என்பதை இந்நூலைப் படிக்கும் போது அறிய முடிகிறது.

இந்நூல் சாதாரண மக்களுக்குக் கூடுமான வரையிலும் தெளிவாகச் சாத்திரக் கருத்துகளைத் தெரிவிப்பது.

திடீர்ப் பரஞானம் பெற்றவர் ஞானசம்பந்தர் (பக். 22) என்பது போலும் கருத்துகள் சமய சாத்திர வல்லுநர்க்கு எப்படித் தோன்றினாலும் சாதாரண மக்களுக்கு எழுதப் பட்டன எனலாம்.

திருவாசகம் என்னுந்தேன், சமயத் தத்துவம், சைவசமய சாரம் என்னும் தலைப்புகளில் நூல் அமைந்திருந்தாலும் முன்னுரையில் அமைந்த 'விடுதலையும் வீடுபேறும்' என்ற உள் தலைப்பே நூலின் தலைப்பாக அமைத்திருக்கிறார். நூல் முழுவதும் விடுதலையும் வீடுபேறுமே விளக்கப்படுதலின் அமைவுடையதே.

திருவாசகத்தின் கருத்தினை விடாமல் நூல் முழுமையும் தழுவிய நிலையில் எழுதியிருப்பது போற்றற்குரியது.

சமய சாத்திர வல்லுநர்க்கு இந்நூல் தடை விடைகளுக்கேற்ற ஆய்வுக்குப் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

சமய சாத்திர நூல்களில் ஆழ்ந்த புலமையோ அநுபவமோ இல்லாத என்னை இந்நூலுக்கு முன்னுரை எழுதுமாறு நாவல் ஆர்ட் அச்சகத்தார்—திரு. செல்வம் கேட்டதற்கிணங்க எழுதினேன். அவர்க்கு என் நன்றி.

இந்நூலைத் தமிழுலகம்—சமய உலகம் பெற்றுப் படித்துப் பயன் பெறுவதுடன் பயன் பெறச் செய்யவும் இறையருள் முன்னிற்க.

ஆ. சி.

25-6-81

ஆசிரியர் உரை

சராசரி மனிதனது சரித்திரம் மூன்று சொற்களுக்குள் அடங்கி விடுகிறது எனலாம்; பிறந்தான், வாழ்ந்தான், இறந்தான். பெரும்பான்மையோரைப் பற்றி "வாழ்வாங்கு வாழ்ந்தான்" என்று கூடச் சொல்ல முடியாமல் இப்படியும் அப்படியுமாக எப்படியோ வாழ்ந்து வாழ்க்கைப் போராட்டத்தை முடித்தான் என்றுதான் கூறமுடியும். தம்மைப்பற்றி மாத்திரம் கருதி வாழ்தல் விலங்கு வாழ்க்கை. சமுதாய நலம் பேணித் தம்மைச் சுற்றியுள்ளோரையும் கருதி வாழ்தல்தான் மனித வாழ்க்கை. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கொண்டு கொடுத்து வாழ்ந்த சங்கத் தமிழ்ச் சமுதாயம் அன்று பேரொளி பரப்பி நின்றது; "தேசம் ஞானம் கல்வி, ஈசன் பூசையெல்லாம் காசுக்குப் பின்னலடி", என்று தன்னலம் தலைவிரித்தாடும் இன்றைய தமிழுலகம் தாழ்ந்து, வீழ்ந்து கொண்டிருக்கிறது. மனிதன் யார்? என்ற கேள்விக்கு இக்காலக் கவிஞர் ஒருவர் விடை தருகிறார்:—

"யாருக்கும் அஞ்சாமல் அன்பு,
அறம் காப்பவன் யார்? அவன் மனிதன்
பேருக்கும் புகழுக்கும் பேராசையில்லாப்
பெரியவன் யார்? அவனே மனிதன்
வேருக்கு வார்த்திடும் நீரினைப் போல்
விருப்புடனே வாழ்க்கையெல்லாம்
ஊருக்கு உபகாரமாக உதவிடும்
உத்தமன் யார்? அவனே மனிதன்

மிருக நிலைக்கும், தெய்வ நிலைக்கும் நடுவே உள்ள மனிதனிடம் ஒரு சிறப்பு அம்சத்தை உலக மதங்கள் பொதுவாகவும், இந்து மதம் சிறப்பாகவும் போதித்து வந்திருக்கின்றன; இன்றும் வளர்த்து வருகின்றன. இதுவே சமயங்களின் உயிர் நாடி:

அடிப்படைத் தத்துவம். இதன் பெயரே மனிதாபிமானம் — இதைவிட மேலான சமயம் உலகத்தில் இருக்க முடியாது. காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக உருவாகும் ஆராதனையில் மூர்த்தியாக வீற்றிருப்பது மனிதாபிமானம் என்ற தெய்வம். இவ்வாறு மனிதாபிமானத்தின் பரிணாம வளர்ச்சியாகவே அன்பும், அறமும்; கற்பும், கருணையும் மனித நிலையின் மேம்பாடுகளாகவும், தெய்வ நிலைகளாகவும் உயர்ந்து நிற்கின்றன. "கங்கை ஆடிலென்? காவிரி ஆடிலென்" என்று மதத்தின் அடி நிலைத் தத்துவத்தை இடித்துக் கூறியவர் எமது அப்பர் பெருமான். இதனால் கோயில் வேண்டாம், பூசை வேண்டாம், குளிக்க வேண்டாம் என்று அர்த்தமல்ல. இவையெல்லாம் தொடக்கநிலை சாதனைகள் மட்டுமே என்பதை நாம் உணர்ந்து கொண்டால் போதும். "அறஞ் செய விரும்பு" என்பது மனிதாபிமானத்தின் வித்து—திரை கடல் கடந்து திரவியம் தேடித் திறமையுடன் வாழும் தமிழர்களுக்குரிய தாரக மந்திரம். நன்மை செய்தவனுக்கு நன்றி காட்டித் தீமை செய்தவனை மறந்து விடுவதே மனிதாபிமான மரம். இந்த மரநிழலில் பெறப்படும் இன்ப வாழ்வே இறையுணர்வு.

மணிவாசகப் பெருமானது திருவாசகத்திற்கு உருகாத நெஞ்சு இறையுணர்வு அற்றதாகத்தான் இருக்கும் என்பதைவிட மனிதாபிமானப் பண்பே இல்லாதது என்றே வருந்த வேண்டும். அமைச்சராக இருந்து அடியாராக மாறிய அனுபவ மருந்தே, இறைவனை நினைந்து நெஞ்சுருக அழுத அழுகைக் குரலே "திருவாசகத் தேனை" எமக்கு இன்று வழிகாட்டுகிறது. திருவாதவூரர் என்ற தெய்வீக வண்டு, சிவபெருமானது பாத தாமரைகளிலே படிந்து, ஊறிப் பருகிய பேரானந்தத்தேன் திருவாசகம். இந்தத் தெவிட்டாத சிவானந்தத் தேனிலிருந்து ஒரு சில துளிகளை "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பரந்த சமய நோக்குடன் உலகெலாம் பரந்து வாழும் சைவத் தமிழ் அன்பர்களுக்கு இப்படைப்பை பல அரிய பெரிய நூல்களிலிருந்து திரட்டி வழங்குவதில் பெருமையும், மனநிறைவும் அடைகிறேம். நான் படித்த திருவாசகத்தைப் பற்றிய நூல்களெல்லாவற்றையும் விட, உயர்ந்த சமய உணர்ச்சியையும், வீடு பேற்றின் விளக்கத்தையும் எனக்குத் தந்தது, "திருவாசகம்" என்ற தவத்திரு சுவாமி சித்பவானந்தர் இயற்றிய நூலே

ஆகையினால், எனது இச்சிறு முயற்சியைத் தவத்திரு சுவாமி சித்பவானந்தர் அவர்கட்கே படையலாக்குகிறேன்.

சைவசித்தாந்த தத்துவத்தின் ஆங்கில நூலாக அமைந்த எனது "A Date with Destiny" என்ற நூலை முன்னர் திறம்பட அச்சிட்டுதவிய Novel Art Printers நிறுவனத்தின் உரிமையாளர் கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்கட்கு இந்நூலையும் அழகாக, அரும்பாடுபட்டு அச்சேற்றியமைக்காக நன்றி கூறுகிறேன்.

அணிந்துரை அளித்து இந்நூலைச் சிறப்பித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உயர்திரு. ஆ. சிவலிங்கனார் அவர்களுக்கு லண்டன் சைவ சித்தாந்த நிலையத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கின்றேன்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா, உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்" என்ற நட்பின் பாங்கை நடைமுறையில் காட்டி எனக்குப் பேருதவியாயிருக்கும் அன்பர், பேராசிரியர் டாக்டர் க. ப. அறவாணன் அவர்கட்கும், நண்பர் S. R. சாந்தாராம் M A , B.Sc., அவர்கட்கும் எனது நன்றி என்றும் உரியது.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

லண்டன்
தைப்பொங்கல், 1981

கிருஷ்ணா ஞானசூரியன்

பொருளடக்கம்

முன்னுரை

சமய தத்துவப் பின்னணியில் சில புதிய சிந்தனைக் களங்கள்

தைமாசம் 1981-இல் மதுரையில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் நான் படித்த கட்டுரையின் தலைப்பான "விடுதலையும் வீடுபேறும்" என்ற பொருளில் வீடுபேறு பற்றிய ஆராய்ச்சியே இந்நூலாக உருவாகியது. ஒரு நாட்டின் சமுதாய விடுதலைச் சூழ்நிலையிலேயேதான் (Socio-Political Freedom) மக்கள் போற்றும் சமய வீடுபேறு (Mukti or Salvation) அடையக் கூடியதாக இருக்கும் என்பது எனது கருத்து. அரசியல் விடுதலை இல்லாது, ஒடுக்கப்பட்ட மக்களாக (Oppressed people) வாழும் ஒரு இனத்திற்கு, வீடுபேறு என்பது ஒரு இயலாமை நிலையின் (Escapism) தத்துவமேயன்றி, ஆன்ம ஈடேற்ற விசாரம் ஆகாதென்பதும் எனது தெளிவு. இக்கருத்துக்களின் பொழிப்பு இந்நூலின் இறுதியில் மதுரை மாநாட்டுக் கட்டுரையாக இணைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், சமய தத்துவ நோக்கிலும் மணிவாசகர் வழிகாட்டிய சைவசித்தாந்த விளக்கத்தின் நோக்கிலுமே இந்நூல் 'வீடுபேறு' என்ற பேரின்பநிலையை மட்டுமே பல கோணங்களிலிருந்தும் ஆராய்கிறது.

வீறுபெற்ற விடுதலை வாழ்வின் மலர்ச்சியே, நிறைவே வீடுபேறு. அஞ்சா நெஞ்சும், அகத்தூய்மையும் விடுதலை வாழ்விற்கு மிக முக்கியமான அம்சங்கள். கோழைகளுக்கு விடுதலையும் இல்லை;

வீடுபேறும் இல்லை. பல நூற்றுண்டுகளாக, 'வீடுபேறு' என்ற வாழ்வாங்கு வாழும் வாழ்வியல் நிறைவைத் தெரிந்தோ தெரியாமலோ சமயம் என்ற சிறைக்குள்ளே வைத்துவிட்டு, நாம் இறைவனை ஓலமிட்டு அழைத்து உலகெலாம் தேடி 'வீடுபேறு' கேட்டிருக்கிறோம்; இன்றும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இது ஒருவர் கொடுக்க இன்னொருவர் பெறக்கூடிய "பொருள்" அல்ல; ஏனென்றால் இறைவனைப் போலவே, வீடுபேறு என்பதையும் "ஒன்றும் நீயல்லை; அன்றி ஒன்றில்லை" என்றுதான் மணிவாசகப் பெருமானுடன் சேர்ந்து நாமும் கூறமுடியும்.

'வீடுபேறு' என்பதற்கு அடித்தளமாக அமையும் விடுதலை வாழ்வு என்பது பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டது. சமுதாய பந்த பாசங்களிலிருந்து விலகிக் கடமையின் பேரில் கருமஞ்செய்யும் விடுதலை; அரசியல்-பொருளாதார அடக்கு முறைகளை எதிர்த்து நிற்கும் மனவலிமையுணர்வு தரும் விடுதலை; ஆசை அபிலாஷைகளையெல்லாம் தன்னலத்திலிருந்து பொது நலத்திற்கு மடைமாற்றும் இயல்பை உணர்த்தும் அறிவைப் பெற்று அறியாமைப்படையை வென்ற விடுதலை; உண்மை, மனத்தூய்மை, ஆத்மிகம் என்பனவற்றால் பெறப்படும் சக்திகளை மனிதாபிமான அடிப்படையில், மக்கள் நலத்திற்காக, மக்களின் மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தும் உள்ளத்தெளிவு என்னும் விடுதலை. இவைகளின் நிறைவே வீடுபேறு என்பது தேற்றம்.

மணிவாசகர் இறைவனிடம் வேண்டிய "வேண்டாமை என்னும் விழுச்செல்வம்"

எது செல்வம்? மனிதனைப் பொறுத்தவரையில் மனம்தான் தலையாய செல்வம். அடுத்து அமைவன ஐம்புலன்கள். மூன்றாவதாக இருப்பதே 'செல்வம்' என இன்றைய மக்கள் கருதும் உலகம். உலகத்தை மனிதன் சுவைக்கிறான்; கண்டு களிக்கிறான்; கேட்டு மகிழ்கிறான்; உற்று உணர்கிறான்; முகர்ந்து நுகர்கின்றான். இவ்வாறு வாழ்வை, அனுபவத்தைப்பெறத் துணை செய்யும் மனமெனும் செல்வம் இன்றேல், புலன்கள் எனும் செல்வம் இன்றேல், உலகு எனும் செல்வம் இன்றேல் மனிதனுக வாழ்ந்து தான் என்ன பயன்?

உலகமாகிய செல்வத்தில் சுவை உளது; ஒலி உளது; ஒளி உளது. ஆயினும் வெறும் மண் இன்சுவை தருவதில்லை; வெறுங் காற்று நல்லிசை பயப்பதில்லை; வெறுங்கதிர் இரவு பகல் எந்நேரமும் ஒளிவிளக்கம் நல்குவதில்லை. எனவே, வெறும் மண்ணைத் திருத்தி நறுமலர்ச் சோலைகள் ஆக்குகிறான்; கனிதரும் தோட்டங்கள் அமைக்கின்றான்; பயிர் வளரும் நன்செய்யாகப் பண்படுத்துகின்றான். ஆகவே, வெறுங் காற்றை அடக்கி ஒடுக்கி, நீட்டிக் குறுக்கி ஆள்கிறான். குழலில், முழவில், யாழில் காற்று எழும்புகிறது. இன்னிசையாக, தாளக்கட்டாக, பண் திறனாக அதனை மனிதன் மாற்றிப் பயன்படுத்துகிறான். ஆகையால் தான் வெறுங்கதிர் இயல்பை ஆராய்ந்து மின்திறனை, அணு ஆற்றலைக் காண்கின்றான்; இரவைப் பகலாக்குகின்றான்; பகலைப் பல்வேறு வண்ணமாக்குகின்றான். இவ்வாறு இயற்கைச் செல்வத்தை இன்பச் செல்வமாக்க அவனுக்கு எது உதவிற்று? இயற்கைபற்றி மனிதன் கற்றுப்பெற்ற அறிவே அல்லவா?

எவ்வாறு, உலகமாகிய செல்வத்தைத் துய்த்து இன்புற, கற்றுப்பெறும் அறிவு துணையாகிறதோ அவ்வாறே, புலன்களாகிய செல்வத்தை அனுபவித்துப் பயன்பெறவும் பயிற்சி தேவைப்படுகிறது; இசை இனிமையானதுதான்; பாட்டு உணர்ச்சி ஒலி உடையதுதான்; கவிதை எதுகை மோனை அமையப் பெற்றதுதான். என்றாலும் பயிலாச் செவியால் பயன் என்ன? இன்னிசையை, ஒலி நலத்தை, எதுகை மோனைகளைக் கேட்டுக்கேட்டுப் பயின்ற செவிப்புலன் மனத்திற்குத் தரும் இன்பத்தைக் கல்லாச்செவி தருவதில்லையே?

கனி இனியதுதான்; காய் சுவை உடையதுதான்; கீரை நன்மை செய்வதுதான். ஆனால் கனியின் இனிமையை, காயின் சுவையை, கீரையின் நன்மையை உண்டு கண்ட நல்ல நா மனத்திற்கு நல்கும் இன்பத்தை வீணே தின்று தீர்த்த கல்லா நா நல்குவதில்லையே?

இயற்கை, கைபுனைந்து இயற்றாக் கவின் உடையதுதான்; ஓவியம், இயற்கை எழிலை வடித்து எடுத்த சாறுதான்;கோயில்கள் எல்லாம் அழகுத் தெய்வத்தின் குடில்கள்தான். ஆனால் பயிலாக் கண்ணால் பயன் என்ன? இயற்கைக் கவினை, அருவியின் அழகை, கடல் தரும் காட்சியைக் கண்டுகண்டு கல்லாக் கண்ணிருந்தும், சித்தன்னவாசலை, அஜந்தாக் குகையை, இரவிவர்மா கைத்

திறனைப் பார்த்துப் பார்த்துப் பயிலாக் கண்ணிருந்தும், தில்லைத் திருக்கோயிலை, தஞ்சைப் பெருங்கோயிலை, பழநி மலைக்கோயிலை நோக்கி நோக்கிக் காணுக் கண்ணிருந்தும் என்ன பயன்? கல்லாக் கண், பயிலாச் செவி, தேரா நா இவை மனத்திற்கு இன்பம் தருவதில்லை. உலகம் செல்வமே ஆயினும், திருத்தமுறு விடின், பயிலப் பெறுவிடின் அவற்றால் பெரும்பயன் இல்லை; நல்ல இன்பம் இல்லை. எனவே அவை செல்வம் ஆமாறும் இல்லை.

அவ்வாறேதான் மனமும். திருத்தமுறுத மண்ணால் பயிற்சி பெறாத புலனால் எவ்வாறு உலகச் செல்வத்தை, அறிவுச் செல் வத்தை மனம் இழந்துவிடுகிறதோ அவ்வாறே தெளியா மனத் தால் மனச் செல்வத்தை மனிதன் இழந்து விடுகின்றான்.

உலகம், புலன்கள் ஆகிய இச்செல்வங்கள் எல்லையுடையன; கால இடத்திற்குள் கட்டுண்டு அழிவன. போதிய அளவு உண்டதும் வயிறு நிறைந்துவிடுகிறது; வாய் வெறுத்துக் குமட்டு கிறது. தேவையான அளவு பேசியதும் நா களைத்துவிடுகிறது; செவியும் சலித்துவிடுகிறது. சில ஆண்டுகள் அனுபவித்ததும் உடல் சோம்பிவிடுகின்றது; உறுப்புக்களும் கூம்பிவிடுகின்றன. ஆனால் மனம்மட்டும் நிறைவதில்லை; களைப்பதில்லை; கூம்புவ தில்லை. 'அறிதோறும் அறியாமை' காண்பதுபோல் அனுபவிக்க மனம் மேலும்மேலும் அவாவுகிறது. ஆரா இயல்புடைய அதற்கு நிறைவுதரும் செல்வம்தான் யாது?

இப்படி மனத்திற்கு நிறைவுதரும் செல்வத்தை நாடி, அல்லது மனம் நிறைவுறும் செல்வத்தை நாடி உயர்ந்த மனிதம் உழைக்கத் துவங்கியது. பொருளால், பொறியால், புலனால்வரும் செல்வம் மனத்திற்கு நிறைவுதரத் தவறி விடுகிறது; அதன் ஆவலை மேலும் மேலும் தூண்டவும் செய்கிறது என்று அந்த மனிதம் கண்டது. அப்படி ஆயின் மனத்திற்கு நிறைவுதரும் செல்வம் தான் யாது என்று அது எண்ணத் துவங்கியது.

எல்லையில்லாத, ஆழங்காண முடியாத, நுண்ணிய அருவடி வான மனம், ஆழ்ந்தகன்று நுண்ணிய அன்பு, காதல், பக்தி, அறிவு இவற்றால்தான் நிறைவுறும் என எண்ணிக் கண்டது. இந்த எண்ணம் முறையாக உயர்ந்து சென்றது. அந்தத் தாய் அன்புக்காக, தூய காதலுக்காக, தீவிர பக்திக்காக, மெய் அறிவிற்காகப் பொன்னிடம், புகழிடம், பெண்ணிடம், மண்ணி

டம் கொண்டுள்ள எல்லாப் பற்றையும் இழக்கவேண்டும் என்றும் கண்டது. தாய் பிள்ளையின்பால் கொண்ட அன்பிற்காக, தலைவன் தலைவிபால் கண்ட காதலுக்காக, அடியவன் ஆண்டவன் பால் கொண்ட பக்திக்காக, அறிஞன் உண்மையின்பால் கண்ட ஆர்வத்திற்காக அனைத்தையும், தம் உடம்பையும் இழக்கத் துணிந்த துணிவையும், சிற்சிலபோது தங்களைத் தாங்களே சித்திரவதைக்கு உள்ளாக்கிக் கொண்ட கொள்கையையும் அது கண்டது. அந்தக் காட்சியிலிருந்து இவ்வாறு இழப்பதில் ஒரு தத்துவத்தை அது கண்டது. எல்லையில்லாத, வானினும் உயர்ந்த, நிலத்தினும் பெரிய, நீரினும் ஆர் அளவற்ற ஒன்றுக் காகத் தன்னை இழப்பதில் ஒரு பேரின்பத் தத்துவத்தை அது கண்டது.

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்ற............"

ஒன்றோடு ஒன்றிக் கரைந்து கலந்து தன்னை இழப்பதில் ஒரு பேரருள் தத்துவத்தை அது கண்டது.

"உளன்எனில் உளன்அவன் உருவம்இவ் வுருவுகள்
உளன்அலன் எனில்அவன் அருவம்இவ் வருவுகள்
உளன்என இலன்என இவைகுணம் உடைமையின்
உளன்அவன் எங்கணும் ஒழிவிலன் பரந்தே"

எனும் ஞானச்சுடர் முன்னே தன்னைத் தான் இழப்பதில் ஒரு பேருண்மையை அது கண்டது. அதுவே வேண்டாமை என்னும் தத்துவம். 'பேயாய் உழலும் சிறு மனத்திற்கு' நிறைவு தர வல்லது வேண்டாமை என்னும் விழுச்செல்வமே ஆகும். அந்தப் பெருந்தத்துவத்தை எளிதாக வரையறுத்து,

"வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்பது இல்"

எனத் தெளிவாகக் கண்டுகொண்டது அந்த மனிதம். அந்த மனிதம் கண்ட தத்துவத்தைச் செயலாக்குவது எப்படி? ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆவது எப்படி? இப்படி எண்ணி ஏங்கும் மக்களுக்கு எடுத்துக்காட்டாகச் சான்றோர் சிலர் வாழ்வு

அமைந்து விளங்குகிறது. அத்தகு சான்றோருள் வான் கலந்த வாசகம் அருளிய வாதவூர் அடிகளாரும் ஒருவர். பாரதியோ,

"பொன்னை உயர்வைப் புகழை விரும்பிடும்
என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று
நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா......"

எனப் படிப்படியாகப் பொன்னிலிருந்து புகழுக்குப் போகிறார். வாதவூர் அடிகளோ, "வேண்டேன் புகழ்" எனத் துவங்கும் போதே புகழைக் குறிக்கின்றார். மனிதனாகப் பிறந்த ஒருவன் தன் இல்லற வாழ்வில் எய்துதற்குரிய இறுதிச் செல்வமாக, தலையாய சிறப்பாகப் புகழைக் கூறுகிறார் பொய்யாமொழியார். ஆயினும் அப்புகழ்க் கவர்ச்சியைக் கடத்தலே நிறைமனத்தின் முதல்படி என எண்ணுகிறார் மாணிக்கவாசகர். புகழ், புகழுக்காகப் பொருள், அதற்காக வழிபாடு, இம்மை மறுமை எண்ணங்கள், இப்படி எத்தனையோ வலைகள் பற்றிப் படர்ந்து, சுற்றி வளைத்து மனத்தை மயக்கிவிடுகின்றன. எனவே வயிற்று வழியைக் கடந்த, பொறி புலவாழ்வைக் கடந்த அந்த அடிகளார் திருப்பெருந்துறை இறைதாளைப் பற்றிக்கொண்டு பிற விலங்குகளினின்றும் தன்னைக் கழற்றிக்கொள்ள, 'வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும்' என முறையிடுகின்றார்.

உற்றார், ஊர், பேர், கற்றார், கற்கப்பெறும் நூல் இவை யாவும் அளவைகளுக்கு உட்பட்டவைதானே. என் உற்றார், எனது ஊர், எனக்குரிய பேர், எனக்குகந்த கற்றார், நான் கற்கும் நூல்கள் இவையெல்லாம் மாறுகின்ற கால இடத்துக்குக் கட்டுண்டு இந்த 'என்' ஒருத்தனோடு பிணைக்கப் பெற்றவை தானே. அளவைகளுக்கு அகப்படாத காலம் இடம் கடந்த ஒன்றை நான் நாடிச் செல்லும்போது, விண்ணில் திரியமுயலும் காற்றாடியை மண்ணில் தன் போக்கிற்கு ஈர்த்திழுக்கும் சிறுவனைப் போல, என்னைத்தடுத்து நிறுத்தும் சிறுமைகள்தானே இவை எல்லாம். எனவே வேண்டாமை என்னும் விழுச்செல்வத்தை நாடி நிற்கும் எனக்குக் கட்டுப்பாட்டை உண்டாக்கும் இவையெல்லாம் வேண்டாம்.

மணிவாசகரது திருவாசகச் சிறப்பு

உலகத்தில் மக்களாகப் பிறந்தவர்கள், அந்தப் பிறவியினால் பெற வேண்டிய முழுப்பயனையும் பெறுவதற்குத் துணை செய்வதற்காக, இறைவன் திருவருளால், பல வேறு நாடுகளிலும், பல வேறு காலங்களிலும், பல வேறு மொழிகளிலும், தெய்வ மணம் வீசும் பல நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் ஒரு சில, மக்கள் உள்ளத்திலேயே நிலைத்து நின்று, காலம், இடம் என்ற பகுப்புக்களை எல்லாம் கடந்து, ஒளி வீசுகின்றன. அவற்றை 'ஒளி நூல்கள்' எனக் கூறலாம். அவை மக்கள் இனத்துக்கே பொது உடைமையாகும். அத்தகைய உலக ஒளி நூல்களுள் ஒன்றாக, தமிழ் நாட்டில் தமிழ்மொழியில் தோன்றியது 'திருவாசகம்' என்னும் உயர்ந்த ஒளி நூல். தமிழகத்தில், சைவ நன்மக்களுடைய முதல் நூல்களாகத் திகழும் 'பன்னிரு திருமுறைகளுள்' எட்டாவது திருமுறையாக இத்தெய்வ நூல் அமைந்துள்ளது. இது, பல நூற்றாண்டுகளாக, பல நூறாயிரம் மக்களுக்கு ஆறுதலும், அமைதியும், தெய்வ உணர்ச்சியும் அளித்து, மக்களிடத்து நல்ல பண்புகள் வளர்வதற்கு உதவியாக இருந்துவருகிறது.

இந்த அருள் நூல், பல தலைப்புக்களில், ஐம்பத்தொரு பகுதிகளாகப் பிரிக்கப் பெற்றிருக்கிறது. இதன் செய்யுள் தொகை அறுநூற்று ஐம்பத்தாறு ஆகும். ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா முதலிய பாட்டு வகைகளை இந்நூலுள் காணலாம். நூல் முழுவதும் மூவாயிரத்து முந்நூற்று இருபத்தேழு அடிகளில் அடங்கி விடுகின்றது இதன் செய்யுள்கள், செஞ்சொற்கள் அழகுபெற அமைந்த மணிமொழிகளால் ஆக்கப்பெற்று, படிக்கும் நாவிற்கும், கேட்கும் செவிக்கும், கற்கும் சிந்தைக்கும் இன்பம் தருவனவாகும். மேலும், இவை அரிய கருத்துக்களையும் உயரிய எண்ணங்களையும் எளிமையாக உள்ளத்தில் செலுத்தி, உணர்ச்சிக்கு உணவும் ஊக்கமும் கொடுத்து, வாழ்க்கை நெறியைத் தூய்மைப்படுத்தி, வளமுறச் செய்யும் ஆற்றலுடையனவாகவும் இருக்கின்றன. 'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்றும், 'மனம் கரைத்து மலம் கெடுக்கும் வாசகம்' என்றும் வழங்கும் மொழிகள் இந்நூலின் சிறப்பையும் பரப்பையும் நன்கு தெரிவிப்பன ஆகும்.

இந்தத் தெய்வத் தமிழ்மறையை, உலகுக்கு அருளியவர் 'திருவாதவூரர்', 'மாணிக்கவாசகர்', 'ஆளுடைய அடிகள்' என்ற காரணப் பெயர்களால் விளங்கும் ஞானவள்ளலாவார். இவரைச் சமய குரவர்கள் நால்வருள் ஒருவராக, சைவ சமயத்தார் போற்றி, வழிபாடு செய்வார்கள். சில சிவன் கோயில்களில் இவருக்காகச் சிறப்பு விழாக்களும் நடைபெறுகின்றன. இவருடைய பெயரால் அமைந்துள்ள மடங்களைத் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் காணலாம். இவரைப் பற்றிய பல புராணக் கதைகளும் வழங்குகின்றன. திருவிளையாடற் புராணங்கள், திருவாதவூரர் புராணம் முதலியவற்றுள் இவரைச் சூழ்ந்துள்ள பல கதைகளைக் காணலாம். இவையன்றி, வரலாற்று முறையில் இவருடைய வாழ்க்கை முதலியவற்றுள் நாம் தெரிந்துகொள்ள வேண்டியவற்றை விளக்கும் ஆதரவுகள் மிகமிகக் குறைந்தனவே ஆகும்.

இப் பேரருளாளர் பாண்டி நாட்டில் பல அறிஞர்களுக்குப் பிறப்பிடமும் உறைவிடமுமாக விளங்கிய 'திருவாதவூர்' என்னும் ஊரில் தோன்றியவர்; உலகியல் நூல்களையும், சமய நூல்களையும், தத்துவ நூல்களையும் நன்கு பயின்றவர்; பல வேறுபட்ட கருத்து உடையவர்களோடும் கலந்து பயின்று உண்மை காணும் முயற்சியில் இளமையில் ஈடுபட்டவர்; அரசர்களோடு நெருங்கிப் பழகி உலகியலில் உயர்ந்த நிலைகளிலிருந்து, ஏதோ மாறுபாட்டால் அந்த நிலைகளை விடுத்து, அடியவர் கூட்டமும் தெய்வ வழிபாடுமே நிலையான பேற்றை அளிக்க வல்லன என்னும் துணிவுகொண்டு, தம் வாழ்க்கையைத் தெய்வத் தொண்டுக்கே உரிமையாக்கியவர்; புறம்பான தோற்றங்களில் புலன்களைப் போகவொட்டாமல் தடுத்து, அகத்தே தோன்றும் பேரொளியைக் கொண்டு, இறைவனைக் காணும் முயற்சியில் ஈடுபட்டவர்; அவ்வாறு முயலும்போது தாம் பெற்ற இன்பத்தை உலகத்தாரும் பெற வேண்டும் என்னும் பரிவால், சொல்லுக்கு அடங்காதவற்றைச் சொல்லால் வெளியிட முயன்றவர்; எல்லாப் பருவத்தினரும், எல்லா மனநிலை உடையவரும், எல்லாச் செயல்களிலும் தெய்வ உணர்ச்சி கொண்டிருக்கவேண்டும் என்னும் பெருநோக்கம் உடையவர்; இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, துயில் எழும்போதும், புனலாடும்போதும், விளையாடும்போதும் பயன் படுவதற்காகப் பல வகையான பாடல்களை அருளியவர். சிவபெருமான் கோயில் கொண்டருளிய பல திருப்பதிகளுக்கும்

சென்று வணங்கும் பழக்கம் உடையவர்; திருப்பெருந்துறையில் பெரிதும் ஈடுபாடு உடையவர்; பின்னர், தில்லையிலேயே நிலையாகத் தங்கி, கூத்தப்பிரானை வணங்கி, அவன் திருவருளில் கலந்தவர்—என்ற அளவில் தான் நாம் இப்போது வரலாற்று முறையில் கூறலாம்.

எட்டாம் திருமுறையில் எஞ்சிய பகுதியாக அமைந்த 'திருக்கோவையார்' என்ற அரிய நூலும் இவர் செய்ததே என்பது வழி வழியாக ஆன்றோர் கொண்ட கொள்கை ஆகும். இப்போது, சில ஆராய்ச்சியாளர் இதனை ஐயுறுவதாகவும் தெரிகின்றது. இவருடைய காலத்தைப் பற்றிப் பல அறிஞர்கள் பலவாறு கூறினும், ஒன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதி என்பதே வரலாற்று முறைப்படியும், சொற்பொருள் அமைதிகளின்படியும் நாம் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

விடுதலையும் வீடுபேறும்

வீடுபேறு என்பது "வேண்டாமை என்னும் விழுச் செல்வம்" என்று போற்றப்பட்ட ஐம்புல வேட்கையினின்றும் விடுபட்ட நிலை. இதுவே "சொல்லறச் சும்மா" இருக்கும் நிலை—மனதற்ற பரிசுத்த நிலை.

Liberation is a mental event-once the mind is ripe to renounce the fruits of action, then only liberation dawns on men.

இதை அடைவதற்கான மெய்ஞ்ஞானம் எப்போது வருமென்றால் மனத்தை அலைக்கும் பெருநோய் அகன்ற பின்னரேயாம். நோய் எது என்பதை வள்ளுவர் கூறுகின்றார்:

காமம் வெகுளி அழுக்காறு அவாநான்கின்
நாமம் கெடக் கெடும் நோய்

வாழ்க்கையில் அறிவும் அனுபவமும், இறைவழிபாடும் இல்லறமும் எல்லாம் இந்த நோயைக் கண்டு அகற்றுதற்காகவே யன்றோ? இதற்கு முதற்படி தன்னையறிதல்— "யான் யார் என் உளம் யாது" என்ற அடிப்படைக் கேள்வி—ஆன்ம விசாரம்.

தன்னையறியத் தனக்கொரு கேடில்லை
தன்னையறியாமல் தானே கெடுகிறான்
தன்னையறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே

—திருமந்திரம்

நோயைத் தெரிந்து, அதை நீக்கிய பிறகு, நான் யார் என்ற விசாரத்தில் பிறப்பது மெய்ஞ்ஞானம்; தவ வாழ்க்கை:

"Having mastered the body through the yogic teachings so that it becomes a fit habitation for the soul; Having the senses, emotions and mind under control, the wise person discords the wornout sheaths of desire, fear and confusion and passes into the state of enlightenment and freedom" —Bhagavad Gita

அப்படி யென்றால் உலகைத் துறந்து, காட்டுக்குள் ஓடி ஒளிந்து வாழவேண்டு மென்பது அல்ல. தவம், மெய்ஞ்ஞானம் என்று கூறப்படுவதெல்லாம் பலனில் பற்றற்ற தூய நிலையே. கர்மத்தில் குற்ற மேதுமில்லை—பலனைத் துறப்பதிலேயே கர்ம பந்தம் அறுபடுகிறது. இந்த மெய்ஞ்ஞானம் வந்தபிறகு எந்த வித மான வாழ்க்கை நடத்தினாலும் இடையறா இன்பம் அங்கே தாண்டவமாடும்; துன்பத்திலேகூட ஒருவித இன்பம்; ஏனென்றால் மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்ற பிறகு இன்பமும் துன்பமும் ஒரு தட்டின் இரண்டு பக்கங்களுமே என்பது புலனாகும். ஆக, உழைப்பே தவமாகிறது:

"ஊருக் குழைத்திடல் யோகம்—நலம்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும் போதும்—உளம்
பொங்கலில் லாத அமைதி மெஞ் ஞானம்"

—பாரதி

எது சந்நியாசம்

சந்நியாசமென்றால் கர்மத்தை முற்றும் துறந்த நிலையன்று. ஐம்புலன்களையும், வாழ்வையும் இறைவழிபாட்டிற்கென்று ஆசையை மடைமாற்றி, திசை திருப்பி வாழ்தலே சந்நியாசம். சந்நியாசம் = சம் + நியாசம்—முற்றிலும் விட்டுவிடுதல். உணவு உண்பது உடம்பைக் கருவியாகக் கொண்ட இறைவனுக்காகவே; உடல் எடுத்துள்ள சீவனால் கர்மங்களை விட்டுவிட முடியாது—அக்கர்மத்தின் பலனை விட்டவன் தியாகி. புலன் அடக்கம் என்பது செயல் அறச் செய்வதல்ல. உண்மையில் ஐம்புலன்களை அடக்க முடியாதென்பது ஆன்றவிந்து அடங்கியோர் தெளிவு—ஆனால் அவற்றை நல்லவற்றின்பால் திசைதிருப்ப வேண்டும். இறை வழி பாட்டில் திருப்பவேண்டும். வழிபாடு என்றால் ஆலய தரிசனம்

மட்டுமல்ல. வாழ்க்கையே வழிபாடு; வாழ்வின் ஒவ்வொரு சிறிய அம்சமும் வழிபாடே; எங்கும், எதிலும் இறைவன் காட்சி; காணு விட்டால் அங்கே சாட்சியாக நிற்பவன் அவனே. "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" ஆகையால், உலகமே இறைவனுக்கான பெரிய கோயில்.

அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை
அஞ்சும் அடக்கில் அசேதன மாமென்றிட்டு
அஞ்சம் அடக்கா அறிவறிந் தேனே

—திருமந்திரம்

உலகியல் ஆசைகளைக் காலப்போக்கிலாவது இறை அனுபவத்தில் மடைமாற்றுவதுகூடச் சுலபமான காரியமன்று. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று கடமையைத் தொடர்ந்து செய்தால்,

"அவனருளாலே அவன்தாள் வணங்கும்" பேறு வரப்பெறும் என்பது ஆன்றோர் உறுதிமொழி.

"கோவிந்தா, எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம், உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோரெம் பாவாய்"

என்று மன்றாடியவர் ஆண்டாள் அம்மையார். எனவே உலகியற் காமங்களைத் தெய்வீகக் காமமாக மாற்றி விடுதல் சமய வழிபாட்டின் சிறந்த நோக்கம் இதன் முடிவில் வாழ்க்கையின் எல்லாக் கர்மங்களும் இறைவழிபாடாகின்றன.

யான் என்னும் செருக்கு

"யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

யான் என்னும் செருக்கை இறைவனது பெருமையைப் பேசுவதற்காகவே உபயோகிக்க வேண்டும் என்பது கந்தபுராணத்தின் கருப்பொருள்; இதுவே சூரபத்மன் கற்ற பாடம். இறுதியில் அவனை அழிக்காமற் காத்ததும் இறையருளே. சேவலும், மயிலுமாக இன்றும், என்றும் நின்று சேவிக்கும் பேறுபெற்றவன் சூரபத்மன். "இன்று போய் நாளைவா" என்று இராவணன்

மீது இரக்கம் காட்டியதும் இந்த இறையருளே. இந்தச் செருக்கை அகற்றுவதற்கு ஒரு வழி; "என்னை இயக்குபவன் நீயே" என்று இறைவனை வணங்குதலே. "வாயானை மனத்தானை, மனத்துள் நின்ற கருத்தானை" என்று பாடிப் பரவுவார் அப்பர் பெருமான்.

"என்னுனை என்னுனை என்னில் அல்லால்
ஏழையேன் என் சொல்லி ஏத்துகேனே"

யான் என்ற செருக்கை அகற்ற மேலும் ஒரு வழி

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்; என்று பாவித்தல் அடியார் இயல்பு. உள்ளத்தின் தொழிற் பாட்டில் விளையும் பண்பே உணர்வு. உள்ளம் இறைவனை உள்கி நினைந்திட அவனே அந்த உள்குதலின் விளைவாகிய உணர்வாக வடிவம் பெற்று எழுந்தருள்கின்றான். இதுவே இறைவனை உள்ளத்தில் காண்பதற்குரிய இனிய எளிய வழி.

"ஊனுகி, உயிராகி அதனுள் நின்ற உணர்வாகி"

இறைவன் எழுந்தருளி வருவார்.

ஆற்றல் மிக்க, அன்பால் நெஞ்சுருகி நினைப்பதன் மூலம்தான் இறைவனைக் காணமுடியும். இது அல்லாமல் கூர்த்த பகுத்தறிவோ, வாதிடும் திறனோ அல்லது சாத்திரத் தொகுப்புக்களோ துணை செய்ய முடியாது.

"உள்குவார் உள்ளத்தானை உணர்வெனும் பெருமை யானை
உள்கினேன் நானுங்காண்பான் உருகினேன் ஊறி ஊறி"

சிறந்த அன்பு தடைகளால்தான் தழைத்து வளரும். தரம்குறைந்த அன்பு தடைகளால் தடைப்படும். ஆகவே இறைவனும் செயற்கைத் தடைகளைத் தோற்றுவித்து அன்பின் தரத்தை உயர்த்த முயற்சிக்கிறான்.

"ஊன்றி நின்றார் ஐவர்க்கு ஒற்றி வைத்தாய் பின்னை
ஒற்றி எல்லாம்
சோன்று கொண்டாய் கச்சி ஏகம்ப மேய சுடர் வண்ணனே."

எது முத்தி நிலை?

ஞானத்தில் ஞானுதி நான்குமாம் ஞானிக்கு
ஞானத்தின் ஞானமே நானென தென்னுமை
ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி
ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே

—திருமந்திரம்

முத்தி, நிர்வாணம், வீடுபேறு என்பதெல்லாம் களங்கமற்ற உண்மையின் காட்சியைத் தெரிதல்; தெளிதல். இதையே பூரண சரணுகதி என்றும் கூறலாம்.

"சொற்பதங்கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே"

என்று தனது முத்திநிலையை விளக்குவார் ஔவையார்.

அருவாயும், உருவாயும் நின்ற முருகன் குருவாய் வரவேண்டு மென்று பிரார்த்தித்து அருணகிரிநாதர், தான்பெற்ற நிலையை விளக்கமுடியாமற் தத்தளித்திருக்கிருர். அதற்குக் காரணமும் உண்டு—சீனியைப் பற்றி விளக்கலாம், ஆனல் அதன் சுவையை இன்னொருவருக்கு விளக்கமுடியாது. "மகட்குத் தாய் தன் மணுளனேடு ஆடிய சுகத்தைச் சொல்லெனில் சொல்லுமாறு எங்ஙனே?" என்பார் திருமூலர். சரணுகதி மூலம் பெறும் பேரின்பத்தின் தன்மையை சுவானுபூதியால் மட்டுமே உணரலாம்:

"வேலே விளங்கு கையான் செய்ய தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொள இங்ஙன் காண்பதல்லால், மனவாக்குச் செயல்
ஆலே அடைதற்கு அரிதாய் அருஉருவாகி ஒன்று
போலே இருக்கும் பொருளை எவ்வாறு புகல்வதுவே"

என்பதில் அருணகிரியார் இறைவனது காட்சியை அரு—உருவாக விளக்குவது சிந்தைக்கு விருந்தாகிறது. "ஒன்றும் நீயல்லை, அன்றி ஒன்றில்லை" என்ற திருவாசகக் காட்சியும் இறைவனைப் போற்றும்.

வீடுபேறு எது? என்பதற்குச் சமய இலக்கியங்கள் விளக்கம் தருவதோடு, அதை அடைவதற்கான முறைகளையும் கூறுகின்றன:

நன்றாய் ஞானம் கடந்துபோய் நல்லிந் திரியமெல் லாமீர்த்து
ஒன்றாய்க் கிடந்த இரும்பெரும்பாழ் உவப்பி லதனை
உணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்பதுன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே அப்போ தேவீடு அதுவே வீடு வீடாமே
—நம்மாழ்வார்

உடம்பெனும் மனைய கத்துள் உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே
—அப்பர்

மெய்ம்மையாம் உழவைச்செய்து விருப்பெனும் வித்தை
வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப்
பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில் சிவகதி விளையு மன்றே
—பரஞ்சோதி முனிவர்

சமய சாதனையில் புதிய அணுகுமுறை:
இல்லறத்தில் துறவறமே நல்லறமா?

"வாழ்க்கையை வாழ்க்கையாக ஒப்புக்கொண்டு" துன்பங்கள் வந்தே தீரும் என்பதைப் போதித்து, வருகிற துன்பங்களை எப்படிச் சமாளிப்பது என்ற யோசனையையும் சொன்னால், சராசரி மனிதனுக்கு அது வழிகாட்டும். மதத்தின்மீது பற்று தலையும் ஏற்படுத்தும்.

நான் படித்தவரை, பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சர் கடவுளை அடையும் வழி என்று சொன்னவை எல்லாம் முழுக்க முழுக்கப் பந்தபாசங்களை அறுத்தெறிந்துவிட்டு வாழ்வது பற்றி யனவாகவே இருக்கின்றன.

குடும்ப வாழ்க்கையை நடத்திக்கொண்டே ஒருவன் யோகியாக முடியும்; மகான் ஆக முடியும்; முத்தியடையவும்

முடியும். அதற்கான வழியை இந்துமத போதகர்கள் அதிகம் சொல்லவில்லை என்பதே என் கருத்து.

வள்ளுவன் இதை வலியுறுத்தியிருக்கிறான்.

இல்லறத்தில் துறவறம் என்ற தலைப்பில் சொன்னவர்கள்கூட ஒரு கட்டத்தில் மனைவியைத் தாய்போலப் பாவிக்கச் சொல்லியிருக்கிறார்கள்.

உடல் இச்சைகளிலிருந்து விடுபடச் சொல்லியிருக்கிறார்கள்.

புதிய கருத்தும் சாதனையும்

ஞானி எம்மை எதிலிருந்தும் விடுபடச் சொல்லவில்லை. அதற்கு ஒரு அளவை நிர்ணயித்துக்கொள்ளச் சொல்லுகிறார்.

விக்கிரக ஆராதனையும், பஜனைகளும் பக்குவமில்லாத தாழ்ந்த நிலையில்—ஆரம்ப நிலையில் மட்டுமே பயன்படும் என்கிறார்.

சாதாரணமாக, இன்றைய இளைஞர்களின் மனத்தில் இதே சிந்தனை தோன்றியிருப்பது கவனிக்கத்தக்கது.

"கோவிலுக்குப் போய்க் கூட்டத்தோடு கோவிந்தா போடுவதில் என்ன கிடைக்கிறது?"

"பஜனைப் பாடல்களைச் சத்தம் போட்டுப் பாடுவதில் என்ன பயன் இருக்கிறது?" என்றுதான், இன்றைய இளைஞர்களும் கேட்கிறார்கள்.

ஆத்மாவுக்கு அமைதிப்பயிற்சி அளிப்பது பற்றியும், மனத்தின் கடிவாளங்களை இழுத்துப் பிடிப்பது பற்றியும் அடியார்கள் சிந்தித்துள்ளனர்.

முழுப் பிரயத்தனத்தோடு தனியாகத் தியானம் செய்வதை அவர் வற்புறுத்துகிறார்.

இவை அனைத்தையும்விட, லௌகீக வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு, ஒட்டுமொத்தமாகப் பற்றற்ற வாழ்க்கையையும் துறவு வாழ்க்கையையும் போதிப்பதை அவர் கண்டிப்பதில் அர்த்தமிருக்கிறது.

குடும்ப வாழ்க்கையில் இருந்துகொண்டே பற்றுக்களைச் சமநிலைப்படுத்தி, அளவற்ற ஆசையின்றிப் பண்பாடாக வாழும்

வாழ்க்கையிலேயே மதபோதனைகளைப் போதிக்க வேண்டு மென்கிறார்.

நூற்றுக்குத் தொண்ணூறு பேர் லௌகிக வாழ்க்கையின் இச்சைக்கு ஆட்பட்டு வாழ விரும்புகிறார்கள்.

தொல்லைகளையும் துன்பங்களையும் காணும்போது, அவர்கள் வேதனை அடைகிறார்கள்.

அந்த வேதனையைச் சாக்காகக் கொண்டு, 'அவர்களை விட்டை விட்டு ஓடு' என்று போதிப்பது என்ன நியாயம் என்று கேட்கிறார்.

உபத்திரவங்களும் இடுக்கண்களும் ஜீவிதத்தில் பூரணமாக இல்லாமற்போவதென்பது நடக்காத காரியம்; இயற்கைக்கும் மாறானது. உண்மையில், அவை நமது மேன்மைக்காகவே ஏற்பட்டவை. அவை, நோயாளிக்கு ஆரோக்கியம் உண்டாவதற் காகக் கசப்பு மாத்திரைகள் கொடுப்பது போலாகும். மிக உயர்ந்த நல்ல வஸ்துவானாலும், சரியான முறையில் உபயோகப் படுத்தாது போனால், உபத்திரவங்களை விளைவிக்கும். துன்பங்களின் விஷயமும் இப்படியே. எவற்றையும், சரியான காலத்தில், சரியான முறையில், சரியாக உபயோகித்தால், நாளடைவில் அவை நற்பலனை அளிப்பது திண்ணம். உண்மையில் துன்பங்களே நமக்கு மேன்மையான வழிகாட்டிகள். அவற்றால் நமது மார்க்கம் செம்மைப்படுகிறது. சாமான்ய வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள மனிதனுக்கு அவனைச் சரியான முறையிலிருக்கச் செய்யத் துன்பங்கள் மிகவும் உதவியாயிருக்கும். குடும்பக் கஷ்டங்களையும் உலக வாழ்க்கையிலுண்டாகும் துயரங்களையும் பற்றி எனது குருநாதர் இப்படிச் சொல்வதுண்டு. "நமது இல்லமே, அமைதியும் பொறுமையும் அடைய நாம் பயிலுமிடம். கிருஹஸ்தாச்ரமத்தில் நாம் படும் வறுமை, இடுக்கண்களைப் பதறாது பொறுப்பது நாம் இயற்றும் பெருந்தவம்! இதனினும் உயரிய தவம் வேறொன்றுமில்லை. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நாம் என்ன செய்யவேண்டுமென்றால், கோபத்திற்காவது துக்கத்திற்காவது இடங்கொடாமல், குறை கூறும் மனப் பான்மையை ஒழித்து, நமது குற்றத்திற்காகவே நாம் அனுபவிக்கிறோம் என்று நினைத்து, சாந்த மனத்துடன் பொறுமையாய் இருக்க வேண்டும். காட்டில் தனித்த வாழ்வும்,

உலக விஷயங்களில் கலக்காது விலகி நிற்றலும் சிலருக்குப் பொறுமையையும் அமைதியையும் பழகச் சாதனங்களாகும். ஆனல், நமக்குப் பந்துமித்திரர்களின் இகழ்ச்சியும் சுடுசொற் களும் அரிய பெரிய தவத்திற்கொப்பாகி வெற்றிக்கு ஒப்பற்ற சாதனங்களாகின்றன.''

உண்மையில், துன்பங்களேயும் சடங்குகளேயும் நாம் அமைதியுடன் பொறுத்தோமேயாகில், அவை நம்மை மேம் பாடடையச் செய்து, மேல் நிலேகளுக்குச் செல்வதற்கு வேண்டிய முக்கிய சாதனங்களாகும்; அங்ஙனம் அல்லாது முரணுன வழியில் உபயோகித்தோமேயாகில், நற்பலன் அழிந்துபோய் நாமடைய விருக்கும் ஆதாயம் கெட்டுப் போகும்.

உண்மை வைராக்கியம்

பரித்தியாகம், அதாவது பற்றுதலற்ற தன்மை ஒரு முக்கிய நிலே என்பதில் சந்தேகமில்லே. பற்றற்ருலன்றி மாயையின் சிக்கல்களிலிருந்து தப்பமுடியாது. ஆனல், நாம் மனேயை விட்டகன்று, குடும்பம், லௌகீக விஷயங்களெல்லாவற்றையும் புறக்கணித்துத் துறவு பூண்டு சன்னியாசியாக வேண்டியதில்லே. இல்லறமும் இல்வாழ்க்கையும் துறந்து உலக பந்தங்களே விட்டுவிட்டு, ஏகாந்தத்தை நாடி நிற்பதே பற்றற்றுப் போவதற்கு ஒரே சாதனம் என்னும் கொள்கையை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். பலாத்கார முறையில் சர்வசங்க பரித்தியாகம் செய்வது நிஜமானதன்று. ஏனெனில், உலகத்தைத் துறந்துவிட்டாற் போலத் தோன்றினுலுங்கூட, உட்கருத்தில் அவர்கள் உலகத்தைப் பற்றியே நிற்கக்கூடும். இல்லற வாழ்க்கையில் நாம் அநேக விஷயங்களேக் கவனிக்க வேண்டு மென்பதற்குச் சந்தேகமில்லே. சம்சாரத்தைத் தாங்கவேண்டும். மக்களின் கல்விக்கு வேண்டிய ஏற்பாடுகளேச் செய்யவேண்டும். அவர்கள் வேண்டுவனவற்றையும், அவர்களுக்கு முக்கியமான வற்றையும் கொடுக்க வேண்டும். அவர்களே வெப்பம், குளிர், நோய், துன்பங்கள், மற்றெல்லாவற்றிலிருந்தும் காப்பாற்ற வேண்டும். இப்படி முக்கியமாக வேண்டியவற்றிற்காக நாம் பணமும் ஆஸ்தியும் சம்பாதிக்கிறேம்.

இப்படி நாம் சம்பந்தப்பட்டுள்ள விஷயங்களில் அளவு கடந்து பற்றுதல் கொள்ளுவதே உண்மையில் தீமையாகும்.

இதுவே நமது இடுக்கண்களுக்கு முக்கிய காரணம். ஆனல், விருப்பு வெறுப்பற்று நமது கடமை என்று நாம் காரியங்களைச் செய்வோமாகில், உலகப் பற்றுதல்களினின்று ஒருவாறு விலகியவராகி, அநேக உடைமைகளைப் படைத்து அவற்றைக் கையாளுபவராயிருப்பினும், உண்மையில் உலகைத் துறந்தவரா கிறோம். இத்தன்மையில் உடைமைகள் பகவானல் நமக்கு ஒப்படைக்கப்பட்ட தர்மத்தைச் செய்வதற்காகக் கொடுக்கப் பட்டுள்ளவை என்பது தெளிவாகும். சங்க பரித்தியாக மென்பதற்கு உலகப்பற்றற்றுப்போதல் என்பது உண்மையான பொருளாகும். உடைமைகள் இல்லாது போவதென்பது பொருளாகாது. ஆகையால், இன்றியமையாதவாறு ஆஸ்திகளைப் பெற்று உலகத்துடன் சம்பந்தம் கொண்டுள்ள இல்லற வாழ்க்கையை, விஷயங்களில் அளவுக்கு மிஞ்சிய பற்றற்று நடத்தினல், பரித்தியாகத்திற்கும், அதன் விளைவான சத்திய நிலை எய்துவதற்கும் இவை தடையாக மாட்டா.

எண்ணற்ற மகான்கள், ஆயுள் முழுவதும் இல்லற வாழ்க்கையை நடத்திக்கொண்டே, மகோன்னதமான பூர்ணத்து வத்தை அடைந்திருக்கின்றனர். பரித்தியாகம் என்பது மனத்தின் உள்நிலை. அது வஸ்துக்களின் நிலையற்றதும் மாறுபடுவதுமான தன்மையை உணர்த்துவதோடு, அவற்றின்மேல் அபேட்சையை உண்டுபண்ணும். மேலும், நித்தியமானதும், மாறுபாடே இல்லாததுமான சத்தியத்தின் மேலேயே நோக்கம் நிலைத்து, விருப்பு வெறுப்பு என்னும் உணர்ச்சிகளுமற்றுப் போகும். உண்மையான வைராக்கியம் (Renunciation) என்பது இதுவே.

நமது மனத்தின்கண் இந்தப் பாவம் ஏற்பட்டதும் நமக்குப் பற்றற்றுப் போம். கிடைத்த மட்டும் திருப்தியடைந்திருப்போம். பற்றற்றுப் போகவே ஸம்ஸ்காரங்கள் உண்டாவது நின்று போகும். இப்பொழுது எஞ்சியுள்ளது ஏதெனில், இதுவரை சேமித்த ஸம்ஸ்காரங்களை ஜீவிதத்தில் அனுபவித்துக் கழிப்பதே. பிரகிருதியும் ஸம்ஸ்காரங்களைக் காரண சரீரத்துடன் அனுபவித்துத் தீர்த்துக் கொள்வதற்காகத் தக்க இடத்தைச் சிருஷ்டி செய்து நமக்கு உதவி செய்யும். இப்படியாகப் புரைகள் கரைந்து போனதும் நாம் சூக்ஷ்ம ரூபம் அடைந்து நிற்கிறோம்.

நமது எண்ணங்களையும் செயல்களையும் அடக்குவதற்கு சதா சலித்துக் கொண்டேயிருக்கும் மனம், சரியான முறையில்

வேலை செய்கின்றதா என்பதைக் கவனிக்க வேண்டும். மதபோதகர்கள் மிகக்கசந்த வார்த்தைகளால், மனத்தைக் கடிந்து தூஷித்து, அதற்குக் கெட்டபெயர்கள் எல்லாம் இட்டு, அதை நமது பெரிய விரோதி என்று பழிப்பதைப் பலமுறை கேட்டிருக்கிறேன். இதன் காரணம் வெட்ட வெளிச்சமாகத் தெரியும். அவர்கள் நம்மிலுள்ள தீமைகள் எல்லாவற்றிற்கும் மனமே காரணம் என்று நினைக்கிறார்கள். இதன் காரணமாக, மனம் போன போக்கே போகாது, அதை நசுக்கிவிட வேண்டு மென்று ஜனங்களுக்குப் புத்தி புகட்டுவர். ஆனால், ஜனங்கள் மனத்தின் கவனத்தன்மையைக் கட்டுப்படுத்தவோ, அதன் சொற்படி கேளாதிருக்கவோ முடியாமலிருக்கின்றனர்.

கோட்பாடுகளைச் சார்ந்து சொல்லப்பட்ட புத்திமதிகளும், உபந்நியாசங்களும் கொஞ்சமும் உபயோகப்படுவதில்லை. உபந்நியாசங்களைக் கேட்ட எவரும் மனமடக்குதல் என்பதை நடைமுறையில் அடைந்ததேயில்லை. மேலும் தற்காலச் சூழ் நிலைகளும், சந்தர்ப்பங்களும், மனத்தை மேன்மேலும் சலிக்கச் செய்கின்றன. இக்காலத்தில் ஒவ்வொருவரும், ஜீவிதம் நடப்பதே கடும் போரெனவும்,வறுமை,பாதுகாப்பில்லாமை, இடுக்கண்கள், போட்டிகள் என்னுமிவற்றால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அவற்றின் விளைவினின்று நாம் விலகி நிற்க முடியாதென்றும் நினைப்பர். இதனால் எப்போதும் அமைதியின்மையும், மனச் சஞ்சலமும் ஏற்படும். இந்தப் பாவம் நமது சுவாசத்திலும் கலந்து உட்சென்று சூழ்நிலை சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப இழுத்துச் செல்லும். நமது தனிமையானது காற்றுக்காட்டிபோல் நமது பாவம் போகும் போக்கிலேயே போகும். தனது தைரிய சாகஸங் களால் இதை எவன் எதிர்த்து நின்று, பாதிக்கப்படாமல் தன்னைக் காத்துக்கொள்ளுகிறானோ அவனே தீரன்.

பாரதியார் போற்றிய பரசிவ வெள்ளம்

அவலை நினைத்து உமி மெல்லுவதுபோலக் கண்ட கண்ட எண்ணங்களை விடுத்து, அனைத்துள்ளும் ஒளிரும் ஆன்மவடிவான, சுத்த அறிவான பிரமத்தையே உள்ளும் புறமும், உருவிலும் அருவிலும் அன்பு செய்ய வேண்டும். எவ்வுயிருங் கடவுள், எச்செயலும் அவன் செயலென்று, அகந்தை, கவலை, சினம்—அனைத்தையும் சீயென்று தள்ளவேண்டும். பேசுவதிற் பயனில்லை; அனுபவத்திலேயே கடவுளறிவைப் பெறல் வேண்டும் (தத்வ

மனி = சாமி நீ என்பதே அதன் பொருள்). அதுவே 'ஓம்' எனப்படுவதும். அதுவே உள்ளது; அஃது உண்மை, அறிவு, இன்பவியல் புடைத்து; அந்தப் பரசிவ வெள்ளம், உள்ளும் புறமும் நிறைந்துளது; காட்சி கருத்து எல்லாம் அதனிடைப் பிறந்தன. அதுவே சக்திகளைப் பொழிந்து, அணுக்களைக் கூட்டிப் பிரிப்பது. அப்பொருள் பலவாக, எங்கும் யாவுமாய், எல்லா மதங்களையும் தழுவி, வேண்டுவோர், வேட்கை, வேட்கைதரும் பொருள், காண்போன், கண், காட்சி எல்லாமாகிறது. நிராசையுடன் அதிற் கலப்பார் மிகப் பெரியோர்:

1. ஒன்றுமே வேண்டா துலகனைத்தும் ஆளுவர் காண்
என்றுமே இப்பொருளோடு ஏகாந்தத் துள்ளவரே

2. காவித்துணி வேண்டா கற்றைச் சடைவேண்டா
பாவித்தால் போதுமடா பரமநிலை எய்துதற்கே

3. எண்ணமிட்டா லேபோதும் எண்ணுவதே யிவ்வின்பத்
தண்ணமுதை யுள்ளே ததும்பப் புரியுமடா

காவித்துணி வேண்டாம், கற்றைச்சடை வேண்டாம், சாத்திரம், சதுமறை, தோத்திரம், தலம், சாதனை எதுவும் வேண்டாம்! "யாதும் சிவானந்தப் பெருக்கு, அது என்னகத்தே உள்ளது" என்று பாவித்து, உள்ளே தொட்டு நின்றுற் போதும்; நித்திய வெள்ளம் என்னுள் நிரம்புதெனச் சிந்தித்தாற் போதும். காண்பதெல்லாம் சத்தியம், அவன் மயம்.

திருவாசகம் என்னும் தேன்

(51 பதிகங்கள் 656 பாடல்கள் அடங்கியது)

மணிவாசகர் கண்ட முத்தியின் வித்தில் உள்ள சமய தத்துவச் சிறப்பியல்புகள்

திருவாதவூரர் வரலாறு: புவிராஜன், கவிராஜன், தவராஜன் என்ற பெருமைக்குரிய பேராளரான இவர் சிவத்துடன் கலந்த சித்தர். ஆட்சித் திறமையால் "தென்னவன் பிரமராயன்" என்ற பட்டம் பெற்றுயர்ந்த இடைக்கால ரிஷிகளில் ஒருவரான மணிவாசகப் பெருமான் திருப்பெருந்துறையில் நடத்திய புரட்சி:

(1) குதிரை வாங்கவந்த அரசபணியை மறந்தார்.

(2) குதிரை வாங்கக் கொண்டுவந்த செல்வத்தைச் செலவழித்தார்.

(3) முதல் இரண்டையும் மறந்து சிவஞான குருசேவையில் ஈடுபட்டார்.

இறைவன் 'ஆவணி மூலத்தில்' நிகழ்த்திய திருவிளையாடலின் காரணம்: தீயிலிட்டு உருக்குமளவு பொன் ஒளி வீசுவது போன்று இன்னல்கள் அதிகரிக்குமளவு பக்தியானது தீவிர பக்தியாக மாறுகிறது. இதை உலகத்தவர்க்கு விளக்குதலே காரணம். பிட்டுக்கு மண் சுமந்து பிரம்பால் அடிபட்டுப் பாண்டியனுக்கு அறிவுறுத்தியது. அவனாலேயே வெளிப்படுகிறது: "என் சொத்து என்று நான் எதைக் கருதினேனோ அது உண்மையில் சிவன் சொத்து."

ஆத்ம சாதகன் ஒருவனுக்கு வாய்க்கிற வாய்ப்புக்களுள் தலைசிறந்தவை இரண்டு. தனது அருள் குருவின் சந்நிதி சார்ந்து, அவரோடு சிறிது காலம் இணங்கி வாழ்ந்திருப்பது முதலாயது; நல்லார் இணக்கம் அல்லது சத்சங்கம் அதற்கு அடுத்த படியானது.

திருவாசக நூல் அமைப்பில் முற்பகுதி தத்துவ விளக்கம். சிவபுராணமும் மூன்று அகவல்களும் முதலாவது தத்துவ விளக்க மாக அமைந்துள்ளன.

பின்னர், திருச்சதகம் சாதனையின் கூறுகளை நன்கு விளக்குகிறது.

கண்ணாடி ஒவ்வொருவனுடைய முகத்தையும் விளக்குவது போன்று திருவாசகம் சாதகனது பக்குவத்தை அவனுக்குப் படம்பிடித்துக் காட்டுகிறது.

பரஞானம் பெற்ற பக்தர்கள் பல படித்தரங்களில் காணப் படுகிறார்கள்.

திடீர் பரஞானம் பெற்றவர்—ஞானசம்பந்தர்
ஏணியில் முறையாகப் போனவர்—சுந்தரர்
கயிலை மலையில் ஏறியும் இறங்கியும் கடைசியில் முத்தி
பெற்றவர்—அப்பர், மாணிக்கவாசகர் ஆகியோர்.

முயலுகின்ற கடைப்பட்ட மாந்தரும் உய்வு அடையலாம் என்பது திருவாசகத்தினின்று தெளிவாகிறது. காலில் தீண்டத் தகுதியற்ற சாக்கடை நீரும் கங்கையில் சேர்ந்தபின் தானே கங்கையாகிறது.

பகர்ந்ததைத் திரும்பக்கூறும் குற்றம் திருவாசகத்தில் உள்ளது. எனினும், உள்ளம் உருகும்போது எழுந்த சொல் ஒவியமே அதற்குக்காரணம். கூடச்கூட ஆவின்பால் சுவைபெறுவது போன்று தெய்வீகம் திகழுகிறது. ஒருவாசகத்திற்கும் உருகார் திருவாசகத்திற்கு உருகியே தீர்வர். சொல் அழகு, பொருள் அழகு கடந்து அருள்தாகமென்னும் சுடர்விளக்கின் தூண்டுகோலாய் அமைவது திருவாசகம்.

ஒவ்வொரு துறையிலும் சீர் உண்டு; சீர்கேடும் உண்டு. எது சீர், எது சீர்கேடு என்பனவற்றை அத்துறையில் தேர்ச்சி பெற்ற நிபுணன் அறிகிறான். நோயின் கொடுமையை நோயாளி

அறிகிறன்; மற்று நன்கு அனுபவப்பட்ட மருத்துவனும் அறிகிறன். ஆத்ம சாதனம் வேறு; அதைப்பற்றிய நூலறிவு வேறு. சாதன வகைகளின் முறைமைகளெல்லாம் திருவாசகம் தன்னகத்து அடக்கி வைத்திருக்கிறது.

தத்துவம் என்பது மெய்ப்பொருள். அண்டத்திலும் பிண்டத்திலுமாக எங்கும் நிகழ்வது ஈசன் செயலே. பிண்டமாகிய ஒரு ஜீவனிடத்து அடங்கியுள்ள தெய்வப் பெற்றி யாவையும் திருவாசகம் விளக்குகிறது.

அறிவுத்திறன் ஓங்குமளவு வாழ்வு மேலானதாகிறது. இவ்வுலக அறிவு ஓங்குமளவு உலக வாழ்க்கையும் திருந்தி அமைகிறது. வாழ்க்கை ஒரு பயணம்; அதில் உற்றார் உறவினர். யார், குறிக்கோள் எது எனத் தெளிந்திருப்பது அறிவுத்திறன். ஈசன், இயற்கை, ஜீவன் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பை விளக்குவது திருவாசகம்.

பரஞானத்தில் கருத்து வேறுபாடு இல்லை. உண்மையை மனிதன் மாற்றவோ திரிவுபடுத்தவோ முடியாது. உண்மை யாரால் பகரப் பெறுகிறது என்பது முக்கியமானதன்று.

தத்துவ விளக்கத்திற்கு முடிவான பிரமாணமாய் அமைந் திருப்பவைகள் உபநிஷதங்கள். இவற்றோடு ஒப்பிடக்கூடிய திறமை வாய்ந்தது திருவாசகம்.

மெய்ப்பொருள் நாட்டத்தில் கண்ணுங் கருத்துமாயிருப் பவன் பிரதிபந்தத்தில் கட்டுப்படாமலும், ஐதிகம் என்னும் சிறையினுள் அகப்படாமலும், சமயம் என்னும் சழக்கினுள் சிக்காமலும், காலதேச வர்த்த மானங்களையும் தாண்டியவனாக இருக்கவேண்டும்.

சமய தத்துவ விளக்கம்(I) மாயை: ஓயாது மாறியமையும் தன்மை எதனிடத் திருக்கிறதோ அது மாயை. ஆக, மாயை யென்பது பிரபஞ்சம். அது ஓயாது தன்வடிவத்தை மாற்றி யமைத்துக் கொண்டிருக்கிறது. இவ்வுலகம் மாயை. காலமாகத் திகழ்வது மாயை. கால, தேச, வர்த்தமானமாக இருப்பதும் மாயை (வர்த்தமானம்=காரண காரியமாகிய செயல்கள்).

மனிதனிடத்து மனதாய் மிளிர்வது மாயை. கனவில் தனக்குள்ளேயே ஒரு உலகை உண்டுபண்ணுகிறது மனம். இவ்வாறு மாயையின் தோற்றங்கள் அனைத்துக்கும் இகம் என்று பெயர். இதற்கு அப்பால் இருக்கும் பெருநிலைக்குப் பரம் என்று பெயர். இகம், பரம் ஆகிய இரண்டும் பர வஸ்துவில் இடம் பெற்றிருக்கின்றன. திரையில் படம் தென்படுவது போன்றும் கண்ணாடியில் பிம்பம் தென்படுவது போன்றும் பர வஸ்துவில் பிரபஞ்சம் என்னும் மாயை தெரிகிறது. இந்த மாயையைக் கடந்து அப்பாலுள்ள பரமனைச் சார்ந்திருப்பது சமய வாழ்க்கையின் குறிக்கோள்.

மாயாவாதம்: புத்தமதம் மாயைக்கு அப்பால் என்ன இருக்கிறது என்பது தெரியாது என்கிறது.

அக்ஞேய வாதம் (Agnostic) இதனால் புத்த சமய சாதனத்திற்கு இடைஞ்சல் ஒன்றுமில்லை என்கிறது.

லோகாயத மதம் சார்வாகிய மதம் மாயைக்கு அப்பால் ஒன்றுமில்லை, சூனியம் என்கிறது.

பிரம்மவாதம் 6சமயங்கள் மாயைக்கு அப்பால் பரம்பொருள் உண்டு என்று நம்புகின்றன.

பரம்பொருளை அறிய முடியுமா என்று இந்தச் சமயங்களும் குறிப்பாக வேதாந்த தரிசனமும் உறுதி கூறுகின்றன.

பரம்பொருள் — மனதற்ற துரியாதீத நிலையில் உள்ளது என்பது பிரம்மவாதம்.

மும்மல தத்துவம்: இகத்தையும், பரத்தையும் ஏககாலத்தில் தரிசிக்க முடியாது. "மரத்தை மறைத்தது மாமத யானை, பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்" என்பது திருமூலர் திருமந்திரம்.

(அ) மலம் என்னும் இயல்பு இகத்தில் இடம் பெறுகிறது— பரத்திலோ அது பரசொரூபமாக மேன்மையுறுகிறது. பாம்பின் பல்லில் விஷம் அலங்காரம்—மற்றவர்க்கு மரணம். உண்ணும் உணவு அமிர்தம்—பின்னர் மலமாகக் கழிகிறது. இங்ஙனம் அமிர்தமும் மலமும் இணைபிரியாதிருக்கின்றன.

(ஆ) கர்மம்: பிரபஞ்சம் முழுவதும் கர்மசொரூபம். உயிர்களனைத்தும் கர்மத்தின் வாயிலாகத் தங்களைத் திருத்தியமைத்து வருகின்றன. மனம் வாக்கு காயம் ஆகிய திரிகரணங்களால் நிகழ்வன எல்லாம் கர்மம். ஜீவாத்மாவானது பரமாத்மாவில் வயமாகிற பொழுது கர்மம் முடிவுறுகிறது—அத்தருணத்தில் அதற்கு மலம் என்றும் பெயர் வருகிறது.

(இ) ஆணவம்: அணு என்ற சொல்லிலிருந்து வந்தது ஆணவம். ஜீவாத்மா தன்னை ஒரு நுண்ணிய உயிராக எண்ணிக் கொள்வது ஆணவம். உயிர் வளர்ச்சியடைந்து இறுதியில் பரமாத்மனோடு ஒன்றுபடும் பொழுது ஆணவம் அல்லது ஜீவ வியக்தி (Separate identity) அழிந்து போகிறது.

like rain reaching the sea losing their separate identity.

முப்பாழ் நிலைகள், அவஸ்தைகள். பரத்தினை அடையும் தறுவாயில் இருக்கும் ஜீவாத்மனுக்குப் பிரகிருதி மும்மலமாக வடிவெடுக்கிறது.

கால—தேச—வர்த்தமானம்
சத்வம்—ரஜஸ்—தமஸ்
காண்போன்—காணப்படுபொருள்—காணுதல் (காட்சி)
(திரிபுடி)

என்ற இந்த மும்மைகளாலும் இதை விளக்கலாம்.

"பேர் ஆயிரம் உடைப் பெம்மான் போற்றி": அண்டத்தின் அமைப்பு அற்புதமானது. பேதத்தைப் புலப்படுத்துவது சிருஷ்டி. பரம்பொருள் படைத்திருக்கிற திறமைக்குப் பிரபஞ்சமெங்குமுள்ள வேறுபாடே முடிந்த விளக்கமாகிறது. இந்நிலையில் சமயங்களுக்கிடையேயும் வேறுபாடு காணக்கிடப்பது விபரீதமன்று. இனி சமயங்களைச் சீர்தூக்கித் தரம் பார்ப்பது எளிதன்று. சமயங்கள் பல அமைந்திருப்பதும் இறைவனுடை சிருஷ்டி—மனித இயல்பிற்கு ஏற்றவாறு இவை உள்ளன. அருள் நாட்டம் என்னும் சீரிய மனநிலை இருக்கும்போது, தேச, மொழி, வேறுபாடுகளைக் கடந்து சமயஒற்றுமை திகழும்.ஒதாது உணர்ந்த ஆத்மபோதம் அல்லது அருள்நிலை என்பது இதுவே. இதை வளர்ப்பது சமயங்களின் சீரிய நோக்கம்.

உடலுக்கு ஒத்துக் கொள்ளும் உணவை ஏற்பதே முறை. உடலுக்கு ஏற்ற உணவு போன்று இயல்பிற்கு ஏற்ற சமயம் என்பதே இறைவனுடைய திட்டம்.

"வேறுபடுஞ் சமயமெல்லாம்... ..." —தாயுமானுர்

பக்தியின் வளர்ச்சி (Stages of progress to God): தூயபக்தி முதிர்ந்து பிரேமை பக்தியாகிப் பின்னர் மஹா பாவம் உருவெடுக்கிறது.

ரிஷிகள் முதல்நிலைக்கும், கோபிமார்கள் இரண்டாவது நிலைக்கும், மணிவாசகர் மூன்ருவது நிலைக்கும் உதாரணமாவர்.

ஆத்ம சாதகன் அடைகிற தெய்விகப் பண்பாடுகளை முறையே ஆற்றல், அறிவு, அன்பு எனலாம். அம்மூன்றையும் முறையே சத், சித், ஆனந்தம் என்று சொன்னுலும் பொருந்தும்.

ஆற்றல்—பதஞ்சலி: யோக சூத்திரங்கள்
அறிவு (பரஞானம்)—வியாசர்: பிரம்ம சூத்திரங்கள் அல்லது வேதாந்த சூத்திரங்கள்
அன்பு- நாரதர்: பக்தி சூத்திரங்கள்

இந்தச் சூத்திரங்களுக்கே ஆதிமூலமாயுள்ள உபநிஷத மந்திரங்கள் திருவாசக விளக்கத்தில் வேண்டியவாறு இடம் பெற்றிருக்கின்றன.

[முக்தி என்பது மரணமிலாப் பெருவாழ்வு (ஆனந்தம்)]

பக்தியின் பெருநிலை: பிரதிபலனை எதிர்பார்ப்பது பக்தியின் பாங்கு அன்று. தன்னிடத்து உள்ளதையெல்லாம் பக்தன் தெய்வத்திற்கும், உயிர் வகைகளுக்கும் கரவாது வழங்குகின்ருன். முக்தி உட்பட எதையும் அவன் தெய்வத்திடமிருந்து கேட்பதில்லை. தன்னிடமுள்ளதை ஓயாது கொடுத்துக் கொண்டிருப்பதால், பகவானே அவனுக்குக் கடமைப்பட்டவர் ஆகிருர்.

கற்கண்டில் எல்லாப் பகுதியும் இனிப்பதுபோன்று பக்தர்களது சொரூபம் முழுதும் பக்தி மயமே. இதனுல் பக்தர்களை அறிந்து கொள்வதும், பகவானை அறிந்து கொள்வதும் ஒன்று.

சாதியிற் கீழோர்: நந்தனர் நம்மாழ்வார்
கல்வி இல்லாதவர்: துருவன், கோபிமார்
கீழ்த்தொழிலாளர்: கண்ணப்பன்
குரங்கு: அநுமான்
செல்வம் அற்றவர்—விதுரர், சுதாமர் (குசேலர்)
—எல்லோரும் பரம பக்தர்கள்.

நாரதர் பக்தி சூத்திரத்தில் பக்தி பதினொரு விதங்களில் விளங்குகிறது. ஆயினும் முறையாக ஆராய்ந்து பார்க்குமிடத்து எத்தனை மனிதர்கள் இருக்கிறார்களோ அத்தனைவித பக்திச் சாதனங்கள் இருக்கின்றன எனலாம்.

உலகப்பற்று வேறு; பக்தி வேறு. உலகப்பற்று வியாபாரம் செய்யும் தன்மையது; தெய்வப்பற்றோ தியாகம் செய்யும் தன்மையது. கரவாது கொடுப்பது பக்தியின் முதன் மகிமை. உலகப் பற்று பயம் நிறைந்தது. அபயம் அல்லது எதற்கும் அஞ்சாமையே பக்தியின் பாங்கு. உலகப்பற்று சுயநலம் மிக்கது. பக்தியோ சேரவாரும் செகத்தீரே என்று அனைவரையும் அறை கூவி அழைத்து அதில் சேர்த்துக் கொள்ளுகிறது.

எது யாகம் அல்லது வேள்வி: வென்று வாழ்தல், வகுத்து வாழ்தல், வழங்கி வாழ்தல் என்று மூன்று படித்தரங்கள் உயிர்களின் வாழ்க்கையில் வாய்த்திருக்கின்றன. இவைகளுள் வென்று வாழ்தல் (Competition) கடைத்தரமானது; மிருகத்தனமானது. வகுத்து வாழ்தலே (Co-opration) சமுதாய வாழ்விற்கு அடிப்படை. தலை சிறந்த முறையானது. வழங்குதலை (self-dedication) மையமாகக் கொண்டது. யார் ஒருவன் தனக்காகவென்று பொருளை ஏற்பதைவிட அதிகமாக மற்றவர்களுக்காகவென்று அதை வழங்குகின்றானோ அவன் வேள்வி வேட்கிறான். மனிதனை விட வாழையும், தென்னையும், பசுவும் வேள்வி செய்கின்றன. கொடுத்ததற்குப் பலமுறை பயனுள்ளதைத் திருப்பிக் கொடுத்து தம் வாழ்வையே வேள்வி மயமாக்குகின்றன.

மணிவாசகர் பாடுகின்றார்: "அன்றே என்தன் ஆவியும்..." தெய்வம் என்னும் வேள்வித்தீயில் அவர் தம்மை ஆகுதியாகக் (விறகு) கொடுத்துவிட்டார். எங்கு வேள்வி நிகழ்கிறதோ அங்குத் தெய்வ சான்னித்தியமிருக்கிறது. எமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அவற்றிற்கு உடையவனுகிய இறைவனுக்கு ஒப்படைப்பதன் பெறும்பேறே பேரானந்தம். இதுவே முத்தி நிலை—திருவாசகத்தின் குறிக்கோள். மணிவாசகர் கண்ட மாமருந்து.

திருவாசகத்தில் வீடுபேறு

திருப்பெருந்துறையில் அருளிய சிவபுராணம்—சிவனது அறுதிமுறைமையான பழமை

நமசிவாய என்ற பஞ்சாட்சர மந்திரம் வேதத்தின் இருதயம்; மூலமந்திரம் (கடல் தன்னை அடையும் நீரைக் கடலாக்குவது போல). சிவம்—மங்களம், சிவதரன் — தன்னையடைந்தவரை சிவமாக்குகிறவன்.

"நம சிவசாய ச சிவதராய ச"—ஸ்ரீருத்ரம் 8-1 யஜுர் வேதத்துக்கு நடுநாயகம் வகிப்பது ஸ்ரீருத்ரம்; இந்த ஸ்ரீருத்திரத்தில் நடுநாயகம் வகிப்பது நமசிவாய என்னும் மந்திரம்.

ஆத்ம சாதனங்களுள் நாமசெபம் மிகச் சிறந்தது- எடுத்த எடுப்பிலே இதை மணிவாசகர் ஓதுகிருர்.

ஈசா வாஸ்யமிதம் சர்வம் யத்கிஞ்ச ஐயத்தியாம் ஜகத்
தேன த்யக்தேன புஞ்ஜீதா மாக்ருத கஸ்ய ஸ்சித் தனம்

—ஈசாவாசியோபநிஷதம்-1

நாதம் அல்லது ஓசையின் ஸ்தூல தோற்றமே இப்பிரபஞ்சம். இதில் மாறி மாறி அமைகிற யாவும் ஈசனுல் வியாபிக்கப் பெற வேண்டும். இத்தகைய தியாகத்தின் மூலம் உன்னை நம்புக. யாருடைய செல்வத்தையும் விரும்பாதே (ஈசனே விசுவநாதன்).

விந்து வேறு, விருட்சம் வேறல்ல; சூட்சும நிலையில் இருப்பது விந்து; ஸ்தூல நிலையில் இருப்பது விருட்சம். அங்ஙனம் நமசிவாய என்னும் நாதவிந்து அதிசூட்சுமமானது; அது காரணநிலை; பிரபஞ்சத்தில் அனைத்துமாய் அதை ஆண்டு வருகிற மூர்த்தியோ காரியநிலை. அவருடைய ஆளுகைக்கு அனைத்தும் உட்பட்டிருப்பதால் அவர் நாதன் அல்லது தலைவன் எனப்படுகிருர்.

யார் மெய்ஞ்ஞானி: பரமபதம் மனிதனது நெஞ்சில் உள்ளது. புறப்பொருள்களைப் பஞ்சேந்திரியங்கள் வாயிலாகப் பெறமுயல்வது ஆசை. உள்ளிருக்கும் பேரறிஞகிய ஈசனை உணர்தற்கு ஏற்பப் புறப்பொருள் விரைவில் அடையப்பெறுகிறது. பிறகு புறத்தில் நாடுகிற இன்பம் அகத்தில் இருப்பதாக உணரப்படுகிறது. இன்பமாய் இறைவன் யாண்டும் உள்ளிருப்பதால் அதை நாடியலைய வேண்டிய அவசியம் இல்லையென இறுதியில் உணரப்படுகிறது. இந்நிலை யெய்தியவன் பிரம்மஞானியாகிருன்.

எது ஆத்ம தரிசனம்: சித்தம் அல்லது மனம் ஒரு தடாகம் போன்றது. தடாகத்தில் சேற்று நீர் இருந்தால் அடிமட்டம் தெரியாது; அலை வீசினாலும் தெரியாது. ஆசையாகிய அலை எழாது, பந்தபாசம் என்னும் அழுக்கு இல்லாதவிடத்து, மனதுக்கு மூலப்பொருளாகிய ஆத்ம தரிசனம் கிட்டும்.

முத்தியின் விளக்கம் (1): இறைவனிடத்திருந்து தோன்றி வந்துள்ள உயிர்கள் பிரபஞ்சத்தில் பல பிறவிகள் எடுத்தல் என்னும் பெரும்பயணத்தை முடித்துக்கொண்டு மீண்டும் இறைவனிடம் போய்ச் சேருகின்றன. இறைவனிடம் திரும்பிப் போய் சேருவது வீடுபேறு அல்லது முத்தி எனப்படுகிறது.

"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி": "பரம்பொருள் வேதம் கற்று அடையப்படுவதன்று. புத்திக் கூர்மையாலோ, ஏராளமாகப் போதிக்கக் கேட்பதாலோ இது அடையப்படுவதன்று. யாரை இது ஆட்கொள்ளுகிறதோ அவனால் இது அடையப் பெறுகிறது. அவனிடத்தே இந்த ஆத்மன் தனது சொரூபத்தில் மிளிர்கிறது"— கடோப நிஷதம் (2-23).

ஈசனுடைய அருள் இல்லாது ஈசனை அறிந்துகொள்ள முடியாது என்பது துவைதமதக் கொள்கை. ஆத்ம சொரூபத்தை நாடுபவர்கள் அன்றி மற்றவர்கள் ஆத்ம சொரூபத்தை அறிந்து கொள்ளமுடியாது என்பது அத்வைத மதக் கொள்கை. விளக்கின் வெளிச்சத்தைக் கொண்டு விளக்கு அறியப்படுகிறது. சூரிய வெளிச்சத்தைக் கொண்டு சூரியனை அறிவதுபோலவே, இறைவனது அருளைக்கொண்டே அவனை அறிகிறோம். அவனை அறியுமளவு நாம் அவனுக்கு ஆட்படுகிறோம். அப்படி ஆட்படுவது பிரார்த்தனையாகிறது.

முத்தியின் விளக்கம் (2):

"மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"

பிறவிகளில் தத்தளித்த நான் என் இருப்பிடத்துக்கு வந்து விட்டேன் என்று உன்னை அடைந்தவுடனே ஐயம் திரிபு அற உணர்கிறேன். இறைவனே சடப்பொருள்; சேதனப்பொருள் ஆகிய அனைத்தும் ஆகிறான். கல், புல் போன்ற அற்ப உயிர்களில் துவங்கி பிரம்மதேவன் வரையில் உள்ள எல்லாவித உயிர்களாக அவனே பரிணமிக்கிறான். அவ்வுயிர்களுக்குத் தங்கள் நிஜ

சொரூபம் தெரியவொட்டாது அவனே மறைத்து வைக்கிறான். இப்படி அவனையும், அவனுடைய வடிவங்களையும் செயல்களையும் உள்ளபடி சுவானுபூதியில் அறிகிறவன் முத்தி அடைகிறான்.

ஓங்காரம்: ஓங்காரம் பிரணவமந்திரம்—மாத்ரப் பிரணவம். உச்சரிப்புக்கு எட்டாதிருப்பது அமாத்ரப் பிரணவம். சகுணப் பிரம்மமாக அல்லது சிவசக்தி மயமாக ஒலிக்கிற ஓம் மாத்ரப் பிரணவம். நிர்க்குணப்பிரம்மமாக அல்லது சுத்த சிவமாக இருப்பது ஓசை ஒலிக்கு அப்பாற்பட்டது.

அண்டத்தில் இருப்பது பிண்டத்திலும் உள்ளது. பிண்டம் ஆகிஉடல் வாழ்வை உள்ளும் புறமும் ஒழுங்கு படுத்துவதற்கு ஏற்ப ஓம் என்னும் ஓசையை உள்ளத்தினுள்ளும் கேட்கலாம். உய்வு அல்லது முத்தி அடைதற்கான பரிபாகம் வந்துவிட்டது என அந்த ஓங்கார ஓசை ஊர்ஜிதப்படுத்துகிறது.

மெய்ஞ்ஞானம்: ஆத்மசைதன்யம் தானே ஞானசொரூபமாய் இருந்து கொண்டு புறத்தில் இருப்பவைகளையும் அறிகிறது. சந்திரன் சூரிய வெளிச்சத்தைப் பரப்புவதுபோன்று, சிவ சைதன்யமே ஜீவ சைதன்யமாக ஒளிர்கிறது. தனக்குத் தனி வியக்தியிருக்கிறதென்று ஜீவன் எண்ணிக்கொள்வது அஞ்ஞானம். ஜீவன் உட்படப் புறப்பொருள்களுக்குத் தோற்றமும் மறைவும் உண்டு. ஆனால் பிரமாத்ம சைதன்யம் யாண்டும் நிறைஞான சொரூபமாய் இருப்பதால் அதே மெய்ஞ்ஞானம் காலதேசவர்த்த காரணமானத்தால் பாதிக்கப்படாது இருப்பது மெய்ப் பொருள்.

மனோ நாசம்: மாறுபடும் மனத்தின் மூலம் பார்க்கப்படும் பொழுது பரமாத்மன் மறைந்திருந்து தன்னைப் பிரபஞ்சமாகக் காட்டிக் கொள்கிறான். மனதற்ற நிலையில் அவன் உள்ளபடி ஒளிர்கிறான். கண்ணாடி ஒன்றில் மேடு பள்ளம் என்னும் விகாரமிருந்தால் அதன் மூலம் பார்க்கும் பொருளை அது உள்ள படி விளக்குவதில்லை. தூயதும், ஒப்பானதும் ஆகிய கண்ணாடி யின் மூலம் பொருள் ஒன்று உள்ளபடி ஒளிர்கிறது. மனோநாசம் ஆத்ம சாதனத்தின் முடிந்த நிலை என்பது தீவிர அதிகாரிக்கு விளங்குகிறது. சாதனத்தின் மூலம் மனதில் உள்ள மாசு நீங்கிப் பிறகு மனோநாசம் உண்டாகும்போது பிரக்ஞானம் தன்மயமாய் ஒளிர்கிறது.

ஆணவம், கன்மம், மாயை: வினை, உலகம், அஞ்ஞான இருள் (நான் எனும் அகங்காரம்)ஆகிய இவை யாவும் இயற்கை அல்லது பிரகிருதியின் வெவ்வேறு கூறுகள். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன் மாத்திரைகளை முறையே அப்பு, அக்கினி, வாயு, ஆகாயம், பிருத்துவி ஆகிய பூதங்கள் விளக்கினலும் அதாவது இப்படி ஐந்து விதங்களில் அறியப்படுபவர் ஈசனே யாயினும் அவருடைய நிஜ சொரூபத்தை விளக்க இவைகளுக்கு இயலாது.

ஆராயாதார் ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
அல்லாதார்க்கு அல்லாத வேதியனே

சக்கி முக்கிக் கல்லினுள் தீ மறைந்திருக்கிறது.

தெளிந்த நிலை=பிரக்ஞானம்: ஏழாவது ஞானபூமி (மன தற்ற பரிசுத்தநிலை)சுத்த சிவம் = சுத்த சைதன்யம்(consciousness). ஜீவர்கள் தெளிவுறும் நிலையில் 7 படித்தரங்கள் = ஞானபூமி. உறக்கத்தில் தன்னை மறந்திருக்கும் நிலை ஜட அவஸ்தை. பிரக் ஞானத்தை ஜீவன் உடைத்திருப்பவன் அல்லன்; ஆனல் பிரக் ஞானம் ஜீவனை உடைத்திருக்கிறது. ஆதலால் உடையான் என அது அழைக்கப்படுகிறது. அனுபூதியில் இது விசிஷ்டாத்வைத நிலை.

மயான தியானம்: கோயில் சுடுகாடு என்னும் கூற்று வெறுமனே வந்ததன்று. ஆத்ம சாதகன் அர்த்த சாமத்தில் எழுந்திருந்து தியானம் பழகினல் தனது உள்ளத்தில் ஈசனது சான்னித்தியத்தை நன்கு உணர்வான். இனி அவன் அவ்வேளை யில் மயானத்திற்குச் சென்று தியானம் பழகினல் சிவசான்னித் தியம் இன்னும் உறுதியாக உணரப்படும்.

இறைவனுடைய அருளும்+சாதகனுடைய முயற்சியும் ஒன்று கூடுவதே சிவராஜ யோகம். இதன் விளைவாக சிவபாவ சமாதி கூடுகின்றது.

தில்லையில் அருளிய கீர்த்தித் திருஅகவல்

இந்தப் பிரபஞ்சம் வேறு, பரம்பொருள் வேறு அன்று. பஞ்சேந்திரியங்கள் மூலம் பகரப்படும்பொழுது அது பிரபஞ்சம் எனப்படுகிறது. ஞானதிருஷ்டியில் காணும்பொழுது அது

கடவுள் எனப்படுகிறது. உண்மையில் இருப்பது ஒன்றே. பரமனுடைய காட்சி கிட்டும்போது பிரபஞ்சத்தின் காட்சி மாயமாக மறைகிறது. கயிறு பாம்புபோன்று தென்படுகிறது. கயிறு என்னும் மெய்க்காட்சியானது வரும்போது பாம்பு என்னும் பொய்க்காட்சி அக்கணமே போய்விடுகிறது. கடவுட் காட்சியே மெய்க்காட்சி.

திரிசூலமானது இச்சா, கிரியா, ஞான ஆகிய மூவித சக்தியின் புறச்சின்னமாகும். ஜீவர்கள் பக்குவமடைந்து சிவசொரூபமாவதற்கு இந்த மூவித சக்திகளும் முறையாகப் பயன்படுகின்றன. அஞ்ஞான இருளே மும்மலங்களாக உருப்பெறுகின்றது.

ஆனந்தமே இறைவன்: பேரானந்தம் ஓங்குமளவு வாழ்விலுள்ள குறைபாடுகள் நீங்கப் பெறுகின்றன. ஆனந்தமே பரம்பொருள். அண்டங்கள் அனைத்தும் ஆனந்தத்தில் தோன்றி' நிலைத்திருந்து அதிலேயே ஒடுங்குகின்றன. உவப்பிலா ஆனந்தத்தில் ஒன்றுபட்டிருப்பவர் பரமனை அடைந்தவர் ஆகின்றனர்.

ஆஸ்தி மதங்கள் 6— சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம், காணபத்தியம், சௌரம். நாஸ்திகம் 2—புத்தம், சைனம்.

விபூதி (இறைவனுடைய பெருமை) சிவனாரின் சின்னம்—எது நெருப்பிலும் அழியாது எஞ்சுகிற பொருள். அதுவே சிவம் (பிரளயத்திலும் அழியாதது).

திருவண்டப் பகுதி

(The universe which is the body of God)

அறுவகைச் சமயத்து அறுவகையோர்க்கும்
வீடுபேறு ஆய் நின்ற விண்ணோர் பகுதி
ஈடம் புரையும் கிழவோன்.

வேதத்துக்கு உடன்பாடான ஆறு சமயங்களை அனுஷ்டிப்பவர்க்கு முத்தி கொடுப்பவர் ஈசன். தேவர் கூட்டம் முதல் புழு வரையில் உள்ள ஜீவர்கள் எல்லாரிடமும் சமசிருஷ்டி வைத்திருப்பவர் ஈசன்.

இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க
(இசை வடிவினன்)
அன்னது ஒன்று அவ்வயின் அறிந்தோன் காண்க
(இசையை ரசிப்பவன்)
அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க
(மனதிற்கு எட்டாதவன்)
பத்தி வலையிற் படுவோன் காண்க
நாலுணர்வு உணரா நுண்ணியோன் காண்க

சுவானுபூதி: இம்மை, மறுமையாகிய இருமையிலும் கிடைக்கிற இன்பங்களை நாடாதவன் ஆசையற்றவனாகிறான். ஆசை அகலுமளவு அச்சமும் நீங்குகிறது. நிராசையில் நிலைபெற்றிருப்பவனுக்கு மனம், மொழி, மெய் ஆகிய முக்கரணங்களும் தெளிவடைகின்றன. தெளிந்த மனதில் ஆத்ம பிரகாசம் தரிசனமாகிறது. பரமாத்மன் நுண்ணியதிலெல்லாம் நுண்ணியவனாகவும் பெரியவைகளிலெல்லாம் பெரியவனாகவும் இருப்பது சுவானுபூதியில் விளங்குகிறது. சுவானுபூதி அடைகிறவன் ஆத்மனுடைய மகிமையை அடைகிறான்.

பண்பட்ட மனதிற்குப் புத்தியோகம் என்று பெயர்; புத்தியோகம் அடையப் பெற்றவர் பரமனை அறிவர்; பின்பு பரமனை அடைவர். பஞ்சாக்கத்தில் மழை பெய்யும் அளவு குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதைக் கசக்கிப் பிழிந்தால் ஒரு சொட்டுத் தண்ணீரும் கிட்டாது. அதே விதத்தில் நூல் அறிவில் மயங்கிக் கிடப்பவர்க்கு இறைவன் அருள் கிட்டாது. சாதனையின் மூலம் பெறும் அனுபூதியே இறைவனைத் தரிசிக்க உதவும்.

ஆண் பெண் என்ற பால் வேற்றுமை: பெண், ஆண், அலி ஆகிய எல்லா உயிர்களாக இலங்குபவன் ஈசன். ஞானக்கண்ணைப் பெற்றபின் இவ்வுண்மை எமது ஊனக்கண்ணுக்கும் புலப்படும். பால் வேற்றுமையானது உடலைத் தான் என்று கருதும் மனநிலையினின்று வருகிறது. உடலுணர்வு அல்லது தேகாத்ம புத்தியைக் கடந்தவர்க்கே பரஞானம் வருகிறது. சூரியன் கடல் அலைகளில் பிரதிபலித்துப் பல சூரியர்களாகத் தென்படுவது போன்று பரமன் பிரகிருதி விகாரங்களில் பிரதிபலித்துப் ,பல ஜீவர்களாகத் தென்படுகிறான். உண்மையில் அவன் பால் வேற்றுமைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவன்.

அர்த்த நாரீசுவர தத்துவம்: சக்திக்கும் சிவத்துக்கும் உள்ள தொடர்பை ஐயம் திரிபு அற அறிவது நல்லது. சக்தியே சிவம்; சிவமே சக்தி; சிவசக்தி அத்துவைதம். பிரகிருதியாகப் பரிணமித் திருப்பது சக்தி; பரிணாமத்தில் பட்டும் படாமலும் இருப்பது சிவம். ஒன்று இயங்கும் சக்தி (Kinetic energy); மற்றது இயங் காத சக்தி (potential energy). அலை வீசி விளையாடும் விரிகடல் சக்தி சொரூபம்; ஆழ்கடலின் அசைவற்ற அடிப்பகுதி சிவ சொரூபம். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்ச கிருத்தியங்களில் ஈடுபட்டிருப்பது சக்தி. கிருத்தியங் களை யெல்லாம் கடந்த நிலையில் இருப்பது சிவம். ஆத்மசாதகன் சக்தியின் துணைகொண்டு சிவத்தை அடைகிறான்.

பரமார்த்திக வாழ்வு: ஐம்பொறிகள் வாயிலாக உண்டாகிய பற்றுதல் பரமார்த்திக வாழ்வுக்குத் தடையா கிறது என்பது சமயங்கள் அனைத்துக்கும் ஒப்பமுடிந்த உண்மை யாகும். பரமார்த்திக வாழ்வில் உறுதியாக நிற்பவர்கள் உலக வாழ்வினின்று வருகிற துன்பங்களை மனதில் வாங்கிக் கொள்வ தில்லை. வாதவூரரது வாழ்வே அதற்குச் சான்றாகும். நெறியான வாழ்க்கை வாழ்ந்து கடவுள் வழிபாட்டில் தீவிரமாக ஈடுபடுகிற வர்களைத் துன்பம் அசைப்பதில்லை; தெய்வீக இன்பத்தில் அவர் கள் திளைத்திருப்பதால் எழிலும், ஒளியும் முகத்தில் மிளிர் கின்றன.

சிவானந்தத்தேன் = பரசிவம். பரஞானத்தை அடையப் பெற்றவர்க்கு எதைப்பார்த்தாலும் அதில் பிரமானந்தம் திகழ்வது வெளிப்படை. பரமனுக்கு அன்னியமாக அவனுடைய சரீரம் இல்லை என்பது விசிஷ்டாத்வைதக் கோட்பாடு. தேன் என்னும் சொல்லை பலவிடங்களில் மாணிக்கவாசகர் பகர்வதற்குக் காரணம் அவர் பரஞானத்தில் திளைத்திருந்ததேயாகும். சிவானந்தப் போகத்தின் மேலீடு அங்ஙனம் சொல் ஓவியமாக வடிவெடுக்கிறது. பரப்பிரமத்தை மது என்றனர் பழங்கால ரிஷிகள், தேன் என்கிறார் மணிவாசகர். இச்சொற்களெல்லாம் பரசிவம் என்னும் ஒரே பொருளைக் குறிப்பது தேற்றம்.

கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்
செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்
நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம்பு ஆய பல் துறை பிழைத்தும்

புல்வரம்பு—கீழான பண்பு.

தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி
(பக்தனை உலகத்தவர் பேய் என்கின்றனர்)

சகம் பேயென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுதலின்றிச்

போற்றித் திருவகவல்

ஆடக மதுரை அரசே போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
வாழ்வே போற்றி என் வைப்பே போற்றி
அளிபவர் உள்ளத்து அமுதே போற்றி

அளிபவர்—முற்றும் கனிபவர்.

ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரம்உடைப் பெம்மான் போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி

இறைவனே ஐம்பூதமாக இருக்கிறார்: பஞ்சபூதத் தலங்கள் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றிய முறை

1. சிதம்பரம்—ஆகாசலிங்கம் 4. திருவானைக்கா—அப்புலிங்கம்
2. காளஹஸ்தி—வாயுலிங்கம் 5. காஞ்சிபுரம்—பிருதுவிலிங்கம்
3. திருவண்ணமலை—அக்கினிலிங்கம்

தேவர்கள் என்பதற்கு இந்திரியங்கள் என்பது ஒரு பொருள். இந்திரியங்களுக்கு எட்டாத பரமன் முற்றிலும் மனபரிபாகம் ஆகியிருப்பவர்க்கே உள்ளத்தினுள் அமரநாதன் தரிசனம் கிட்டுகிறது.

சுத்த சைதன்யம் (Pure consciousness)

துரியமும் இறந்த சுடரே போற்றி முக்குடைகளுக்கு (ராஜசம், தாமசம் சாத்துவம்) அப்பால் இருப்பது எதுவோ அது துரியம். நனவு, கனவு, உறக்கம் (ஜக்கிரதம், சொப்பனம், சுஷுப்தி) ஆகிய மூன்று அவஸ்தைகளுக்கும் சாட்சியாயிருப்பது எதுவோ அது துரியம். பிரம்ம சைதன்யத்துக்குத் துரியம் என்று பெயர். சுத்த சத்துவ குணத்தில் ஒளிரும் ஆத்ம பிரகாசம் துரியம் எனப் படுகிறது. இதற்கு அடுத்த நிலை துரியாதீதம் அல்லது பர சைதன்யம். உண்மையில் துரியமும், துரியாதீதமும் ஒன்றே.

சிவசைதன்யமாய் விளங்கும் பரமனே துரியாதீதமாய் இருக்கும் பேரொளி.

திருச் சதகம்
பக்தி வைராக்கிய விசித்திரம்

மெய், மொழி, மனம் ஆகிய முக்கரணங்கள் முதல்வனுக் கென்றே ஒப்படைக்கப் படுவது பக்தி சாதனத்தின் முக்கியப்படி. அலைகள் அனைத்தும் கடலின் உடைமைகளாய் இருப்பதுபோன்று ஜீவனும், ஜகத்தும் பரமாத்மாவின் உடைமைகளாம். இது துவைத நிலையின் அனுபூதியாகும்.

கடவுள் பித்தம் பிடித்தவர்கள் பாக்கியவான்கள். உலகத்தவர்களின் புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் பொருட்படுத்துகிறவர்கள் ஆத்ம சாதனத்துக்கு உதவமாட்டார்கள். உயிரோடு இருக்கும்போதே உலக வாழ்க்கைக்குச் செத்தவர் போன்று ஆகிறவர்கள் தீவிர பக்குவம் அடையப் பெற்றவர்களாம்.

"மத்தம் மனத்தொடு மால்இவன் என்ன, மனம் நினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட ஊர் ஊர் திரிந்து எவரும்
தத்த மனத்தன பேச எஞ்ஞான்று சொல் சாவதுவே"

சிறுவன் ஒருவன் தன் தாயை நேசிப்பது போன்று பக்தி செய்யும் தொடக்கநிலையில் தனது இஷ்டமூர்த்தியிடம் (வழிபடு தெய்வத்திடம்) அலாதி அன்பு வைப்பது உசிதம். பக்குவநிலை வரும்போது பரம்பொருள் ஒன்று; அது பல வடிவங்கள் பெற்றது என்னும் உண்மை புலனாகும்.

மனது மேலானதாக மாறிவிட்டால் ஆத்மசாதகன் இந்த உடல் இருக்கும்போதே மேலான பிறப்பு எடுத்தவன் ஆகிறான்.

சிதம்பரம்=சிதாகாசம்=அறிவுப் பெருவெளி
(இறைவன் தன் மயமாய்இருக்கும் நிலை)

சிதம்பர இரகசியம்=நிர்குணப் பிரம்மம்=தகராலயம். படக் காட்சிக்கு ஆதாரமாய் இருக்கிறபொழுதும், படம் காண்பிக்கப் படாத பொழுதும் திரை தன்மயமாய் இருக்கிறது. அதில் விகாரம் ஒன்றும் உண்டாவதில்லை. சிதம்பரநாதன் இவ்வாறு (ஜகத்தையும், ஜீவர்களையும் தோற்றுவிக்கும் பொழுது, ஒடுக்கி வைத்திருக்கிற பொழுதும்) யாண்டும் தன்மயமாய் இருக்கிறான்.

ஆண்டான் அடிமை நிலையே (துவைத நிலை) மணிவாசகர் பாடிய திருவாசகத்தின் பின்னணி: தேவர்களுக்கும்கூட பரஞானம் எளிதில் எட்டுவதில்லை. இதனால் மண்ணுலகில் இருக்கிற ஞானியர் விண்ணுலகத்தவரைக் காட்டிலும் மேலானவர்.

முக்தி வேண்டும் என்று இறைவனைக் கேட்பதை விட, முத்திக்குத் தன்னைப் பக்குவப்படுத்துவது அறிவுடையோர் செயல்.

ஆடாகச் சீர்மணிக்குன்றே =தங்கத்தில் பதித்த மாணிக்க மலை (இப்படி இருப்பது ஆத்மப் பிரகாசம்)

பக்தி முதிர்ந்து மனம் தெளியும்போது இவ்வுண்மை விளங்குகின்றது.

வான் ஏயும் பெறில் வேண்டேன்
மண்ணுள்வான் மதித்து மிரேன்—திருச்சதகம் 5, 12

நிஷ்காமியப் பிரார்த்தனை: நிலையற்றவைகளை ஒதுக்கி நிலைபேறு உடையதை நாடுவது அறிவுடையோர் செயல். உடல் வாழ்வை விரும்புகிற உயிர்களெல்லாம் மரணத்துக்கு அஞ்சுகின்றன. அருள்தாகம் பிடித்தவர்களுக்கு ஜனன மரண பயமில்லை; பதவி எதிலும் நாட்டமில்லை.

"யான் ஏதும் பிறப்பஞ்சேன், இறப்பு அதனுக்கு என் கடவேன்"

புத்தியோகம்=சாதனத்திறமை (இறைபணியில் தம்மை அர்ப்பணிப்பது). ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையு மாய்க் கோனாகி யான்எனது என்று அவரவரைக் கூத்தாட்டுவான் (உயிர்களுக்கு யான் எனது என்னும் ஜீவ வியக்தியைக் கொடுத்திருப்பவனும் நீயே).

மனம், வாக்கு, காயம் ஆகிய இவற்றிற்கு அப்பாற்பட்ட இறைவனை யாரும் முழுதும் அறிந்து கொள்ள முடியாது—அவரவர் பண்புக்கு ஏற்ப இறைவனது மகிமையைச் சிறிது அவர்கள் அறிகின்றனர்.

மனோநாசம்=ஆசை அறுத்தல்=மனவைராக்கியம்: மனதின் அறியாமையே மனிதன் படும் துன்பங்களுக்கெல்லாம் காரணம்; விஷய சுகத்தில் பற்றுவைக்குமளவு அது துன்பமாக வடிவெடுக்கும். விவேகம் படைத்தவனுக்கு இவ்வுண்மை விளங்குகிறது.

சுட்டறுத்தல் என்பது அந்தக் கரணங்களாகிய மனம், புத்தி, அஹங்காரம் ஆகியவற்றால் கிரகிக்கப்படுவதில் பற்றற்று இருப்பது. சுட்டறுத்தல் என்பது வைராக்கியத்தைப் பெறுதல். இந்திரியங்களுக்குத் தலைவனான மனம் தேவேந்திரனோடு ஒப்பிடப்படுகிறது. இந்திரியங்களையும், மனதையும் ஒதுக்கி வைக்கவல்ல ஜீவாத்மாவானது பரமாத்மாவைச் சுவானுபூதியில் உணர்கிறது. இந்திரியங்கள் மனது இவற்றில் பற்று ஒழித்தலே வைராக்கியம். இது ஆத்ம சாதகத்திற்கு இன்றியமையாதது.

மனதில் மாறுபடுகிற இரண்டு ஆசைகள் ஏககாலத்தில் தோன்றுவதில்லை. உலக ஆசைகள் நீங்க வேண்டுமென்று எதிர் மறையில் எண்ணுவது உதவாது. கடவுள் நாட்டம் அதிகரிக்கு மளவு உலக ஆசைகள் அகன்று போய் விடுகின்றன. அது வைராக்கியமாகும். இறையருள் வாய்க்கும்போது வைராக்கியம் வந்தடைகிறது.

திரிபுடி அற்ற அனன்ய பக்தி: பார்த்தல், கேட்டல், அறிதல் கரணங்களின் துணைகொண்டு நிகழ்கின்றன. திரிபுடி அல்லது காண்போன், காணப்படுபொருள், காணுதல் என்னும் மூன்று கூறுகள் ஆங்கு உள. உணர்ச்சியின்வேகம் அகண்டாகாரமாக வடிவெடுக்கும்போது அந்த மூன்று கூறுகள் பரபோதம் என்னும் ஒரே கூறாக விரிவடைகின்றது. பக்தியின் உச்சநிலை அகண்டமாக விரிவடைகிறது. எது அகண்டமோ அதில் பல வஸ்துக்கள் இல்லை; ஒன்றுதான் உளது. அது அத்வைத நிலை. அன்னியமான பொருள் எதுவும் இல்லாத நிலை.

......(வைராக்கியம் வந்த பின்னர்)

ஐம்புலன்கள் ஆர வந்தனை, ஆட்கொண்டுள்ளே
புகுந்த விச்சை மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேத்
தனிச் சுடரே இரண்டுமிலித் தனியனேற்கே

ஆத்ம சாதனையில் இரண்டு முறைகள்	1. மனம்/பொறிகளை அடக்குதல் (எதிர்மறை).
	2. மனம்/பொறிகள் இறை வணக்கத்துக்கே பயன்படுத்துதல் (உடன் பாட்டு).

பக்தி யோக சாதனம்: அகக் கரணங்கள், புறக் கரணங்கள் முதலிய இறைவழிபாட்டுக்கே பயன்படுத்துவது உடன்பாட்டு முறை. கருவி கரணங்களை யெல்லாம் பகவத் சேவையிலேயே பயன்படுத்துவதும் சுட்டறுத்தல் அல்லது வைராக்கியமாகும். பிரம்மத்தை நான் சார்ந்திருக்குமளவு எனக்கு நலன் உண்டா கிறது—கடமைகள் யாவும் பிரம்மத்தைச் சார்ந்திருப்பதால் பூர்த்தியாகின்றன. திரிகரணங்களால் நான் செய்கின்ற செயல்கள் யாவும் பிரம்மத்துக்கு உரியனவாகுக. பரம்பொருள் ஒன்றே பிரபஞ்சமாகவும், எண்ணிறந்த ஜீவர்களாகவும் வடி வெடுத்திருக்கிறது என்னும் ஞானத்தில் உறுதி பெற்றிருப்பது நிறைஞானமாகிறது.

பக்தி வைராக்கியம்

நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத்துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயினேற்கே
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே

(விச்சை(வித்தை)=சிவஞானம்)

சுட்டறுத்தல் என்னும் சாதனங்கள் பயிலுமிடத்து ஆத்ம சாதகனிடம் ஞானக்கண் உருவெடுக்கிறது. அப்போதுதான் அவனுக்குச் சிவஞான அனுபூதி கிடைக்கிறது. தான் உண்மையில் அழிவு இல்லாத ஆத்ம சொரூபம் என்பது அப்பொழுது தெளிவாகிறது. நூல் அறிவு அதற்கு உதவாது. பொறிகளும் அதற்கு உதவா. வைராக்கியத்தின் விளைவு இதுவாம்.

யார் துறவி: அஞ்சாமை. மனதை மலினப்படுத்துகிற தோஷங்கள் ஆறு இருக்கின்றன. அவையாவன: காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம்.

ஆசை, சினம், ஈயாமை, மயக்கம், செருக்கு, பொறாமை இவை யாவும் நீங்கப் பெற்றவனே துறவி. அவன் கருவி கரணங்கள் ஒய்ந்த தொண்டனாகின்றான். ஆத்ம சைதன்யம் அவனுடைய உள்ளத்தில் ஒளிர்வது உறுதி.

சிவனடியார் கூட்டத்தில் அல்லது ஸத் சங்கத்தில் ஆத்ம சாதகன் ஒருவன் சேர்ந்துவிட்டால் அது அவனுக்குப் பேராதரவாகிறது; உலகப்பற்று அகலுகிறது. வைராக்கியம் தானே உறுதிபெறுகிறது.

"தேவர்கோ அறியாத தேவதேவன், மூவர்கோனாய் நின்ற
முதல்வன் மூர்த்தி
யாவர்கோன் என்னையும் வந்தாண்டு கொண்டான்
யாமார்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினோம் அவன் அடியார் அடியாரோடு" (5-30)

சுட்டறுத்தலில் அல்லது பூரண வைராக்கியத்தில் நிலைத்திருப்பவர்க்குச் சிவஞானம் வாய்க்கிறது. அதை அடையப் பெற்றவர்க்கு அபயம் அல்லது அஞ்சாமை வாய்க்கிறது. அவனை அறிகிறவர்களுக்கு அச்சமுமில்லை; துன்பமும் இல்லை.

ஆத்ம சுத்தி: மனபரிபாகம்: மனது எதைச் சார்கிறதோ அதன் மயமாகிறது. சிவனைச் சாரும் மனது இறுதியில் சிவமயமாகிறது. அடுப்புக்கரி தீயைச் சார்ந்தால் அது தானே தீயாகிறது. அதேபோன்று மனது ஈசனைச் சார்ந்தால் அது அனைத்துக்கும் உதவுகிறது; ஈசனிடமிருந்து பிரிந்தால் அது பிணத்துக்கு நிகர்.

பிறிவிலாதஇன் அருள்கள் பெற்றிருந்தும்
மாறுடுதி பிணநெஞ்சே!
கிறியெலாம் மிகக் கீழ்ப்படுத்தாய்
கெடுத்தாய் என்னைக் கெடுமாறே—திருச்சதகம் 5-32

சித்தத்தைச் சிவன்பால் செலுத்தி அதைத் தூயதாக்குவது சாதகனது கடமை. உலக விஷயங்களைச் சார்கிற மனது மலினமடைகிறது. உடல் சுகத்தைத் தியாகம் செய்வதற்குச் சின்னம் திருநீறு.

திருநீறு: தியாகத்தின் சின்னம். சிவனது அழியாத் தன்மையை உணர்த்துவதற்கான சின்னம் திருநீறு. பண்டங்களெல்லாம் தீயில் வெந்துபோன பிறகு நீற்றிருப்பது நீறு. அதன் பிறகு அதை எவ்வளவு சுட்டாலும் அதன் தன்மை மாறாது. ஆக அது மெய்ப்பொருளாகிய சிவனது சின்னம்.

தியாகத்தின் சின்னம் திருநீறு. உடல் உணர்வை அல்லது தேகாத்ம புத்தியை வெல். உடல் உடைத்திருப்பதற்கிடையில் அதைச் சாம்பல் போன்று வைத்திரு. அதன் மூலம் அற்ப சுகத்தை நாடாதிருப்பது ஆத்ம சுத்தி.

கிற்றவா மனமே கெடுவாய்! முற்றிலா இளந்தளிர்
பிரிந்திருந்து நீ
உண்டன எல்லாம் முன்
அற்றவாறும் நின் அறிவும் நின்பெருமையும் அளவு
அறுக்கில்லேனே

கில் + தவா = விஷ பாதிகளில் செல்லும் ஆற்றல் ஒழியா திருக்கிற (greedy).

பரமனிடத்திருந்து வருகிற பேரானந்தம்சா சுவதமானது விஷய சுகமோ உடனடியாக மறைகிறது. சித்தத்தில் விகற்பத்தை உண்டு பண்ணுவதைத் தவிர அதில் பயன் ஒன்றுமில்லை. விசாரித்துப் பார்த்து அந்த விகற்பத்தையும், அதற்கு மூலகாரணமாகயிருக்கும் சங்கற்பத்தையும்ஒதுக்கித்தள்ளுவது ஆத்ம சுத்தி.

(ஜீவாத்மனை உடையவன் பரமன். அதை விற்கவும் உரிமை அவனுக்கு உண்டு. இது துவைத மதக் கோட்பாடு)

முக்தி அடைதல் பொருட்டு இந்திரியங்களுக்கு இலக்காயுள்ள விஷயங்களை வெறுத்து விலக்க வேண்டும். உள்ளத்தை இறைவனுக்கு உறைவிடமாகச் செய்தல் வேண்டும். மனமே, நீ மானச பூஜையின் வாயிலாகவும்,பாக்கிய பூஜையின் வாயிலாகவும் பரமனையே நாடியிரு.

உலகப்பற்று நீங்குவது சித்தசுத்தி பெறுவதற்கு உற்ற உபாயமாகும். முத்தியில் ஆசை கொள்வது சித்தசுத்தி பெறுதற்கு உற்ற உபாயமாகும்.

தேனை ஆன் நெயைக் கரும்பின் இன்தேறலைச்
சிவனை என் சிவலோகக்
கோனை மான்அன நோக்கிதன் கூறனைக்
குறுகிலேன் நெடும் காலம்
ஊனை யான் இருந்து ஓம்புகின்றேன்
கெடுவேன் உயிர் ஓயாதோ?

சிவபோதத்தை வளர்க்குமளவு சித்தசுத்தி தானே உண்டாகிறது. தேகாத்மபுத்தி அல்லது உடல் உணர்வு பெருக்குமளவு சித்த மலம் அதிகரிக்கிறது. இறைவனது இடையறாக் காட்சி பெறுதற்காக உயிர் துறக்கவும் ஆயத்தமாயிருப்பவனுக்குச் சித்தசுத்தி தானாக வாய்க்கிறது. தான் பெறுகிற ஞானத்தை இறைவனது திருவடியெனப் போற்றுவது பக்தனது இயல்பு.

"ஊனில் ஆவியை ஓம்புதல் பொருட்டு இனும் உண்டுடுத்து இருந்தேனே"

உடல் உணர்வு அல்லது தேகாத்ம புத்தி இருக்கும் வரையில் காமநோயும் இருக்கும். மத்தானது தயிரைக் கடைவது போன்று காமநோய் மனதை அலைக்கழிக்கும். மற்று அருள்நாட்டம் ஒன்றே சித்த சுத்தியை உண்டுபண்ணும்.

ஞானம் குருட்டு வாய்ப்பாக அல்லது மற்றவர்களால் வழங்கப்பெற்றதாக மனிதனுக்கு வருவதன்று. ஐம்பொறிகளையும், ஆசையையும் அறவே அடக்கி ஆள்பவனுக்கு அதன் விளைவாக ஞானக்கண் உருவெடுக்கிறது. தன்னை அழிவற்ற ஆத்மன் என்று அறிந்து கொள்வது ஞானம். ஆரம்பதசையில் புலனடக்கத்தின் தரத்திற்கு ஏற்பச் சாதகன் யோகத்தில் முன்னேறவும், பின்வாங்கவும் செய்கிறான். சுட்டறுத்தலின் சிறப்பை எவ்வளவு சிலாகித்துப் பேசினாலும் அது மிகையாகாது.

கைம்மாறு கொடுத்தல்: பிரதியுபகாரம் செய்ய இயலாதவன் பிறர்செய்த நன்றியை மறவாதிருப்பது கைம்மாறு கொடுப்பதற்கு ஒப்பாகும். பரமாத்மனுக்குக் கைம்மாறு கொடுக்க ஜீவாத்மனுக்கு இயலாது ஆகையால், ஆண்டவனது அருளை எண்ணிக்கொண்டே இருப்பது கைமாறாகும். இதுவே ஆத்ம சாதனமாகும்.

[பரமனுக்கு மஹா காலம் என்பது ஒரு பெயர். அகண்டாகார கால சொரூபமாக இருந்து அவன் அண்டங்கள் யாவையும் எடுத்து விழுங்கிக் கொண்டிருக்கிறான்]

கோலமே எனை ஆட்கொண்ட கூத்தனே
ஞாலமே விசும்பே இவை வந்துபோம் காலமே!

எள்ளும் எண்ணெயும், தயிரும் நெய்யும், விறகும் தீயும் ஒரே வஸ்து. பிரிக்குங்கால் இரண்டு—எண்ணெயும் நெய்யும், தீயும் பின்னணியில் மறைந்து நிற்கின்றன. அங்ஙனம் உபாதிகளோடு கூடிய ஜீவாத்மனை முன்னணியில் வைத்துப் பார்க்குமிடத்துப் பரமாத்மன் அந்தராத்மாவாக மறைந்திருக்கிறான். ஜீவ உபாதிகளை அகற்றுங்கால் ஜீவாத்மன் பரமாத்மாவில் ஒன்றுபடுகிறான். சமாதி நிலையில் வறுமை, செல்வம் என்ற வேற்றுமை மறைகிறது. ஈசன் அருளால் வந்த சமாதி நிலையானது மனதின் குறைபாட்டால் தடைப்பட்டுவிட்டது என்று மணி வாசகர் வருந்துகிறார் (யார்க்கும் அரும் பொருள் எல்லையில் கழல் கண்டும் பிரிந்தனன்). பெற்ற பெரியபேற்றினைக் காப்பாற்றுவது அதைக் கொடுத்தவனுக்குச் செய்யும் கைம்மாறு.

'எட்டினோடு இரண்டும் அறியேனையே'

இரண்டு: சிவம்-சக்தி என்ற இரண்டிற்கும் புறம்பானது உலகில் இல்லை.

எட்டு: பஞ்ச பூதங்கள் + திரிகரணங்கள் (மனம் + புத்தி + அகங்காரம்)

(இந்த 8 ஜட வஸ்துக்களும் ஈசனுடைய சொரூபங்களாகும்)

பஞ்ச பூதங்களும் பஞ்ச லிங்கங்களாகவும், அந்தக் கரணங்களைச் சிவனுடைய ஆராதனைக்கென்றே பயன் படுத்துவது ஈசனுக்குக் கைம்மாறு கொடுப்பதாகும்.

பிரகிருதி- புருஷன், சத்தி-சிவம் = அர்த்த நாரீஸ்வரன்

உடல் அம்பிகையின் சொரூபம், உயிர் சிவ சொரூபம். இவையிரண்டும் பிரிந்தால் வாழ்வு நடைபெறாது.

நதியொன்று கடலுக்கு அருகில் வந்தபிறகு அதனிடத்துக் கடலின் தன்மையையும் நதியின் தன்மையையும் மாறிமாறிக் காணலாம். அங்ஙனம் ஆத்மசாதகன் ஒருவன் சிவசாயுஜ்ய மாவதற்குச் சற்று முன்பு ஜீவ போதத்தையும் மாறிமாறிப் பெறுவது இயல்பு.

அனுபோக சுத்தி: ஆத்ம சத்தி = சித்த சுத்தி = அந்தக் கரண சுத்தி) அனுபவ சுத்தியை அனுபோக சுத்தியாக மாற்றுவது ஆத்ம சாதகனுடைய கடமையாகிறது. தெளிந்த மனதுக்குப் பொருள்கள் எல்லாம் உள்ளவாறு புலனாகின்றன. தெளிந்த மனது விவேகமாக வடிவெடுக்கிறது. விவேகத்தோடு புறப் பொருள்களை நுகர்வது அனுபவ சுத்தி. பின்பு அவை யாவையும் சிவசொரூபமாகக் கண்டு களிப்பது அனுபோக சுத்தியாகும்.

உடல் உணர்வில் ஊறியிருப்பவன் நீசன் அல்லது புலையன் ஆகிறான். ஆத்மபோதம் அடையப்பெறுபவன் தனக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை என்பதை அனுபூதியில் உணர்கிறான். உடல் உறுதியும் உள்ளத்தில் திட்பமும் ஆத்மசாதனத்துக்கு இன்றியமையாதவைகள். துறவறத்தின் கோட்பாட்டை உள்ளபடி அனுஷ்டிப்பது அவசியம்.

மெய்யர் வெறிஆர் மலர்ப்பாதம்
மேலக் கண்டும் கேட்டிருந்தும்
பொய்யனேன் நான் உண்டு உடுத்து இங்கு
இருப்பது ஆனேன் போர் ஏறே

அஞ்ஞான இருளை அகற்றும் போர் ஏறு (ஆண் சிங்கம்) ஈசன். தங்கள் அஞ்ஞானத்தை அகற்ற முயல்பவர்களே உண்மையில் ஈசனை வழுத்துகின்றனர். உடற்பற்றை ஒழிப்பவரே உண்மையில் ஈசனை வழுத்துகின்றனர். இதற்கெல்லாம் போர்வீரனது ஆற்றல் வேண்டும்.

(ஊர் ஏறு=பன்றி)

எது யோகம்: ஈசுவர கிருபையும் மானுட முயற்சியும் ஒன்று சேர்வது யோகம். அதனால் இகமும், பரமும் மனிதனுக்கு வாய்க்கின்றன. தெய்வத்தின் சகாயமும், மனிதனுடைய நேர்மையான முயற்சியும் ஒன்று சேர்ந்திருக்க வேண்டும். தவத்தில் தீவிரமாக முயன்று தகுதி வாய்க்கப் பெற்றவர்களையே அருள் அன்னையும், அப்பனும் ஒன்றாய்வந்து ஆட்கொள்ளு கின்றனர். இறைவனுடைய அருளோடு ஜீவப் பிரயத்தனத்தை ஒன்று சேர்ப்பது யோகம்.

உடல் உணர்வைக் கடந்து மேலேபோவது ஆத்ம சாதனம். பிரேமை பக்தி வேண்டுமென்ற கோபிமார்களுக்குப் பக்குவம் வரவில்லை என்பதை உணர்த்தவே நீராடிக்கொண்டிருந்த அவர்களின் துகில்களை மரத்தின் மீது வைத்து அவர்களது தேகாத்ம புத்தியை வெளிப்படுத்தினான் கிருஷ்ணன். அப்போது தான் அவர்களது பரிபக்குவ நிலையின் பற்றாமை புலனாகியது.

உடல் உணர்வைத் தாண்டிய பெருநிலையை உன்னுவது அனுபோக சுத்தி.

ஊன் ஆர் புழுக்கூடு இது காத்து இங்கு
இருப்பது ஆனேன் உடையானே

மனிதன் ஆழ்ந்து எதை யாண்டும் எண்ணுகிறானோ அந்த மயம் ஆகிறான்.

முடையார் புழுக்கூடு இது காத்து இங்கு
இருப்பதாக முடித்தாயே

ஆத்மாவே சச்சிதானந்தம் சத்+சித்+ஆனந்தம்:

பிரபஞ்சம் அஞ்ஞான சொரூபம்; எனவே அது அசத். ஆத்மாவோ எப்பொழுதும் உள்ளது, சத்; அதுவே ஞான சொரூபம் சித். பிரபஞ்சம் மரண சொரூபம். ஆத்மா அமிர்த

சொரூபம். மரணம் துக்கத்தைத் தருகிறது. அமிர்தம் ஆனந்தத்தைத்தருகிறது. ஆதலால் ஆத்ம ஆனந்த சொரூபம் சத்+சித்+ஆனந்தம்=சச்சிதானந்தம். மெய்ப்பொருளின் முடிந்த விளக்கமாகிறது. உயிர்கள் அனைத்தும் நாடுவன யாவும் சச்சிதானந்தத்தின் கூறுகளாம்.

(முண்டகோபநிஷத விளக்கம் 3-2)

துவைத, விசிஷ்டாத்வைத, அத்வைத நிலைகள் ஜீவாத்மனும் பரமாத்மனும் இணைபிரியாத இரண்டு பறவைகள் எனப்படுகின்றன. உடலே மரம், வினைப்பயன் பழம். ஜீவாத்மனுக்கு ஒவ்வொரு இன்பத்திலும் துன்பம் கலந்தே இருக்கிறது. அனுபவத்தில் இந்த உண்மை அவனுக்கு புலனாகிறது.சாட்சியாயிருக்கும் பரமாத்மனைச் சிந்தித்துப் பார்க்கும் போதெல்லாம் அவன் துயரத்தைஒதுக்கிவிட்டுப் பரமாத்மனுக்குப் பக்கத்தில் போகிறான். அது துவைத நிலை. ஆங்கு ஜகத், ஜீவன்,பரம் ஆகிய முப்பொருள்களும் மெய்ப்பொருள்களாம். பின்பு ஜீவாத்மன் தன்னைப் பரமாத்மாவின் பிம்பம் என்று உணர்கிறான். அது விசிஷ்டாத்வைத நிலை. இறுதியில் அவன் பரமாத்மாவில் வயமாகிறான். அது அத்வைத நிலை.

காருண்யத் திருங்கல் [இறைவன் தியாகராசர், திருநீல கண்டர். ஜீவர்களுக்காக நஞ்சை உண்டவர், அமிர்தத்தை வழங்கியவர்]. மேல் நிலைக்குப் போவதற்குத் துன்பமும் ஒரு தூண்டுகோலாயிருக்கிறது.

சங்கரன் = சம் + கரன் (நலம் செய்பவன்)

தில்லை நடராஜா=சகுணப் பிரம்மம்.

அஸ்ட மூர்த்தி=பஞ்ச பூதம்+மனம்+புத்தி+அகங்காரம்
(பஞ்ச பூதம்+சந்திரன்+சூரியன்+ஜீவன்)

நான் தகாதவன் எனினும் நீ சங்கரன் ஆகையால் என்னை ஆண்டருள்க.

"பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை போற்றி"

"பூரணமதே பூரணமிதம்
பூரணத் பூரணம் உதிச்யதே"

கடவுள் உலகைக் கடந்தும் இருக்கிறார்; உலகில் ஊடுருவியும் இருக்கிறார். புலப்படுகிற பிரபஞ்சத்தில் பூரணத்தைக் காண

முயலுபவன் நல்ல ஆத்ம சாதகன். பூரணத்தை அதனுள் காண்பவன் ஞானி. கருவி கரணங்களின் துணை கொண்டும், அவைகளின் துணையில்லாமலும் பூரணத்திலேயே புதைந்திருப்பவன் நிறை ஞானி.

பரம்பொருள்—பிரபஞ்சக் கோட்பாடு

1. பரிணாமவாதம்—பால் தயிராகப் பரிணமிப்பது—துவைதம்.
2. விவர்தத் வாதம்—கயிறு பிரபஞ்சமாகத் தென்படுவது—விசிஷ்டாத்வைதம், அத்வைதம்.
3. அஜாத வாதம்—பூரணத்தில் எந்த மாறுதலும் எப்பொழுதும் உண்டாவதில்லை (சுத்த அத்துவைதம்).

"போற்றி எவ்வுயிர்க்கும் தோற்றமாகி நீ தோற்றமில்லாய்
போற்றி ஐம்புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கை
யானே"

ஆனந்தத்து அழுந்தல்: ஆனந்தத்தை நாடும் பெரியக்கத்தில் உயிர்கள் அனைத்தும் ஈடுபட்டிருக்கின்றன. ஏனென்றால் அவை யாவும் ஆனந்தத்தினின்று வந்தவைகள். பிரகிருதியின் மூலமாகப் பிரதிபலிக்கும் ஆனந்தம் நிலையற்றது; சிற்றின்பம் எனப்படுவது. பிரகிருதியோடு சம்பந்தப்படாத ஆனந்தமோ நிரந்தரமானது; அதுவே சிவானந்தபோதம். அதில் அழுந்தியிருத்தல் வாழ்க்கையின் குறிக்கோள்.

மைகலந்த கண்ணி பங்க, வந்து நின் கழல்களோ
மெய்கலந்த அன்பர் அன்பு எனக்கும் ஆக வேண்டுமே

பிறவிப் பிணியைப் போக்க நான்கு வேதங்களும் உதவமாட்டா. ஏனென்றால் கலை, விஞ்ஞானம் முதலியவைகளோடு வேதங்களும் வழியைக் காட்டுவனவே. ஆகவே இவையெல்லாம் அபர வித்தைகள்.

பரம்பொருளைச் சுவானுபூதியில் அறிவதே பரவித்தை; சிவஞானம் என்பதும் இதுவே. திருவாதவூரருக்குச் சிவபெருமான் நேரே வழங்கியதை மட்டுமே பரவித்தை, சிவஞானம், அனுபூதி என்று இயம்பலாம்.

ஜீவாத்மனுக்குக் கர்மத்தில் பற்றிருக்கும் வரையில் அவனுக்குத் துன்பமுண்டு. பரம்பொருள் பற்று ஒன்றே பரமனது

கருணையைப் பெறுதற்கும், பிறகு அவனிடத்து வயமாவதற்கும் உற்ற உபாயமாகும்.

ஜீவபோதத்தைக் கலைப்பதுதான் ஜீவிதத்தின் குறிக்கோள் என்று அறிந்து கொள்ளாத ஜீவன் வீணே வாழ்பவன் ஆகிறான். பரத்தைச் சார்தல் வேண்டும்;அஃது இல்லையேல் உயிர் துறத்தல் வேண்டும். இதுவே தீவிர அதிகாரியின் போக்கு ஆகும்.

ஆனந்த பரவசம் (ஜீவபோதம் அழிதல்): ஜீவபோதம் முற்றும் ஒடுங்கச் சிவபோதம் எஞ்சியிருக்கும்போது அது ஆனந்த பரவசம் ஆகிறது.ஜீவன் அடையவேண்டிய குறியும் அதுவேயாம்.

"பேசப்பட்டேன் நின் அடியாரில் திருநீறே
பூசப்பட்டேன் பூதலரால் உன் அடியான் உன் அடியான்
என்று ஏசப் பட்டேன்
ஆயினும் ஆசைப்பட்டேன் உன் அடியேனே"

உலகத்தவர்களுடைய பொருள்சேர் புகழ்ச்சிக்கும், பொருள் சேரா இகழ்ச்சிக்கும் ஆங்கு இடமில்லை. அனுபூதியை நாடுகிறவர்கள் பலர் குறியை அடையும் வரையில் தீவிரநாட்டம் கொள்வது முறை இடைவழியில் ஏமாற்றமடைந்து நின்றுவிடுகின்றனர்.

"ஊர் ஆமிலைக்கக் குருட்டு ஆ மிலைத்து இங்கு
உன் தாள் இணை அன்புக்கு
ஆரா அடியேன் மயல் கொண்டு அழுகேனே"

கன்றைப் பார்த்த ஊர்ப்பசு பொருள்படக் கத்துகிறது. அதைக்கேட்ட குருட்டுப்பசு பொருளற்ற கூச்சல் போடுகிறது.

விவேகம் என்கிற கண்ணில்லாதவன் குருட்டுப் பசுவுக்கு ஒப்பாகிறான். சாதனத்தில் அவன் எடுத்துக் கொள்கிற முயற்சி பயனற்றதாகிறது.

ஞானமார்க்கம்: தூங்குகிறவனுக்கு எழுந்திருக்கவும் தன் முயற்சியில் ஈடுபடவும் வேளை ஒன்று வருகிறது. அங்ஙனம் பிரபஞ்ச வாழ்வில் உழல்பவனுக்கு அதில் சலிப்புத் தட்டுகிறது. அப்பொழுது ஆத்மபோதத்தில் அல்லது அருள் நாட்டத்தில் உணர்வும் ஊக்கமும் ஓங்குகின்றன. அவனுடைய சிரத்தைக்கு ஏற்ப ஞானாசாரியார் ஒருவரோடு தெய்வாதீனமாகத் தொடர்பும் ஏற்படுகிறது. அப்படியிருந்தும் ஞானமார்க்கமானது கூரிய

கத்தி முனையில் நடப்பதற்கு நிகரானது என்று கடோ உபநிஷதம் கூறுகிறது (3-14).

செய்யத்தக்கது, தகாதது: நல்ல ஆத்ம சாதகர்கள் நூல்களிலும் மிக்கார் ஆகின்றனர். செய்யத் தக்கவைகளையும், தகாதவைகளையும் நூலோர்கள் முற்றிலும் நிர்ணயம் செய்யவில்லை; அப்படிச் செய்வதும் சாத்தியமன்று. காலதேச வர்த்தமானத்துக்கு ஏற்பச் சில நடைமுறைகளை மாற்றியமைப்பது அவசியமாகிறது. அது போழ்தெல்லாம் சான்றோர்கள் செய்வதை நீயும் பின்பற்றுக. திரிகரணங்களில் அந்தணர்களாயிருப்பவர்க்கே சூழ்நிலைக்கேற்ற செந்நெறி நன்கு விளங்கும் – தைத்திரிய உபநிஷதம் (1-11). விவேகம் படைத்திருப்பவர்களுக்கு வழிபாட்டு முறை தானே விளங்குகிறது. விவேகம் இல்லாதவர்கள் சான்றோர் செல்லும் செந்நெறியில் செல்லுவது முறை.

சகுண நிர்க்குண உபாசனை: சகுணப்பிரம்மம் அல்லது ஈசுவர உபாசனை செய்து அவருடைய அனுக்கிரகத்தைப் பெற்று, பிறகு நிர்க்குண பிரம்ம உபாசனை பண்ணுவது பெரும்பாலான சாதகர்களுடைய பாங்கு ஆகும். **சிதம்பரத்தில்** நடராஜாவுக்கும் பிறகு சிதம்பர ரகசியத்துக்கும் நடைபெறுகிற தீபாராதனையே இதற்கு நல்ல விளக்கமாகும் பிஞ்சாகிக், காயாகிக் கனியாகின்ற விடத்து. மேலோடு பழத்தினின்று தானாகப் பிரிந்து விடுகிறது. அங்ஙனம் ஞான முதிர்ச்சியடைபவனுக்குத் தேகாபிமானம் போய்விடுகிறது. தேகப் பற்றுடையவனுக்கு எளிதாயிருப்பது சகுணப் பிரம்ம உபாசனை. அதில் துவக்கி மேல்நோக்கிப் போகின்றவனுக்குச் சாதனத்தில் அதிகச் சிரமம் ஏற்படுவதில்லை.

இறைவனே நித்திய வஸ்து, ஜீவனும் அதன் மனமும் அன்பும் அநித்தியமா

யானே பொய், என் நெஞ்சும் பொய்,
என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே

கடலில் உள்ள அலைகளின் மீது ஒரு சூரியன் பல சூரியர்களாகப் பிரதிபலிப்பது போன்று, குணபேதத்தையுடைய பிரகிருதியின் மீது பரமாத்மாவானவர் பல கோடி ஜீவர்களாகப் பிரதி பலிக்கிறார். ஆதலால்தான் ஜீவாத்மாவுக்குச் **சிதாபாசன்**

என்னும் பெயர் வந்துள்ளது. பிரதிபலிக்கின்ற சைதன்யம் என்பது அதன் பொருள். இந்த ஜீவாத்மன் பிரகிருதியிலேயே உழன்று கிடக்கும்பொழுது அவன் பிறவிப் பெருங்கடலில் தத்தளிக்கிறன். பிரகிருதியைப் புறக்கணித்து விட்டு அவன் பரமாத்மாவை நாடுமிடத்து அவனுக்கு நிலைத்த ஆனந்தம் வாய்க்கிறது. பரமனை அடைவது ஜீவனது குறிக்கோள்.

ஆனந்தாதீதம்: ஆனந்தாதீதம் என்பது நிர்க்குணப்பிரம்மம். சிதம்பர ரகசியம் எனவும் சதாசிவம் எனவும் இப்பரவஸ்து இயம்பப் பெறுகிறது. சிதம்பரம் போனவர்கள் திரும்பி வருவதில்லை என்பது கோட்பாடு. அதாவது பரவெளி அல்லது சிதாகாசத்தில் கலந்தவர்களுக்கு ஜீவபோதம் எஞ்சியிருப்பதில்லை. ஆனந்தாதீதம் சொற்பதங் கடந்த தொன்மை.

> ஈறு இலாத நீ எளியை ஆகிவந்து, ஒளி செய் மானிடமாக
> நோக்கியும், கீறு இலாத நெஞ்சு உடையன் ஆயினேன்
> (5, 91)

அகண்டாகார சித்த விருத்தி : மலம் செறிந்த மனதே மாயா விகார மெனப்படுகிறது. தூய்மையில் நிலைபெற்ற மனத்துக்குப் பிரபஞ்சக்காட்சி ஈசனது காட்சியாக மாறுகிறது. ஈசனோடு ஜீவனுக்கு மாறாது இருக்கிற உறவு பேரானந்தமாகப் பொலிகிறது. அந்நிலையில் ஞாதா, ஞானம், ஞேயம் என்ற மும்மை (ஆனந்தத்தை நல்குபவன், ஆனந்தம், ஆனந்தத்தை அனுபவிப்பவன் என்ற திரிபுடி) (அதீத நிலையில்) அழிந்து பட்டுப்போவதால் இதை முப்பால் என்று இயம்புவதுண்டு.

ஞானியின் பரிபூரண நிலை : கருவி, கரணங்களை வென்ற முனிவனது மனம் கடல் போன்றது. காமத்தை உண்டுபண்ணும் பொருள்கள் ஓயாது அவனது முன்னிலைக்கு வந்து கொண்டிருக்கலாம். பொறிவாயிலாக அவன் அவைகளைப் பொருள் படுத்தவும் செய்யலாம். கடலில் நதிகள் ஒடுங்குவது போன்று இந்திரியார்த்தங்கள் என்னும் சித்தவிருத்திகள் அவனது உள்ளத்தில் ஒடுங்கி விடுகின்றன. மனம் ஒரு விகாரத்தையும் அடையாத பரிபூரண நிலையில் அவன் வீற்றிருக்கிறன். அகண்டாகார விருத்தி என்று அதைப் பகர்வதுண்டு. கடல் போன்று அகண்டமாய் விடுகிறது ஞானியின் உள்ளம். சாந்தம் அல்லது ஜீவன்முக்தி என்ற பெரு நிலையும் அவனுக்கே உரியது.

—4—

ஆனந்தத்தை நாடுவது ஜீவர்களின் இயல்பு. சகுணப் பிரம்மம் அல்லது ஈசுவரன் மாயா சகிதனுயிருக்கும்பொழுது ஆனந்தத் தாண்டவம் அவனது மகிமையாக மிளிர்கிறது. ஜீவ போதம் என்னும் உபாதியைக் களைப்பது ஜீவாத்மாவின் குறிக்கோள் ஆகும். அப்படி ஜீவ வியக்தியைக் களைக்கும்போது அவன் ஈசுவரகாட்சியையும் ஒதுக்கிவிட்டு நிர்விகற்ப சமாதியில் நிர்க்குணப்பிரம்மத்தில் ஒன்றுபடுகிருன். அந்தநிலையே ஆனந்தாதீதம் எனப்படுகிறது.

'வந்து எனைப் பணிகொண்ட பின் மழக்
கைஇலங்கு பொன் கிண்ணம் என்று அலால்
அரியை என்று உனைக் கருது கின்றிலேன்

பொற்கிண்ணத்தின் அருமையைக் குழந்தையானது அறியாதிருப்பது போல் உனது அருமையை நான் அறியாதிருக்கிறேன்.

ஆனந்தாதீதம் பெறவேண்டிய ஆத்ம சாதனம்: ஐம்பொறிகளின் வாயிலாக வெளியே உள்ள உலகம் அறியப் படுகிறது. இந்த உலகம் பிரகிருதியின் கூறு ஆகிறது. இவை யாவையும் நீக்குமிடத்து ஆத்ம சொரூபம் எஞ்சி நிற்கிறது. தன்னைத்தானே தோற்றுவித்துக் கொள்ளுதல் பிரம்ம தேவனுக்கும் ஜீவாத்மனுக்கும் பொதுவான செயல். பொறிகள் வாயிலாகப் புறவுலகை நாடுவது பிரவிருத்தி. அது பிறவிப் பெருங்கடல். பொறிகளைச் சுட்டுச் சாம்பலுக்கு நிகராக்கி மனதை அந்தர்முகத்தில் திருப்புவது நிவிருத்தி. ஆத்மானுபூதிக்கு அதுவே உற்ற உபாயம். பொறிகளை வெல்லுமளவு ஆத்ம சாதனம் உறுதிபெறுகிறது.

ஜீவபோதமானது சுத்த சைதன்யமாயிருக்கும் சிவபோதமாக விரிவடைந்தாலொழிய ஆனந்தாதீதம் வாய்க்காது.

"ஊனை நாடகம் ஆடுவித்தவா, உருகி நான் உனைப் பருக வைத்தவா"

மனிதன் உண்மையில் ஆத்ம சொரூபம். அவன் உடல் சொரூபம் அல்லன். தன்னைத் தேகம் என்று கருதுகிறவனுக்குப் பிறப்பு இறப்பு உண்டு; நலனும் கேடும் உண்டு; இவைகளை முன்னிட்டு வருகிற இன்பமும் துன்பமும் உண்டு. உடலில் உண்டாகின்ற மனவிகாரங்களே இன்பதுன்பங்களுக்கு முகாமாயமையாகின்றன. ஆனால் ஆத்மாவோ விகாரமற்றது. இவ்வுலக சம்பந்தமான இன்பதுன்பங்கள் ஆத்மனை வந்து சார்வதில்லை.

ஆத்ம தரிசனம் : கால தேச நிமித்தம் (time space causation) ஆகிய முப்பகுதிக்கும் அப்பாற்பட்டவன் பரம்பொருள். எச் செயலும் அவனை வந்து பாதிப்பதில்லை யாதலால் அவன் கர்மா தீதன், காரண—காரியாதீதன். பரம்பொருளின் அனுபூதி பெறு தற்கு வெறும் நூல் அறிவு போதாது. "நுண்ணறிவு படைத்திருந் தாலும் இந்த ஆத்மனை அடையும் பேறு தீய ஒழுக்கத்தினின்று விலகாதவருக்கில்லை; புலனடக்கம் பெறாதவர்க்கில்லை; தியானம் பயிலாதவர்க்கில்லை; மனம் அடங்கப் பெறாதவர்க்கும் இல்லை" —கடோப உபநிஷதம் (2-24).

அலைக்குக் கடல் ஆதாரமாய் இருப்பது போன்று பரமாத்மா வானது ஜீவாத்மாவுக்கு ஆதாரமாயிருக்கிறது. அலையானது கடலில் தோன்றிக் கடலில் ஒடுங்குவது போன்று ஜீவாத்மா பரமாத்மாவில் தோன்றி அதனிடத்தே ஒடுங்குகிறது.

ஜீவ வியக்தியை இழக்கும்போது ஜீவாத்மன் ஆனந்தாதீதத் துக்கும் போகிறான்.

"தொழும்பாளர் எய்ப்பினில் வைப்பனே
என வைப்பதோ சொலாய் நைய வையகத்து"

தொண்டர்களுக்கு இளைத்த காலத்தில் உதவும் செல்வமாக இருப்பவனே, இப்பொய்யுலக வாழ்க்கையில் நான் துன்புற்றிருக் கும்படி வைப்பது முறையாகுமோ?

குழந்தை, வாலிபன், முதியவன் ஆகியவை மனிதனுக்கு முறை யாக வருவது போன்று சாதகனுக்கும் துவைதம், விசிஷ்டாத் வைதம், அத்வைதம் ஆகியவைகள் முறையாக வருகின்றன. துவைத நிலையில் இன்பதுன்பத்துக்கு இடமுண்டு. இந்த இரு மையை வென்று நிற்பதே சாதனையின் வெற்றி. அடுத்து வருவது விசிஷ்டாத்வைத நிலை. பேத அபேதமாக அனைத்தும் பரமனின் அம்சங்களாக அவனைச் சார்ந்திருக்கின்றன. இறுதியில் சாதகனுக்கு அத்துவைத சித்தி உண்டாகிறது.

"கூடவேண்டும் நான் போற்றி, இப்புழுக்
கூடு நீக்கு எனைப் போற்றி, பொய் எலாம்
வீடவேண்டும் நான் போற்றி வீடு தந்து அருளு போற்றி"

சிதாகாசத்தில் ஊர்த்தவ தாண்டவமாடும் உன் சொரூ பத்தில் நான் ஒன்றுபட வேண்டும். உடலை நான் என்று உணரும் உணர்வுக்கு அதீதத்தில் நான் போவேனாக "அஹம் பிரம்மாஸ்மி" என்னும் வீடுபேறு எனக்கு உரிய தாகுக.

சிதம்பரத்திற்குப்போன ஜீவாத்மா திரும்பி வருவதில்லை என்னும் கோட்பாடு ஈண்டு நிறைவேறுகிறது. அது அத்வைத சித்தி. சிவனாது ஊர்த்தவ தாண்டவம் பிரகிருதிக்கு அப்பாற் பட்டது. ஆதலால் அதுவே ஆனந்தாதீதம். பிரதிருஷ்டி வரும்போது பிரபஞ்சம் என்னும் பொய்க்காட்சி மறைந்து பட்டுப் போகிறது. பாம்பாகத் தோன்றிக் கொண்டிருக்கிற பொழுதும் கயிறு கயிறே; அது பாம்பு அன்று. அங்ஙனம் பிரபஞ்சம் என்னும் பொய்க்காட்சி தென்படுகிற பொழுதும் அது உண்மையில் பரவஸ்துவே. பரம்பொருளுக்கு அன்னியமாகத் தென்படும் ஜகத்தும் ஜீவனும் வெறும் தோற்றமாம். இதுவே அத்வைத நிலை.

நீத்தல் விண்ணப்பம்—துறவின் இலக்கணம்

சிவபெருமான் தாமே தியாகராஜனாகவும், சுடலை வாசியாகவும் இருந்து துறவின் அவசியத்தை விளக்குகிறார். பிரகிருதி என்னும் மாயையை நீத்துப் பரமனைப் பற்றிப் படிப்பது நல்ல ஆத்ம சாதனமாகிறது. வைராக்கியம் என்பது உலகப்பற்றை ஒழித்தல். ஆழ்ந்த பிரார்த்தனை பிரபஞ்ச பாசத்தினின்று விடுபடுதற்கு உற்றதோர் உபாயமாகும்.

> ''கார் உறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்கரை
> மரமாய், வேர் உறுவேனை விடுதிகண்டாய்''

மாதர் போகத்துக்கு ஐம்பொறிகளும் உடந்தையாவதால் அது சம்போகம் எனப்படுகிறது. போகத்தை நாடுபவனுக்கு யோகம் இல்லை. மீண்டும் ஓர் இடத்தில் "வளர்கின்ற தீயில் விட்டில் பூச்சி வீழ்வது போன்று நான் காமக்கனலில் உழல்கின்றேன்" என்று இறைவனிடம் முறையிட்டு வருந்துகின்றார் மணிவாசகர். பிரபஞ்சப் பற்றுதல்களுள் காமம் என்னும் நோய் மிகக் கொடியது.

> "பொறுப்பர் அன்றே பெரியோர்
> சிறு நாய்கள்தம் பொய்யினையே"

பொய்யான பிரபஞ்சத்தை மெய்யென்று மயங்குகிற அஞ்ஞானிகளின் போக்கை மன்னிப்பது பெரியோர் செயல். உடலைத் தான் என்று எண்ணிச் சிறுமையுறுவோரைக் காப்பாற்றுவது இறைவன் அருளே. பரம்பொருள் எனப்படுவது ஐம்பொறிகளுக்கு அப்பாற்பட்டது. அதே பொருள் ஐம்பொறிகள் வாயிலாகப் புலனாகும்போது பிரபஞ்சம் எனப்படுகிறது.

ஆத்மசாதனத்தில் அஞ்சாநெஞ்சம் : பஞ்ச இந்திரியங்களுக்கு வசப்படுகிறவன் சிறுமை அடைகிறான். அஞ்சுபவனும் சிறுமை அடைகிறான். மனது தெளிவும், அமைதியும் பெறுமிடத்து ஆங்கு அச்சத்திற்கு இடமில்லை. பிரம்மச்சரிய விரதம் அனுட்டித்துக் குருவுக்கும், உலகுக்கும் சேவை புரிவதன் மூலம் மனதினின்று காம எண்ணங்கள் அடியோடு அகற்றப்படுகின்றன. அதன் பிறகு மனதை அடக்குதல் எளிதாகிறது. அடங்கிய மனதில் ஈசுவர எண்ணம் குடிகொள்ளுங்கால், அவனை அடைதலே வாழ்வின் முடிவான நோக்கம் என்றும் கருதியிருப்பவன் நல்ல யோகியாகிறான்.

"இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு ஒத்து
நினைப் பிரிந்த
விரிதலையேனை விடுதி கண்டாய்
பொருதலை மூவிலை வேல், வலன் ஏந்திப் பொலிபவனே"

கூர்மையான—திரிசூலம் ஞானத்தின் சின்னமாகும். அஞ்ஞானம் என்னும் எதிரியைத் தாக்கி வீழ்த்துதலில் அதற்கு யாண்டும் வெற்றியுண்டு. ஞானோதயத்தில் பயம் அகலுகிறது; ஐம்பொறிகளின் வேகம் அடங்குகிறது. தேகாத்ம புத்தியைத் தாண்டி பரபோதம் அடையப்பெறும் ஆத்ம சாதகன் தன்பால் உள்ள திரிபுரத்தைச் சம்மாரம் செய்பவன் ஆகிறான். இறுதியில் மனம் சாந்தியடைவது வாழ்வின் குறிக்கோள்.

கர்மத்தை அவிக்கும் ஞானக் கருணைக்கனல்

"கடலினுள்நாய் நக்கி ஆங்கு, உன் கருணைக் கடலின்
உள்ளம், விடலரியேனை விடுதி கண்டாய்"

கடல்போன்று ஏராளமாகக் கூழ் அகப்பட்ட விடத்தும் அதைச் சிறிதுசிறிதாக நக்குவது நாயின் இயல்பு. அங்ஙனம் ஆண்டவன் அருள் அளப்பரியாவாறு அமைந்திருப்பினும் பக்குவம் அடையாத ஜீவாத்மன் அதை முறையாகப் பயன்படுத்துவதில்லை. சித்தத்தைச் சிவன்பால் சரியாகச் செலுத்தாமையே எமது குறைபாடு. மனம் நலத்தை நாடுகிறது; ஆனால் தீய சமஸ்காரம் மனிதனைத் தலையெடுக்க விடுவதில்லை. ஈசனது அருளைநாடி நிற்பது பக்தனது இயல்பு. பரமாத்மாவுக்குப் புறம்பாக ஜீவாத்மாவுக்குத் தனி வியக்தி கிடையாது.

"இருந்தென்னை ஆண்டுகொள், விற்றுக்கொள்
ஒற்றிவை என்னின் அல்லால்
விருந்தினனேனை விடுதி கண்டாய்"

இவ்வாறெல்லாம் சொல்லுவதன்றி நான் என்ன செய்யக் கடவேன். உன் அருளுக்குப் புதியவனாய் வந்திருக்கும் என்னை வெறுமனே விடவேண்டாம் என்பது ஒன்றே என் விண்ணப்பம். வெந்துபோன விதை பழைய வடிவத்தோடு இருப்பினும் அதை விதைத்தால் செடியாக முளைக்காது. அங்ஙனம் ஞானத் தீயானது கர்மங்களை அவித்து விடுகிறது. பிராரப்த கர்மம் மட்டும் வேலை செய்யும் எனினும் அதற்கு வேகம் கிடையாது. சொப்பனத்தில் பயந்து எழுந்த ஒருவனுக்கு இருதயம் துடிதுடிக்கிறது. எனினும் விழித்துக்கொண்ட பிறகு அதில் கேடு ஒன்றும் இல்லை. அங்ஙனம் பிராரப்த கர்மமும் ஞானியை ஒன்றும் செய்யாது.

ஐம்புலன் ஆற்றலை வெல்லும் அருள் விருந்து

"ஆனைவெம்போரில் குறும் தூறு எனப்
புலனால் அலைப்புண்டேனை
எந்தாய் விட்டிடுதி கண்டாய்"

வெந்து சாம்பலானதற்கு நிகராக உடலைக் கருதுவது ஒன்றே ஐம்பொறிகளை வெல்லுதற்கு உற்ற உபாயம். அதற்கு அறிகுறியாகத் திருநீறு பூசப்படுகிறது. அலைக்குப் பிறப்பிடமாயும், ஆதாரமாயும் கடல் இருப்பதுபோன்று ஜீவாத்மனுக்குப் பிறப்பிடமாயும், இருப்பிடமாயும், கதியாயும் இருப்பது பரமாத்மா. பரமனைச் சார்பவனே பெருவாழ்வு வாழ்கிறான். இறைவன் செயலுக்கு தலைவனாயிருப்பது போன்று அறிவுக்கும் அறிவாய் இலங்குகின்றார். இவ்வுண்மையை அறிகின்றவர்களுக்கு மனச்சஞ்சலம் இல்லை. சாந்தி தானே வந்தமையும்.

"எறும்பிடை நாங்கூழ் எனப் புலனால்
அரிப்புண்டு அலந்த
வெறும் தமியேனை விடுதி கண்டாய்"

ஐம்பொறிகளைச் சிவசேவையிலேயே பயன்படுத்துவது சாதனம். அப்படிப் பயன்படும் பொறிகள் கேடு சூழமாட்டா. புலன்களால் அனுபவிக்கப்படும் போகங்கள் இன்பமாகத்

துவங்கித் துன்பமாக முடிவுறுகின்றன. ஆத்ம சாதகனை எடுப்பதும், கெடுப்பதும் அவன் எண்ணுகிற எண்ணங்களேயாம். சத்சங்கம், அடியார் தொடர்பு காம நோய்க்கு நல்ல மருந்தாகும்.

மனக்குரங்கை அடக்கும் வழி: அவரவர் பெற்றுள்ள பான்மை பழக்கத்தைப் பொறுத்தது. இடையறாப் பழக்கத்தால் எப்பான்மையை வேண்டுமானாலும் பெறலாம். நாடிய லட்சியத்தினிடத்து அல்லது வழிபடு தெய்வத்தினிடத்து மனதை அடிக்கடி திருப்புவது அப்பியாசமாகும். எண்ணம் இறைவனைப் பற்றிய தாகுமளவு மனதுவெளி விஷயங்களில் செல்லாது ஒருமுகப்படும்.

புலன்களில் பற்றில்லாதிருப்பது வைராக்கியம். மனம் அடங்காது ஓடுதற்குக் காரணம் யாது என்று விசாரித்துப் பார்த்தால் அது எப்பொழுதாவது எதனிடத்தாவது பற்று வைத்திருந்தால் அப்பொருளையே அது நாடி அலைகிறது என்பது விளங்கும். இந்திரிய விஷயங்களிலுள்ள கேடுகளை மனதுக்கு ஞாபகமூட்டி அதை அவைகளிடத்திருந்து மீட்டெடுப்பது வைராக்கியமாகும்.

"மத்துஉறு தண் தயிரின் புலன் தீக் கதுவக் கலங்கி
வித்து உறுவேனை விடுதி கண்டாய்"

மனக்கலக்கம் இருக்கும் வரையில் ஜீவ வியக்திக்கும் நிலைபேறு உண்டு. பிரபஞ்சத்தைத் துடைக்கின்ற சிவபெருமான் பக்தனது மனதையும் துடைத்து விடுவாராகில் அது பெருங் கருணையாகும்.

சிவஞானியும் சிவமும் ஒன்றே. எரியும் தீபம் மற்றொரு தீபத்தை ஏற்றுவதுபோன்று, ஞானி பக்குவமாயிருக்கிற சீடனைப் பரஞானத்தில் கொண்டு சேர்க்கிறான். இந்திரியங்கள் பொல்லாதவைகள்—தவ, விரதமுடையவர்களையும் தத்தளிக்கச் செய்யும் ஆற்றல் அவைக்கு உண்டு. எனவே இந்திரியங்களை வெல்லுமளவு மனிதன் மேலோன் ஆகிறான். தனிமனிதன் அல்லது ஒரு சமுதாயம் அடைந்துள்ள பண்பாட்டை ஆங்குத் தென்படும் புலனடக்கத்தைக் கொண்டு அளந்துவிடலாம்.

புலன்வழிச் செல்லும் ஆசையை அடக்கும் பக்குவநிலையே பிரார்த்தனை: எப்படிக் கடலும் அலையும் ஒன்றினின்று ஒன்று

பிரிந்திருப்பதில்லையோ அப்படிப் பரமாத்மனும் ஜீவாத்மனும் என்றுமே பிரிவதில்லை. தன்னைக் கைவிட்டுவிட வேண்டாமென்று ஜீவாத்மன் பரமாத்மனிடம் விண்ணப்பிப்பதெல்லாம் தன்னை மெய்ஞ்ஞானத்துக்குப் பக்குவப்படுத்தற் பொருட்டேயாம்.

"கண்டது செய்து கருணை மட்டுப் பருகிக்களித்து
மிண்டு கின்றேனை விடுதி கண்டாய்"

அடக்கமும், சாந்தமும், இனிமையும் கூடிய சந்தோஷம் ஆத்ம சாதனத்துக்கு உறுதுணையாகிறது. ஆனால் பேருவகை ஒருபோதும் உதவாது. மாறாக உவகை சாதனத்துக்கு இடைஞ்சலாகும். பிரகிருதியில் ஆத்மா கட்டுண்டு இருக்குமளவு மனது இருக்கிறது. மனிதன் மனதை அடக்காது வெளிக்கரணங்களை அடக்குவதால் தன் இயல்பை அவன் பிளவுபடுத்துகிறான். அஞ்ஞானத்தில் இருப்பவன் கர்மத்தை விட்டுவிடுவதாகப் பாசாங்கு செய்வது மித்தியாசாரம் ஆகிறது.

"விரை ஆர்ந்து இனிய மதுமதுப் போன்று
என்னை வாழைப் பழத்தின் மனம் கனிவித்து
எதிர்வது எப்போது பயில்விக் கயிலைப் பரம்பரனே"

தெளிந்த தேன்போன்றும் பழுத்த வாழைப்பழம் போன்றும் என்னை நீ பக்குவப்படுத்துவது எப்போது? அதற்கேற்ற பயிற்சியை எனக்குக் கொடுத்தருள்வாயாக என வேண்டுகிறார் மணிவாசகர்.

ஆசையை அறவே வென்ற ஜீவாத்மன் ஒருவன் மூலம் நிகழ்கிற கிருத்தியங்கள் அனைத்தும் ஈசன் செயல். "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்று ஆசையை வென்ற புனித ஆத்மா மட்டுந்தான் பகரலாம். மனதானது பொறிகள் வாயிலாகப் புறத்தே போகாது அகத்தில் ஒடுங்கியிருப்பது கர்மத்தை ஒழிப்பதற்கு உற்ற உபாயம்.

பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடு வாழ்வார் —குறள்

உலகத்தவர் எல்லார்க்கும் பரம சத்துருவாயிருப்பது ஆசை. இந்த ஆசைக்குத் தடையுண்டாகும்போது அது கோபமாக வடிவெடுக்கிறது. ஆகையால் காமமும், கோபமும்

உண்மையில் ஒன்றே. பெருந்தீயில் விறகு எவ்வளவு போட்டாலும் பொசுங்கிப்போவதுபோலக் காமத்துக்கு விஷயங்களை ஊட்ட ஊட்ட அது அவைகளை உண்டு வளர்கிறது. இதனால் ஆசை பெருகப்பெருக எமது பாபமும் பெருகுகிறது.

இருவினை ஒப்பில்தான் கர்மம் ஞானமாகிறது: "அரைசே அறியாச் சிறியேன் பிழைக்கு அஞ்சல் என்னின் அல்லால் விரைசேர் முடியாய் விடுதிகண்டாய்" என்றும், "அடர் புலனால் நின்பிரிந்து அஞ்சி அம்சொல் நல்லார் அவர்தம் விடர் விடலேனை விடுதிகண்டாய்" என்றும் எமது குற்றங்களைத் தன்மேலேற்றி இறையருளை வேண்டுகின்றார் மணிவாசகப் பெருந்தகையார்.

நல்வினை, தீவினையாகிய இருவினையும் விவேகிக்குச் சத்துருக்களாம்—ஒன்று பொன்விலங்கு, மற்றது இரும்பு விலங்கு என்பார் ராமகிருஷ்ண பரமஹம்சர். ஏனென்றால் அவைகள் அஞ்ஞானத்தில் தோன்றி வந்து பிறவியைப் பெருக்குகின்றன துன்பத்தையும் வளர்க்கின்றன. பரஞான உதயத்தில் கர்மம் நசிகிறது; பயம் போகிறது.

உலக வாழ்வில் ஓரளவுக்குமேல் திரவியம் ஒருவனுக்குப் பயன்படாது. ஞானம் பெருகுகின்ற அளவு மனச்சாந்தியும் மோட்சமும் கைகூடும். திரவிய விருத்தி ஜடபுத்தியை உண்டு பண்ணுகிறது. ஞான வளர்ச்சி ஆத்ம சைதன்யமாகிறது—ஞானத்தால் ஆத்மாவானது கர்மத்தில் கட்டுப்படாத சாட்சி என்ற பேருண்மை விளங்குகிறது. ஆகையால் தான் யாகமெல்லாம் ஞானயாகமாக வடிவெடுக்க வேண்டும்—கற்பூரம் எரிவது கர்மம், எஞ்சியிருப்பது ஒன்றுமில்லை என்பதை உணர்வது ஞானம். இங்ஙனம் கர்மம் ஞானமாகிவிடுங்கால் ஜீவ போதத்தில் ஒன்றும் மிஞ்சி இருப்பதில்லை என அறிதலே ஞானயாகம்.

மனமானது பிரபஞ்சத்தைச் சார்ந்தால் அது சடவஸ்துவாகிறது; அதே மனது பரமனைச் சார்ந்தால் அது சேதனமாகிறது—தீயைச் சார்ந்த கரிதீமயமாவது போன்று. சிவபெருமான் மனது என்னும் மானை ஒரு கையில் தாங்கியிருக்க, அந்த மான் அவருடைய முகத்தையே பார்த்த வண்ணமாயிருப்பது இத்தத்துவத்தை விளக்குகிறது. பகவானை அடைந்தவனுக்குப் பிறவிப்பிணி இல்லை—இவர்களே "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்கின்றனர்.

உடல் உணர்வு ஒழித்து ஆத்ம தரிசனம் பெறுவதே உயர் தியானம்: உடலைத் தானென்று கருதுகிற ஜீவனுக்குச் சிற்றமுண்டு; பயமுண்டு; வினைப்பயன் உண்டு. உடல் உணர்வைக் கடந்தவனுக்கே பரஞானம் வாய்க்கிறது. "மனத்துணையே என்தன் வாழ்முதலே எனக்கு எய்ப்பில் வைப்பே தினைத்துணை யேனும் பொறேன் துயர் ஆக்கையின் திண்வலையே" என்றும்,

"விடக்கு ஊன் மிடைந்த
சிதலைச்செய்காயம்பொறேன் சிவனே முறையோ முறையோ
திதலைச் செய் பூண்முலைபங்கா என் சிவகதியே"

இறைவனைப் பாடிப் பரவிவேண்டுகிறார் மணிவாசகர்.

துன்பத்துக்கு இருப்பிடமாகிய உடல் என்னும் உறுதியான வலையில் அகப்பட்டு அல்லல்படும் நான் இந்த அல்லலைச் சிறிதேனும் சகியேன். புலால் நாற்றத்தையுடைய மாமிச மயமானதும், நோய்கள் பலவற்றிற்கு இருப்பிடமானதும் ஆகிய உடம்பை நான் தாங்கியிருக்க மாட்டேன். ஈசா, என்னை இக்கீழ் நிலையில் விட்டு வைப்பது உனக்குத் தகுமோ? இவ்வாறு மாமிச தேகத்தின் மீது அருவருப்புக் கொள்வது ஆத்ம சாதனத்துக்கு உற்ற உபாயமாகும்.

காமத்தீ கொடியது-ஆசைக்கு அரசன் காமம். ஆத்மசாதகன் அதில் வீழ்ந்து, அழிந்து போகாதிருப்பதற்கு இறைவன் அருளும் சான்றோர்நல்லிணக்கமும்வேண்டும். ஐம்புலன் அடக்கம்,காமத்தை வெல்லுதல் ஆகிய இரண்டைப் பற்றியுமே மணிவாசகர் அடிக்கடி பாடுவது இவற்றின் ஆற்றலை வெளிப்படுத்துவதற் காகவே. இவ்வாறு பிரச்சினையை நன்கு தெளிந்த பின்பு தான் ஆத்மசாதகன் பரம்பொருள் நாட்டத்திற்குத் தடையாயுள்ள இந்த இருபெரும் அல்லல்களையும் தவிர்க்கலாம்.

"உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்து
ஈயின் ஒப்பாய்
விழைதருவேனை விடுதி கண்டாய்"

என்ற அடிகளார்

"விடின், வெம் கரியின்
உரிப்பிச்சன் தோல் உடைப் பிச்சன் நஞ்சு ஊண் பிச்சன்,
ஊர்ச்சுடு காட்டு
எரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப் பிச்சன் என்று ஏசுவனே."

என்று ஒரு நிந்தாஸ்துதியும் பாடுகின்றார்.

இறைவனும் ஒரு மானிடன். அதாவது (மான் + இடன்) இடக்கையில் மானைப் பிடித்து வைத்திருப்பவன்—மான் போன்று ஓடித்திரியும் மனதை அடக்கியவன் சிவன். அத்தகைய சிவனை அணைந்து நின்று அருள் வேண்டிய வாதவூர் அண்ணல், அன்பின் மேலீட்டினுல் பராபக்தி அல்லது மகாபாவ நிலையில் நிந்தாஸ்துதி பாடுவதுபோல அருள்வேண்டி நிற்கிறார். "நான் உன்னை வைதாலும் வாழ்த்தினுலும் என் குற்றத்தின் பொருட்டு வருந்துகிற என்னை நீ ஒதுக்கித் தள்ளிவிட வேண்டாம். ஏனென்றால் நீ யாண்டும் என்னை ஆளுடைய அண்ணல்; நான் உன் அடிமை." நீத்தல் விண்ணப்பம் "கடையவனேனை" என்று தொடங்கிக் "கடையவனே" என்றே முடிகிறது—தனது கீழ்மையை முதலில் கூறிய வாதவூரர் இறைவனது பெருமையை, ஜீவாத்மனை ஜீவ போதத்திலிருந்து விடுவிக்கும் செயற்கரிய கடைசிச் செயலை, விதந்து கூறி முடிப்பது அவரது தமிழ்ப் புலமையையும், பக்தியின் ஆழத்தையும் புலனுக்குகின்றது. முதலில் சிவனது மகிமையை ஏற்றுக்கொள்; பின் ஓர்ந்துபார்.

பாவை போன்ற பெண்ணே! சிவனைப் போற்றத்துயில் விட்டெழுத்திடுவாயாக! சிவன் பெருமைகளை எண்ணிப் பார்ப்பாயாக!

திருவெம்பாவை

(திருவண்ணுமலையில் சக்தியை வியந்து பாடப்பெற்றது)

1

தை மாதம் முதல் ஆனி மாதம் வரையில் ஆறுமாதகாலம் சூரியனுடைய உத்தராயனம். அது தேவர்களுக்குப் பகல். ஆடி முதல் மார்கழி வரையில் சூரியனுடைய தட்சணுயனம். அது தேவர்களுக்கு இரவு. நமக்கு அதிகாலை நான்கு மணியிலிருந்து ஆறுமணி வரையில் பிரம்ம முகூர்த்தம். கடவுள் வழிபாட்டுக்கு அது சிறந்த நேரம். அதே போன்று தேவர்களுடைய நாளில் மார்கழி முழுதும் பிரம்மமுகூர்த்தம். அதனுல்தான் கண்ணபிரான் மாதங்களுள் நான் மார்கழி என்று கூறியுள்ளார். மார்கழி மாதத்தில் மக்கள் அதிகாலை வழிபாட்டிற்காக எழுந்திருப்பதற்குத் திருவெம்பாவை திருவண்ணுமலையில் பாடப்பெற்றது.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடம்கண்
மாதே வளருதியோ?"

2

மக்கள் எல்லோரும் உலக வாழ்க்கையில் உழன்று கொண்டிருக்கின்றனர். அப்படியிருப்பது உறங்கிக் கொண்டிருப்பதற்கு நிகர். அவர்களுக்கு உலகவிஷயம் பகலாகவும் தெய்விக விஷயம் இரவாகவும் இருக்கின்றன. அருள்தாகம் எடுத்துப் பரபோதத்தில் ஊறியிருக்கும்போது தெய்வீக விஷயம் பகலாகும் — இதற்கென மக்களிடத்துச் சிவபோதத்தை ஊட்டுவது திருப்பள்ளியெழுச்சியாகும்.

"பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
பேசும் போது எப்போது இப்போது-ஆர் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ?"

பகலெல்லாம் நாம் பேசிக்கொண்டிருந்தபோது உன்னுடைய அன்பெல்லாம் தில்லைச் சிற்றம்பலத்துச் சிவலோக நாயகனுக்கே என்று கூறிய நீ இப்போது உறங்குவது நல்லதல்லவா? ஞானமார்க்கத்தில் செல்லுகின்றவர்களுக்கு விளங்காத பரதத்துவம் பக்தி மார்க்கத்தில் போகின்றவர்களுக்கு விளங்குகிறது. ஏனென்றால் பரமன் பக்திவலையில் படுகின்ற பாங்கு உடையவன்.

3

"பத்து உடையீர், ஈசன் பழ அடியீர், பாங்கு உடையீர்
புத்து அடியோம் புன்மை தீர்த்து ஆட் கொண்டால்
பொல்லாதோ?"

சிவபக்திக்கு சத்சங்கமும், சிரத்தையும் இன்றியமையாதவைகள். அயர்ந்து உறங்கிய மாது மறுமொழி கூறுகின்றாள்; "நீங்களோ பக்தி நிறைந்தவர்கள்; ஈசனுக்கு நெடிது அடிமை பூண்டவர்கள்; ஒழுங்குப்பாடு மிகவுடையவர்கள். நாங்களோ புதிதாக அடிமை பூண்டவர்கள். எங்கள் குறைபாட்டைப் பொருள் படுத்தாது எங்களையும் உங்களோடு சேர்த்துக் கொண்டால் ஏதாவது தீங்கு விளையுமோ?"

சிற்றின்பக் காதலில் தனிநலமும், தனியுரிமையும் இருக்கின்றன. பக்தியில் மற்றவர்கள் எல்லாரும் சேர வேண்டுமென்று, தான் பகவானைக் காண்கிறவாறு மற்றவர்களுக்குப் பக்தன்

விளக்குகிறுன். பக்தியினுல் என்றைக்கும் நிறைமனது அமையப் பெறுகின்றது—அந்த நிறைவில் ஆனந்தமும் ஓயாது ஊற்றெடுக்கிறது.

4

தமோகுண விருத்தியுள்ள ஜீவாத்மன் வீண்காலம் போக்குதற்குச் சாக்குக் கண்டுபிடிக்கிறுன். ஊக்கமுடையவர் அதற்கு உடந்தையாகார்.

"விண்ணுக்கு ஒரு மருந்தை வேத விழுப் பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்று உருக"

ஞானக் கண்ணுக்கு விருந்தாயிருப்பவனைப் புகழ்ந்து பாடி மனம் குழைந்து, நெகிழ்ந்து நின்று உருகுவாயாக.

"ஞாலமே விண்ணே பிறவே அறிவு அரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஞாலம் இடினும் உணராய்"

யாரும் அறிய முடியாத பெரிய பொருளை நம் அறிவுக்கு எட்டியவாறு பாடுவோம். நம்மை அவன் எப்படி ஆட்கொண்டிருக்கிறுன் என்பதையும், நம்மை எப்படித் திருத்தியமைத்துச் சீர்படுத்தும் நல்லொழுக்கம் உடைத்திருக்கிறுன் என்பதையும் போற்றுவோம். சிவ தத்துவம் எவ்வளவு சிரியது என்பதை முதலில் ஏற்றுக்கொள், பிறகு அதை ஓர்ந்து பார்.

மனபரிபாகம் ஏற்படாமையால், ஆத்மவிசாரம் செய்கின்றவர்களுக்கும் கூட ஆத்ம தத்துவம் விளங்குவதில்லை. அழுக்குப் பிடித்த கண்ணுடி போன்ற மனதை உடையவர்களுக்கு ஆத்ம சொரூபம் விளங்கியும், விளங்காமலும் காட்சிதரும்.

6

"வானே நிலனே பிறவே அறிவு அரியான்
தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான் வார்கழல் பாடி வந்தோர்க்கு உன் வாய் திறவாய்"

யாரும் அறிந்துகொள்ள முடியாத மகாதேவன் வலியவந்து எங்களைக் காப்பாற்றி அடிமை கொண்டருளினுன். அவனுடைய மேலாம் திருவடியை போற்றிப் பாடும் எமக்கு ஒரு வார்த்தை பேசமாட்டாயா?

பகவானின் மகிமைகளைத் தெரிந்து கொள்ளுமளவு பக்தர்கள் அவனைப் போற்றிப் புகழ்வார்கள். அப்படிச் செய்வதில் அவர்களுக்குப் பெருமகிழ்வு உண்டாகிறது.

7

"தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகு ஒப்பாய்
என்னானை என் அரையன் இன் அமுது என்று எல்லோமும்
சொன்னோம் கேள் வெவ்வேறாய். இன்னம் துயிலுதியோ."

ஆத்மபோதம் அடையப்பெறுதவர்கள் ஜடம்போன்று கிடக்கின்றனர். தென்னா என்று அவன் பெயரைச் சொல்லுதற்கு முன்பே தீயிலிட்ட மெழுகுபோல் மனம் உருகுவாயே! அத்தகைய வளாகிய உனக்கு முன்னிலையில்எனக்கு இனியவன் என்றும், என் அரசன் என்றும் இனிய அமுதன் என்றும் நாங்கள் தனித்தனியே சொன்னவற்றையெல்லாம் கேட்டும் இன்னும் உறங்கலாமா?

8

"ஆழியான் அன்புடைமை ஆம் ஆறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடு"

கருணைக் கடலாகிய சிவனிடத்து அன்பு வைப்பது இம்முறையில் தானோ? பிரளயத்தில் அனைத்தும் ஒடுங்குகையில் எஞ்சியிருப்பவன் அவன் ஒருவனே. அவன் உமா தேவியின் சமேதன். அவனது பெருமையை எம்முடன் சேர்ந்து நீயும் பாடுக!

9

"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே"

பக்திமதிகளாகிய பெண்பாலர்க்குப் பக்திமான்களாகிய கொழுநர்கள் கிடைப்பராகில் அது பெறுதற்கரிய பேறும். இறைவன் அனைத்துக்கும் தொல்லோனாயும், அனைத்துக்கும் புதியவனாயும் இருப்பது இவனது பேரியல்பேயாகும்.

10

"வேதம்முதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன்; தொண்டர் உளன்"

அவனே முற்றும் விளக்க வேதங்களுக்கும், தேவர்களுக்கும், மக்களுக்கும் இயலாது. சொல்லில் அடங்காத உயிர்த்தோழன் அவன். ஆனால், தொண்டர் உள்ளத்தில் அவன் தெளிவுற இலங்குகின்றான். சேதனம், அசேதனமாகிய அனைத்துமாயிருப்பவன் பரமனாகையால் அவனுக்குப் புறம்பாக ஒன்றுமில்லை.

11

"ஐயா நீ ஆள்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும்வகை எல்லாம் உய்ந்து ஒழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமை"

உயிர்களை ஆட்கொண்டருளுதல் உன் விளையாட்டாகும். அதன்படி நாங்கள் எல்லாரும் உறுதியாகவே உய்வு அடைந்திருக்கிறோம். உனது வழிபாட்டில் நாங்கள் தளர்வடையாமல் இருக்கும்படி காத்தருள்வாயாக.

12

"ஆர்த்த பிறவித்துயர்கெட நாம் ஆர்த்து ஆடும்
தீர்த்தன் நல்தில்லைச் சிற்றம்பலத்தே தீஆடும் கூத்தன்"

நம்மைப் பிணித்துள்ள பிறவித்துன்பம் ஒழியட்டும். நாம் மகிழ்ந்து ஆடுவது பரிசுத்தனாகிய தில்லைச் சிற்றம்பலத்தில் ஞானக்கினி எடுத்து ஆடுகிற கூத்தனைக் குறித்ததாகும்.

13

பார்க்குமிடம் எங்கும் பக்தியின் முதிர்ச்சியால் பரமனையே காணுகின்றார் மணிவாசகப் பெருமான்.

"பைங்குவளைக் கார்மலரால் செம்கமலப்பைம் போதால்
அங்கம் குருகு இனத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும்! எங்கோனும் பொன்றிசைந்த
பொங்கு மடு"

இந்த மடுவானது அர்த்த நாரீசுவர சொரூபமாகக் காட்சி கொடுக்கிறது. கருங்குவளைப் பூ அம்பிகையின் மேனி போன்றது. செந்தாமரையே சிவனாரது மேனி போன்றது. பாம்பு ஆங்கு நெளிந்து கொண்டிருக்கிறது. நீராட வருபவர்கள் தங்கள் அஞ்ஞான மலத்தைப் போக்க வருபவர் ஆகின்றனர்.

"காதல் மடப்பிடியோடும் களிறுவருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப்பாதம், கண்டறியாதன கண்டேன்"

என்ற அப்பர் வாக்கு இங்கு நினைவு கூரத்தக்கது. உலகக் காட்சியில் இறைவனது காட்சியைக் காணும் அருமை பக்தியில் முதிர்ந்த அருளாளர்களின் பேரியல்பாகும்.

14

"ஆதி திறம்பாடி அந்தம் ஆமா பாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாத் திறம் பாடி ஆடு"

பிரபஞ்சத்துக்கு முன்பு இருந்தவனும், பின்பு இருப்பவனும் அவனே. நம்மைப் பிரபஞ்சத்தினிடத்திருந்து வேறுபடுத்திக் காப்பாற்றியருள்கிற அன்னை பராசக்தியின் மகிமையைப் பாடவும், ஆடவும் செய்வோமாக. திருவெம்பாவையில் சக்தியின் சீரிய செயல் இந்தக் கட்டத்திலே தான் நன்கு விளக்கப்படுகிறது. நாம் சிவத்தோடு சேர்தலைத் துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகிய மூன்று சம்பிரதாயங்களும் மூன்று முறைகளில் விளக்குகின்றன. ஜீவாத்மாவைப் பிரகிருதியினிடத்திருந்து பிரித்தெடுத்துப் பரம்பொருளோடு சேர்ப்பது பராசக்தியின் சீரிய செயலாம்.

முத்தியின் விளக்கம்: மும்மை மறுப்பு (3) உறுதிப் பொருளான பரப்பிரம்மம் என்பதன் கண் மும்மை உண்டு. ஜகத், ஜீவன், பரம் ஆகிய மூன்று பொருள்களாக அது மிளிரும் பொழுது அப்பரப்பிரம்மம் ஈசுவரன் என்று இயம்பப் பெறுகிறது. முக்காலம்; மூன்று அவஸ்தைகள் (யாக்கிரோ, சொப்பனம், சுசுப்தி); மூன்று குணங்கள்; கால, தேச நிமித்தம் ஆகிய ஏனைய மும்மைகளும் ஆங்கு இடம்பெறுகின்றன. ஜகத்தும்,ஜீவனும் அவனிடத்துத்தோன்றிப் பின்பு அவனிடத்தே எடுங்குவதால் அவன் பிரபஞ்சத்துக்கு முன்பு இருந்தவனும், பின்பு இருப்பவனும் ஆகிறான். மும்மைகளினின்று விடுபடுவது முத்தி. இதற்கு ஈசனும் அவனுடைய அருள் ஆகிய அம்பிகையும் துணை புரிகின்றனர்.

15

"பேர் அரையற்கு இங்கனே பித்து ஒருவர் ஆமாறும்
ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
.... வாயார நாம்பாடி ஆடேலோர் எம்பாவாய்"

பெரிய அரசனுகிய இறைவனிடத்தே பித்துக் கொண்டிருப்பாள். ஓர் உயிரை இப்படி முற்றிலும் தன்மயமாக்கிக் கொள்ளும் ஞானவடிவினர் தாள் மலர்களைப் போற்றிப் பாடுவோமாக. "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்" என்ற அப்பர் வாக்கு பக்திப்பரவச நிலைக்கு இன்னும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

16

இயற்கையான மழைக் காட்சியில் இறைவியின் திருவுருவைக் கண்டு போற்றுகிறார் வாதவூர் அண்ணல். முகிலின் கார்நிறம்—தேவியின் கரியமேனி, இடிமுழக்கம்— சிலம்பொலி, மின்னல்—இடை, வானவில்—புருவம், மழை--அருள்-

"நம்தம்மை ஆள் உடையாள்,
தன்னில் பிரிவு இலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன் அருளே
என்னப் பொழியாய் மழை"

எம்மை ஆளுடையாளாகிய அம்பிகையின் பாகன் சிவனுருடைய அன்பர்க்கு முதலில் அருள் சுரந்து விட்டுப் பிறகு எங்களுக்கும் அருள் மழையாகப் பொழிவாயாக. அருளைப் பெறுதலில் மற்றவர்களை முன்னணியில் வைத்துத் தங்களைப் பின்னணியில் வைப்பது பக்தி படைத்தவர்களது பெரியல்பாகும்.

17

"நம் தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செம்கமலப் பொற் பாதம் தந்தருளும் சேவகனை
அம் கண் அரசை அடியோங்கட்கு ஆர் அமுதை
நங்கள் பெருமானைப் பாடு"

சிவ-அநுபூதி-தத்துவ விளக்கம்: பேரின்பம் நமக்கு யாண்டும் சொந்தம். நம் குற்றங்கள் களையப் பெறும்பொழுது அது அனுபூதியாகிறது. அதற்காக இறைவன் நம் வீடுகள் தோறும் எழுந்தருளுகிறுன். அடியவர்களாகிய நமக்கு அவன் நிறை அமிர்தம். சிவஞானம் என்னும் நலம் அவனிடத்திருந்து நமக்கு வருகிறது.

பக்தியும் ஞானமும் ஈண்டு ஒன்றித்து ஒளிர்கின்றன. அஞ்ஞானம் என்னும் குற்றம் அகலுமிடத்து ஜீவன் சிவசொரூபம் என்பது தெளிவாகின்றது. மேலும் தானே சத்-சித்-ஆனந்தம் என்பது முடிந்த அனுபூதி.

இந்த ஞாலத்தைத் தாங்கி இருப்பவன் ஈசன். ஈசனை அறிந்து கொள்ளாத ஜீவாத்மன் உலக இன்பங்களில் ஆசைவைத்து அவைகளோடு தளைக்கப்படுகிறான். ஆனால் ஈசனை அனுபூதியில் அறியுங்கால் அவன் பாசங்கள் அனைத்தினின்றும் விடுதலை பெறுகிறான். இயற்கை தருகிற இன்பத்துக்கு முடிவுண்டு. ஆதலால் அது துன்பமாக மாறுகிறது. இயற்கைக்கு அடிமைப் படுவது பந்தம். ஈசனைச் சார்வது விடுதலை.

18

"பெண் ஆகி ஆணாய் அலியாய்ப் பிறங்கு ஒளிசேர்
விண் ஆகி மண் ஆகி இத்தனையும் வேறாகிக்
கண் ஆர் அமுதமும்ஆய் நின்றான் கழல் பாடு"

வேற்றுமையில் ஒற்றுமை: ஆண் அலி ஆகிய அனைத்து மாயும், அவைகளுக்கு அப்பாலுமாய் உள்ள தனிப்பொருள் ஈசன். சூரியன் உதயமாகும்போது நட்சத்திரங்களின் ஒளியும், வேற்றுமையும் அகலுகின்றது. அதுபோன்று சிவஞானம் பெறும் பொழுது ஆண், பெண், விண், மண் என்ற பேதங்களெல்லாம் தனிப்பொருளான ஈசனில் ஒடுங்கிவிடுகின்றன. ஒன்றாயிருந்த பொருள் அஞ்ஞான இருளில் பலவாகத் தென்படுகின்றன. கயிற்றைப் பாம்பென்று கற்பனை செய்து கவலைப்படுகிறோம். ஞான ஒளி வந்ததும் வேற்றுமைகள் மறைகின்றன—கயிற்றைப் பாம்பென்று நினைத்த கவலையும் போய்விடுகிறது.

19

"எம்மை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம்கண் மற்று ஒன்றும் காணற்க"

"என்கடன் பணிசெய்து கிடப்பதே"

உனக்கே நாங்கள் பணிவிடை செய்வோம்—இரவும் பகலும் நாங்கள் உன்னையே யாண்டும் காண வேண்டும்.

"இங்கு இப்பரிசே எமக்கு எம்கோன் நல்குதியேல்
எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு"

இந்த வாய்ப்பை இறைவா நீ எங்களுக்குக் கொடுத்தருள் வாயாகில் பிறகு சூரியனே திசைமாறிப் போய்விடினும் அதைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை.

20

"போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்"

உயிர்களுக்குப் பிறப்பிடமாகவும், இன்பம் ஊட்டுபவனாகவும் இருக்கும் உன்னைப் போற்றுகிறோம். நாங்கள் மார்கழி நீர் ஆட அனுக்கிரகம் செய்த உன்னைப் போற்றுகிறோம்.

நிர்விகாரியாய்க் கிரியை அனைத்துக்கும் அப்பால் நிர்க்குண பிரம்மமாய் இருக்கும் பரமன் குணத்தோடு கூடியவனாய் வந்து பஞ்சகிருத்தியங்களைச் செய்கிறான். ஜீவர்கள் சிறு நிலையிலிருந்து பெருநிலைக்குப் பரிணமித்து உய்வு அடைதற்கு இப்பஞ்ச கிருத்தியங்கள் பயன்படுகின்றன.

ஜகத்துக்கும் ஜீவனுக்கும் தோற்றமும் ஒடுக்கமும் உண்டு. அவைகளுக்கு ஆதாரமாயிருக்கும் பரமன் தோன்றி மறையும் அவைகளுக்கு முன்பும், பின்பும் இருப்பது முறை. அழிவில் ஆனந்தமில்லை. நிலைபேற்றில் ஆனந்தமுண்டு. இறைவனை அடையும் ஜீவாத்மன் முக்தியாம் நிலைபேறு எய்துகிறான். ஆதலால் ஆங்கு ஆனந்தம் உண்டு. மேலும் பரமனே ஆனந்த சொரூபி. பரமனை அடைவதும், ஆனந்தத்தைப் பெறுவதும் ஒன்றேயாம்.

திரு அம்மானை

இது ஆனந்தக்களிப்பு—திருவண்ணாமலையில் அருளிச் செய்யப் பட்டது.

"தென்னன் பெருந்துறையான் அங்கணன் அந்தணனாய்
அறைகூவி வீடருளும் அங்கருணை வார்கழலே
பாடுதுங்காண் அம்மானாய்"

மூவுலகை ஈரடியால் அளந்த திருமாலும் காணாத திருவடிகளைப் பூமியில் வைத்துத் தரத்தில் குறைந்த என்னை இறைவன் ஆட்கொண்டான். ஞானக்கண்ணுடைய அந்தணன் அவன். அரிகருணையுடைய சிவபெருமான் என்னை வலியக் கூவியழைத்து வீடு பேறு அளித்தருளினன். அவனைக் குறித்து நாம் பாடி அம்மானை விளையாடுவோமாக.

(தென்னன்=தென்+நன்= அழகும் நன்மையும் வாய்ந்த தென்னாட்டை உடையவன், தென்னை மரங்களையுடைய நாடு என்றும் பொருள்படும்)

2

"பேராளன் பிச்சேற்றி வாரா வழியருளி வந்துஎன் உளம் புகுந்த
பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய்"

மனோநாசம் அடைந்தவர்க்கே பரமன் காட்சி கிட்டுகிறது. என் உள்ளத்தில் புகுந்து, அருள் பித்தத்தை வளர்த்து, முக்தி நெறியில் போகும்படி அருள்புரிந்த கருணைக்கடல் அவன்.

3

"சிந்தனையை வந்துருக்கும் சீர் ஆர் பெருந்துறையான்
பந்தம் பறிய பரிமேல் கொண்டான் தந்த, அந்தமிலா ஆனந்தப்"

என் சிந்தனையை உருக்கி, எனது பிறவித் தளையைப் போக்க அவன் குதிரை மேல் வந்து பேரானந்தம் நல்கினான்.

4

தான் வந்து நாயேனைத் தாய் போல் தலையளித்திட்டு
தேன் வந்து, அமுதின் தெளிவின் ஒளிவந்த வார்கழலே"

"தேவர்களும் காணாத தேவதேவன் ஆகிய நீயே தாய்போல் வலியவந்து எனக்குப் பேரருள் புரிந்தனை. ஆனந்தம், அமிர்தம், அருட்ஜோதியாய் மிளிரும் உன் பெருமையைப் பாடுவோமாக."

5

"கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை,பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித்தன் கருணை, வெள்ளத்தழுத்தி வினைகடிந்த வேதியன்"

பரதத்துவத்தைக் கல்லாத மனதையுடைய நான் மிக அற்பனானேன். அருள் பித்தைக் கிளப்பி என்னைப் பக்குவப்படுத்தினான் இறைவன். அவனது கருணைக் கடலில் என்னை மூழ்கச் செய்து வினையை அகற்றிய பரமஞானி அவன்; சிற்றம்பலத்தில் சித் ஆகாச சொரூபியாக உள்ளவன் அவனே.

காந்தத்தைச் சார்ந்த இரும்பு தானே காந்தமாகிறது. அங்ஙனம் பரத்தைச் சார்ந்த மனது ஜட நிலையை விட்டொழித்துச் சேதனமாகிறது.

6

"காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டித்
தாள் தாமரை காட்டித் தன்கருணைத் தேன் காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடு எய்த ஆண்டவா"

ஊனக் கண்ணுக்கு எட்டாத அவன் சொரூபத்தை ஞானக் கண் கொடுத்து அவன் காட்டியருளினன். அது பரமானந்தம் என்னும் தேன். மாயப் பிரபஞ்ச வாழ்க்கையில் இருப்பவர்க்கு முக்திநிலை விளங்காது.

உறங்குபவன் கனவில் அடியுண்டு கவலைப்பட்டாலும், விழித்தெழுந்ததும் துன்புறுவதில்லை. இங்ஙனம் மனிதனுக்குத் தன் சொரூப ஞானம் உதயமாகுங்கால் ஜனன மரணம் என்ற அஞ்ஞான அழுக்கினின்று நித்திய சுத்தனாக மாற்றப் பெறுகிறான். ஆகையால்தான் பரிசுத்தப்படுத்துபவைகளுள் ஞானத்துக்கு நிகரானது ஒன்றுமில்லை. முறையான ஆத்ம சாதகனுக்கு வாழ்க்கையே ஒரு ஞான யாகம்.

7

இப்பாடல் பிரம்ம காயத்ரீ மந்திரத்திற்கு நிகரான கருத்தாழமும் பெருமையும் உடையது:

ஓயாதே உள்குவார் உள்இருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நம்தம்மை ஆட்கொண்ட நாயகனை
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானை

பிரம்ம காயத்ரீ மந்திரம்: (இந்துமத தேசியப் பிரார்த்தனை)
ஓம் பூ: புவ:ஸ்வ; ஓம் தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீ மஹி!, தியோ யோந; ப்ரசோதயத்
(—ரிக்வேத ஸம்ஹிதை 3-62-10)

ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒரு தனி காயத்ரீயிருக்கிறது எனினும் இது எல்லா மூர்த்திகளுக்கும் பொதுவாயுள்ள

காயத்ரியாகும். பல்லாயிரம் ஆண்டுகளாகப் பெரும்பான்மையோர் ஜபித்துவந்த மந்திரம் இதுவாகும்.

அம்மானைப்பாடல் கருத்தும், காயத்ரிக் கருத்தும் ஒன்றே: இடையறாது சிந்திக்குமளவு அவன் சொரூபம் விளங்கும். அப்படி உபாசிக்காதவர்களுக்கு அவன் தூரத்தில் இருப்பவனாகத் தென்படுகிறான். எங்கும் வியாபகமாயுள்ள அறிவுப்பொருள் அவன். உள்ளும் புறமும் இனிது இருந்து அவன் உயிர்களைப் பக்குவப்படுத்திக் கொண்டே இருக்கிறான். யாண்டும் சிவசக்தியாயிருந்து அவன் ஐம்பொறிகளுக்குப் புலனாகின்றான். நமது பக்குவத்துக்கு ஏற்ப அவன் நமக்குத் தலைவனாயிருப்பது விளங்குகிறது. அவைகளுக்கெல்லாம் மேலாக அவன் எப்பொழுதும் தாயாயிருந்து பரிவுடன் நம்மைப் பேணி வருகிறான். ஏழு ஞானப் படித்தரங்களில் இருக்கும் உலகனைத்தும் ஆனவனாக, ஆனவற்றை அள்பவனும் அவனே. சகுணப் பிரம்மம், அவனது செயல், ஜீவாத்மாவை அவன் பக்குவப்படுத்துதல் ஆகிய இவை யாவும் இந்த ஒரு பாடலில் அடங்கியிருக்கின்றன.

8

கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலிகொண்டு, அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்

அதீத வஸ்துவான பரம்பொருள் தன் பக்தன் பொருட்டுப் பிரசித்திபெற்ற மதுரையில் கூலிக்கு மண் சுமந்தான், பிரம்பால் அடியுண்டு முதுகில் புண்பட்டான்.

கடலையணுகும் நதி கடலின் தன்மையைப் பெறுகிறது. பெறுகிறது. நிர்க்குண பிரம்மத்தில் லயமாதற்கு முன்பு ஞானி ஜகத்திலுள்ள வடிவங்களையெல்லாம் ஈசுவர சொரூபமாகப் பார்க்கிறான். அவனன்றி ஒரணுவும் அசைவதில்லை. அடிப்பவனும் அடிபடுபவனும் அவனேயாம்.

9

"அண்டம் முதல் ஆயினன் அந்தம் இலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழ அடியார்க்கு ஈந்தருளும், பராபரன்"

அண்டத்திற்கு மூல காரணன் அவன். பழைய முறைப்படியே பழமையாகிய தொண்டருக்குக் கொடுத்தருள்வான் இறைவன். பரமனை அடைவதும், பேரானந்தத்தைப் பெறுவதும் ஒன்றே.

10

"தண் ஆர் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானை
அண்ணாமலையானைப் பாடுதுங்காண் அம்மானை"

தகைசான்ற தமிழ்நாட்டில் தீந்தமிழ் வளர்ச்சிக்கு மூல அறிவாயிருப்பவன் சிவன். தாய்ப்பால் அந்தந்தச் சேய்க்கு முற்றிலும் ஒத்திருப்பது போன்று பரமனை அறிந்து கொள்ளுதற்கு அவரவர் தாய்மொழி துவக்கத்தில் நன்கு உதவுகிறது.

11

தப்பாமே தாள் அடைந்தார் நெஞ்சு உருக்கும்
தன்மையினன்
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள் இருக்கும்
அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்

"அப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த
அப்பு ஆர்சடை அப்பன் ஆனந்த வார்கழலே"

என்று அவனிடத்துத் தங்களை ஒப்படைக்கின்றவர்கள் உள்ளத்தில் அவன் மிளிர்கின்றான். இவை யாவையும் கடந்தவனாகவும் அவன் இருக்கிறான்.

தன்னைத் தான் விரும்புவது உயிர்களின் இயல்பு. பின்பு, தன் உயிர்க்கு உயிர் இறைவன் என்பதை சுவானுபூதியில் அறிபவன் ஞானி. ஆகையால் அவன் இறைவனிடத்து அத்தகைய உறவு பூணுகிறான்.

12

"மெய்ப்பொருள் கண் தோற்றமாய் மெய்யே நிலை பேறாய்
எப்பொருட்கும் தானேஆய் யாவைக்கும் வீடு ஆகும்
அப்பொருளாம் நம்சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய்."

நித்தியவஸ்து தானே என்பதை உறுதிப்படுத்தித் தான் சாசுவதமாய் இருப்பதையும் தெளிவுபடுத்தினான். தோற்றமும் மோட்சமும் தன்னகத்தே என்றும் காட்டியுள்ளான்.

13

சேர்ந்தறியாக்
கையானை எங்கும் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை, அல்லாதார்க்கு அல்லாத வேதியனை
ஐயாறு அமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய்

நெருங்கிப் பழகுபவரும் அறியமுடியாதவாறு இயற்கை நடைமுறைத் திட்டத்தை யுடையவனே, அன்பர்க்கு மெய்ப் பொருளாயிருப்பவனே, அன்பர் அல்லாதார்க்கு இருந்தும் இல்லாதவன் போன்றவனைப் பாடுவோமாக. பக்தி பண்ணுதவர் களுக்குப் "பொய்வளர் நெஞ்சினர் காணுத காட்சி"யாக அவன் இருக்கிறுன்.

14

"தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்து இனிய
கோன்அவன் போல்வந்து என்னைத் தன்தொழும்பில்
கொண்டருளும்
வானவன்"

அமிர்த சொரூப ஆனந்தத்தை வழங்கி என்னை உனக்குத் தொண்டனுக்கிஞய். பிறவிப்பிணியில் அலுத்துப்போன என்னை இம்மானுடப் பிறவியில் அருள் தாகத்துக்கு உட்படுத்திஞய்.

15

"இந்திரனைத் தோள் நெரித்திட்டு எச்சன் தலை அரிந்து
அந்தரமே செல்லும் அவர் கதிரோன் பல்தகர்த்து"

தக்கன் யாகத்திலே சிவனுர்க்கு அழைப்பு இல்லை. இறைவனை புறக்கணித்துச் செய்யும் செயல் எவ்வளவு பெரியதாயிருந்தா லும் அது அமங்களமாய் முடியும்.

16

"ஊன் ஆய் உயிராய் உணர்வாய் என்உட்கலந்து
வானேர் அறியா வழியெமக்குத் தந்தருளும்
தேனர் மலர்க்கொன்றைச் சேவகனர்"

என்னுள் ஆனந்தமாய் அவன் வீற்றிருந்து முக்தி மார்க்கத்தை யும் காட்டியருளினன்.

17

காதலன்—காதலி மார்க்கமாகப் பக்தி வைராக்கிய மகாபாவம் ஈண்டு விளக்கப்படுகிறது.

ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன் உள் உருகித்
தேடுவேன் தேடிச்சிவன் கழலே சிந்திப்பேன்

18

"எளிவந்து இருந்து இரங்கி எண்அரிய இன் அருளால்
ஒளிவந்து என் உள்ளததின் உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணன்"

எளிதாக வந்திருந்து இரங்கி எனக்குப் பேரருள் தந்தவன் சிவன். தேஜோமயனாய் என் உள்ளத்தில் திகழ்ந்தவன் அப் பெருமானே யாவன்.

19

தென் ஆனைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்னப்பன் என்பார்கட்கு இன் அமுதை

தன்னை அப்பன் என்று அழைப்பவர்க்கு அமிர்தம் போன்ற வன் இறைவன்.

20

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன் அடியார்
குற்றங்கள் நீக்கிக் குணம்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வு அறுப்பான் தொல்புகழே
பற்றி இப்பாசத்தைப் பற்று அற நாம் பற்றுவான்
பற்றிய பேர் ஆனந்தம் பாடுதும்காண் அம்மானாய்

நம்பெருமானது பெற்றி இத்தகையதென்று அன்பர் அல்லாது பிறர் அறிந்துகொள்ளமாட்டார். அவன் அடியார் களின் குறை களைந்து குணம் பாராட்டி அவர்களை ஏற்றுக் கொண்டான். உறவினர்களது தொடர்பு என்னும் பந்த பாசத்தை அறுத்தான். அந்தப் பரமனைப் பற்றிப்பிடித்து உலக பாசத்தை அகற்றுவோம்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" —குறள்

திருப்பொற் சுண்ணம்

உலகின் நடைமுறையே தில்லைத் திருநடனம். உலகம் முழுதும் உரல். மகாமேரு மலை உலக்கை. மங்களமாயுள்ள சில சான்னித்தியத்தைத் தோற்றுவிப்பது அங்கு நடைபெறும் நிகழ்ச்சி. பொற்சுண்ணம் இடிப்பது இதற்கு ஒப்பானது.

ஆனந்த மனோலயம்: தில்லையில் அருளைச் செய்யப்பட்டது, இறைவனை நீராட்டுதற்காகத் திருப்பொற்சுண்ணம் இடிக்கப்படுகிறது. பலவகை மணப்பொருள்களை உரலில் இட்டு இடிக்கப்படுவது பொற்சுண்ணம். இது பொன்போன்ற நிறமுடையது. பொன்னும் சிறிது இதில் சேர்க்கப்படுகிறது. திருமஞ்சனத்துக்காக இது உபயோகிக்கப்படுகிறது.

முத்து நற்தாமம் பூமாலை தூக்கி முளைகுடந்தூபநற்தீபம் வைமின்
அத்தன் ஐயாறன் அம்மானைப்பாடி ஆடப்பொற்சுண்ணம் இடித்து நாமே

மங்கள காரியங்கள் நிகழும்பொழுது தானியங்களை முளைக்கச் செய்தல், தூபகலசம் ஏந்துதல், சாமரை வீசுதல் முதலிய கிரியைகள் செய்தல். மரபு, தந்தையாகிய இறைவனுக்கு ஏற்பட உள்ள திருமஞ்சனம் பொருட்டு திருப்பொற்சுண்ணம் இடிக்கப் படுகின்றது.

...எம் கோன், எம்கூத்தன்
தேவியும்தானும் வந்து எம்மை ஆளச்
செம்பொன் செய் சுண்ணம் இடுத்தும்நாமே

எம்இறைவனும், எம் கூத்தனுமாகிய சிவபெருமான், தேவியும் தானுமாக எழுந்தருளி எம்மை ஆளும் பொருட்டுச் செம்பொன் நிறமுள்ள கதம்பப் பொடியை நாம் இடிப்போமாக.

எழில்சுடர் வைத்துக் கொடி எடுமின்
ஆழியான் நாதன், நல்வேலன் தாதை
எம்தரம் ஆள் உமையாள் கொழுநற்கு

விஷ்ணுவுக்கு நாயகன், முருகனுக்குத் தந்தை, எம்போன்றவர்களை ஆண்டருள்கின்ற உமாதேவிக்குக் கணவன். இத்தகைய பரமனுக்குப் பொருந்திய பொற்சுண்ணம் இடிப்போமாக

நேசம் உடைய அடியவர்கள் நின்று நிலாவுக என்று வாழ்த்தித்,
தேசம் எல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித் திரு ஏகம்பன்
செம்பொன் கோயில் பாடி

அன்புள்ள அடியார்கள் நிலைத்திருந்து வாழ்க என்று வாழ்த்தும் அதே நேரத்தில், திருஏகம்பமுடையானது திருக்கோயிலைப் புகழ்ந்து பாடுமாறு பணிக்கிறார் மணிவாசகர்,

அறுகு எடுப்பார் அயனும் அரியும், அன்றி மற்று
இந்திரனோடு அமரர்
நறுமுறு தேவர் கணங்கள் எல்லாம் நம்மில் பின்பு
அல்லது எடுக்க ஒட்டோம்

பிரம்மாவும் விஷ்ணுவும் குடவிளக்கு ஏந்துவார்களே அல்லாமல், மற்ற தேவர்கள் எல்லாரும் நமக்குப் பின்பே அன்றி முன்பு விளக்கு ஏந்த நாம் இடம் தரோம்.

உலக்கை பல ஓச்சுவார் பெரியோர்
உலகம் எலாம் உரல் போதாது என்றே

இறைவனுக்குப் பொற்சுண்ணம் இடித்தல் என்னும் சிவ சேவையில் கலந்துகொள்ள எண்ணிறந்த பெரியவர்கள் வந்து கூடினர்கள். அவர்கள் எல்லாரும் உயர்த்திய உலக்கைகளுக்கு இவ்வுலகம் என்னும் உரல் போதவில்லை. பிரேமை பக்தியை விளக்குதற்கு இப்பிரபஞ்சம் என்னும் அரங்கம் போதாது.

சூடகம் தோள்வளை ஆர்ப்ப, தொண்டர்குழாம் எழுந்து
ஆர்ப்ப
நாடவர் நம்தம்மை ஆர்ப்ப, நாமும் அவர் தமை ஆர்ப்ப

கைவளை, தோள்வளை முதலியன ஒலிக்க அன்பர்கள் பெருங் கூட்டமாய் எழுந்து ஆனந்தமாக ஆரவாரிக்கின்றனர். உலகத்தவர் இவையெல்லாம் பயன்படாச் செயல் என்று ஏளனம் பண்ணுகின்றனர். அவர்கள் ஏளனம் பண்ணுவது அறிவீனம் என்று நாம் ஒலமிடுகின்றோம்.

"வையகமெல்லாம் உரலதாக மாமேரு என்னும் உலக்கை
நாட்டி"

உலகம் முழுதும் உரல். மாமேருமலை உலக்கை. மங்களமாயுள்ள சிவசான்னித்தியத்தைத் தோற்றுவிப்பது அங்கு நடைபெறும் நிகழ்ச்சியாகும். நாம் பொற்சுண்ணம் இடிப்பது அதற்கு ஒப்பானது.

உலகின் நடைமுறையே தில்லைத் திருநடனம் எனப்படுகிறது. அதில் யாண்டும் ஒழுங்குப்பாடு உண்டு. உரல் மயமாயிருப்பது சக்தி. மெய்ப்பொருளாகிய மஞ்சள் மயமாயிருப்பதும், மகாமேரு மயமாயிருப்பதும் சிவம். அண்டமெங்குமுள்ள இப்பேர் அமைப்பு பிண்டமாகிய மானுட சரீரத்திலும் இருக்கிறது.

சிவசக்தி தத்துவ விளக்கம்

"பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யை"

என்பது இறைவன் பண்பு. "எம்பிரான் இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன், மகன், தகப்பன், தமையன்"

அஞ்ஞான இருள் என்று சொல்லப்படுவதும் பிறவிப் பெருங் கடல் என்பதும் ஒன்றே. கால சொரூபமாயிருப்பது பிரபஞ்ச வாழ்வு. அது அஞ்ஞானத்தில் உளது. காலத்தைக் கடந்தது சிவ சொரூபம். ஆதலால் சிவஞானம் இரவு பகலற்றது.

உண்மையில் சக்தியும் சிவமும் அத்வைதவஸ்து, இரண்டும் அல்லாத தனிப்பொருள். இருவராசப் பாகுபடுத்தும்பொழுது அவர்களுக்கிடையில் முரண்படுவன போன்ற வெவ்வேறு முறைமைகளைச் சூட்டலாம். பராசக்தியினின்று சிவசைதன்யம் தோன்றுவதால் சிவம் சக்திக்கு மகன் ஆகிறான். சக்திக்குப் பிறப்பிடம் சிவமாயிருப்பதால் அவன் அவளுக்குத் தகப்பன் ஆகிறான். தோற்றத்துக்கு வருகிற சக்திக்கு முன்னதாகவே சிவம் இருப்பதால் அவன் அவளுக்கு மூத்த சகோதரன் ஆகிறான்.

சிவன் என்னும் சொல் மங்களம் எனப் பொருள்படுகிறது. சிவனரது மழுவும், திரிசூலமும், அவரது சம்மாரத்தொழிலின் சின்னம்—அழிவின் வாயிலாக உலகின் புதுமை காப்பற்றப் படுகிறது.

"பாதியும்ஆய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமும்ஆய் வீடும் ஆயினார்க்கு"

முரண்பாடுகள் அனைத்தும் ஈசனிடம் இடம்பெறுகின்றன. வேதம் இவ்வுலகத்தை விளக்குகிறது. ஞானவேள்வி இவ் வுலகத்தை துறக்கச் செய்கிறது.

திருக்கோத்தும்பி

சிவனோடு ஐக்கியம்

"ஊன் ஆர் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்"

தாவர,மிருக உலகில் ஒருயிர் மற்றோர் உயிரின் உடலைத் தனக்கு உணவாக்குவதன் மூலமாகவே வாழ்க்கையை நிறைவேற்றுவது இயற்கைத் திட்டம்.

"பித்த உலகிற் பிறப்போடு இறப்பென்னுஞ், சித்த விகாரக்
கலக்கம் தெளிவித்த"

மனதில் தோன்றும் உபாதிகளே பிறவிக்கு வித்து ஆகின்றன. அவைகளை ஒதுக்குங்கால் சுத்த சைதன்யம் எஞ்சி நிற்கிறது. யோகம் என்பது சித்த விருத்திகளைத் துடைத்துத் தள்ளுதலாம். கருவி, கரணங்களைக் கடப்பவர்க்கே சிவசொரூபம் வாய்க்கிறது.

வேதம்: அபரவித்தை: பண்டை நான்மறை மட்டும் வேதமல்ல. நவீன ரசாயன சாஸ்திரம் உட்பட இயற்கை நூல் எல்லாம் சேர்ந்து வேதம் எனப்படுகிறது. நலம் கேடு ஆகிய இரண்டையும் பெறுதற்கான வழிகளை வேதம் விளக்குகிறது. இது எல்லாம் அபரவித்தை. பிரம்ம ஞானம் ஒன்றே பரவித்தை. எழுதிவைத்த நூலைப்படிப்பவன் வேதவித்து ஆகான். பிரபஞ்ச நடைமுறையை உள்ளபடி அறிந்து கொள்பவன் மட்டுமே வேதத்தை அறிபவன் ஆகிறான்.

"நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேனது உள்ளம் பிழைபொறுக்கும் பெருமையனை"

"நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்தஎன்தாதை"

தகுதியற்றவனைத் தகுதியுற்றவனுக்குவது கருணை.

திருத்தெள்ளேணம்

(ஒருவகை மகளிர் விளையாட்டு)

"ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றும் இலார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ"

சஹஸ்ர நாமம்—1000 திருநாம வழிபாடு.

"திருஆர் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின் யாவரையும் கண்டதில்லை"

பிறவிப்பிணியைத் தாண்டியவர்க்குப் பிரபஞ்சம் முழுதும் பரமனாகக் காட்சி கொடுக்கிறது.

"சிவம் வந்து நம்மை உருக்கும் பணிகொள்ளுமென்பது கேட்டு உலகமெலாம் சிரிக்கும்"

ஜீவ போதத்துக்குப் போக்குவரவு உண்டு. சிவபோதமோ புதிதாகப் பெறப்படுவது போன்று தென்படினும் அது சாசுவதமானது. கிணற்றுநீர், ஆற்றுநீர், சாக்கடைநீர், கடல்நீர் ஆகியவைகளுக்கிடையில் சேர்க்கையால் வேற்றுமையுண்டு. அவையாவும் ஆவியாகமாறி வானத்தில் போய்ப் பிறகு மழையாக வரும்போது வேற்றுமை இல்லை. அங்ஙனம் உபாதிகளை

(முக்குணம்) முன்னிட்டு ஜீவர்களுக்கிடையில் வேற்றுமையுண்டு. அவர்களின் உபாதிகளை ஒதுக்கிவிடுமிடத்துச் சுத்த சைதன்யம் எஞ்சியிருக்கிறது. பரமாத்மன் எப்பொழுதுமே சுத்த சைதன்யம். ஜீவாத்மன் உபாதிகளைக் களைந்துவிட்டு சுத்த சைதன்யன் ஆகும் பொழுது பரமாத்மாவில் ஒன்றுபடுகிறான்.

"உரை ஆட, உள்ஒளி ஆட, கண்ணீர்த் திரை ஆட"

இது பக்திப்பரவச நிலையின் விளக்கம்.

"மயல் மாண்டு மற்றுஉள வாசகம் மாண்டு என்னுடைய செயல் மாண்டு"

வேற்றார், உற்றார் என்னும் வேற்றுமைகள் ஒழிந்து, அவன் புகழன்றி வேறு பேச்சு ஒழிந்தது, என் செயல் என்பதெல்லாம் அவன் செயலாய் மாறிவிட்டது. அறிந்தாலும், அறியாவிட்டாலும் நடப்பதெல்லாம் ஈசன் செயல்—இதை உணர்வில் தெளிவது யோகம்.

இதன் விளக்கமே கீதையின் உபதேசம். அதைச் செய்வேன், இதைச் செய்யமாட்டேன் என்று இச்சா சுதந்திரம் பாராட்டுவது ஜீவர்களின் செயல். அதனால் மாயாசக்தியில் கட்டுண்டு செயல் புரிகின்றனர். விதவிதமான கருவிகளைக் கொண்டு ஈசன் தன் செயலைச் செய்துகொள்கிறான் என்ற எண்ணத்துடன் கர்மம் செய்தலே அதை முறையாகக் கையாளுவதாகும்.

"ஊன் கெட்டு,உயிர் கெட்டு,உணர்வு கெட்டு என் உள்ளமும் போய்

"நான் கெட்டவாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ"

நான் என்னும் ஜீவதத்துவம் கெடுதலே முத்திநிலைக்கு அறிகுறி. ஜீவவியக்தியைக் கலைத்துத் தள்ளுவதே வாழ்வின் முடிந்த குறிக்கோள் ஆகிறது. முறையான சாஸ்திர ஆராய்ச்சியின் வாயிலாக இவ்வுண்மையை அறிந்து இதில் தீவிரமாக ஈடுபடுகிறவர்களே துறவிகளாகின்றனர். துறவும் திருத்தொண்டும் கூடிய வாழ்வின் வாயிலாக அவர்களின் கருவி கரணங்கள் யாவும் புனிதமடைகின்றன. ஞானக்கினியில் அவைகள் நிரந்தரமாக நாசமடைகின்றன. இவ்வாறு ஆத்மா பரமாத்மாவில் ஒன்றுபடுவதே பெறுதற்கரிய பேறு.

இயற்கையின் ஒழுங்கான நடைமுறையே சக்தியின் ஆட்சி—தர்ம அனுஷ்டானமே தெய்வ வழிபாடு. தர்மத்தில் நிலைபெற்றிருப்பவனுக்குப் பிரபஞ்சம் முழுதும் அம்பிகை சொரூப

மாகக் காட்சி கொடுக்கிறது. இந்தக் காட்சியைக் கடந்து மேலே போவது தியாகம். திருநீலகண்டம் சிவதியாகத்தின் சின்னம். தியாகம் பண்ணியவர் சுத்த சிவத்தை அடைகின்றனர். சக்தி உபாசனையானது சிவ உபாசனையாகப் பரிணமித்து, ஜீவனை முத்தியில் கொண்டு சேர்க்கிறது.

திருச்சாழல்

(ஒருவித மகளிர் விளையாட்டு)

சிவனுடைய காருண்யம்: தடையும் தடைக்கு ஏற்ற விடையும் பாடுவது இதில் இடம்பெறுகிறது. சிவதத்துவங்கள் பல இதில் அடங்கியுள்ளன.

எது புத்த மதம், அதன் உயிர்த் தத்துவம்

(Buddhism is agnotic but it does not deny or accept God.)

கடவுள் உண்டு என்றோ, இல்லை என்றோ வாதிப்பது புத்த மதக் கொள்கையன்று. அஞ்ஞேய வாதம் புத்தமதமாகிறது. அதாவது கடவுளைப்பற்றி மனிதனுக்கு ஒன்றும் தெரியாது. அதனால் அவனுக்குக் குறையொன்றுமில்லை. தன்னைத் தானே திருத்தியமைத்துக்கொள்ள மனிதனுக்கு இயலும். அதற்குச் சீலம் முற்றிலும் அவசியமானது. அறிவுக்கு எட்டாத ஒரு பொருள் இருக்கிறது என்றோ இல்லையென்றோ வாதாடி வீண் பொழுது போக்காதே. இது புத்த மதம்.

"பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காண் ஏடீ"

பூசுவது வெண்ணீறு, அணிவது சீறுகிற பாம்பு, பேசுவது வேதம். தெய்வம் என்னும் ஒரு பொருளுக்கு இவையெல்லாம் பொருந்துமா?

இயற்கை இறைவனது உண்மையான சொரூபம். அவரை ஒரு மனிதனைச் சமைத்து, நீறு பூசுவித்து, பாம்பு அணிவித்து வேதம் ஓதப்பண்ணியது மனிதனது கற்பனை. ஆயினும் இந்தக் கற்பனையின் மூலம் தத்துவம் மிளிர்கிறது.

சாம்பல் பரம்பொருளின் அழியாத் தன்மையை விளக்கும் சின்னம்.

ஈசனுடைய படைப்பில் இனியவை இடம்பெற்றிருப்பது போன்று, இன்னாதவைகளும் இடம்பெற்றிருக்கின்றன. உயிர்களின் முன்னேற்றத்துக்கு இன்னாதவை எதிர்மறையில் தூண்டு

தல் போடுகின்றன. எனவே அவைகள் முற்றிலும் தேவை. சிவன் பாம்பை அணிந்திருப்பதன் உட்கருத்து இதுவேயாகும்.

பிரபஞ்சம் முழுவதும் வேத சொரூபம்—அது வித்யா சொரூபம். சிவனூர் வேதம் ஓதிக்கொண்டிருக்கிறார் என்பதன் பொருள் இதுவே. சிவ சைதன்யம் அனைத்திலும் ஊடுருவிப் பாய்ந்திருப்பதே சிவத்தாண்டவம். அது இல்லையெனில் பிரபஞ்சமே சூன்யமாய்விடும்.

"கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி, தந்தையிலி தான் தனியன் காணேடீ"

அழியும் பிரபஞ்சத்தை உணர்த்துவது சுடுகாடு. ஆணவத்தை அழித்ததற்கு அறிகுறி கொல்புலித்தோல். நிலையற்ற உலகில் எதையும் சொந்தம் பாராட்டாதே என்னும் கோட்பாட்டைத் தன் வடிவத்தில் வைத்துள்ளான் சிவன்.

பிரபஞ்ச வாழ்க்கையில் தேவர்கள் உட்பட எல்லாருக்குமே துன்பம் என்னும் தண்டனை வந்தமைகிறது. துன்பத்தினின்று விடுபடுதற் பொருட்டு அவர்கள் மேல்நிலை எய்துகின்றனர். இறைவனுடைய அருள் இங்ஙனம் மறக்கருணையாக வந்தமைகிறது. பரநிலை எய்தும்வரை துக்கமுண்டு என்பதை முக்கண்ணன் உயிர்களுக்குச் சிக்கலைக் கொடுத்து அறிவுறுத்துகிறான்.

தக்கன் யாகத்தில் அவனது தலைபோனது; ஆட்டுத்தலை வந்தது: அறநெறியையும், இறைவன் அருளையும் புறக்கணித்துவிட்டுப் பல ஆடம்பரமான காரியங்கள் செய்யப்படுகின்றன. கடவுளின் பெருந்திட்டத்திற்கு மாறாகச் செய்வதெல்லாம் அமங்களமாக முடியும். ஜீவபோதம் அல்லது அகங்காரம் படைத்தவர்கள் பரம் பொருளை முழுதும் அறியமாட்டார்கள்.

"தென்பால் உகந்து ஆடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ"

சிவமும் சக்தியும் ஒன்று. அந்த ஒரே பராசக்தியானது பிரபஞ்ச நடைமுறையில் பல சக்திகளாகப் பரிணமிக்கிறது. சிவம் சக்தியாகப் பரிணமிக்காவிட்டால் ஜகத்தும், ஜீவர்களும் தோற்றத்துக்கு வரமாட்டார்கள்.

சித்தத்தைச் சிவன்பால் வைத்து, சரீரத்தைச் சவம்போன்று கருதி அதைப் போகத்துக்குப் புறம்பாக்கவேண்டும். அப்பொழுது தவம் இனிது நிறைவேறுகிறது. ஞானபிரசாதம் என்பது தெளிந்து தேங்கிய தடாகம் போன்று விகாரப்படாத தூய அறிவு நிலையாம்.

அத்தகைய சலனமற்ற பேரறிவே தியானத்துக்குத் தகுதியுடையது.

"அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவனென்று நண்ணும் அதுஎன் ஏடீ"

அண்டங்களை ஒழுங்காக நடாத்தி வைப்பது அவனது கூத்து. அதற்கிடையில் "தலைது" என்று உரிமை பாராட்டாது இருப்பது அவனது மகிமை. மக்கள் அவன்போன்று இருக்கவேண்டுமென்பது கோட்பாடு.

ஆலின் கீழிருந்து அறம் உரைத்தவன் சிவன், ஆலமரம் இயற்கையின் சின்னம். இறைவன் அதன்கீழ் இருப்பதால் இயற்கையும் இறைவனும் ஒன்று என்பது கோட்பாடு. இதுவே அர்த்தநாரீஸ்வர மெனவும் இயம்பப்படுகிறது.

அறம்—பொருள்—இன்பம்—வீடு

தர்மம்—அர்த்தம்—காமம்—மோக்ஷம்

ஆகிய நான்கு புருஷார்த்தங்களையும் நிலைநாட்டும் முறையில் இக்கோலம் அமைந்திருக்கிறது. பாம்பின் பல்லிலே விஷம் இருப்பது போல பிரபஞ்சத்திலுள்ள நலம் கேடு அனைத்தும் அவன் மயம். இந்நிலையில் விஷம் அவனுக்கு அமிர்தம்.

திருப்பூவல்லி

மாயா விஷயம் நீக்குதல்

"இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்து ஒழிந்தேன்',

விழித்துக் கொண்டவுடன் கனவில் சொந்தம் பாராட்டிய வைகளிடத்தில் வைத்திருந்த பற்றுதல் அறவே அகலுகிறது. அங்ஙனம் சிவஞானம் வந்ததும் மாயா காரியங்களாகிய உலகப் பற்றுக்களெல்லாம் தாமே மறைந்து போகின்றன.

இருதய கமலத்தில் உள்ள பரமானந்தப் பரமனை சுவானுபூதியில் உணருங்கால் உலகப்பற்றுக்களெல்லாம் தாமே பறந்தோடி விடுகின்றன. பிராரப்த கர்மம் எஞ்சியிருக்கிறது எனினும் அது உடலுக்கு உரியதேயொழிய உள்ளத்தைத் தொடுவதில்லை. ஜீவாத்மாக்களைப் பக்குவப்படுத்துதற் பொருட்டு சிவனார் வேள்வித்தீ, சுடலைத்தீ, ஞானத்தீ ஆகிய மூன்று நெருப்புக்களை நிலைபெற்றிருக்கச் செய்துள்ளார். மும்மூர்த்திகளாயும், அப்பாலும் உள்ள பரமன் முப்பாழ் ஆகிய மூன்று குணங்களை

—6—

அழிக்கின்றபோது நனவு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று அவஸ்தைகளும் அடிபட்டுப் போகின்றன.

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்த வைத்து
இணங்கத் தன்சீரடியார் கூட்டமும் வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணம் கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ

இந்திரியங்களும், நல்லார் இணக்கமும், அம்மையப்பன் மயமாய் உலகம் திகழ்வதும் ஆகிய எல்லாம் இறைவனுடைய மகிமைகளை ஏராளமாகப் போற்றுதல் பொருட்டேயாம். அண்டம் அனைத்தையும் ஆளவும், அழிக்கவும் வல்ல சிவன் தன் அன்பன் பொருட்டுப் பாண்டியனால் அடிபடவும் செய்கிறுன். அகங்காரம் என்னும் யானையை ஒழித்தவர்க்குப் பரமனிடம் பித்து அதிகரிக்கிறது.

திருவுந்தியார்

(உந்தி பறத்தல் என்பது ஒருவித விளையாட்டு)

ஞானவெற்றி

உய்யவல்லார் ஒரு மூவரைக் காவல் கொண்டு
எய்ய வல்லானுக்கே உந்தி பற
இளமுலை பங்கன் என்று உந்தி பற

பிழைக்க வல்லவராயிருந்த மூன்று அரக்கர்களையும் கயிலைக்கு துவாரபாலகராகச் செய்தான் சிவன். உமாதேவி சமேதன் முப்புரங்களாகிய நனவு, கனவு, (சுஷுப்தி) ஆழ்ந்த நித்திரை மூன்று அவஸ்தைகளை எரிக்க வல்லவன் இறைவன். பரபோதம் அடையப்பெற்றதும் இம்மூன்றும் மாயமாய் மறைந்து போகின்றன. இவைகளுக்கு மூல காரணங்களாகிய சத்வம் ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்கள் அழிவதில்லை. பிரகிருதி மய மாய் அவைகள் பரவஸ்துவுக்கு வாயில் காப்பாளராகக் கீழ்நிலையில் இருக்கின்றன.

மானிடசரீரமே ரதம். சிவஞானத்துக்குப் பிறகு அது பயனற்றதாகிறது. ஜீவாத்மன் அதில் ஊர்ந்து செல்பவன், புத்தி தேர்ஒட்டுபவன், மனம் பிடிகயிறு. இந்திரியங்களின் வாயிலாகவும், தேகத்தின் வாயிலாகவும் இன்பதுன்பங்களை அனுபவிப்பது மனது. தூய மழைநீர் சேற்றுநீர் ஆவது போன்று சுத்த சைதன்யம் அல்லது சுத்த சிவம் மனதோடு சேர்ந்து ஜீவாத்மா ஆகிறது. பிறவிப்பிணி மனதுக்கும், தேகத்துக்குமே உரியது'

ஆத்மாவுக்கு அல்ல. ஆத்மா யாண்டும் ஆனந்த சொரூபம். அனுகூலமான மனதில் ஆத்மாவின் ஆனந்தம் இன்பமாகப் பிரதிபலிக்கிறது. பிரதிகூலமான மனதில் அது துன்பமாகப் பிரதி பலிக்கிறது.

தக்கன் யாகத்தின் தத்துவம்: தக்கன் தலையையும், சரஸ்வதி மூக்கையும், பிரமன் ஒரு தலையையும், சூரியன் பல்லையும் இழந்தனர்.

"ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீபற"

அறத்துக்கும் இறைவன் அருளுக்கும், யோக நெறிக்கும் முற்றிலும் புறம்பாயிருக்கும் பெருமித போக வாழ்வுக்குத் தக்கனுடைய யாகம் என்று பெயர். அது மக்களை அலங்கோல மான அழிவில் கொண்டு சேர்க்கும். அதை முற்றிலும் சரிப்படுத்த முடியாது என்பதற்குத் தக்கன் ஆட்டுத்தலையைப் பெற்றது சான்றாகும். ஞான நெறியில் செல்வோர்க்கு இக்கேடுகள் விளைவதில்லை (படைப்புக் கடவுளின் ஞானம் வரம்புக்கு உட்பட்டது என்பதற்கு அமையப் பிரம்மாவின் ஒருதலை நீக்கப்பட்டது. சிவனுருக்கு ஐந்து தலை உண்டு).

தேரை நிறுத்தி மலை எடுத்தான் சிரம்
ஈர் ஐந்தும் இற்றஆறு உந்தீபற

இராவணன் மனோதத்துவத்துக்குப் புறச்சின்னமாகிறான். .பரம் பொருளை அறிய மனதுக்கு இயலாது என்பது இதன் பொருள்.

திருத்தோணோக்கம்

(ஒருவித விளையாட்டு)

பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே எனக்கருதிப்
பேய்த்தேர் முகக்கஉறும் பேதை குணம் ஆகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை அம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தா உன்சேவடி கூடும்வண்ணம் தோள் நோக்கம்

பிரபஞ்சம் கானல்நீர் போன்று பொய்யானது. கண்ணப்ப நாயனர் வரலாற்றின் பொருள். பிரபஞ்ச சுத்தி ஆனது புறப் பொருள்களில் இருப்பதை விட மேலாக மனநிலையில் இருப்பது என்பது ஈண்டு வெளிப்படை.

நல்பால் படுத்து என்னை நாடு அறியத் தான்இங்ஙன்
சொல் பாலது ஆனவா தோள்நோக்கம் ஆடாமோ

என்னை நல்லொழுக்கத்தில் நிலைத்திருக்கச் செய்து, தன்னை உலகத்தவர் அறிந்து கொள்ளும்படி சொல் ஓவியம் வரைய என்னை நியமித்துள்ளான்.

பரமனே பிரபஞ்சமாகத் தோன்றிக் கொண்டிருப்பதால் தன்னளவில் பிரபஞ்சம் சுத்தமானதே. மற்று அஞ்ஞானத்தால் அதில் அசுத்தத்தைச் சீவன் காண்கிறான். அஞ்ஞானம் என்னும் மலத்தை அகற்றுவது ஆத்ம சாதகனது குறிக்கோள்.

அடிப்படைச்சமய தத்துவம்: எதைச் செய்தாலும் அதைத் தெய்வ அர்ப்பனமாகச் செய்வதே சமய சாதனையாகிறது—தானம், தவம், தியானம், பூசை, நெய்வேத்தியம் என்று இங்ஙனம் வாழ்க்கையில் வந்து அமைந்துள்ள செயல்களெல்லாம் ஈசுவர ஆராதனையாகின்றது. அதனால் ஜீவபோதம் குறைந்து, பரபோதம் மேலிடும்போது எல்லாம் அவன் உடைமையே; எல்லாம் அவன் செயலே என்ற திருக்காட்சி அமையப் பெறுகிறது.

உரைமாண்ட உள்ளொளி உத்தமன் வந்து உளம்புகலும்
கரை மாண்ட காமம் பெரும் கடலைக் கடத்தலுமே
இரை மாண்ட இந்திரியப் பறவை இருந்து ஓடத்
துரை மாண்ட வாபாடித் தோள் நோக்கம் ஆடாமோ

ஜீவபோதம்: அவன் அருள் கிட்டியதும், ஆசை அகன்றது. இந்திரியப் பறவைகளோ விஷயங்களின்றிக் கெட்டொழிந்தன நான் என்னும் ஜீவபோதமும் போயிற்று.

மனதை அகண்டாகார விருத்தியில் செலுத்துவது பிரபஞ்சத்துக்கு அப்பாற் போவதற்கு உற்ற உபாயமாம். அகண்டத்தில் புலனுதற்கு ஒன்றுமில்லை. ஆதலால் பொறிகள் தாமாகவே அழிந்துபட்டுப் போகின்றன.

திருப்பொன்னூசல்

அருட் சுத்தி

சீர் ஆர் பவளம் கால் முத்தம் கயிறு ஆக
ஏர் ஆரும் பொன்பலகை ஏறிஇனி தமர்ந்து
நாராயணன் அறியா நாள்மலர்த்தாள் நாய் அடியேற்கு
ஊர் ஆகத் தந்தருளும் உத்தரகோச மங்கை
ஆர அமுதின் அருள் தாள் இணைபாடிப்
போர்ஆர் வேல் கண்டேவீர் பொன் ஊசல் ஆடாமோ

நமக்கு யாண்டும் இருப்பிடமாயிருக்கும் இறைவன் திருவடியைப் பாடுவோமாக. பக்தன் பக்குவமாவது ஆதியந்தமில்லாத பரமனோடு ஏகாந்தத்தில் நிகழ்கிறது. அவனுக்குச் சிவபோதம் என்னும் பரிசு வழங்குதல் பக்தர் கூட்டத்தில் பகிரங்கமாக நடைபெறுகிறது. மாணிக்கவாசகருக்கு இங்ஙனம் நிகழ்ந்தது. சிவசக்தியை உள்ளத்தினுள் உணர்பவர்க்குப் பிறப்பு இறப்பு இல்லை. அருளுக்குப் பாத்திரமாதற்கு அதிகாரி பேதமில்லை. இறைவன் யாரைவேண்டுமானாலும் ஆட்கொள்வான் அவனுடைய மகிமைகளைப் புகழ்ந்து பொன்னூசலாடுவோம்.

அன்னைப் பத்து

ஆத்தும பூரணம்

சிவனைப் பற்றியும் அவன் பெருமைகளைப் பற்றியும் ஒரு பிள்ளை தன் தாய்க்குச் சொல்லுகிறது.

வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கு
நாதரிந் நாதனர் அன்னே என்னும்

சிவன் வேதமொழியன், வெண்ணீறு பூசியவன், ஓசை வடிவினன். இப்படிப்பட்ட இறைவனைச் சார்ந்துள்ளோர் மனதுக்கு யாண்டும், இளமையும், அழகும் ஆனந்தமும் உண்டு. சிவனர் பிச்சை ஏற்று வருவது உலக வாழ்க்கை அநித்தியம் என்பதை உணர்த்தி, உயிர்களை உய்வித்தல் பொருட்டேயாம்.

உன்னற்கு அரிய சீர் உத்தர மங்கையர்
மன்னுவது என்நெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவது என் நெஞ்சில் மால்அயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே என்னும்

நெஞ்சில் நிலைத்துள்ள சிவனைப் புறத்தில் தேடித் தட்டழிதல் வேண்டாம்.

குயிற் பத்து

ஆத்தும இரக்கம்

புலப்படுகிற பிரபஞ்சமாகவும் புலன்களுக்கு அப்பாற்பட்டவனுகவும் இருப்பவன் பரமன் ஒருவனே. அவனுக்கு அன்னியமாக ஒன்றும் இல்லை. மேல்தோல், சதைப்பற்று, விதை ஆகிய அனைத்தும் கூடியது பழம். அங்ஙனம் ஜகத், ஜீவன், பரம் ஆகிய எல்லாம் சேர்ந்தது சிவன். எந்த நிலையில் எதனோடு நாம் தொடர்பு கொண்டிருந்தாலும் அது உண்மையில் இறைவனோடு கொண்டுள்ள தொடர்பாம்.

சுந்தரத்து இன்பக் குயிலே சூழ்சுடர் ஞாயிறு போல
அந்தரத்தே நின்று இழிந்து இங்கு அடியவர் ஆசை அறுப்பான்
முந்தும் நடுவும் முடிவும் ஆகியமூவர் அறியாச்
சிந்துரம் சேவடியானைச் சேவகனை வரக் கூவாய்

சிந்துரம்-சிவப்புநிறம்

பரமனது ஞானப் பிரகாசமானது அஞ்ஞான இருளில் உருவெடுத்த ஆசைகளை அழிக்கிறது. அதீதத்தில் இருக்கும் பரமன் அந்தர்யாமியாவது பக்தர்களது உடல் உணர்வை ஒழித்துஉள் ஒளி பெருக்குதல் பொருட்டேயாம். அகண்ட சிதாகாசமாய் இருப்பவன் அடியார்களை ஆட்கொள்ளுதல் பொருட்டு மானிட உருவெடுத்து வருகிறான்.

உன்னை உகப்பன் குயிலே உன்துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்த நல்மேனிப் புகழின் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன் சீர்ப் புயங்கன் வரக் கூவாய்

குயிலே பக்தி பூணுதலில் நாம் பரஸ்பர நட்புக் கொள்வோம். நித்தியமாயுள்ள பரமனது புகழ்பெற்ற அழகோ பொன்னைத் தோற்கடிக்க வல்லது. பக்தனுக்குப் பரிந்து அவன் குதிரைப் பாகனுக வந்தான். மூவேந்தர்க்கும் அவன் வேந்தன்; புயங்கக் கூத்தன். அரியும் பிரமனும் அறிந்து கொள்ள முடியாத அகண்ட வஸ்துவானவன் பக்தன் பொருட்டு விரைந்து செல்லும் குதிரைப் பாகனுக வந்தான்.

திருத்தசாங்கம்

அடிமை கொண்ட முறைமை

அரசன் ஒருவனை அறிமுகப்படுத்தும் முறையில் அவனுக்குரிய பத்து இயல்புகளை இயம்புவது வழக்கம். அவையாவன: பெயர்,

நாடு, ஊர், ஆறு, மலை, புரவி, படை, முரசு, தார், கொடி என்பனவாம். இந்த முறையை அண்ணல் தமது இறைவன்பால் கையாளுகிறார்.

பெயர்: மகாதேவன்
தென்பாண்டி நாடு
உத்தர கோச மங்கை ஊர்.

ஆறு=ஆனந்தம், மலை=இமயம், வானகம்=சித் ஆகாசம் ஆயுதம்=திரிசூலம் (கழுக்கடை), முரசு=பறை, தார்=அறுகு கொடி=இடபம், காளை.

செய்ய வாய்ப் பைஞ் சிறகின் செல்வீ நம் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையான் ஆறு உரையாய்—தையலாய்
வான் வந்த சிந்தை மலம் கழுவ வந்து இழியும்
ஆனந்தம் காண் உடையான் ஆறு

தத்துவப்படி பக்தர் உள்ளம் அவனுடைய ஊர் ஆகிறது. தத்துவபூர்வமாக ஆனந்தமே அவனுக்கு நதி ஆகிறது. சிவானந்தத்தில் திளைத்திருக்குமளவு சாதகனது சித்தம் சுத்தியடைகிறது. விசனமோ அஞ்ஞான மலத்தின் விளைவு. அநித்தியமான பிரபஞ்சத்தை நித்தியமானதென்று எண்ணுவது அஞ்ஞானம்.

பரமசிவம் நிர்க்குண பிரம்ம மாயிருக்கும்போது அவனுக்கு வாகனம் சித் ஆகாசமே. அவன் சகுணப் பிரம்மமாயிருக்கும் போது அவன் இடப வாகனன். ஜீவர்கள் அனைவரும் அவனுக்கு வாகனமாகின்றனர்.

திரிசூலம் ஞானத்தின் சின்னம். நாதப் பிரம்மம் அல்லது ஓங்கார தத்துவமே சிவனுரது முரசு. உடுக்கை அதற்குப் புறச் சின்னமாகிறது.

ஸ்தூல அமைப்பில் தாளிக் கொடியும் அறுகும் சேர்ந்தது அவன் அணியும் மாலை. உண்மையில் பிரபஞ்சத்துக்குரிய தத்துவங்கள் எல்லாம் சேர்ந்து அமைந்தது அவனுடைய மாலை.

சிவனுக்குரியது இடபக்கொடி. சிவனைச் சிவன் தனக்குச் சொந்தமாக்குகிறுன் என்பது பொருள். உபாசனை பண்ணு தவர்க்கு அக்கோட்பாடு ஏமாற்றத்தை உண்டுபண்ணுகிறது.

திருப்பள்ளி யெழுச்சி

திரோதான சக்தி

இறைவனுடைய பஞ்ச கிருத்தியங்களுள் திரோதானம் என்பது ஒன்று—மறைத்தல் என அது பொருள்படுகிறது. அதிகாலையில் எழுந்து திருப்பள்ளியெழுச்சி வாயிலாக இறை வணக்கம் செய்து வருகிறவர்களுக்குத் தமோகுணம் தெளிவடைகிறது. அச்செயல் திரோதான சக்தி என்னும் தலைப்புப் பெறுகிறது.

அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம் நின் மலர்த் திருமுகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனம்
கடிமலர் மலர மற்று அண்ணல் அம்கண்ணும்
திரள் நிரை அறுபதம் முரல்வன இவைஓர்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
அருள் நிதி தரவரும் ஆனந்தம் மலையே
அலைகடலே பள்ளி எழுந்தருளாயே.

இந்திரன் திசை-கிழக்கு

சூரியன் கிழக்கேவர இருள் நீங்கிற்று. சூரியோதயத்துக்கு ஒப்ப உன் முகத்தில் கருணை பொழிக. மலர்விரிவதற்கு ஒப்ப உன் கண்கள் துயிலெழுக. வண்டுகள் ரீங்காரம் இடுதற்கு ஒப்ப நாங்கள் உன்னைப் போற்றுகிறோம். இதில் இறையே நீ திருவுள்ளம் செலுத்துக. நீ கருணைநிதிப் பர்வதமும் ஆனந்த சாகரமும் ஆவாய்.

ஜாக்கிரதம், சொப்பனம், சுஷுப்தி ஆகிய மூன்று அவஸ்தைக்கும் ஆதாரமாயிருப்பது பரமாத்மன். அப்பெரிய பொருளுக்கு உறக்கம் கிடையாது. அதற்குத் திருப்பள்ளி எழுச்சி பண்ணுவது உபசாரத்துக்காக. ஆயினும் இதனால் சத்வம் ஓங்குவதற்கு ஏற்ப ஆத்மபோதம் அவனிடம் மேலோங்குகிறது. பரமாத்ம தத்துவத்தை அறிகிற பரிபாகம் வருகிறது.

சினிமாத்திரை சினிமாப் படங்களுக்கு ஆதாரமாயிருப்பது போன்று சித் அம்பரம் அல்லது பேரறிவுத்திரை கனவு, நனவு, உறக்கம் ஆகிய மூன்று அவஸ்தைகளுக்கும் ஆதாரமாயிருக்கிறது. மூன்று அவஸ்தைகளிலும் அப்பரமாத்மா கட்டுப்படுவதில்லை. இதை அறிகிற ஞானிக்குத் துன்பம் இல்லை. திருப்பள்ளி எழுச்சி இதற்குச் சாதனமாகிறது.

"பூதங்கள்தோறும் நின்றாய் எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக்கண்டு அறிவாரைச்"

பூதங்கள்-உயிர்கள்

நீ அனைத்துமாய் அவைகளுக்கு அப்பாலும் இருக்கிறாய் என்பதை வாசா ஞானத்தால் அறிந்துள்ளோம். உன்னை சுவானுபூதியில் அறிவதற்கான மனத்தெளிவை உண்டு பண்ணுவாயாக.

"அது பழச்சுவையென அமுதென அறிதற்கு
அரிதென, எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருஉரு, சிவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்ட இங்கு எழுந்தருளும்"

தேவர்களாலும் அறிய முடியாத சிவனை யாரும் அறியமாட்டார் என்கின்றனர் மனபரிபாகம் ஆகாதவர்கள். ஆனால் மனம் தெளிந்த பக்தர்கள் அவனை அறிவது மிக எளிது என்கின்றனர். இனி உலகில் உள்ள இத்தனை வடிவங்களாகவும் இவைகளுக்கு அப்பாற்பட்டவனாகவும் அவன் இருக்கிறான்.

"விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருளே
கண்ணகத்தே நின்று களிதருதேனே எண் அகத்தாய் உலகுக்கு
உயிர் ஆனாய்"

தேவர்களுக்கு எட்டாத அதிதனே, யாண்டும் போற்றுபவர் உள்ளத்தில் நீ பேரின்பமாய்த் திகழ்கின்றாய்.

திரு அல்லது காண்போனாயிருக்கும் சிவன் என்றைக்குமே திருசியம் அல்லது காணப்படு பொருள் ஆவதில்லை. ஆதலால் தேவர்களுக்கு அல்லது இந்திரியங்களுக்கு அவன் புலப்படான். உயிர்க்கு உயிராய், உணர்வுக்கு உணர்வாய் அவன் இலங்குகிறான்.

கோயில் மூத்த திருப்பதிகம்

(அநாதியாகிய சற்காரியம்)

"உடையான் உந்தன் நடுவிருக்கும்.........."

இறைவா, நீயும் இறைவியும் ஒன்று. நான் சிவசக்தியாய் ஆக்கப் பெற்றவன். ஆதலால் நானும் சிவசக்தியும் ஒன்று. இனி, நானும் உன் அன்பர்களும் ஒன்றாகும்படி ஈறுஇல்லாத இறைவா அருள் புரிவாயாக.

"அரைசே பொன்னம்பலத்து ஆடும்........"
"அருளா தொழிந்தால் அடியேனை........"

பொற்காசு ஒன்றை இழந்தவன் அதன்மீது நின்று கொண்டே அதை எவ்வளவு தேடினாலும் அதை அடைய மாட்டான். வேதம், வேள்வி, தானம், தபசு முதலியன மனிதனைப் பண்படுத்துதற்குப் பயன்படலாம். ஆனால் உள்ளத்தின் உள்ளிருக்கும் கடவுளைக் காண இவை யாவும் உதவமாட்டா.

அனன்ய பக்தி: (பக்தவத்சலன் One who is attracted by bakthi) கடவுளைத் தவிர வேறு ஒன்றையும் நாடாத பக்தி. அது கடவுளுக்குப் புறம்பாக எதையும் பொருள் படுத்துவதில்லை. எல்லாம் அவன் மயம், எல்லாம் அவன் செயல் என்ற மனநிலை அனன்ய பக்தியினின்று வருகிறது. படிப்படியாக ஒரு ராச மாளிகையை அணுகுபவன் இறுதியில் ராசாவைக் கண்டு, உறவாடுவதுபோலவே அனன்ய பக்தியால் ஒருவன் கடவுளின் சாந்நித்தியத்தை முதலில் உணர்கிறான். அதன்மேல் தர்சனம் உண்டாகிறது. பிறகு தானே அதில் ஒடுங்குகிறான். இத்தனையும் செய்யவல்லது பக்தி.

அழுவதைத் தவிர வேறு நான் என்ன செய்யமுடியும்?

முழுமுதலே ஐம்புலனுக்கும் மூவர்க்கும் என்தனக்கும்
வழிமுதலே நின்பழஅடியார் திரள் வான்குழுமிக்
கெழுமுதலே அருள்தந்து இருக்க இரங்கும் கொல்லோ என்று
அழும் அதுவேயன்றி மற்றென் செய்கேன் பொன்னம்பலத்
தரைசே

அனைவர்க்கும் ஆதிமூலமே, அனைத்தையும் இயக்குபவனே, காந்தா உன்னை நாடி அழுவதைத் தவிர வேறு நான் என்ன செய்ய முடியும்?

தில்லையில் அருளிய கோயில் திருப்பதிகம்

அனுபோக இலக்கணம்

"மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்து அமுதே
ஊறி நின் றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந் துறையுறை சிவனே

ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே

பரம்பொருள் இந்திரிய நுகர்ச்சிக்கு அப்பாற்பட்டது. சிவானந்தத்தின் மேலீட்டால் ஜீவபோதமானது அகண்ட சிவபோகமாக விரிவடைகிறது. அந்தக் கரணத்தோடு சம்பந்தப்படாத பேருணர்வே பிரக்ஞானம் எனப்படுவது.

"உரை உணர்வு இறந்து நின்று உணர்வதோர் உணர்வே
யான் உன்னை உரைக்குமாறு உணர்த்தே!"
"குணங்கள் தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற்கு இனி என்ன குறையே?"

அவன் குணாதீதன் அந்தப் பரம்பொருளை அறிகிறவன் பூரணன் ஆகிறான். போற்றுதற்கு ஏற்ப உள்ளத்தில் ஒளிர்பவன் அவன். பொறிகளில் பொலிபவன் அவன். ஐம்பூத உலகு ஆனவன் அவன். அதற்கு அப்பால் இருப்பவன் அவன்.

"குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க்குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறு நீர்போல் சிந்தைவாய்ப்பாயும்
திருப் பெருந்துறை யுறைசிவனே
இறைவனே நீஎன் உடல்இடம் கொண்டாய்
இனி உன்னை என் இரக்கேனே"

"இன்றெனக் கருளி, இருள் கடிந்துள்ளத்து
எழுகின்ற ஞாயிறு போன்று
... ...
ஒன்றும் நீயல்லை அன்றி ஒன்றில்லை,
யார் உன்னை அறியகிற்பாரே"

பரபோதம் ஓங்குதற்கு ஏற்ப ஜீவபோதம் ஒழிகிறது. மாயா காரியங்களாகிய காலதேச வர்த்தமானங்களாக நீ பரிணமிக்க வில்லை. நீ ஆதாரமாயிருப்பதால் தான் அவைகள் புலப்படுகின்றன. ஞானியைத் தவிர மற்றவர்களுக்கு இவ்வுண்மை விளங்குவதில்லை.

"பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
படர்ந்ததோர் படர்ஒளிப்பரப்பே
ஆர்உறவு எனக்கு இங்கு ஆர்அயல் உள்ளார்
ஆனந்தமாக்கும் என் சோதி"

"தந்தது உன்தன்னைக் கொண்டது என் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
எந்தையே ஈசா உடலிடங்கொண்டாய்
யான் இதற்கு இலனோர் கைமாறே"

அனைத்தும் சிவசொரூபம். தெளிந்த உள்ளத்தில் அவன் தேன் ஆகத் திகழ்கிறான். சிவானந்தம் பெற்றவர்க்கு உற்றாரும் வேற்றாரும் இல்லை. ஜீவாத்மாவுக்கும், பரமாத்மாவுக்கும் பிரிவு இல்லை. ஜீவ வியக்தி வெறும் கற்பனையே என்பது அனுபூதிமான்களுக்கு விளங்குகிறது. யான், எனது என்பனவற்றை ஒழிப்பதற்கு ஏற்ப பொய்யான ஜீவசொரூபம் தேய, இருந்த இடத்தில் மெய்யான சிவசொரூபம் மிளிர்கிறது.

திருப்பெருந்துறையில் அருளிய செத்திலாப்பத்து

சிவானந்தம் அளவறுக் கொணுமை

சமயத்தின் அடிப்படைக் குறிக்கோள்: ஞானோதயத்தில் ஜீவன் சாகிறான். சிவன் மிளிர்கிறான். வாழ்வுக்கு உறுதுணையாக உடல் இருக்கும்போதே அதைச் செத்ததற்கு நிகராகப் புறக்கணிக்க வல்லவனுக்கு ஞானபரிபாகம் விரைவில் வருகிறது. ஜீவபோதத்தை ஒழிப்பதை உருவகப்படுத்தி அசுர சம்மாரமென்று புராணங்கள் கூறுகின்றன. திரிசூலமும் வேலும் ஞானத்தின் சின்னங்கள். கந்தபுராணத்தில் கூறப்படும் சூரபத்மன் எமது ஜீவபோதத்தின் ஆணவம் உருவகப்படுத்தியகதாபாத்திரம் மட்டுமே எனவே ஜீவ வியக்தியைக் கலைப்பது சமய வாழ்வின் அடிப்படைக் குறிக்கோள்—பழமானது பழுத்து மரத்தினின்று பிரிவதுபோல ஞான முதிர்ச்சியால் நடக்கவேண்டிய நிகழ்ச்சி இது வீட்டை விட்டுஓடுவதால் மட்டும் வீடுபேறுவரவே வராது-சாதனை நிறைவு பெறும்போது இறைவன் குருவடிவு தாங்கித் தானே வருகிறான். பரநாட்டத்தில் மனோநாசம் அடையப் பெறுவதே குறிக்கோள்,

யார் ஜீவன் முத்தர்கள்: இவ்வாறு எடுத்த இந்தப் பிறவியை ஒழித்துவிட்டு முத்தியடையும் நிலையில் இருப்பவர்களைச் சில அறிகுறிகளால் கண்டு கொள்ளலாம். அத்தகைய ஜீவன் முக்தர்கள் எப்பொழுதும் ஆத்ம திருப்பதர்களாக இருக்கிறார்கள். நிழல்போன்று உடல் அவர்களைச் சார்ந்திருக்கிறது. அவ்வுடலின் மூலம் ஒழுங்காகக் கருமம் நடைபெறுகிறது. ஆனால் அதை ஜீவன்

முக்தன் கருத்தில் வாங்கிக்கொள்ளாரர்கள் அவர்கள் செத்தாரைப் போன்று இருக்கிறார்கள்.

பிரம்ம நிர்வாணம்: நனவுக்கு வந்தவுடனே கனவைப்பற்றிய மயக்கம் போய்விடுகிறது. அங்ஙனம் கனவுக்கும், நனவுக்கும் மேம்பட்ட நிலையொன்று உண்டு. இதுவே பிரம்ம நிர்வாணம் இதை அடையப் பெற்றவனுக்குக் கனவு, நனவு ஆகிய அவஸ்தைகளைப் பற்றிய மயக்கம் கிடையாது. இது மனம் மொழிக்கு எட்டாத பேரானந்தப் பெருநிலை. அப்பெருநிலையினின்று கீழே இறங்கி வந்தவன் ஜீவன்—திரும்பவும் அப்பெருநிலையை அடையப் பெற்றவன் முக்தன். வாழ்ந்திருக்கும்போதே செத்தவன் போன்று இருப்பவன் ஜீவன் முக்தன். நதிகளெல்லாம் கடலைப் போய்ச் சேர்ந்து கடலில் இரண்டறக் கலத்தல்போன்று பிரம்ம நிர்வாணம் அடைதல் ஜீவர்களின் குறிக்கோள். இதை விடுதலையென்றும், வீடுபேறு என்றும் பகர்வதுண்டு.

புலையனேனையும் பொருளென நினைந்துன்
அருள்புரிந்தனை, புரிதலும் களித்துத்
தலையினால் நடந்தேன், விடைப்பாகா
சங்கரா எண்இல் வான வர்க்கு எல்லாம்
நிலையனே அலைநீர்விடம் உண்ட
நித்தனே அடையார் புரம் எரித்த
சிலையனே எனைச் செத்திடப் பணியாய்
திருப்பெருந்துறை மேவிய சிவனே

உடலில் பற்று வைத்துள்ள என்னை நீ ஆட்கொண்டாய். ஆனால் நானோ செருக்குற்று நிலைதடுமாறுகிறேன். விடம் உண்பதும், முப்புரம் எரிப்பதும் உனக்கு வெறும் விளையாட்டு அத்தகைய இறைவா, என் ஜீவபோதத்தை அழித்திட மாட்டாயா?

"அறுக்கிலேன் உடல் துணிபடத் தீப்புக்கு ஆர்கிலேன்
இறக்கிலேன் உனைப்பிரிந்து இனிதிருக்க, என் செய்கேன்
இது செய்க என்று அருளாய்"
"யாது செய்வது என்று இருந்தனன் மருந்தே
அடியனேன் இடர்ப் படுவதும் இனிதோ"
"களிப்பு எலாம் மிகக் கலங்கிடுகின்றேன்,
கயிலை மாமலைமேவிய கடலே"

உன்னைப் பிரிந்திருந்தும் நான் இன்னும் சாகவில்லையே? சாந்தியுற்றிருக்க நான் செய்வது யாது. "இன்னதைச் செய்" என்று அருள்புரிவாயாக. முக்தி மார்க்கத்தை எனக்குக்

கொடுத்தருள்க. உலக சம்பத்தைக் குறித்து நான் செருக்குற்றிருக்கிறேன், அந்தோ!

திருப்பெருந்துறையில் அருளிய அடைக்கலப் பத்து

பக்குவ நிர்ணம்

எது ஜீரணமாகிறதோ அது சரீரம். ஆத்மாவோ சரீரமன்று. அது யாண்டும் இருந்தபடி இருக்கிறது. அது எங்கும் வியாபித்துள்ள ஏகவஸ்து. கடலில் உள்ள பல்லாயிரம் அலைகளில் பல்லாயிரம் சூரியர்களாக ஒரு சூரியன் பிரதிபலிப்பதுபோன்று அந்தராத்மாவாயுள்ள ஒரே ஒரு பரமாத்மன் எண்ணிறந்த ஜீவாத்மாக்களாகப் பிரதிபலிக்கிருன். அப் பரமாத்மனே தனது யதார்த்த சொரூபம் என்று அறிகிற நிறை ஞானிக்குத் துன்பமில்லை, அச்சமில்லை, மரணமில்லை. இதுவே மரணமில்லாப் பெருவாழ்வு. தேகாத்ம புத்தி அல்லது உடலைத் தான் என்று கருதும் மயக்கத்தைத் தவிர்க்குமளவு ஆத்மசாதகன் பரத்தில் ஒன்றுபடத் தகுதியுடையவன் ஆகிருன்.

மாழை மைப் பாவிய கண்ணியர்
வன்மத்து இடை உடைந்து
தாழியைப் பாவு தயிர்போல்
தளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழி எப்போது வந்து எந்நாள்
வணங்குவன் வல்வினையேன்
ஆழி அப்பா உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே

மாம்பிஞ்சின் பிளவையொத்த அஞ்சனம் பரவிய கண்களால் மயக்குண்டு மாய்ந்தேன். உன் தாமரைத் திருவடியை எப்பொழுதுவந்து வாழ்கவென்று வழுத்துவேன். கருணைக் கடலாகிய அப்பனே அடைக்கலம் தந்தருள்க.

புத்தி யோகம் (அறியும் அறிவு): சர்க்கரையை நாவில் வைத்தால் அது தித்திக்கிறது என்பது தெரிகிறது. பிறகு அந்தச் சர்க்கரையை என்னென்ன வகைப் பட்சணங்களாகச் செய்தால் அதன் சுவையை நன்கு ரசிக்கலாம் என்று அறிவது சர்க்கரையைப்பற்றிய புத்தியோகம். இதுபோலச் சமய சாதனையினுலும், யோகத்தாலும் ஏற்படும் இறைவனது மகிமையை மேலும் விருத்தியடையச் செய்வது சிவனருளால் பெறும் புத்தியோகம் இங்ஙனம் புத்தியோகத்தின் மூலம் பக்தி வளர்கிறது.

"உன்னை வந்திப்பது ஓர்
நெறியறியேன் நின்னையே அறியேன்
நின்னையே அறியும் அறிவு அறியேன் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே"

அழியாத செல்வமாகிய உன் அன்பர் வந்தடைந்தனர் ஆனல் எனக்கோ உன்னை வழுத்தத் தெரியாது. உன்னை அறியேன் உன்னை அறிவதற்கான புத்தியோகம் எனக்கு இல்லை.

திருப்பெருந்துறையில் அருளிய ஆசைப் பத்து

ஆத்தும இலக்கணம்: புளியம் பழம் அதன் ஓட்டில் ஒட்டாது இருப்பதுபோன்று நாம் இப்புல்லிய உடலில் பற்றற்று இருக்க வேண்டும்.

"சீவார்ந்து ஈமொய்த்து அழுக்கொடு திரியும்
சிறுகுடில் இது சிதையக்
கூவாய் கோவே கூத்தா காத்து ஆட்
கொள்ளும் குருமணியே
தேவா தேவர்க்கு அரியானே
சிவனே சிறிது என் முகம் நோக்கி
ஆஆ என்ன ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே"

உடல் வாழ்க்கையில் அருவருப்பும் ஆத்ம சொரூபத்தில் பேர் ஆர்வமும் படைத்திருப்பது ஆத்ம சாதனத்துக்கு இன்றியமையாத மனநிலையாம். அழுக்கு ஆகிய உடல் வாழ்க்கை ஒழிக ஞானப்பிரகாசனே இரங்கி என்னை நீ உன்மயம் ஆக்கிக்கொள்.

"வெம்சேல் அனைய கண்ணார்தம் வெகுளி
வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச்சுடரே
நான்ஓர் துணை காணேன்
பஞ்சேர் அடியாள் பாகத்து ஒருவா
பவளத் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே"

காம வலையில் சிக்கி மெலிந்தவன் நான். ஞானச்சுடரே உன்னையன்றி எனக்கு வேறு துணையில்லை. என்னை அஞ்ச வேண்டாம் என நீ கூறமாட்டாயா?

திருப்பெருந்துறையில் அருளிய அதிசயப் பத்து

முத்தி இலக்கணம்:பிரபஞ்சத்தின் கூறுகளினின்று ஜீவாத்மன் விடுபடுவது முத்தி. யாண்டும் நிலைத்துள்ள செல்வமென்றும், சுயஞ்சோதிப் பொருள் என்றும் நான் சிவனை நாடாது சிற்றின் பத்தை நாடினேன். ஆயினும் ஒப்பற்ற பரமன் என்னை ஆட் கொண்டு தன் அடியவர் கூட்டத்தில் சேர்த்தான். இது ஓர் அதிசயம்.

"பித்தன் என்று எனை உலகவர் பகர்வதோர்
காரணம் இதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் திருவருள் கூடிடும்
உபாயம் அது அறியாமே
செத்துப் போய் அருநரகிடை வீழ்வதற்கு
ஒருப்படுகின்றேனை
அத்தன் ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே"

நரகில் இடர்பட்டுக் கிடந்த என்னை இறைவன் தன் திருக் கூட்டத்தில் சேர்த்து வைத்தான். அதைக் குறித்துத் திகைத்து நின்ற என்னை உலகத்தவர் பித்தன் என்றனர்.

"பொத்தை ஊன் சுவர் புழுப் பொதிந்து உளுத்து அசும்பு
ஒழுகிய பொய்க் கூரை
இத்தை மெய் எனக் கருதி நின்று இடர்க் கடல்
சுழித்தலைப் படுவேனை"

புல்லிய பொய்யுடலை மெய்யென்று கருதி இத்துன்பக் கடலில் உழல்கின்ற என்னை ஆத்மப் பிரகாசன் தனக்குச் சொந்த மாக்கியது விந்தையாம்.

மாயப் பிரபஞ்ச வாழ்க்கையில் வைத்து எம்மைப் பக்குவப் படுத்துகின்ருன் இறைவன். மணத்தை உண்டு பண்ணுதற்கு மலர் இருப்பதுபோன்று மனிதன் உடல் எடுத்திருப்பது பரமனைத் தரிசித்தல் பொருட்டேயாம். கடலினின்று ஆவியாகக் கிளம்பிய நீர் விண்ணிலும் மண்ணிலும் வெவ்வேறு நிலைகளில் இருந்தான பிறகு மீண்டும் கடலை வந்தடைகிறது. அங்ஙனம் பரத்தினின்று பரிணமித்த ஜீவன், அணு உயிர் நிலையிலிருந்து ஆத்ம ஞானியின் நிலைவரையில் மென்மையுற்று மீண்டும் பரத்தில் ஒன்றுபடுகிறது.

"பெற்றவா பெற்ற பயன் அது நுகர்ந்திடும் பித்தர் சொல் தெளியாமே"

வெவ்வேறு முறைகளில் பெற்ற வினைப்பயனாகிய சுகதுக்கங்களை அனுபவிக்கின்ற உலகத்தவர் பேச்சில் நம்பிக்கை வைக்காது எமக்குப் பற்றுக்கோடாக உள்ள பரம்பொருளைப் பற்றி முத்தி அடைவது எமது குறிக்கோள்.

திருப்பெருந்துறையில் அருளிய புணர்ச்சிப் பத்து

அத்துவித இலக்கணம்

"ஆற்றகில்லேன் அடியேன் அரசே
அவனிதலத்து ஐம்புலனாய
சேற்றில் அழுந்தாச் சிந்தை செய்து
சிவன் எம் பெருமான் என்று ஏத்தி
ஊற்று மணல்போல் நெக்கு நெக்கு
உள்ளே உருகி ஓலமிட்டுப்
போற்றி நிற்பது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே"

நிலவுலகை நுகர்தற்குரிய ஐம்பொறிகளை நான்சேரலாகாது. அவைகள் துன்பும் துய்க்கும் சேறு போன்றவை. ஊற்று நீர் மணலைப் பெயர்த்தெடுப்பது போன்று சிவபோதம் ஜீவபோதத்தைக் கலைக்கிறது.

"சொரிந்த கண்ணீர் சொரிய உள்நீர் உரோமம்
சிலிர்ப்ப உகந்து அன்பு ஆய்ப்
புரிந்து நிற்பது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே"

இக் கோட்பாடு முத்தியை நாடும் ஜீவன்கள் அனைவர்க்கும் பொதுவானது. சிவகோம் என்னும் அனுபூதி நிலையிலிருந்து ஆழ்ந்த மயக்கத்தால் நான் பிரிந்திருக்கிறேன். இனி அழுதும், மனம் வருந்தியும், பக்தி பண்ணியும் அப்பெருநிலையை நான் மீண்டும் எப்பொழுது பெறுவேன்.

முடிந்த நிலையில் பக்தியும், ஞானமும், யோகமும் மூன்று நதிகளின் சங்கமம் போன்று ஒன்றுபடுகின்றன. யோகத்தையும் ஞானத்தையும், பக்தியையும் முறையே சத், சித், ஆனந்தம் என்றும், கிரியா சக்தி, ஞான சக்தி, இச்சா சக்தி என்றும் இயம்பலாம். அத்வைதம் இவைகளின் குறியாகிறது.

திருப்பெருந்துறையில் அருளிய
வாழாப் பத்து

முத்தி உபாயம்

"பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்து அரசே
திருப் பெருந்துறை உறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்து உரைப்பேன்
ஆண்ட நீ அருள் இல்லையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றுஅருள் புரியாயே"

இறைவா! உனது ஆட்சி ஒழுங்குப்பாடு உடையது அத்தகைய நீ என்னை ஆட்கொண்டபின் அருள் புரியாது விடின் யாரிடம் குறை கூறுவது? நீ என்னை ஏற்றுக் கொள்வாயாக.

அருள்புரிய வேண்டுமென்று சண்டை புரிவதும் உன்னோடு; மகிழ்ந்து குலாவியிருப்பதும் உன்னோடு; என் குறையைத் தெரிவிப்பதும் உன்னிடம்.

முக்குணங்களுக்கு அப்பால் இருப்பது பரமன்; அவன் அளப்பரிய அகண்ட வஸ்து. முக்தி என்னும் பெருவாழ்வு அகண்டத்தில் இருக்கிறது; இம்மையிலோ மறுமையிலோ அது இல்லை. மனதையும் ஐம்பொறிகளையும் இறைவன் வழிபாட்டுக்கென்றே பயன்படுத்துவது முக்திக்கு உற்ற உபாயமாம். இறைவன் அமிர்த சொரூபம் என்று உணருதற்கு ஏற்ப மரணத்தைப் பற்றிய உணர்வு ஒழிகிறது; முக்தி நிலை தானே வந்தமைகிறது. சிவன் யானைத்தோல் போர்த்தது அகங்காரத்தை வென்றதற்கு அறிகுறியாகும். அகங்காரம் அழிதற்கு ஏற்பப் பாபம் தானே நாசமாகிறது. பாபம் அற்றநிலை முக்தி நிலையாகிறது. பந்தத்திலும், முக்தியிலும் இறைவன் ஒருவனே கதி.

திருப்பெருந்துறையில் அருளிய அருள் பத்து

மகாமாயா சுத்தி

மகாமாயா அல்லது பிரபஞ்சமயமாயிருக்கும் உமாதேவியாண்டும் பரிசுத்தமாகவே இருக்கிறாள். சித்த சுத்தி அடைகிறவனுக்கு அவ்வுண்மை விளங்குகிறது. அதை அறிதற்கு ஏற்ப ஆத்ம சாதகன் அவள் அருளுக்குப் பாத்திரமாகிறான்.

"சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே
சுரி குழல் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத்து அயனும் மால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறை மலர்க்குருந் தம் மேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே"

ஈண்டு உருவம், அரு-உருவம், அருவம் என்ற இறைவனது நிலைகள் கண்ணுக்குத் தெரிகின்ற சூரியனாகவும், அர்த்தநாரீஸ்வர அரு-உருவாகவும், அருவான நீதியாகவும் இயற்கையின் ஒழுங்குப் பாடாக விளக்கப்படுகின்றன.

காமத்தைச் சாம்பலாக்கிய பிறகு மகாமாயையின் சுத்தம் சாதகனுக்கு நன்கு புலப்படும். உமாதேவியும், கங்காதேவியும் சிவசொரூபமே என்பதும் அப்பொழுது தெளிவாகும்.

இறைவன் நிர்மலன்—மாசு இல்லாத சுத்த வஸ்து. அவனை அணுகுபவர் மாசு நீங்கப் பெறுகின்றனர். மாயா சக்தியும் மாசு அற்றவள் என்பது அப்பொழுது விளங்குகிறது.

பரஞானத்தில் மறுமையோடு இம்மையும் கெடுவனவா கின்றன. ஏனென்றால் சுவர்க்க வாழ்க்கையும், பூவுலக வாழ்க்கை யும் காலத்தில் கட்டுப்பட்டிருக்கின்றன. பரம் என்பதோ காலா தீதம்.

திருக்கழுக்குன்றப் பதிகம்

சற்குரு தரிசனம்

"பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும்பித்தனே
சட்ட நேர்பட வந்திலாத சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்
சிட்டனே சிவலோகனே சிறு நாயினும் கடையாய வெம்
கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்து காட்டினாய் கழுக்
குன்றிலே"

ஈசன் சனாதன வஸ்து. அதாவது பிரபஞ்சத்தைத் தோற்று விக்கும் அவனது திறமை யாண்டும் அழிந்து போகாதிருக்கிறது. மனம் நடுவுநிலை எய்துங்கால் வினையானது தானே ஓய்வு அடைகிறது.

இறைவனுடைய படைப்பில் குறைகாணும் கீழ்நிலையும், அவன் அடி சார்ந்து மரணத்தை மீளுதல் என்னும் மேல்நிலையும் அத்துவித ஞானத்தில் அடிபடுகின்றன இது அபேத ஞானம்.

சரணம் சரணம் என்பது ஒரு சிலேடை மந்திர மாகும்—இறைவனுடைய திருவடிக்கே அடைக்கலம் என்பது இதன் பொருள்.

இராமபிரான் பரமாத்மதத்துவம்;சீதை ஜீவாத்ம தத்துவம் இராமனைச் சேர்ந்த சீதை சிறைகிடந்து அவனே நாடி வாடியதன் விளைவாகப் பன்மடங்கு மேலான தெய்வீகப் பண்பை அவள் எய்தினள். அருள் தாகம் கொண்டுள்ள ஜீவர்கள் அனைவர்க்கும் இக்கோட்பாடு பொருந்தும்.

தில்லையில் அருளிய கண்ட பத்து

நிருத்த தரிசனம்

மனதில் எண்ணும் கற்பிதமான எண்ணங்களே உபாதிகள் எனப்படுகின்றன. ஐம்பொறிகளில் பொருந்திய வாழ்வு மரணத் துக்கும் நரகத்துக்கும் ஏதுவானது. சில சிந்தனையில் ஊறி இருப்ப வரை வினையின் விளைவாகிய இன்பதுன்பங்கள் அசைக்க மாட்டா. அஞ்ஞானப் புன்மையில் உழன்று கிடந்த எனக்கு அப்பேராளன் சிவஞானப் பொலிவை வழங்கியுள்ளான்.

"சாதிகுலம் பிறப்பு என்னும் சுழிப் பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லல் அறுத்து ஆட்கொண்டு
பேதைகுணம் பிறர்உருவம் யான்எனது என்உரை மாய்த்துக்
கோது இல் அமுது ஆனானைக் குலாவு தில்லை கண்டேனே"

சிறுமைகள் அனைத்துக்கும் உறைவிடமாகிய ஜீவபோதத்தை என்னிடமிருந்து அகற்றிய அமிர்த சாகரமானவன் சிவன்.

"பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்பு என்று இவை
இரண்டும்
உறவினொடும் ஒழியச் சென்று உலகு உடைய ஒரு முதலை"

உலகுக்கு முதல்வன் பிறவி, பிணி முதலிய உலக விகாரங்களில் நின்று என்னை விடுவித்துள்ளான்.

"பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்
பித்தன் இவன் என என்னை ஆக்குவித்து"

ஜீவ உபாதி ஒழியுங்கால் மனதுசிவபோதத்தில் வயமாகிறது. பின்பு பக்தி பண்ணுவதும், சதாசாரத்தில் ஊன்றியிருப்பதும் தேவையில்லை. ஆதலால் அந்த ஞானியைப் பித்தன் என்று உலகத்தவர் அறியாமையினுல் பொருள் படுத்துவர்.

"பூதங்கள் ஐந்து ஆகிப் புலன் ஆகிப் பொருள் ஆகிப்
பேதங்கள் அனைத்தும் ஆய்ப் பேதம் இலாப் பெருமையனை"

சக்தியின் துணை கொண்டு எண்ணிறந்த பேதங்களைப் பிரபஞ்சத்தில் காட்டுகிற பரமன் யாண்டும் அபேதமாய், தனிப் பொருளாய்த் திகழ்கிறுன்.

திருப்பெருந்துறையில் அருளிய பிரார்த்தனைப் பத்து

சதா முத்தி

பிரார்த்தனை இருவகைப்படும். ஆயுள், ஆரோக்கியம், உலக சம்பத்து என்பன காமியப் பிரார்த்தனை. மற்று ஈசனுடைய அருள், பக்தி, ஞானம், முக்தி என்பன நிஷ்காமியப் பிரார்த்தனை. இயற்கையில் உள்ள உயிர் வகைகள் அனைத்துடனும் இனிய இணக்கம் வைத்து வாழ்வது வைதிக வாழ்வு. உயிர்கள் அனைத்தின் நலனைக் கோருவது பிரார்த்தனை. பொதுநலனுக்கு அமைந்துள்ள பணிவிடை வேள்வி.

"அடியார் சிலர் உன் அருள் பெற்றுர்
ஆர்வம் கூற யான் அவமே
முடையார் பிணத்தின் முடிவு இன்றி
முனிவால் அடியேன்மூக்கின்றேன்
அடியேனுடைய கடுவினையைக்
களைந்து உன்கருணைக் கடல் பொங்க
உடையாய் அடியேன் உள்ளத்தே
ஓவாது உருக அருளாயே"

அன்று உன் அன்பர் சத்சங்கத்தில் என்னை மறந்து இன்புற்றிருந்தேன். இனிய அக்காலம் கடந்து போயிற்று. பின்னர் உடலைப் பேணியதால் நான் வினையைப் பெருக்கினேன். அத்தகைய எனக்கு அருள் நாட்டம் தருக. ஒரு மனிதனுக்குக் கோபம் மேலோங்குமளவு அவன் விரைவில் விருத்தாப்பியம் அடைகிறுன்.

"தூண்டா விளக்கின் சுடரனையாய்
தொண்ட னேற்கும் உண்டாங்கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே"

இறைவா நான்பயன்படாதனதையும்நாடாது உன் அருளையே நாடி இருப்பேனுக. உன்னை அடைவதற்கு உதவாத உலக நாட்டம் ஏதும் வேண்டாமென்று விலக்கிவைத்துவிட்டு நான் உன்னையே வேண்டுவேனுக.

"பாவியேற்கும் உண்டாமோ பரமானந்தம் பழங்கடல்சேர்ந்து
ஆவி யாக்கை யான் எனது என்று யாதும் இன்றி அறுதலே"

உன் அடியார் அனைவரும் உன்னையே நாடி உனது அகண்டாகாரத்தில் ஒன்றுயினர். யானும் எனது ஜீவ வியக்தியை அங்ஙனம் கரைத் தொழிப்பேனுக. சிவானந்தம் கருவி கரணங்களுக்கு அப்பாற்பட்ட பாரமார்த்திகப் பெருநிலையாம். எனக்கு அது வாய்ப்பதாகுக.

மூன்றுவிதப் பாசங்களின் தன்மைகள்: மனிதன் தனக்குத்தானே உண்டு பண்ணிக்கொள்ளும் பந்தம் மிகக் கொடியது— இது **அத்யாத்மிகபாசம்** எனப்படுகிறது. விவேகம் என்னும் வாளைக்கொண்டு அதை வெட்டித் தள்ள வேண்டும். **ஆதி தெய்விக பாசம்** இடைத்தரமானது. இயற்கையின் நடைமுறைக்கு அல்லது தெய்வ சங்கற்பத்துக்கு மாறுபடுவதால் அது உண்டாகிறது. பொருத்தமான கால-தேச-நிமித்தத்தைக்கொண்டு அதைத் தவிர்க்கலாம். **ஆதி பௌதிக பாசம்** கடைத்தரமான தனையாகிறது. பிரதிகூலமான சூழ்நிலை அதற்குக் காரணமாகிறது. சூழ்நிலையைத் திருத்தியமைப்பதால் அத்தகைய பாசத்தைக் களைக்கலாம். அருளைச்சார்ந்த பிரார்த்தனையால் மூன்றுவிதப் பாசங்களையும் அகற்றமுடியும் என்பது ஞானிகளின் முடிந்த முடிபு.

"ஊனே புகுந்து உனை உணர்ந்தே
உருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே அருளும் காலம் தான்
கொடியேற்கு என்றோ கூடுவதே"

நான் ஒன்றுக்கும் உதவாதவன் என்று நீ என்னைப் புறக்கணிப்பது உன் பேரருளுக்குப் பொருந்துமா? என் மனதை ஒழுங்குபடுத்தி என்னையும் உனது நிலைத்த அருளுக்கு ஆளாக்குக.

பிரார்த்தனையின் பிரிவுகள்: காலத்தை நன்கு பயன்படுத்துவதும் கடவுள் வழிபாடாகிறது. ஏனென்றால் கடவுளே காலசொரூபமாய் இருக்கிறார். சீரிய குருபக்தி ஒப்பற்ற பிரார்த்தனையாகிறது. வாக்கையும் மனதையும் ஒன்றுபடுத்துவது யோகம்—உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதால் ஒருவன் தன் சொரூபத்தைச் சிதைக்கிறான்.

உலகும் அதைப் பற்றிய அறிவும் வேத சொரூபம். வாக்காலும் மனதாலும் உலகோடும் உலக ஞானத்தோடும் நல்லிணக்கம் வைக்கவேண்டும். அத்தகைய நல்லிணக்கம் சிறந்த பிரார்த்தனையாகிறது.

திருப்பெருந்துறையில் அருளிய குழைத்த பத்து

ஆத்தும நிவேதனம்

"கூறும் நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீ
தேறும் வகைநீ திகைப்பும் நீ தீமை நன்மை முழுதும் நீ
வேறு ஓர் பரிசு இங்கு ஒன்றில்லை மெய்ம்மை உன்னை
விரித்துரைக்கில்
தேறும் வகை என் சிவலோகா திகைத்தால் தேற்ற
வேண்டாவோ"

நன்மை தீமை ஆகிய அனைத்தும் நீயே என்னும் தெளிவை எனக்குத் தந்தருள்வாயாக. உலகு அனைத்தினுடைய உற்பத்தி ஒடுக்கத்துக்கு ஈசனே முதற்காரணம். அவனுக்கு அன்னியமான ஒன்றுமில்லை. நூலிலே விதவிதமான முத்து, மணி, ரத்னம் முதலியவைகளைக் கோத்து வைப்பது போன்று எண்ணிறந்த குண பேதங்களையுடைய உயிர்களையும், ஜடப்பொருள்களையும் தாங்கி நிற்கும் பரமாத்ம சைதன்யம் ஒன்றேயாம்.

சரணாகதி தத்துவம்

"வேண்டத் தக்கது அறிவோய்நீ
வேண்டமுழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாலுக்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யாது அருள்செய்தாய்
யாதும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே"

ஆத்ம சாதனத்தில் இது ஓர் அடிப்படைத் தத்துவம். சிவன் பொறுப்பில் அனைத்தையும் ஒப்படைக்கும் ஆத்ம சாதகனுக்குக் கவலையொன்றுமில்லை. ஜீவன் செய்கிற செயல்களிலெல்லாம் கடைசியான செயல் ஈசனிடத்து அடைக்கலம் புகுதலாம். அடைக்கலம் புகுதல் என்பதன் பொருள் தன் முயற்சி போத வில்லை; ஆகையால் தெய்வத்தினிடம் தஞ்சமடைந்து அவர் துணையையும் கொஞ்சம் தேடிக்கொள்ளலாம் என்பதன்று. சிற்றோடை பெரிய நதியில் கலந்து பிறகு சமுத்திரத்தில் சங்கம மாவது போன்றது சரணாகதி. ஜீவனுடைய இச்சா சுதந்திரமெல் லாம் ஈசுவர சங்கற்பத்தில் சேர்ந்து விடுகிறது. தனக்கெனத் தனிச்செயல் ஒன்றுமில்லை. ஈசன் செயல் கடலின் செயல் போன்றது. ஜீவன் செயல் அலையின் செயல் போன்றது. இதை அனுபூதியில் அறிவது சரணாகதி. பக்தர்கள் எல்லோரும் அடைக் கலம் என்னும் பெருநிலையை அடைந்திருக்கிறார்கள். பக்தன் அன்பில் தன்னை மறந்தவன் என்றாலும் ஒரு சிறு செயலிலும், சொப்பனத்திலும் அவன் பிழைபோவதில்லை. ஒழுங்குப்பாடே வடிவெடுத்ததாக அவனது வாழ்க்கை நடைபெறுகிறது. பின்பு அவன் மூலம் நிகழ்வதெல்லாம் ஈசன் செயல்.

"இன்று ஓர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே"

அடைக்கலம் புகுதல் அல்லது சரணாகதி தத்துவம் என்னும் ஆத்ம சாதனம் இதில் பூர்த்தியாகிறது.

திருப்பெருந்துறையில் அருளிய உயிருண்ணிப் பத்து

சிவானந்தம் மேலிடுதல்

நிர்விகற்ப சமாதியில் ஜகத் இல்லை, ஜீவன் இல்லை, கால - தேச - வர்த்தமானமில்லை. பரம் ஒன்றுதான் உளது. அத்தகைய பெருநிலையில் பரமன் என்னை ஆட்கொண்டு அமர வைத்தான். கர்மத்துக்கு அப்பால் ஜீவனை எடுத்துச் செல்லவல்ல அதே பரமாத்மன் அந்தர்யாமியாய் இருந்து ஜீவாத்மன் உயிர் வாழவும், அன்பு கொள்ளவும் இந்திரியங்களின் வாயிலாகச் செயல்கள் புரியவும் செய்கிறான். அவனுடைய சான்னித்தியத்தை நெஞ்சிலும் கண்மணிகளிலும் காணலாம்.

"வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பு இறப்புச் சிவம்
வேண்டார் தமை நாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன் மன்னு
திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன் புறம் போகேன் இனிப்
புறம் போகல் ஒட்டேனே"

உலகப்பற்று வைத்திருப்பவர்களோடு ஒருபொழுதும் உறவு கொள்ளேன். கடலின் அலைகள் போன்று ஓயாது உருவெடுக்கும் மனோ விருத்திகளை அழித்துச் சந்திரசேகரன் என்னைத் தன்மய மாக்கியது செயற்கரிய செயலாம்.

"எச்சம் அறிவேன் நான் எனக்கு இருக்கின்றதை அறியேன்
அச்சோ எங்கள் அரனே அருமருந்தே எனது அமுதே
செச்சை மலர் புரை மேனியன்திருப்பெருந்துறைஉறைவான்
நிச்சம் என் நெஞ்சில் மன்னி யான் ஆகி நின்றானே"

நீயே நானாகி இருக்கின்றாய். இந்த உண்மையை நான் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. உனக்கும் எனக்கும் புறம்பா யுள்ள பிரகிருதியை அறிகிறேன். அந்தோ என் அறியாமை! ஆசையால் தூண்டப் பெற்றுக் கருவி கரணங்கள் வாயிலாகப் பிரகிருதி அறியப்படுகிறது. நிராசையில் நிலைத்திருக்குமிடத்து ஜீவனும் சிவனும் ஒன்றே என்னும் அனுபூதி வாய்க்கிறது அந்த அனுபூதியில் ஜகத்தும் பரத்தில் ஒன்றுபடுகிறது. அதுவே பரஞானம் அல்லது சிவஞானம். இந்தப் பரஞானம் அடையப் பெற்றவர்க்குப் பரம் ஒன்றே மெய்ப்பொருள்.

தில்லையில் அருளிய அச்சப் பத்து

ஆனந்தம் உறுதல்

பக்தியின்மையில் நின்று வருகிற கேடானது கொலைக் கருவியில் நின்று வருகிற கேட்டைவிடக் கொடியது. திருநீறு போன்ற சிவச் சின்னங்கள் அணிவது சாதனத்துக்கு உறுதுணையாகின்றது. சிவனிடம் வைக்கிற பக்தியைச் சிவச் சின்னங்களிடத்தும் வைக்க வேண்டும்.

"வன்புலால் வேலும் அஞ்சேன் வளைக்கையார் கடைக்கண்
அஞ்சேன்
என்பெலாம் உருகநோக்கி அம்பலத்து ஆடுகின்ற
என்பொலா மணியை ஏத்தி இனிது அருள் பருகமாட்டா
அன்பிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே"

பக்தியின் விலைமதிப்பு: ஒரு பொருளின் விலைமதிப்புக்கு ஏற்றபடி அதைப் பெரிய சன்மானமாகக் கருதுதல் உலகத்தவர் இயல்பு. எப்பொருளைக் கொண்டும் பெறமுடியாத இறைவன் நல்லமனமுடையாரது பக்தி வலையொன்றில் மட்டும் அவன் படுகிறான். ஆயினும் பக்திக்கு அறிகுறியாக இயற்கையில் எளிதில் அகப்படுகின்ற இலை, மலர், கனி, நீர் ஆகியவற்றுள் எதைப் படைத்தாலும் அவன் மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளுகிறான். கண்ணப்பரது உமிழ்நீரும் அவர்மென்ற மாமிசமும், சிவனுருக்கு ஒப்பற்ற நைவேத்தியமாயின. பக்தியானது பகவானுக்கு அவ்வளவு பெரியது.

"கோணிலாவாளி அஞ்சேன், கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
தகைவிலாப் பழியும் அஞ்சேன் சாதலை முன்னம் அஞ்சேன்"

நிந்தையும் ஸ்துதியும் பக்தனுக்குப் பொருளற்றவைகள்—இறப்புக்கு அவன் அஞ்சுவதில்லை. ஆயினும், சிவனைத் தீவிரமாக வழுத்தும் ஆண்மை படையாதவனுக்கு அஞ்சுவேன். உலகில் பிரதிகலமாயிருப்பவைகளை அனுகூலமானவைகளாக மாற்றத் தெரிந்து கொள்ளவேண்டும் என்னும் கோட்பாட்டை நஞ்சுண்ணும் சிவனுர் விளக்குகிறுர்.

திருப்பெருந்துறையில் அருளிய திருப்பாண்டிப் பதிகம்

சிவானந்த விளைவு

சிவனுக்குப் பாண்டியனுர் என்னும் பெயர் உண்டு அமைந்துள்ளது. இறைவன் இன்றே இப்பொழுதே தன் அடியார்களுக்கு மூலபண்டாரம் (டீரின்பச் செல்வம்) அல்லது வீடுபேறு வழங்குகின்றுன். விரைந்து வந்து பயன் பெறுங்கள். வாழ்வில் ஒவ்வொரு கணப்பொழுதையும் கிடைப்பதற்கு அரிய வாய்ப்பு என அறிஞன் அறிகிறுன்; அறிந்து இறையருளை நாடி நிற்கின்றுன்.

"செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லல்மின் தென்னன்
நல்நாட்டு
இறைவன் கிளர்கின்ற காலம் இக்காலம் எக்காலத்துள்ளும்
அறிவு ஒண் கதிர்வாள் உறைகழித்து ஆனந்தமாக் கடவி
எறியும் பிறப்பை யெதிர்ந்தார் புரள இருநிலத்தே"

இறைவனுடைய அருளைப் பெறுதற்கு ஒவ்வொரு கணமும் நல்ல காலமே. அவன் ஞானவாள் ஏந்தி, ஆனந்தம் என்னும் குதிரையின்மீது ஏறிவந்து உலகில் உள்ளவர் பிறப்பை எதிர்த்து ஒழிக்கிறான்.

"காலம் உண்டாகவே காதல்செய்து உய்ம்மின்
ஆலம் உண்டான் தன் அடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே"

காலம் வாய்த்திருக்கிறது. பக்தி பண்ணிக்கடைத்தேறுங்கள். சிவானந்தபோதத்தைப் பரமன் தன் அன்பர்க்கு வழங்கும் இப்பொழுதே, விரைந்து வந்து பயன்பெறுங்கள். இந்தப் பரமார்த்திகச் செய்தி எக்காலத்தும் யாவர்க்கும் உரியதாகும்.

திருத்தோணிபுரத்தில் அருளிய பிடித்த பத்து

முத்திக் கலப்பு உரைத்தல்

(ஜீவ—சிவ ஐக்கியமாகிய யோகம் இங்கு விளக்கப்படுகிறது.)

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்து அலைப்புலையனேன் தனக்கு
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே"

உவமையற்ற ஞானச் சுடரே, பக்திச் சாகரத்தில் மிளிரும் சாகாமருந்தே, உன்னை இறுகப் பிடித்துள்ளேன். நீ பிரசன்னமா வாயாக. இறைவனது கருணை வெள்ளம் கரைபுரண்டு ஓடிக் கலந்த யோகம் (ஜீவ—சிவ ஐக்கியம்) ஈண்டு ஈடு இணையற்ற சொல் ஓவியத்தால் வருணிக்கப்படுகிறது.

1. முடைவிடாது அடியேன் மூத்து அற மண்ணாய்
 முழுப்புழுக் குரம்பையில் கிடந்து
 கடைபடாவண்ணம் காத்து எனையாண்ட
 கடவுளே கருணைமாகடலே

2. ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
 உலப்பிலா ஆனந்தமாய
 தேனினைச் சொரிந்து புறம் புறம்
 திரிந்த செல்வமே

3. புன்புலால் யாக்கை புரை புரை கனியப்
 பொன் நெடும் கோயிலாப் புகுந்து என்
 என்பெலாம் உருக்கி எளியை ஆய் ஆண்ட
 ஈசனே மாசிலா மணியே

4. அருள் உடைச் சுடரே அளிந்ததோர் கனியே
 பெரும் திறல் அருந்தவர்க்கரசே
 பொருள் உடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
 போகமே, யோகத்தின் பொலிவே

திரு ஏசறவு

சுட்டறிவு ஒழித்தல்

ஏசறவு என்பது ஸ்துதி; அதன்வாயிலாகப் பொறி புலன்களை ஒழித்தல் முறையான சாதனையாகும். இறைவா இரும்புபோன்ற என் கடின நெஞ்சை உருக்கினாய்.

"கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கு இயலால் வார்கழல் வந்து
உற்றிறுமாந்து இருந்தேன் எம்பெருமானே அடியேற்குப்
பொற் தவிசு நாய்க்கிடுமாறு அன்றே நின் பொன்னருளே"

கலைஞானம், அருள்தாகம் இரண்டும் எனக்கு இல்லை. இருப்பினும் உன்னையே சார்ந்திருந்து அதைக் குறித்துத் தற்பெருமை படைத்திருந்தேன். அத்தகைய என்னை நீ ஆட்கொண்டது நாய்க்குப் பொன் பீடம் கொடுத்ததற்கு நிகராகும்.

"நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்"

தவம் ஜபம் ஒன்றும் செய்யாதவன்; சிவாயநம என்ற மந்திரத்தை மட்டும் உள்ளத்தில் உரைப்பவன். இதன் விளைவாக சிவன் தானே புகுந்து எனது பேரானந்தத்தைப் பெருக்கினான்.

திருவாரூரில் அருளிய திருப் புலம்பல்

சிவானந்த முதிர்வு

"உற்றாரை யான்வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத்து அமர்ந்து உறையும்
கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே"

குற்றாலநாதனே உறவினர், ஊர், பேர், கல்வி முதலிய வற்றில் பற்றுக்கள் எனக்கு வேண்டாம். கன்றினிடத்துப் பசு வானது வைத்துள்ள பற்றுதலைப் போன்று நான் உன்னிடத்துப் பற்றுவைக்க அருள்புரிவாயாக.

ஜீவாத்மன் சுயநலமே வடிவெடுத்தவன்
(முனிவர் தன் சீடனுக்குக் கதை மூலம் விளக்கம்)

"வீடு சென்று நான் தரும் குளிகையை வாயில் போட்டு விட்டுப் படுத்துக்கொள்." செத்தவன் போன்று கிடந்தவனைக் கட்டித்தழுவி தாயும், தகப்பனும், மனைவியும் ஓயாது அழுது புரண்டனர். முனிவர் சீடன் வீட்டுக்கு அச்சமயம் சென்று விசாரித்தார். இளைஞனைப் பிழைக்கவைக்க முடியுமென்றும் ஒரு நிபந்தனை நிறைவேற வேண்டும் என்றார். தர்ப்பைக்கயிறு ஒன்றைச் செத்தவன் கையிலும், உயிருடன் இருக்கும் ஒருவர் கையிலும், கட்டித் தாம் ஜபம் செய்தால் இளைஞனுக்கு உயிர் வரும், கட்டப்பட்டுள்ள மற்றவர்க்கு உயிர்போகும் என்றார் முனிவர். அம்மூவரில், இது கூறியபின் யாரும் முன்வர வில்லை. பாசம் இவ்வளவுதான்.

இவ்வாறு சுயநலம் முதற்படியில் தனது உடலின் சுகத்துக் காகவும் அடுத்தபடியில் இலட்சிய இன்பத்துக்காகவும்; மேலும் ஜீவாத்மன் அருள் துறையில் பிரவேசிக்கும்பொழுது இறைவ னுடைய அன்பர்களையே அவன் சிறப்பாக நேசிக்கும் நிலையிலும் ஜீவாத்மன் நிறைஞானியாகும்பொழுது அவன் முற்றும் அன்பு சொரூபம் ஆகி, பரமனையே அவன் உள்ளும் புறத்திலும் காண் பது சுயநல வளர்ச்சியில் காணும் முறை. இந்தக் கடைசி நிலையை அடைவது சமய சாதனையின் குறிக்கோள்.

தில்லையில் அருளிய குலாப் பத்து

அனுபவம் இடையீடு படாமை

"ஓடும் கவந்தியுமே உறவு என்றிட்டு உள் கசிந்து
தேடும் பொருளும் சிவன் கழலே எனத் தெளிந்து
கூடும் உயிரும் குமண்டையிடக் குனித்து அடியேன்
ஆடும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டு அன்றே"

திருவோடும் கோவணமும் ஈண்டு உடைமை. சிவனை அடைவது குறிக்கோள். உடலிலும் உயிரிலும் ஆனந்தம் ஊட்டுகிற தில்லை நடராஜனைப் போற்றுகிறேன்.

இருவினை ஒப்பு: நன்மை தீமை மயமான இருமைகள் துவந்துவங்கள் எனப்படுகின்றன. தெய்வீக நடுநிலையில் மனதை வைக்கின்றவர்களுக்கு சீதம்—உஷ்ணம், வெற்றி—தோல்வி, நிந்தை—ஸ்துதி, லாபம்—நஷ்டம் ஆகிய இருமைகள் சித்த சுத்தியை உண்டுபண்ணுகின்றன.

பரஞானத்தின் விளைவாக உடல் தூயதாகிறது. பிராரப்த கர்மத்தின் வேகம் தணிகிறது. துன்பம் ஒழிகிறது. இருமைகள் இறைவனுடைய செயல்களாகப் புனிதம் பெறுகின்றன. ஆகாமிய சஞ்சித கர்மங்கள் நசித்துப் போகின்றன.

"குறியும் நெறியும் குணமும் இலார் குழாங்கள் தமைப்
பிறியும் மனத்தால் பிரிவு அரிய பெற்றியனை"

உலகப்பற்று உடையவர்களோடு பக்தர்கள் இணங்குவதில்லை. நல்லார் பொல்லார் ஆகிய எல்லார் உள்ளத்திலும் நீக்கமறச் சிவனுர் வீற்றிருக்கிருர் எனினும் சிவபோதத்தை வளர்க்கும் சாதகர் உள்ளத்திலேயே அவருடைய சொரூபம் அமிர்த வடிவெடுத்துப் பேரானந்தமாகப் பொலிகிறது.

நாம ரூபம், முக்குணம், மனப்பற்று ஆகிய விகாரங்களைத் திருத்தியமைத்து, ஜீவபோதம் என்னும் குற்றத்தைக் களைந்த தொண்டர்கள் எல்லோரும் சிவானந்த போதத்தில் திளைத்திருந்தனர்.

தீரவீரனுகிய இராவணனுடைய தோளை நெரித்த சிவபாதம் என் சிரசில் ஏறியது; அருச்சுனனைத் தாக்குவதற்குப் பன்றி உருவெடுத்துச் சென்ற அரக்கன் பின் காட்டில் நடந்த திருவடி என் தலையில் படிந்தபொழுது, ஐம்பொறிகளின் குறும்பு அடங்கியது.

அம்மை எனக்கருளியவா றார்பெறுவார் அச்சோவே
கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தாற் திருப்பணிகள் செய்வேனுக்கு
இம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்கு ஒழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

அம்மை—வீடுபேறு.

அம்பிகை சமேதனுச்கு முழுமனதோடு நான் செய்த சேவையின் விளைவாக இவ்வுலகிலேயே இருவினைப் பயன்கள் ஒழிந்து போயின. நான் முத்தி அடைந்துள்ளேன்.

திருப்பெருந்துறையில் அருளிய அற்புதப் பத்து

அனுபவம் ஆற்ருமை

"நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பல செய்து
நான் எனது எனும் மாயம்
கடித்த வாயிலே நின்று முன்வினை மிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்று அப்பெருமறை தேடிய
அரும் பொருள் அடியேனை
அடித்து அடித்து அக்காரம் முன்தீற்றிய
அற்புதம் அறியேனே

நிலையற்ற நிலவுலக வாழ்வைப் பெருக்குதற்கு ஏதுவான கருமங்கள் பல செய்தேன். "நான் எனது" என்னும் மாயை அதினின்று உருவாயிற்று. பாம்புபோன்ற அந்த மாயை பிராரப்த கர்மம் என்னும் விஷத்தைக் கக்குவதாயிற்று. அதனால் நான் வருந்தி அழுதேன். எவனைக் காண வேதம் தேடி அலைகிறதோ அவன் வலிய என்னைத் தேடிவந்து அடித்துப்பிடித்து ஆட்கொண்டு எனக்குப் பரமானந்தத்தை ஊட்டினான். அது ஓர் அதிசயம் அன்ருே. பிறவிப்பிணியின் போக்கும், பரமன் அருளால் அதினின்று ஜீவாத்மன் விடுதலை யடைகின்ற பாங்கும் இப்பாட்டில் அடங்கியிருக்கின்றன.

பொய் உடலில் பற்று வைத்து உலக வாழ்வில் உழன்று காமநோயைத் துய்த்துக் கிடந்த என்னை இறைவன் தனக்குச் சொந்தமாக்கியது அற்புத மென்று போற்றும் பாடல்களில் உலக வாழ்க்கையின் நிலை நன்கு விளக்கப்பட்டுள்ளது:

1. "மையலாய் இந்த மண்ணிடை வாழ்வெனும்
   ஆழியுள் அகப்பட்டுத்
   தையலார் எனும் சுழித்தலைப் பட்டு நான்
   தலைதடுமாறுமே"

2. "பொருந்தும் இப்பிறப்பு இறப்பு இவை நினையாது
   பொய்களே புகன்று போய்க்
   கருங்குழலினர் கண்களால் ஏறுண்டு
   கலங்கியே கிடப்பேனை"

3. "மாடுஞ் சுற்றமும் மற்றுள போகமும்
   மங்கையர் தம்மோடும்
   கூடி அங்குள குணங்களால் ஏறுண்டு
   குலாவியே திரிவேனை"

4. "பொச்சை ஆன இப்பிறவியில் கிடந்து நான்
   புழுத்து அலை நாய் போல்
   இச்சையாயின ஏழையர்க்கே செய்து அங்கு
   இணங்கியே திரிவேனை"

இந்தப் பிறவிக் காட்டில் நாய் போன்று நான் பயனில்லாது அலைந்து திரிந்தேன்.

"ஊசல் ஆட்டும் இவ்வுடல் உயிர் ஆயின
   இருவினை அறுத்து என்னை
ஓசையால் உணர்வார்க்கு உணர்வு அரியவன்
   உணர்வு தந்து ஒளியாக்கிப்
பாசம் ஆனவை பற்றறுத்து ......
   ஆசை தீர்த்து அடியார் அடிக்கூட்டி"

ஊஞ்சலில் வைத்து இப்படியும் அப்படியும் ஆட்டுவது போன்று என் உடலையும் உயிரையும் இங்குமங்கும் அலைக்கழிக்கச் செய்கின்ற நல்வினை தீவினைகளை இறைவன் அகற்றினான் (நல்வினையும் ஒருவிதப் பாசம்-அது பொன் விலங்கு, தீவினை இரும்பு விலங்கு).

மொழி வல்லமையாலோ கலைஞானத்திறமையினாலோ அறிய முயலுபவர்க்கு அவன் அகப்பட மாட்டான். அவன் எனக்குத் தற்போதத்தை ஊட்டினான்; ஞான ஒளியைப் பெருக்கினான்; பந்தங்களை அகற்றினான்; ஆசையை ஓட்டினான்; தன் அடியார்களோடு என்னைச் சேர்த்துக் கொண்டான். இது அவனது கருணையின் பாற்பட்ட அற்புதம்.

திருப்பெருந்துறையில் அருளிய சென்னிப் பத்து

சிவ விளைவு

பஞ்சபூதங்களும் மனம் புத்தி அகங்காரமும் சேர்ந்து அஷ்ட மூர்த்தியாகச் சிவன் இலங்குகிறான். ஜீவபோதம் படைத்துள்ள மும்மூர்த்திகளுக்கும் விளங்காத மகாதேவனைப்பக்தி பண்ணுபவர்களே அறியவல்லவர் ஆவர்; அதனால் ஆனந்தம் ஊற்றெடுக்கும்,

"தேவதேவன் மெய்ச் சேவகன்
தென்பெருந்துறை நாயகன்
மூவராலும் அறியொணா
முதலாய ஆனந்த மூர்த்தியான்"
"அட்டமூர்த்தி அழகன் இன்அமு
தாயஆனந்த வெள்ளத்தான்"
"மங்கைமார் கையில் வளையும் கொண்டுஎம்
உயிரும்கொண்டு எம் பணி கொள்வான்"

ஜீவாத்மாக்களைப் பெண்பாலர்களாகவும் இறைவன் ஒருவனையே ஆண்பாலாகவும் கருதுவது எல்லா மதங்களின் கோட்பாடாகும். வளையல் நீங்குவது உடல் உணர்வைக் கடந்ததற்கு அறிகுறியாகும். உயிர் நீங்குவது ஜீவபோதம் சிவபோதமாக உயர்வதற்கு அறிகுறியாகும்.

"முத்தனை முதல் சோதியை முக்கண்
அப்பனை முதல் வித்தினைச்
சித்தனைச் சிவலோகனைத் திரு
நாமம் பாடித் திரிதரும்
பத்தர்காள் இங்கே வம்மின் நீர் உங்கள்
பாசம் தீரப் பணிமினோ
சித்தம் ஆர்தரும் சேவடிக்கண்நம்
சென்னி மன்னித் திகழுமே"

நித்திய முக்தன், பரஞ்சோதி, வாலறிவன், சிவலோகன் என்று அவனுடைய திருநாமம் பாடித்திரியும் அன்பர்களே! உங்கள் பந்தபாசம் அறும்படி அவனைப் பணியுங்கள். அவனது திருவடியில் நம் சென்னி மன்னித்திகழுக.

திருப்பெருந்துறையில் அருளிய திருவார்த்தை

அறிவித்து அன்புறுதல்

திருவார்த்தை என்பது மெய்ப்பொருள் விளக்கம். மகாதேவன், ஞானகுரு, அடியார்க்கு எளியவன் என்னும் இத்தகைய

சிவனது மகிமையை அறிபவர் போற்றுதற்கு உரியவர் ஆகிறார். ஆறு சமயங்களிலும் இலங்கும் ஆனந்தக்கூத்தன் அடியார் பொருட்டு வேடுவன் ஆகவும், மீனவனாகவும், குதிரைப்பாகனாக வும் வந்து பல திருவிளையாடல்களைப் புரிந்த பெருமையை உணருவார் வணக்கத்துக்கு உரியவராவார்.

திருவிளையாடல்கள்

"அந்நாள்
உந்து திரைக்கடலைக் கடந்து அன்று
ஓங்கு மதில் இலங்கை அதனில்
பந்துஅணை மெல்விரலாட்கு அருளும்
பரிசு அறிவார் எம்பிரானாவாரே"

அலைகடல் கடந்து இலங்கை சென்று பக்திமதி மண்டோ தரிக்கு அருள்புரிந்தார்.

"கோல மணியணி மாடநீடு குலாவும் இடைவை மடநல்லாட்குச்
சீலமிகக் கருணையளிக்குந் திறம் அறிவார் எம்பிரான் ஆவாரே"

திருவிடை மருதூர் (இடவை) இறைவனுக்கு நல்லதையெல் லாம் அளிக்கும் அரசனை வரகுண பாண்டியன் கற்புக்கரசி யாகிய தன் மனைவியைக் கொடுத்தான். சிவனார் தன் சொரூபத் தில் வயமாக்கி அடியார்க்கு எளியவன் என்னும் பெருமையைப் பெற்றார்.

"வேவத் திரிபுரம் செற்ற வில்லி
வேடுவன் ஆய்க் கடிநாய்கள் சூழ
ஏவல் செயல் செய்யும் தேவர் முன்னே
எம்பெருமான் தான்இயங்கு காட்டில்
ஏ உண்ட பன்றிக்கு இரங்கி ஈசன்
எந்தை பெருந்துறை ஆதி அன்று
கேவலம் கேழலாய்ப் பால் கொடுத்த
கிடப்பு அறிவார் எம்பிரான் ஆவாரே"

பன்றிக் குட்டிக்குப் பால் கொடுத்த திருவிளையாடல் ஈண்டு இயம்பப் பெறுகிறது.

தில்லையில் அருளிய எண்ணப் பதிகம்

ஒழியா இன்பத்து உவகை

பார் உரு ஆய பிறப்பற வேண்டும்
பத்திமையும் பெற வேண்டும்

"சீர் உரு ஆய சிவபெருமானே
செம் கமலம் மலர் போல்
ஆர் உரு ஆய என் ஆர்அமுதே உன்
அடியவர் தொகை நடுவே
ஓர் உரு ஆய நின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக் கொண்டருளே"

முழுமுதற் பொருளே என் ஜீவபோதம் ஒழிந்து சிவபோதம் இனிது ஓங்குமாறு எனது உயிர்க்கு உயிரே, உன் அடியார் கூட்டத்தில் என்னை இணைத்துத் திருவருள் பூண்டு நான் உய்வு அடையும் உபாயம் காட்டுவாயாக.

யார் முனிவன்: தூய்மையில் தோய்ந்த மனன சீலன் யாரோ அவனே முனிவன். தைலதாரை போன்று யாருடைய மனது பரத்தின்கண் செல்லுகிறதோ அவனே முனிவன். பக்தியும் பணிவும், அருள்பித்தும் ஆண்டவனைப் போற்றும் அன்புப் பெருக்கும் உடையவன் எவனோ அவன் முனிவன்.

தில்லையில் அருளிய யாத்திரைப் பத்து

அனுபவ அதீதம் உரைத்தல்

அடியார்களை இறைவன் இப்படியும் அப்படியும் ஆட்கொள்ளுதல் உண்டோ என்று மெய்யன்பர்கள் நகைக்கும்படியான பாங்கில் அவன் நம்மை ஏற்றுள்ளான். அன்னவனை அடைய முயல்பவர்களே, நீங்கள் ஐம்பொறிவழி போகவேண்டாம். உலகப் பொருள்களை ஒதுக்கித் தள்ளுங்கள். சிவ சொரூபத்தில் கலந்து கொள்ள வாருங்கள்.

"தாமே தமக்குச் சுற்றமும் தாமே தமக்கு விதிவகையும்
யாம் ஆர் எமது ஆர் பாசம் ஆர் என்ன மாயம்இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும் அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு
போம் ஆறு அமைமின் பொய் நீக்கிப் புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே"

இறைவனது திருவருளைத் துணைக்கொண்டு அன்பர்கள் தங்களைத் தாங்களே உய்வித்தல் வேண்டும். அது ஒப்பற்ற வாழ்க்கை முறையாகும். இறைவனை மறந்து அகங்காரத்தையும், மமகாரத்தையும் வளர்ப்பது பெருமயக்கமாகும். மற்றுத் தொண்டர்களோடு தொடர்பு கொள்ளுதலில் கேடு இல்லை. அத்

தொடர்போ வாழ்வின் பெருங்குறியாகிய இறைவனிடம் கொண்டு சேர்க்கும்.

தனக்குத் தானே நண்பன்: ஒரு மனிதன் தான் அடைந்துள்ள சிறுமைக்கும், பெருமைக்கும் தானே பொறுப்பாளன். பகைவன் என்னைக் கெடுத்துவிட்டான் என்று நாம் குறைகூறுவது உண்டு. அப்படிக் கெடுப்பது ஒருநாளும் பகைவன் அல்லன். அறியாமையினாலும், சரியான வாழ்க்கை வாழாமையினாலும் மனிதன் தன்னையே கெடுத்துக் கொள்கிறான்; அப்படித் தன்னையே கெடுப்பதால் தனக்குத்தானே பகைவன் ஆகின்றான். நல்வாழ்க்கை வாழ்ந்து தன்னை எடுப்பவன் தனக்கே சுற்றமாகிறான். தனக்குத் தன்னிலும் மிக்கதொரு நண்பனோ பகைவனோ எவ்வுலகிலும் இல்லை என்பதை அறிபவன் வாழ்க்கையைப் பற்றிய ஒரு பேருண்மையை அறிபவன் ஆகிறான்.

ஆத்ம சாதனத்தில் தூங்காத தூக்கம்: பரம்பொருளை அல்லது தனது நிஜநிலையை, நாடி உள்நோக்கிச் செல்வது படிப்படியான பயிற்சிகளைத் தாண்டிச் செல்லும் முயற்சி. பேரறிஞன் தனது பேச்சை மனதில் ஒடுக்கவேண்டும்; மனதைப் பின்னர் புத்தியிலும், புத்தியை அகங்காரத்திலும், இறுதியாக அகங்காரம் சுத்த சைதன்யத்திலும் ஒடுக்கவேண்டும். அயர்ந்த உறக்கத்துக்குப் போகும்பொழுது இந்நிகழ்ச்சிகள் தாமாகவே நேர்கின்றன. அதனால் நாம் ஓய்வையும், தெளிவையும் பெறுகிறோம். நனவுலகில் இந்நிலையை வரவழைக்க முடியுமானால் இது சிறந்த ஆத்ம சாதனமாகும். இதைத் தூங்காததூக்கம் என்றும் நனவில் சுழுத்தி என்றும் பகர்வதுண்டு.

சேரவாரும் செகத்தீரே!

“அடியார் ஆனீர் எல்லீரும்
அகல விடுமின் விளையாட்டை
விடுமின் வெகுளி வேட்கை நோய்
மிகவோர் காலம் இனியில்லை
நிற்பார் நிற்க நில்லா உலகில்
நில்லோம் இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாம் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே”

முத்தியின் இலக்கணம்: நாமரூபத்தோடு கூடிய ஜகத்தாகவும், ஜீவனாகவும் தோன்றிய பரம்பொருளே சச்சிதானந்தமாயும்

இருப்பது. இகம், பரம் என்ற இரண்டு நிலைகளோ, பொருள்களோ இல்லை. ஜகத், ஜீவன், பரம் எனப் பலபொருள்களைக் காண்பவன் பிறப்பு, இறப்பு என்னும் சம்சார சாகரத்தினின்று மீளமாட்டான்; அவனுக்கு முத்திநிலை கிட்டாது.

யாண்டும் உள்ள ஒரு பொருளைப் பிரபஞ்சமாகவும் உயிர் வகைகளாகவும் பேதப்படுத்துவது அஞ்ஞானம். அலைகளாகக் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கிறபொழுதும் கடல் தன்மயமாகவே இருக்கிறது. பலப்பல நகைகளாகத் தோன்றினும் தங்கம் தங்கமே. இங்ஙனம் ஜகத், ஜீவன் என்பன; பசு, பாசம் என்பன வெறும் மனவிகாரங்களே. காணும் முப்பொருளாய ஜகத், ஜீவன், பரம் என்பனவற்றில் ஊடுருவி நிற்கும் ஒரே பொருள் சிவம் என ஞானத்தால் உணர்ந்து அந்தச் சிவத்தில் ஒடுங்குபவன் முத்தி அடைகிறான்.

தில்லையில் அருளிய திருப்படை எழுச்சி

பிரபஞ்சப் போராட்டம்

உலக வாழ்க்கை வேறு, ஞான வாழ்க்கை வேறு எனப் பொருள்படுத்தலாகாது என்பது பாரதப்போரில் விளைந்த பகவத் கீதையின் கோட்பாடு ஆகும். குருக்ஷேத்திர யுத்த களத்தில் யோகேஸ்வரனாகிய கிருஷ்ண பரமாத்மா கர்மயோகம், ராஜயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகிய சதுரங்க பலத்தை (நான்கு கூறுகளையுடைய அருள்படையை) அருச்சுனனுக்கு வழங்குகிறார். இந்த நான்கு படைகளையும் கையாளுகிற ஜீவாத்மன் அஞ்ஞானப் பகையை வென்று பரமனுக்கு உரியவன் ஆவான்.

மனிதன் படும் துன்பத்துக்கெல்லாம் காரணம் அஞ்ஞானம். ஞானவாள் ஒன்றே அஞ்ஞானத்தை அகற்றுதற்கு உற்ற உபாயம் இறைவனுடைய நாம ஜபம் அந்த மெஞ்ஞானத்தை வளர்க்கிறது. ஜீவாத்மனை வாகனமாகக் கொண்டு சிவன் வீற்றிருக்கிறார் என்னும் மெய்யுணர்வினின்று வீரம் பிறக்கிறது. திருநீறு வைராக்கியத்தின் சின்னம்—அதாவது பற்றை அழிப்பதே அஞ்ஞானப் பகையை ஒடுக்குதற்கு உற்ற உபாயம்.

"ஞானவாள் ஏந்தும் ஐயர் நாதப் பறை அறைமின்
மானம் மா ஏறும்ஐயர் மதிவெண்குடை கவிமின்
ஆன நீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள்
வானம் ஊர் கொள்வோம் நாம் மாயப்படை வாராமே"

மாணிக்கவாசகப் பெருமானது திருவாசகத்தில் ஓதப்படுகின்ற திருப்படை யெழுச்சிக்குப் பாரதப்போர் புறச்சின்னமாகிறது. கிருஷ்ண பரமாத்மா அருச்சுனனுக்குச் சாரதியாயிருந்தது போன்று ஜீவர்கள் அனைவர்க்கும் சாரதியாகிறார். குருட்டு அரசனாகிய திருதராட்டிரன் அஞ்ஞான இருளின் உருவகம் ஆகிறான். அவனுடைய மைந்தர் துரியோதனன் முதலிய நூறு பேர் அல்லலாம் மாயப்படை ஆகின்றனர். அவர்களை வென்று நல்வாழ்வை நிலைநாட்டுவது நல்லாருடைய குறிக்கோள்.

திருப்பெருந்துறையில் அருளிய திரு வெண்பா

அணைந்தோர் தன்மை: ஐயத்தை நீக்கும் ஐயன் இறைவன் ஏட்டுக்கல்வி எவ்வளவுதான் கற்றாலும் அதனால் ஐயம் அகலாது தீவிர வழிபாட்டாலும் ஐயம் அகலாது; சீலத்தாலும் ஐயம் தீராது. பரஞானம் வாய்க்கப்பெற்ற பின்பே ஐயங்கள் அனைத்தும் அறவே அகலுகின்றன. இது ஞானியர் சித்தாந்தம்

"செய்த பிழை அறியேன் சேவடியே கை தொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்பு அறியேன்—வையத்து
இருந்து உறையுள் வேல் மடுத்து என் சிந்தனைக்கேகோத்தான்
பெருந்துறையில் மேய பிரான்"

கடைத்தேறும் வகையறியாது கலங்கிய என் நெஞ்சில் இறைவன் ஞானவேல் எடுத்து அழுத்தமாகக் கோத்தான். எனது மயக்கம் மாய்ந்தது; தெளிவு ஓங்கியது. நான் உய்வு அடையலானேன்.

"பெருந்துறையுள் மேய பெருமான் பிரியாது
இருந்து உறையும் என் நெஞ்சத்து இன்று"

சித்தமிசை குடிகொண்ட சிவனைப் புறத்தில் தேடுவது செருக்கு தெளிவின்மைக்கு அறிகுறி. அவனை அகத்தில் தேடுகின்றவர்களுக்கு ஞானசித்தி விரைவில் வாய்க்கும். தொண்டர் உள்ளம் சிவனது பெருங்கோயில்.

மணிவாசகர் தாம் பெற்ற வீடுபேற்றை" வாரா வழியருளி" என்றும், "பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கு" என்றும் புகழ்மாலை சூட்டுகின்றார். அஞ்ஞானத்தில் உழலும் ஜீவன் தன்னை உடல் சொரூபம் என்று உணர்கிறான். ஆதலால் பிறப்பு இறப்பு என்னும் போக்கு வரவு அவனுக்கு உளது. பின்பு சிவஞானம் அவனுக்கு முத்தி நல்குகிறது.

திருப்பெருந்துறையில் அருளிய பண்டு ஆய நான்மறை

அனுபவத்துக்கு ஐயமின்மை உரைத்தல்

பழமையாகிய நான்கு வேதங்களுக்கும் எட்டாதவன் சிவன். ஆயினும் அடியவர்க்குக் காட்சி கொடுக்கும் அருளாளன் அவனே. சித்தமிசை நீங்காது குடி கொண்டிருக்கும் சிவசக்தியைச் சார்ந்திருக்குமளவு துன்பங்கள் மறைந்தொழிகின்றன.

> "காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பம் எனப்
> பேணும் அடியார் பிறப்பு அகலக்—காணும்
> பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
> பிரியானை வாய்ஆரப் பேசு"

உள்ளத்தினுள் அந்தர்யாமியாய் அமர்ந்திருந்து, ஆங்கு எழுகின்ற எண்ணங்களுக்கு எல்லாம் சாட்சியாயிருப்பவனைச் சாருமளவு நம்வாழ்வு நல்வாழ்வாகிறது.

தில்லையில் அருளிய திருப்படை ஆட்சி

அட்ட அஸ்திரங்கள்: ஆயுதம் இல்லாதவன் அரைமனிதன். ஆத்ம சாதனத்துக்கு உரிய படைக்கருவிகள் எட்டு பின் வருமாறு:—

1. நமச்சிவாய என்னும் நாமம் முதல் படை
2. அருள் தாகம்—உன் அருள் பெறுநாள் என்றென்றே வருந்துவனே (5-2.2)
3. ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை (8-7)
4. உடலைச் சுடுகாடு ஆகக் கருதி ஆசையைச் சுட்டெரித்தல் (கோயில் சுடுகாடு) (12-3)
5. யானே பொய் என் நெஞ்சம் பொய் என்று அழுதல் (5-9.10)
6. சரணகதி—நன்றே செய்வாய் பிழை செய்வாய் (33-7)
7. உள்ளந்தாள் நின்று உச்சியளவு நெஞ்சாய் உருகுதல் (5-3.1)
8. நான் கெட்டவாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ? ஜீவ உபாதி ஒழிதல். (11-18)

ஜீவ உபாதி ஒழிதலே வீடுபேறு: ஒருபொருள் தற்காலிகமாக எடுத்துக் கொள்ளும் வடிவத்துக்கு உபாதி என்று பெயர். கங்கை நீரும், சாக்கடை நீரும் நீரின் உபாதி நிலைகள்—நீராவியும், பனிக்கட்டியும் அவ்வாறே.

இதுபோன்று "புல் ஆகிப் புழுவாய் விலங்காய் மனிதனாய்" இருப்பது ஜீவாத்மாவின் உபாதி. ஒன்றின் பிறகு ஒன்று. மனித

உபாதி நிலையற்றது என்பதை சுழுத்தி அல்லது கனவற்ற உறக்கம் உறுதிப்படுத்துகிறது. நனவுக்கு வந்தவுடனே ஜீவ போதம் என்னும் உபாதியும் தோற்றத்துக்கு வருகிறது.

மனது என்னும் மாயை மாண்டு, காலதேச வர்த்தமானமும் அடிபட்டுப்போன இடத்தில் முக்கணங்களுக்கு அப்பாற்பட்ட நிர்விகற்ப சமாதி நிலை வாய்க்கிறது. கடலை ஆழம் பார்க்கப் போன உப்புப் பொம்மை தனது வடிவம் என்னும் உபாதியை இழக்கிறது; ஆனால் அதன் நிஜசொரூபம் ஆகிய அகண்டாகாரம் அதற்குச் சொந்தமாகிறது. கடலுக்குள் விழுகிற மழை நீர்த்துளி தனது வடிவம் என்னும் உபாதியை இழந்து கடல் என்னும் பெயரில் அகண்டாகாரமாகிறது.

இவ்வாறு சமாதிநிலையில் பரம்பொருளில் கலக்கின்ற ஜீவன் பரம்பொருள் ஆகின்றான். இதுவே சிதம்பர ரகசியம்-சிதம்பரத் திற்கு போனவர்கள் திரும்பி வருவதில்லை என்பதன் பொருள் போனவரது ஜீவ உபாதி அழிந்ததே. உபாதியை ஒழிக்கிற ஜீவன் சிவம் ஆகிறான். இதுவே அத்வைத சித்தி அல்லது வீடுபேறு.

மகா வாக்கியங்கள்: முடிவான உண்மையை ஒரு வாக்கியத்தில் விளக்குவது மகா வாக்கியத்தின் மாண்பு. நான்கு வேதங்களில் நான்கு மகா வாக்கியங்கள் உள்ளன.

பிரக்ஞானம் பிரம்மம்: பேரறிவுப் பெருவெளியே மெய்ப் பொருள்.

நான் இருக்கிறேன் என்னும் உணர்வு (பிரக்ஞை) உறக்கத்தில் மறைந்தும், சொப்பனத்தில் சிறிது விழிப்படைந்து நனவில் தெளிவடைகிறது. மனிதனிடத்து அது மாறுபாடு அடைவது போன்று தென்படுவது வெறும் அந்தக் கரணத்தின் செயலாம். அகிலாண்டங்களையும் தன்னகத்துத் தாங்கியுள்ள பிரக்ஞானமே யாண்டும் தன்மயமாய் இருக்கிறது. இந்தப் பிரக்ஞானமே சித் ஆகாசம், சிதம்பரம், பிரம்மம் எனப்படுகிறது.

அயம் ஆத்மா பிரம்மம்: அனந்தங் கோடி அலைகளாக இருப் பவைகள் கடலேயொழியக் கடலுக்கே அன்னியமானவைகளல்ல. இவ்வாறு ஜீவாத்மாக்கள் அனைவரும் பரமாத்மாவின் தோற்றங் களேயாகும்.

தத்துவம் அசி: எதை நீ நாடுகிறுயோ அதுவாக நீ இருக்கிறுய். ஜீவகோடிகள் சத்-சித்-ஆனந்தத்தைத் தேடித் திரிகின்றன. சச்சிதானந்தமாய் இருப்பது சிவன். நீ நாடுகிற ஈசுவரன் உன்னிடத்து இருக்கிருன். முடிவில் நீ அவனிடத்து ஒன்றுபடுகிருய்.

அகம் பிரம்ம அஸ்மி: நான் பிரம்மமாய் இருக்கிறேன் நகையைத் தங்கம் என்று சொல்லுவதுண்டு. சிறு நீராயிருக்கும் போதும் நீரின் நீர்மை போவதில்லை. அங்ஙனம் ஜீவாத்மாவாக விகாரப்பட்டிருக்கிற பொழுதும் சொரூபத்தில் அது பிரம்மமே. சாதனத்தின் கடைசிப் படிக்கு வந்தவன் நான் பிரம்மம் என்னும் போதத்தில் ஊறியிருப்பது அவசியமாகிறது. கடல் எட்டிய நதி தானே கடல் ஆவது போன்று பிரம்மத்தை அனுபூதியில் அறிகிற ஆத்மாவானவன் கற்பிதமாய் வந்துள்ள ஜீவன் அல்லன்; அவன் பிரம்மமே.

உலகம், ஜீவன், பரம்

சிவனுர் நடராசாவாகவும், சிதம்பர ரகசியமாகவும் ஏககாலத்தில் இருக்கிருர். தனிப் பொருளாகிய பரம்பொருள் இரண்டு நிலைகளில் உள்ளது. பரவஸ்து ஏககாலத்தில் சகுணப் பிரம்மமாகவும் நிர்க்குணப் பிரம்மமாகவும் இருக்கிறது. ஜகத், ஜீவன், பரம் ஆகிய முப்பொருள் உண்மையோடு கூடிய நிலை வியாவகாரிக சத் எனப்படுகிறது. ஆங்குக் காலதேச வர்த்தமானத்துக்கும், முக்குணங்களின் கூறுகளும் உள்ளன இது சகுணப் பிரம்மம் கடல் தனது மேற்பரப்பில் அலைவீசி ஆனந்தத் தாண்டவமாடுகிறது. அடித்தளம் அசைவற்றிருக்கிறது. பரமார்த்திக சத் என்னும் நிலையில் உள்ள பரவஸ்துவுக்கு நிர்க்குண பிரம்மம், சிதம்பரம் ரகசியம், சுத்த சிவம் என்னும் பெயர்கள் உண்டு.

ஜீவாத்மன் மாயைக்கும், காலதேச வர்த்தமானத்திற்கும் அடிமை. வர்த்தமானம் என்பது காரண காரியமாயிருக்கிற கர்மம். இதுவே இறைவனது பஞ்ச கிருத்தியங்களாகும். இறைவனுக்கு இது விளையாட்டாகவும் (நடராசரது கூத்தாகவும்) இருப்பினும், ஜீவாத்மன் இச்செயல்களில் கட்டுண்டு கிடக்கிருன்.

நிர்குணப் பிரம்மத்தில் இரண்டறச் சேர்வதே ஜீவாத்மாவின் முடிவான குறிக்கோள்.

முத்தியின் விளக்கம்: முக்தி, மோட்சம், பிரம்ம நிர்வாணம் கைவல்யம், வீடுபேறு ஆகிய பதங்கள் ஒரே கருத்துடையன. ஜீவாத்மன் ஜீவ உபாதி அல்லது உடல் உணர்வு நிலையினின்று விடுதலையடைவது முத்தி. பிறப்பு, இறப்பு சொரூபமாயிருக்கிற சம்சார சாகரத்தினின்று ஜீவாத்மன் முத்தியடைகிறன். அப்பொழுது வினைத்தளை அல்லது கர்மபந்தத்தினின்று அவன் விடுபடுகிறன்; உலக இன்ப துன்பங்களினின்று அவன் உய்வு அடைகிறன். 'யான் எனது" என்னும் செருக்கு ஒழிகிறது; தனது நிஜசொரூபத்தை மூடியிருக்கிற அஞ்ஞான இருளை அவன் அகற்றுகிறன்.

சாமானியமான ஜீவர்கள் (மந்த அதிகாரிகள்) பதவி முத்தியில் தொடங்கிப் படிப்படியாக கிரமமுத்தியை இறுதியில் அடைகிறர்கள். தீவிர அதிகாரிகள் இந்த இரண்டு நிலைகளையும் தாண்டி ஜீவன் முத்திக்குப் பக்குவம் அடைகிறர்கள்—இவர்களுக்கு இறைவன் முதலில் சவிகற்ப சமாதியையும் பிறகு நிர்விகற்ப சமாதியையும் அனுக்கிரகித்து அதீதத்தில் அத்வைத சித்தியில் கொண்டு சேர்க்கிறன். இப்படி முத்தி கொடுப்பது சிவன் செயல்.

முத்தியின் நான்கு படிகள்: அல்லல் நிறைந்த சூழ்நிலையினின்று விடுதலையடைந்து இன்பம் நிறைந்த சூழ்நிலையடைவது சாலோக்கியம். கடவுளின் உலகுக்கு உரியவன் என இது பொருள்படுகிறது. அந்த உலகில் ஈசுவரனுக்கு அருகில் வரப் பெறுகிறவன் சாமீப்பியம் என்னும் பதவியைப் பெறுகிறன். ஈசுவரனை சதா எண்ணியிருப்பதன் விளைவாக அவன் சாரூப்பியம் என்ற மேன்மையுறுகிறன். இறுதியில் இந்நிலையிலுள்ளோர் தங்களுடைய உபாதிகளைக் களைந்துவிட்டு அகண்ட சச்சிதானந்தத்தில் சாயுச்சியம் அடைகின்றனர். இது சிவத்துடன் இரண்டறக் கலக்கும் இறுதி நிலை.

ஆத்ம சாதகனது முத்திநிலை அனுபவங்கள்

திருப்படை ஆட்சி

"கண்களிரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படும் ஆயிடியே"

வேடனுக வந்து வலைவீசி மீன்பிடித்தல் என்னும் திருவிளையாடலை நடத்திய சிவன் என்னைத் தன்மயமாக்கிக் கொள்வாறுகில் அதன் விளைவு வருமாறு:

1. பஞ்சேந்திரியங்கள் பரபோதத்தில் செயலற்றுப் போகின்றன.

2. ஜீவ உபாதி ஒழிந்தவிடுத்த வழிபடுவோன், வழிபடு பொருள் என்னும் வேற்றுமையில்லை.

3. உடல் உயிர் வாழ்க்கை என்ற கோட்பாடு அதீதத்தில் இல்லை.

4. புண்ணியம் பாவம் என்று பாகுபடுத்திப் பாவத்துக்கு அஞ்சுதல் என்பதும் கிடையாது.

5. பந்தத்தை உண்டுபண்ணுவதற்காக விகாரப்பட்டிருக்கும் மூன்று குணங்களும் களைந்தெடுக்கப்படுகின்றன.

முக்தியின் விளக்கம்

பந்தத்துடன் கூடிய முக்குண நீக்கமே முக்தி: பந்தம் என்பது தளை அல்லது கட்டு. ஜீவர்களை வினையோடு கூடிய வாழ்க்கையில் கட்டிவைத்திருப்பது குணம். இதைக் கடந்து அதீதத்துக்குப் போகும் வரையில் ஜீவாத்மனுக்கு விடுதலையில்லை.

ஒரு பொருள் வேறு வடிவில் விளங்கும்பொழுது அது விகாரப்பட்டுள்ளதாகிறது. இதற்குச் சில சான்றுகள் தேவை. பால் தயிராக விகாரப்படுகிறது. சூரிய வெளிச்சம் முப்பட்டைக் கண்ணாடியில் (Prism) புகுந்து ஏழு நிறங்களாக விகாரப்படுகிறது. இவ்வாறு நிர்க்குணப் பிரம்மம் சகுணப் பிரம்மமாக விகாரப்படுகிறது—அதனின்று ஜகத்தும், ஜீவனும் தோற்றத்துக்கு வருகின்றன.

நிறம் ஏற்றிய மூவர்ணப் படங்களைப் போன்று (Tri colou. Pictures), இப்பிரபஞ்சமும் சத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று இந்தங்களால் ஆவது. சேதனம், அசேதனம் ஆகிய அனைத்தும் குண மூன்று குணங்களின் விளைவாம். இவைகளை முப்புரம் என்றும் கூறப்படுவதால், அம்பிகைக்குத் திரிபுரசுந்தரி என்னும் பெயர் வந்துள்ளது. முப்புரங்களுக்கும் சோபை கொடுப்பவள் அவளே—முக்குணங்களைச் சகுணப் பிரம்மம் அல்லது அம்பிகை ஆளுகின்றாள்.

முக்குணங்களில் கட்டுண்டு கிடக்கும் ஜீவாத்மா அவைகளை அழித்து ஒழித்து விட்டுத் தனது யதார்த்த நிலையாகிய நிர்க்குணப் பிரம்மத்தில் சமாதியின் வாயிலாக ஒன்றுபடுவதே முத்தியாகும். இந்நிலையில் காண்போன், காட்சி, காணப்படுகின்ற பொருள்

என்ற திரிபுடியில்லை. ஞானியும் சிவமும் சமாதியில் ஒன்றுபடுகின்றனர். பண்பட்ட மனதில் உதிக்கிற தெய்விக விருத்திக்குப் பாவனை என்று பெயர்—அதன் வாயிலாக வருகிற தெய்விகக் காட்சிக்குப் பாவ சமாதி என்று பெயர். யோக சாஸ்திரப்படி குண்டலினி சக்தி உச்சந்தலையில் எட்டுவது பரமானந்த விளைவு என்னும் பாவ சமாதி ஆகும். நிர்விகற்ப சமாதி இதற்கும் அடுத்த நிலை. கடலைச் சார்ந்த உப்புப்பொம்மை கடலின் சொருபத்தில் ஒன்றாகிவிடுகிறது.

காமத்தை வெல்லும் வழி

சிவஞானிகளுக்குப் பால் வேற்றுமை இல்லை; அவர் உள்ளத்தில் காமநோய்க்கும் இடமில்லை. ஆண்—பெண் வேற்றுமையில் உருவெடுப்பது காமவிகாரம். தேகாத்ம புத்தி அல்லது உடலைத் தான் என்று கருதுவதிலிருந்து காமம் உண்டாகிப் பிறவிப் பெருங்கடலைப் பேணுகிறது. சிவபக்தி ஓங்குதற்கு ஏற்ப மனிதன் காமத்தைவென்று மேன்மையுறுகின்றான். ஜீவர்களுடைய பிரதிநிதியாகிய கன்னியாகுமாரி சிவனை நாடித் தவம் புரிகின்றாள் சிவனாரோ முதலில் காமனைக் காய்ந்து சாம்பலாக்குகிறார். அதன் பிறகு குமரிக்கும் கடவுளுக்கும் திருமணம் நிகழ்கிறது. ஜீவன் காமத்தை வென்ற பிறகே சிவனுக்கு உரியவன் ஆகிறான் என்பது இதன் தத்துவம்.

ஆத்மா ஆனந்த சொருபம். தன்னிடத்துள்ள ஆனந்தத்தை அது பிறபொருள்கள்மீது சுமத்தி, மனதைக் கொண்டு அவைகளை நாடிச் செல்லுகிறது. இந்த நாட்டமே காமம். நீரில் அலை உண்டாவது போன்று காமம் மனதில் வடிவெடுக்கிறது. அலைகள் வீசும்போது நீரின் அடிப்பாகம் தென்படுவதில்லை. மனதில் காம அலைகள் வீசும்பொழுது அதற்கு அடிப்படையாயுள்ள ஆத்மாவின் ஆனந்த சொருபம் சிதறடைந்தது போன்று ஆய்விடுகிறது. காம அலைகள் அற்று மனது தேங்கியிருக்கும்போது ஆத்மாவின் ஆனந்த சொருபம் தனக்குத்தானே விளங்குகிறது. தான் உலகெல்லாம் தேடின இன்பம் தன்னிடத்தே இருக்கிறது என்று மனம் தெளிபவன் நிறைஞானி ஆகிறான். ஆத்ம திருப்தனே நிறைஞானி.

உயிருடனிருக்கும்போதே எவனொருவன் இறந்தவன் போலாகிறானோ, அதாவது எவனுடைய ஆசாபாசங்கள் பிணத்தின்கண் இல்லாமைபோன்று நசித்திருக்கின்றனவோ, அவன் தான் உண்மையான ஆத்ம ஞானியாவான்.

பிரகிருதியின் பாகுபாடுகள்: உடம்பின் பஞ்சகோசங்கள்

அந்தக்கரணம்: செயலுக்கு ஏற்ப ஒன்று அதற்கு நான்கு பெயர்கள் வாய்த்துள்ளன.

சித்தம்—நினைப்புக்கும் உணர்ச்சிகள் அனைத்துக்கும் உறைவிடம்.

மனம்—சங்கற்ப விகற்ப மயமாயிருத்தல்.

புத்தி—நல்லது கெட்டது என்று பாகுபடுத்தல்.

அகங்காரம்—செயலுக்குத் தன்னைக் கர்த்தாவாக்கல்.

புறக்கரணம்—5	அன்னமயகோசம், விக்ஞானமயகோசம்
தன்மாத்திரைகள்—5	பிராணமய கோசம்ஆனந்தமய கோசம்
பூதங்கள்—5	மனோமய கோசம்

சமாதி நிலைகள்: திருவடி திட்சை சாமானியமானதன்று. அது ஸ்பரிச திட்சை எனவும் பெயர் பெறுகிறது. பக்குவமாயுள்ள சிடனை அது அக்கணமே ஞானியாக மாற்றுகிறது. இது சவிகற்ப சமாதி (நிர்விகற்ப சமாதியில் குரு-சீடன் என்ற பேதம் போய் விடுகிறது,

"நன்றிது தீதென வந்த நடுக்கம் நடந்தன ஆகாதே
ஏறுடையான் எனை ஆள்உடைநாயகன்என்உள்புகுந்திடிலே"

"பந்த விகாரம் குணங்கள் பறிந்து மறிந்திடும் ஆகாதே
செந்துவர் வாய் மடவார் இடர்ஆனவை சிந்திடும் ஆகாதே"

"நாதன் அணித் திருநீற்றினை நித்தலும் நண்ணுவதாகாதே
மாமறையும் அறியா மலர்ப்பாதம் வணங்குதும் ஆகாதே"

"எல்லையில்மாக்கருணைக்கடல்இன்றுஇனிது ஆடுதும்ஆகாதே"

ஜீவ வியக்தியைத் துடைத்துவிட்டு நான் பரமாத்மாவில் ஒன்றித்திருக்கும்போது பக்தி நிலையில் கண்டு ரசித்த அனுபவங்களெல்லாம் அடிபட்டுப் போகின்றன.

பக்தி நிலையில் பக்தன் இறைவன் என்னும் கற்கண்டை அருந்த விரும்புகிறான். தானே கற்கண்டாக மாறிவிட அவனுக்கு விருப்பமில்லை. ஆயினும் நிர்விகற்ப சமாதியில் அவன் கற்கண்டாவது திண்ணம். நன்மை தீமை என்ற மயக்கமும், காமநாட்டமும் அழிவதோடு, ஆராதனையும் கருணை அனுபவமும் ஒழிந்து போகின்றன. அதீத நிலையில் இவை எல்லாம் அழிந்து போகின்றன.

பார்க்குமிடமெல்லாம் சிவலிங்க மயமாயிருப்பது காசியின் மகிமை. ஆயினும் ஆங்கு ஒரு நிறை ஞானி ஒரு சிவலிங்கத்தின் மேலேயே இருப்பாராம்—அவரை ஓர் நடமாடும் காசிவிசுவ நாதனுகவே காசிவாசிகள் கருதினர்களாம். திருநீறு பூசுதல், சிவலிங்கத்தை வணங்குதல் போன்ற சமய அனுஷ்டானங்களை எல்லாம் கடந்து அதீதத்துக்குப் போனவர் ஆவார் அவர் வேதங்களால் விளக்கமுடியாத திருவடியை வணங்க ஜீவ வியக்தி எஞ்சியிருப்பதில்லை.

உள்ளத்திலிருந்து அகற்றவேண்டிய ஆறு

காமம், குரோதம் (சினம்), லோப, மோக, மத, மாற்சரியம்
திரிவுபட்ட காட்சி மோகம் (delusion)
தற்பெருமை என்பதே மதம் (I-ness Conceit)
பிறரை அலட்சியப்படுத்துவது (மாத்சரியம்)

உலக வாழ்க்கையில் பற்றுவைத்திருப்பவனுச்கு அறம் பொருள், இன்பம், வீடு ஆகியவைகளை நாடவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. தன்னை சிவசொரூபமாக அனுபூதியில் அறிகிற ஞானிக்கு இவை யாவும் பொருளற்றவைகளாம்.

மாயையின் விளக்கம்

மயக்குஅறுதலே சமய சாதனையின் வெற்றி. எது இடையறுது நிலைமாறுகிறதோ அது மாயை. ஒருகணத்துக்கு முன்பு இருந்தது போன்று ஒருகணத்துக்குப் பின்பு அது இருப்பதில்லை. உலகங்களும், அவைகளில் உள்ள உயிர்வகைகளும் மாயா காரியங்களாகின்றன. அவைகளுக்கு நிலைபேறு இல்லை. ஆயினும் நிலைபேறு இருப்பதாக எண்ணுவது மயக்கம். மாயையின் சக்திக்கு ஓர் எடுத்துக்காட்டான கதை.

கதை: நாரதர்/கிருஷ்ணர். கிருஷ்ணருக்காக நீர் கொண்டு வரப்போன நாரதர் பெண்ணைக் கண்டு, மணந்து, குடும்ப வாழ்க்கை நடத்தி, ஆற்று நீரில் அமிழ்ந்தித் தத்தளித்தபோது தான் "ஈசா என்கதி இப்படியாயிற்றே" என்ருர். அப்பொழுது கிருஷ்ணன் அவரது முதுகைத் தொட்டு, புன்முறுவலுடன் "அரைமணி நேரமாக நான் நீருக்குக் காத்திருக்கிறேன்" என்ருராம். இந்த அரைமணி நேரத்தில் ஒரு ஜன்மம், குடும்ப வாழ்க்கை என்ற இயல்புகள் தோன்றி இருந்து, மாயமாய் மறைந்தும் போயின. நாரதர் கூறுகிருர், "பிரபோ, உமக்கு ஒரு நமஸ்காரம். உமது மாயையின் மோகன சக்திக்கு ஒரு நமஸ்காரம்."

காலம்: காலகாலன்: காலி: கால சொரூபமான அம்பிகைக்குக் காலீ என்று பெயர் அன்னை. பராசக்தியின் பல சொரூபங்களுள் ஒன்று காளிதேவி. காலீ என்ற சமஸ்கிருதச் சொல் காளி என்று தமிழில் திரிபுபட்டது. அவளின் கறுத்ததிருமேனிக்குக் காரணம்: முன்சென்ற காலமும், இனிவருவதும் காட்சிக்கு எட்டாதது ஆகையால் யார் கண்ணுக்கும் எட்டாத கரிய நிறம்.

காலத்தைக் குறித்துக் கலக்கு உறுவது ஜீவர்களின் இயல்பு. விவாகம், பிள்ளைப்பிறப்பு, மரணம் என்று இங்ஙனம் வாழ்வு முழுதும் காலத்தைப் பற்றிய கலக்கம். நல்வாழ்வு வாழ்கின்றவர்களுக்கு காலச்சக்கரம் ஓடுவது தெரிகிறதில்லை. இரண்டு நிகழ்ச்சிகளுக்கு இடையே இருப்பது காலம்.

சிவனுருக்குக் காலகாலன் என்பது ஒரு பெயர். அதாவது அவர் காலாதீதத்தில் இருக்கிறார். காலத்தை அளப்பது மனம்—நிர்விகற்பசமாதியில் மனாதீதத்துக்குப் போகிறவன் காலாதீதத்துக்குப் போகிறான். அவனுக்குக் காலத்தின் கலக்கம் அறுபடுதல் ஆகிறது.

ஆத்ம சாதனம்: அறியும் தன்மை உடையது ஆத்மா. அறிவு தன் சொரூபத்தைத் தானே அறிகிறது. நம்மை நாம் சரியாக ஆராய்ந்தால் இவ்வுண்மை விளங்கும். ஆத்ம சைதன்யமாக (Consciousness) விளங்கும் ஆத்மாவின் இருப்பு சொல்லுக்கு எட்டாதது. அது உணர்வுசொரூபம். தன்னைத்தானே காண்கிறது. பிரபஞ்சத்தைப் பற்றிய ஞானம் பொறிகளால் அறியப்பட்டாலும் பஞ்ச இந்திரியங்கள் ஆத்மாவை விளக்க வல்லவைகள் ஆகா.

ஆத்ம சாதனத்தில் முன்னேறுதற்கு ஏற்ப உபாதி நீங்கப் பெறுகிறது. முற்றிலும் உபாதியை ஒழிப்பவன் ஜீவன் முக்தன் ஆகிறான். தன்னை ஆண் என்றோ, பெண் என்றோ கருதுவது பிராந்தி அல்லது மயக்கம். தேகாத்ம புத்தி அல்லது உடலைத் தான் என்று கருதும் கீழ்மையினின்று அது உருவாகிறது. உடல் உள்ளம் ஆகியவை பிரகிருதியினின்று உண்டானவை அவைகளை ஆத்ம சொரூபத்தில் ஆரோபித்து வைத்துக்கொண்டு ஜீவாத்மன் தன்னை ஆண்பாலாகவோ பெண்பாலாகவோ கற்பனை பண்ணிப் பேதத்தை வளர்க்கிறான்.

அபேத நிலையை எட்டுதற்கு முதலில் மாற்றுக் கற்பனையைப் பண்ணிப் பழகவேண்டும்—எண்ணத்தில் ஆண் பெண்ணின்

இயல்பையும், பெண், ஆணின் இயல்பையும் பெற வேண்டும். பின்னர் உடலுணர்ச்சியை ஒதுக்குமளவு உபாதிகள் ஒடுங்குகின்றன. மனநிலையில் மீண்டும் சிறுர் ஆக வல்லவர்க்குச் சாதனம் எளிதாகின்றது. பாலர்பான்மையை எய்துபவர் பாக்கியவான்கள்.

இவ்வாறு வாசனைகளைத் தவிர்த்துவிட்டு, உபாதிகளை ஒழித்துவிட்டுத் தன்னை யாண்டும் சச்சிதானந்த சிவ சொரூபமாக உணர்பவன் அப்பெருநிலையை அடைகிறுன். நிர்விகற்ப சமாதியில் ஆண்—பெண் வேற்றுமை பாராட்டும் உபாதி அழிகிறது. தன் நிஜ சொரூபத்தில் திளைத்திருப்பது வீடுபேறு ஆகிறது.

சித்திகள் காலணு மதிப்புத் தான் உடையன.
"சினமிறக்கக் கற்ருலும், சித்தியெல்லாம் பெற்ருலும்
மனமிறக்கக் கல்லார்க்குச் சிவ சொரூபம் வாய்க்காது."

மரணம் என்ற பயம்: சுத்த சைதன்யத்தை நாடுகிறவன் தானே சுத்த சைதன்யமாய் இருந்து பழகுவது நல்ல ஆத்ம சாதனமாகிறது. மரணம் ஜீவாத்மனுக்கு உண்டு. மாறியமைகிற தேகத்தை அவன் தன்மயமாய் உணர்வதால் அதன் ஒடுக்கத்தைத் தனது சாவு என்று பொருள் படுத்துகிறுன். ஆனல் சுத்த சைதன்யிமாய் இருந்து பழகும் சாதன தசையிலேயே தனக்கு மரணமில்லை என்பதை அவன் உணர்கின்ருன். நிர்விகற்ப சமாதியில் அவன் அமிர்த சொரூபமான பரவஸ்துவில் ஒன்றுபடுகிருன் அமிர்த சொரூபம் என்ருல் மரணமடையாதது என்பது பொருள்.

"மிருத்தியோர்மா அமிர்தம் கமயா" என்பது வேத வாக்கு.

நிர்விகற்ப சமாதியில் உபாசனு மூர்த்தியும் உபாசகனும் ஒன்ருயினர்—அந்நிலையில் வாதவூரருக்கு வணங்குதற்குப் பொன் ஆர் மேனியன் இல்லை; தட்சணேஸ்வர வாசியாகிய ராம கிருஷ்ணருக்கும் அன்னை பராசக்தி இல்லை. இறுதி நிலையில் இருவர் அனுபவமும் ஒன்றேயாயிற்று.

நிஷ்காமிய கர்மம்: கர்மம் செய்கிறவனுக்குத் தன்னைக் கர்த்தாவாக உணரும் தன்மை வருகிறது. ஒவ்வொரு கர்மத்திலும் பாவம் புண்ணியம் ஆகிய இரண்டும் கலந்தே இருக்கின்றன. தன்னைக் கர்த்தாவாக உணராதவன் கர்மம் செய்கின்ற பொழுதும் செய்யாதவன் ஆகிருன். ஆழ்ந்த நித்திரையில் மூட்டைப் பூச்சியைத் தன் கையால் துடைத்துக் கொல்பவன் உண்மையில் கொலையாளி அல்ல. அத்தகைய மனநிலையை விழிப்பு

நிலையில் ஞானி கொண்டு வருகிருன். ஆதலால் அவன் பாவ புண்ணியங்களுக்கு அப்பாற்பட்டிருக்கிருன்.

சுகமும் துக்கமும் மனுே விகாரங்களாம். உண்ட சுகமும், பசியால் வாடிய துக்கமும் அயர்ந்து உறங்கும் போது இல்லை. சர்வகாலமும் இந்த நிலையில் இருப்பவன் ஞானி. வீட்டைப் பழுதுபார்ப்பது வீட்டு வாசியைப் பழுது பார்ப்பதாகாது. தேகத்துக்குக் கொடுக்கிற ஆகாரத்தை நான் ஏற்கிறேன் என்று ஞானி நினைப்பதில்லை. ஆதலால் உணவோ, உண்ணவோ, உண்பவனுே அவன் ஆவதில்லை. இது சாத்திய மாவது கடினம் அதனுல் பல்லாண்டுகளுக்கு ஒரு முறை ஞானி தோன்றுகிருன்.

குரு பக்தியின் விளக்கம்: நீ என்னை எவ்வாறு கருதுகின்ருய், என்று இராமபிரான் பக்தன் ஆஞ்சநேயனிடம் கேட்டார். அதற்கு அவன் கூறியது:—

"என்னிடத்து உடல் உணர்வு இருக்கும் போது
நீ ஆண்டான்,
நான் உன்னை விட்டு அகலாத அடிமை;
என்னிடத்து ஜீவாத்ம போதம் வரும்போது
நீ பூரணன், நான் உன்னில் ஓர் அம்சம்.
என்னிடத்து சுத்த சைதன்ய போதம் வரும்போது
நீயே நான், நானே நீ.
இது எனது முடிந்த அனுபவம்."

ஜீவப் பிரயத்தனமும் ஈசன் அருளும்: நெல்லை விதைத்தால் அது முளைத்துப் பயிர் ஆகிறது. ஆனல் அரிசி அங்ஙனம் முளைக்காது. அரிசியும் உமியும் ஒன்றித்திருப்பது நெல். முளைக்க வல்லதாய் நெல் இருப்பதில் ஜீவப் பிரயத்தனமும், ஈசனுடைய அருளும் சேர்ந்திருக்கின்றன. இறைவனது பஞ்ச கிருத்தியங்களே இயற்கையின் பரிணுமத்தின் வாயிலாக உயிர்களைப் படிப்படியாக உயர்நிலைக்குக் கொண்டு வருவது. மனித முயற்சி பயன்தராத இடத்து இறையருள் கூடவில்லை என்பது பொருள்.

இந்து மதத்தில் சாதிபேதம்

ஆதி சங்கரர் படித்த பாடம்: பிராமணியம் என்பது ஒரு பண்பு. அது ஓர் இனம் அன்று. படிப்பு, பண்பு, பணிவு ஆகிய இந்த மூன்றும் சேர்ந்து அமையப் பெற்றவன் பிராமணன். பணிவுக்குப்

பதிலாகச் செருக்கு அவனுள் புகுந்துவிடுமாகில் அவன் அழிந்து பட்டுப் போவான். இது வாழ்க்கைத் தத்துவம்.

சாதி பேதம் என்னும் இயற்கைக் கோட்பாட்டை இடைக் கால இந்தியா சரியாக அறிந்து கொள்ளவுமில்லை; நடைமுறையில் கொண்டுவரவுமில்லை. நாடு கீழ்மையுற்றதற்கும் வெளிநாட்டார் படையெடுத்து வந்து மக்களைத் தோற்கடித்ததற்கும் அடிப்படைக் காரணம் சாதிபேதக் கோட்பாட்டைச் சரியாக அனுட்டிக்கத் தெரிந்து கொள்ளாதிருந்ததேயாம். பிறவியில் கீழ் மக்கள் என்று ஒதுக்கிவைக்கப்பட்டவர்களைக் கைதூக்கி வைத்தது இஸ்லாமியப் படையெடுப்பு. தென்னாட்டில் பிறவியில் கீழ்மக்களாக ஒதுக்கி வைக்கப்பட்டவர்களைக் கைதூக்கி வைத்தது கிறிஸ்தவப் படையெடுப்பு,

பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வாச் செய் தொழில் வேற்றுமையால் என்னும் கோட்பாடு முற்றிலும் உண்மையாகாது. கோயில் பூசாரி வேலை எவ்வளவு புனித மானதோ அவ்வளவு புனிதமானது மலம் எடுக்கும் தோட்டி வேலையும்.சிறப்பு என்பது செய்யும் தொழில் எதுவானாலும் அதில் அதை நிறைவேற்றும் செம்மையிலேயே தங்கியுள்ளது. சமுதாய நலன் கோலுபவர் இக்கோட்பாடுகளை அறிந்திருப்பது மிக அவசியம்.

காசியில், "புலையா அப்புறம் எட்டிப்போ" என்று குறுக்கே வந்த வேடனைக் கடிந்தார் ஆதிசங்கரர். அவன் விடையில் ஞானோபதேசம் பெற்றார் சங்கரர்:—

"புலால் உடம்பைத் தான் என்று கருதுபவன் புலையன். துறவிக்கோலம் பூண்டிருக்கும் நீயே புலையன்; எட்டிப்போ என்று சொன்னாயே! பஞ்ச பூதங்களில் எது எதனிடத்திருந்து எட்டிப் போவது? ஆத்மா எங்கிருந்து எங்கே எட்டிப் போவது?" என்று எதிரில் வந்தவன் ஆட்சேபித்தான்.

"எனக்குத் தத்துவ விவேகம் புகட்டிய நீ யாராயிருப்பினும் உனக்கு ஒரு நமஸ்காரம்" என்றார் சங்கரர்.

காண்பேன் திருந்தியமைவதற்கு ஏற்பக் காணப்படுவது திருந்திய காட்சி தருகிறதுஎன்னும் கோட்பாட்டின்படி புலையனாக வந்தவன் இப்பொழுது பரமசிவனாகச் சங்கரருக்குத் தென்பட்டான். சாதி பேதம் அது முதல் அவர் உள்ளத்தை விட்டு அகன்று போயிற்று.

அழகை ரசிக்கும் இன்ப நாட்டமும் அதன் இருப்பிடமும்: தத்துவ தர்சிகளாகிய ரிஷிகளின் அனுபூதிகள் யாவும் நூலில்

வருவது இயலாத காரியம். ஓரளவு ஓதி வைத்த ஞானப் பொக்கிஷத்தை வேதம் என்பது உலக நடைமுறையாகும். உண்மையில் இயற்கைக்குத்தான் வேதம் என்று பெயர்—தானாகத் தோன்றி, அழியாது, பொய்யாது இருக்கும் பெருமை அதற்கே உரியது. மனிதனுடைய மனது வேதங்களுக்கு உறைவிடம்; ஞானக் களஞ்சியம். இந்த மனதைப் பக்குவப்படுத்துமளவு அதில் ஞானப்பிரகாசம் ஒளிர்கிறது. இயற்கையை நன்கு விளங்கியான பிறகு இயற்கைக்கு ஆதிமூலமாயிருக்கும் மெய்ப் பொருளையும் வேதம் விளக்குகிறது.

பரஞானம் என்பது வாழ்வின் முடிந்த குறிக்கோள்:- இதைத் தேடி அறிபவன் பிரம்ம ஞானி. மனதை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பரஞானத்தில் புகுவது மனிதனுக்குச் சாத்தியம். அகத்தில் இருப்பதைப் புறத்தில் தேடி அலைவது ஒரு ஜீவாத்மனுக்கு உலகில் இயல்பாகிவிட்டது. ஜீவாத்மன் ஆனந்தத்தைப் புறவுலகில் தேடியலைகிறான். அகப்படுகிற ஒவ்வொரு பொருளையும் பரீட்சை பண்ணிப் பார்க்கிறான். எது ஆனந்தத்தைக் கொடுக்கிறதோ அதே பொருள் பின்பு துக்கத்தையும் தருகிறது. இப்படி உலகமெல்லாம் தேடிப்பார்த்து விட்டுத் தான் தேடுகிற ஆனந்தம் தன்னிடத்தே இருக்கிறது என்பதை அறிய வருகிறான். கஸ்தூரி மானிடத்துக் கஸ்தூரி அதன் பருவத்தில் விளைகிறது. இப்படித் தன்னிடத்தேயே உண்டாகி மணம் பரப்பும் கஸ்தூரியைத் தேடிக் கஸ்தூரி மான் காடெல்லாம் அலைகிறது. மனிதன் ஆனந்தத்தைத் தேடி அலைவதும் இத்தகையதே.

அழகை ரசித்து, அனுபவித்தவன் பின்னர் அதற்குரிய பொருளைச் சொந்தமாக்க அலைகிறான். சொந்தமாவதற்கு முன்பு அழகாகத் தென்பட்டது சொந்தமானவுடனே சிறிது அழகை இழக்கிறது—நாளடைவில் அது அவனுக்கு அழகற்றதாகவே போய்விடுகிறது. மனம் மாறுகின்ற மாயத்தில் அழகு வடிவங்கள் ஒரு காலத்தில் அருவருப்பையும் ஊட்டி நிற்கின்றன.

ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகிற மனிதன் அழகு அனைத்தையும் தனது வழிபடு தெய்வத்திடத்துக் காண்கிறான். பிறகு தனது வழிபடுதெய்வமே அழகுப்பொருள்கள் அனைத்துமாய் இருக்கிறது எனக் காண்கிறான். இவ்வாறு அழகுத் தெய்வமே அகத்திலும், புறத்திலும் மிளிர்வது அவனுக்குப் பரமானந்தத்தை ஊட்டுகிறது. சாந்தம் சிவம் சுந்தரம் பிரம்மம் என்னும் ஆப்த வாக்கியம் அவனுக்கு அனுபூதியாக அமைகிறது. குமரனை முருகன் என்றும் கூறுவதன் உட்பொருள் அப்பொழுது விளங்குகிறது.

சாதியில் பிராமணன்யார்? சாதியில் மேலே வருவதற்கு ஒப்ப சாதி அபிமானம் உபாதி மனிதனிடம் வலுக்கிறது. அந்த உபாதி பிராமணனிடம் உச்சநிலை அடைகிறது. ஆரம்ப தசையில் அந்த உபாதி வேண்டப்படுமாலும் சமாதி நிலையில் ஜீவ உபாதியை ஒழிக்க முயலுங்கால் அது குறுக்கிட்டு இடைஞ்சல் செய்யும்.

மாயை: இயற்கைக்கு மாயை என்பது மற்றொரு பெயர். மாயையின் அமைப்பு நல்லதா கெட்டதா என்னும் கேள்வி ஓர் அறிஞரிடம் எழுந்தது. அதற்கு விடையாக அவர் பூனையின் பல் நல்லதா கெட்டதா என்று கேட்டார். இக்கேள்வியை ஓர் எலியிடம் கேட்டால் பூனையின் பல்லைவிடக் கொடியது உலகில் ஒன்றுமே இல்லை என்று இயம்பும். மற்றும் இதே கேள்வியைப் பூனைக்குட்டியிடம் கேட்டால் தன் தாய்ப்பூனையின் பல்லைவிட நல்லது உலகில் வேறு ஒன்றும் இல்லை என்று சொல்லும். பூனையின் பல் தன்னளவில் நல்லதுமன்று, கெட்டதுமன்று. அதனோடு தொடர்பு கொள்பவர் பாங்கிற்கு ஏற்ப அது நல்லதாகவோ கொடியதாகவோ காட்சி கொடுக்கிறது.

மாயை அல்லது இயற்கையின் தன்மை அத்தகையதே. நல்லார்க்கு மாயை அருள் நிறைந்தது; பொல்லார்க்கு அது பாதகம் நிறைந்தது. மாயை முற்றிலும் கர்ம சொரூபம். கர்மத்தில் நலம் கேடு ஆகிய இரண்டும் கலந்தே இருக்கின்றன. ஜீவர்களைப் பண்படுத்துதற்கு உலகம் நல்லது. ஆனால் நிர்விகற்ப சமாதி நிலையில் மாயையின் ஆதிக்கத்துக்கு இடமில்லை. இந்நிலையிலிருந்து உலகுக்கு வருபவனிடத்து கர்மத்துக்குத் தான் கர்த்தா என்ற எண்ணம் அவனைவிட்டு அறவே அகன்று போகிறது. அவன் செயல் யாவும் சிவன் செயலாகின்றன.

(சீர் அடியார்களுள் சீர்காழிச் செல்வன் ஞானசம்பந்தன் சிவனைத் தந்தையாகவும் தன்னை ஒரு ஞானச் செல்வனாகவும் கருதி வந்தார்)

தில்லையில் அருளிய ஆனந்த மாலை

சிவ அனுபவ விருப்பம்

"மின்நேர் அனைய பூங்கழல்கள்
அடைந்தார் கடந்தார் வியன் உலகம்
பொன்நேர் அனைய மலர்கொண்டு
போற்றா நின்றார் அமரர் எல்லாம்

கல்நேர் அனைய மனம் கடையாய்க்
　　கழிப்பு உண்டு அவலக் கடல் வீழ்ந்த
என்நேர் அனையேன் இனி உன்னைக்
　　கூடும் வண்ணம் இயம்பாயே".

உன் திருவடி அடைந்தோர் உலக வியவகாரங்களைத் தாண்டினர். கல்லையொத்த ஜட புத்தியுடையவன் நான். மிக மட்டமானவன் என்று அறிஞர்களால் தள்ளி வைக்கப்பட்டவன் நான். துன்பக்கடலில் வீழ்ந்து தவிக்கும் எனக்கு இனி உன்னை யடையும் வகையைச் சொல்லியருளுக.

"சீலமின்றி நோன்பு இன்றிச்
　　செறிவே இன்றி அறிவு இன்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
　　சுழன்று விழுந்து கிடப்பேனை"

நல்லொழுக்கம், விரதம், அடக்கம், விவேகம் என்பன எதுவும் இல்லை. நான் வீணில் அலைந்து திரிவது தோல்பாவைக்கூத்து ஆகும் அன்றோ?

தில்லையில் அருளிய அச்சோப் பதிகம்

அனுபவ வழி அறியாமை

மும்மல விளக்கம்: விகாரப்படும் பாங்கு உடையது மனம். அதன் விகாரமே மலமெனக் கருதப்படுகிறது. மனது நிர்விகாரம் அடையுங்கால் அது சித்த சுத்தி என்று சொல்லப்படுகிறது. ஆக மலம் என்பது மனப்பான்மையில் இருக்கிறது. பொருள் தன்னளவில் மலமன்று. உபாதிகளையெல்லாம் ஒழிக்குமிடத்து சித்த மலம் அறுபடுகிறது.

"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே"

ஜீவாத்மாவைச் சார்ந்துள்ள மும்மலங்களில் ஒன்று ஆணவம் என்று சொல்லப்படுகிறது. ஜீவனுக்கு அணுத்வம் அல்லது ஆணவம். அல்லது வடிவம் புகுத்துவது மலம். ஜீவாத்மனுக்கு ஜீவத்வம் என்னும் வடிவம் கற்பிதமாம். தனி வியக்தியற்ற ஜீவாத்மனுக்குத் தனி வியக்தியாகக் கருத வைப்பது மலம்.

இயக்கத்துக்கு வினை அல்லது கர்மம் என்று பெயர். இயங்குவது இயற்கை. மனது இயங்குகிறது. ஆதலால் அது கர்ம சொரூபம். சமாதியில் மனம் இயங்குவதில்லை. ஆதலால் அங்குக் கர்மமில்லை, சமாதியில் சித்தமலம் அறுபடுகிறது. பழவினைகள்

மாறுகின்றன. அல்லது அழிந்து போகின்றன. கர்மாதீதத்தை அடைவதும் சித்த மலம் அறுபடுவதும் ஒன்றாகும். கண்ணாடியில் உள்ள மேடு பள்ளம் புறப்பொருளை விகாரப்படுத்திக் காட்டுகிறது. இவ்வாறு மனதில் உள்ள முடிச்சு அல்லது கோணல் ஆத்ம சொரூபத்தைப் பிரபஞ்சமாக விகாரப் படுத்துகிறது. பதி, பசு, பாசம் என்பன மூன்றும் அனுதி என்பர்—ஆனால் பாசம் என்னும் விகாரம் அகலுங்கால் பசுவும், பதியும் ஒன்று என்ற ஞானம் உதயமாகிறது.

மனமும் ஆசையும் அற்ற கைவல்ய முக்தி: கடலில் அலைகள் கிளம்பிக் கொண்டிருப்பது போன்று சித்தத்தில் எண்ணங்கள் உதித்துக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்குச் சித்த விருத்தி என்று பெயர். முற்றிலும் விருத்தி நாசம் வாய்க்குங்கால் சித்தமலம் அறுபடுகிறது. யோகம் பூர்த்தியாகிறது.

மனதில் இருந்து நல்லவை, கெட்டவை ஆகிய எல்லாச் சமஸ்காரங்களையும் அதாவது மனதினுல் போடப்பட்ட பதிவுகள் எல்லாவற்றையும் விலக்கியோட்ட வேண்டும். அப்பொழுது சித்தமலம் அறுபடுகிறது சங்கற்ப, விகற்ப மயம் மனது என்று மனதுக்கு விளக்கம் தரப்பட்டிருக்கிறது. ஆசையோடு கூடிய தீர்மானம் சங்கற்பம் எனப்படுகிறது. ஆசையானது மனதுக்கு வேகம் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. ஆசையிருக்கும் வரையில் மனதை அடக்க முடியாது. ஆசையை ஆராய்ந்து பார்த்தால் அதறகுப் பிறப்பிடம் அஞ்ஞானம் என்பது வெளியாகும்.நல்லறிவைக் கொண்டு ஆசையை அறவே அகற்றுமிடத்து சங்கற்பம் ஒழிகிறது. முன் பிறப்பில் தோன்றிய சங்கற்பங்களை விகற்பம்—ஆசையற்ற இடத்திலும் இவை தோன்றுகின்றன. விகற்பமும் ஓயுமிடத்து அது நிர்விகற்ப சமாதி கூடுகிறது. ஜீவாத்மன் ஒழிகிறுன். இத்தனை வித விகாரங்களுக்கு ஆதாரமாயிருந்த சிதாகாசம் அல்லது சிதம்பரம் எஞ்சியிருக்கிறது. ஜீவ ஒடுக்கத்துக்கு கைவல்ய முக்தி என்று பெயர்.

சிவோஹம்—சிவம் நான் என உணர்தல்: மனதைச் செப்பனிடுவது சாதனம். முற்றிலும் மனபரிபாகம் ஆகியிருக்கின்றவனுக்கு ஞானகுரு ஞானுேபதேசம் செய்கிறுர். தத் த்வம் அசி—அதுவாக நீ இருக்கிறுய் என்பது அதன் பொருள். எதைத்தேடி எண்ணிறந்த பிறவிகளில் நீ அலைந்தாயோ அது உனது நிஜ சொரூபம் என்பது ஞானுேபதேசம். சித்தமலம் முற்றிலும் அறுபட்டவன் அகம் பிரம்மா அஸ்மி என்கிறுன். நான்

பிரம்மம் என்பது அதன் பொருள். பெயர் கொடாமல் பொருள் ஆராய்ச்சி செய்கிறவன் ஸோ ஹம்—அது நான் என்கிறான். பொருளுக்குச் சிவம் என்னும் பெயர் கொடுத்து ஆராய்ச்சி செய்கிறவன் சிவோ ஹம்—சிவம் நான் என்கிறான். இது மணி வாசகர் கண்ட "சிவமாக்கி எனையாண்ட அத்தன்" அனுபவம்.

"நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறு நெறிகள் சேராமே திரு அருளே சேரும் வண்ணம்
குறி ஒன்றும் இல்லாத கூத்தன் தன் கூத்தை எனக்கு
அறியும் வண்ணம் அருளிய ஆறு ஆர்பெறுவார்! அச்சோவே"

உலகவாழ்வை நாடியிருப்பது நன்னெறி என்று நான் நினைத் திருந்தேன். அது சிறுநெறியென்று காட்டியருளினான். பரமனையும், அவனது அருளையும் சார்வதுதான் பெருநெறி, அவன் நடராஜாவாகவும் அதாவது சகுணப் பிரம்மமாகவும், சிதம்பர ரகசியமாகவும் அதாவது நிர்க்குணப் பிரம்மமாகவும் இருப்பதைக் காட்டியருளினான்.

ஓங்காரத்து உட்பொருள்: ஓங்காரம் என்று சொல்லுவதும் பிரணவம் என்று சொல்லுவதும் ஒன்றே. அகர, உகர, மகரமாகிய மூன்று எழுத்துக்கள் ஒன்றித்த ஒலி இது. அகரம் உலகின் தோற்றத்திற்கும், உகரம் உலகின் இருப்புக்கும், மகரம் உலகின் ஒடுக்கத்துக்கும் உரிய ஓசைகளாம். ஆகவே ஓம் என்று பரமன் ஒரு தடவை பகருகிறபொழுது அண்டத்தின் சிருஷ்டி, ஸ்திதி சம்ஹாரம் ஆகியவை நிகழ்கின்றன. இயற்கையில் இடையறாது ஓம் என்னும் ஓசை ஒலித்துக் கொண்டிருக்கிறது. மந்திரங்களுள் எல்லாம் ஓங்காரம் உயர்ந்தது.

"செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மை மலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும் ஓர் பொருள் ஆக்கி நாய்சிவிகை ஏற்றுவித்து
அம்மை எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே"

அம்மை=வீடுபேறு, மோட்சம், பரம்.

உலக வாழ்வு என்னும் சிறுமையில் உழலும் என்னை, இதில் செல்லவேண்டாம் என்று இறைவன் என்னைத் தடுத்து நல்வழியில் நடாத்தினன். என்னிடத்து உள்ள குறையை நீக்கி என்னைத் தன்மயம் ஆக்கினன். பரத்தில் நான் ஒன்றுபடும்படி செய்தான். அதிசயங்களுள் இது பேர் அதிசயம் அல்லவா.

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!

திருச்சதகம்

மெய்யுணர்தல்

மெய்-தான் அரும்பி, விதிர்விதிர்த்து, உன் விரை ஆர்கழற்கு,என்
கை-தான் தலை வைத்து, கண்ணீர் ததும்பி, வெதும்பி, உள்ளம்
பொய்-தான் தவிர்ந்து, உன்னை, 'போற்றி, சய, சய, போற்றி
என்னும்
கை-தான் நெகிழவிடேன்; உடையாய்! என்னைக்கண்டு கொள்ளே

அறிவுறுத்தல்

நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து, நான் நடுவே
வீடு-அகத்தே புகுந்திடுவான், மிகப் பெரிதும் விரைகின்றேன்;
ஆடகச் சீர் மணிக் குன்றே! இடை அறா அன்பு உனக்கு, என்
ஊடு அகத்தே நின்று, உருகத் தந்தருள்; எம் உடையானே!

ஆன்ம சுத்தி

ஆடுகின்றிலை; கூத்துஉடையான் கழற்கு அன்புஇலை; என்புஉருகிப்
பாடுகின்றிலை; பதைப்பதும் செய்கிலை; பணிகிலை பாத மலர்
சூடுகின்றிலை; சூட்டுகின்றதும் இலை; துணை இலி பிண நெஞ்சே!
தேடுகின்றிலை; தெருவுதோறு அலறிலை; செய்வது ஒன்று
அறியேனே.

ஆனந்த பரவசம்

விச்சுக் கேடு பொய்க்கு ஆகாது என்று, இங்கு எனை வைத்தாய்;
இச்சைக்கு ஆனார் எல்லாரும் வந்து, உன் தாள் சேர்ந்தார்;
அச்சத்தாலே ஆழ்ந்திடுகின்றேன்; ஆரூர் எம்
பிச்சைத் தேவா, என் நான் செய்கேன்? பேசாயே.

பேசப்பட்டேன் நின் அடியாரில்; திருநீறே
பூசப்பட்டேன்; பூதலரால், உன் அடியான் என்று,
ஏசப்பட்டேன்; இனிப் படுகின்றது அமையாதால்;
ஆசைப்பட்டேன்; ஆட்பட்டேன்; உன் அடியேனே.

யானே பொய்; என் நெஞ்சும் பொய்; என் அன்பும் பொய்;
ஆனால், வினையேன் அழுதால், உன்னைப் பெறலாமே?
தேனே, அமுதே, கரும்பின் தெளிவே, தித்திக்கும்
யானே, அருளாய்—அடியேன் உனை வந்து உறுமாறே.

ஆனந்தாதீதம்

மாறு இலாத மாக் கருணை வெள்ளமே!
வந்து முந்தி நின் மலர்கொள் தாள்-இணை,
வேறு இலாப் பதப் பரிசு பெற்ற, நின்
மெய்ம்மை அன்பர், உன் மெய்ம்மை மேவினார்;
ஈறுஇலாத நீ, எளியை ஆகி வந்து,
ஒளிசெய் மானிடம் ஆக, நோக்கியும்,
கீறு இலாத நெஞ்சு உடைய நாயினேன்
கடையன் ஆயினேன்—பட்ட கீழ்மையே.

இழித்தனன் என்னை யானே; எம்பிரான் போற்றி! போற்றி!
பழித்திலேன் உன்னை; என்னை ஆளுடைப் பாதம் போற்றி!
பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை;போற்றி!
ஒழித்திடு இவ் வாழ்வு; போற்றி! உம்பர் நாட்டு எம்பிரானே!

காருணியத்து இரங்கல்

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா, போற்றி! வான
விருத்தனே, போற்றி! எங்கள் விடலையே, போற்றி! ஒப்புஇல்
ஒருத்தனே, போற்றி! உம்பர் தம்பிரான், போற்றி! தில்லை
நிருத்தனே, போற்றி! எங்கள் நின்மலா, போற்றி! போற்றி!

போற்றி! ஓ, நமச்சிவாய! புயங்கனே, மயங்குகின்றேன்;
போற்றி! ஓ, நமச்சிவாய! புகல் இடம் பிறிது ஒன்று இல்லை;
போற்றி! ஓ, நமச்சிவாய! புறம் எனைப் போக்கல், கண்டாய்;
போற்றி! ஓ, நமச்சிவாய! சய! சய! போற்றி! போற்றி!

நீத்தல் விண்ணப்பம்

என்னை 'அப்பா, அஞ்சல்,' என்பவர் இன்றி, நின்று
எய்த்துஅலைந்தேன்!

மின்னை ஒப்பாய், விட்டிடுதி கண்டாய்?
உவமிக்கின், மெய்யே
உன்னை ஒப்பாய்; மன்னும் உத்தரகோச
மங்கைக்கு அரசே
அன்னை ஒப்பாய்; எனக்கு அத்தன் ஒப்பாய்; என்
அரும் பொருளே!

பொருளே, தமியேன் புகல்-இடமே, நின்
புகழ் இகழ்வார்
வெருளே, எனை விட்டிடுதி கண்டாய்?
மெய்ம்மை யார்விழுங்கும்
அருளே, அணி பொழில் உத்தரகோச
மங்கைக்கு அரசே,
இருளே, வெளியே, இக-பரம் ஆகி
இருந் தவனே.

இருந்துஎன்னை ஆண்டுகொள்; விற்றுக்கொள் ஒற்றிவை;
என்னின் அல்லால்,
விருந்தினனேனை, விடுதி கண்டாய்?—மிக்க
நஞ்சு அமுதா
அருந்தினனே, மன்னும் உத்தரகோச
மங்கைக்கு அரசே
மருந்தினனே, பிறவிப் பிணிப்பட்டு
மடங்கினர்க்கே.

அற்புதப் பத்து

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பல செய்து
நான் எனது எனும் மாயம்
கடித்த வாயிலே நின்று முன்வினை மிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்று அப்பெருமறை தேடிய
அரும் பொருள் அடியேனை
அடித்து அடித்து அக்காரம் தீற்றிய
அற்புதம் அறியேனே.

திருப்புலம்பல்

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரையான் வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத்து அமர்ந்துறையும் கூத்தா உன்குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

திரு அம்மானை

செம் கண் நெடுமாலும் சென்று இடந்தும், காண்பு-அரிய
பொங்கு மலர்ப் பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பு அறுத்திட்டு, எம் தரமும் ஆட்கொண்டு,
தெங்கு திரள் சோலை, தென்னன் பெருந்துறையான்
அம் சணன், அந்தணன் ஆய், அறைகூவி, வீடு அருளும்
அம் கருணை வார் கழலே—பாடுதும் காண்; அம்மானாய்!

முன்னானை, மூவர்க்கும்; முற்றும் ஆய், முற்றுக்கும்
பின்னானை; பிஞ்ஞகனை: பேணு பெருந்துறையின்
மன்னானை: வானவனை; மாது இயலும் பாதியனை;
தென் ஆனைக்காவானை; தென் பாண்டி நாட்டானை
என்னானை, என் அப்பன்' என்பார்கட்கு இன் அமுதை
அன்னானை; அம்மானை—பாடுதும் காண்; அம்மானாய்!

திருப் பொற்சுண்ணம்

முத்து நல் தாமம், பூமாலை, தூக்கி.
முளைக்குடம், தூபம், நல் தீபம், வைம்மின்!
சத்தியும், சோமியும், பார்-மகளும்,
நா-மகளோடு பல்லாண்டு இசைமின்!
சித்தியும், கௌரியும், பார்ப்பதியும்,
கங்கையும், வந்து, கவரி கொள்மின்!
அத்தன், ஐயாறன், அம்மானைப் பாடி,
ஆட, பொற்சுண்ணம் இடித்தும், நாமே!

ஞானக் கரும்பின், தெளியை, பாகை
நாடற்கு அரிய நலத்தை, நந்தாத்
தேனை, பழச் சுவை ஆயினானை,
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனை, பிறப்பு அறுத்து, ஆண்டுகொண்ட
கூத்தனை; நாத் தழும்பு ஏற வாழ்த்தி,
பானல் தடம் கண் மடந்தை-நல்லீர்!
பாடி, பொற்சுண்ணம் இடித்தும், நாமே!

திருக் கோத்தும்பி

பூ ஏறு கோனும், புரந்தரனும், பொற்பு அமைந்த
நா ஏறு செல்வியும், நாரணனும், நான்மறையும்,
மா ஏறு சோதியும், வானவரும், தாம் அறியாச்
சே ஏறு சேவடிக்கே—சென்று ஊதாய்; கோத்தும்பீ!

நான்ஆர்? என் உள்ளம் ஆர்? ஞானங்கள்ஆர்? என்னையார்
அறிவார்

வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்? மதி மயங்கி
ஊன் ஆர் உடை தலையில் உண் பலி தேர் அம்பலவன்
தேன் ஆர் சமலமே—சென்று ஊதாய்; கோத்தும்பீ!

திரு எம்பாவாய்

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீர் அடியோம்
உன் அடியார் தாள் பணிவோம்; ஆங்கு அவர்க்கே பாங்கு
ஆவோம்;
அன்னவரே எம் கணவர் ஆவார்; அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்;
இன்ன வகையே எமக்கு எம் கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம்—ஏல் ஓர் எம்பாவாய்!

போற்றி! அருளுக, நின் ஆதி ஆம் பாத மலர்
போற்றி! அருளுக, நின் அந்தம் ஆம் செம் தளிர்கள்
போற்றி! எல்லா உயிர்க்கும் தோற்றம் ஆம் பொன் பாதம்
போற்றி! எல்லா உயிர்க்கும் போகம் ஆம் பூம் கழல்கள்
போற்றி! எல்லா உயிர்க்கும் ஈறு ஆம் இணை-அடிகள்
போற்றி! மால், நான்முகனும், காணாத புண்டரிகம்
போற்றி! யாம், உய்ய, ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்
போற்றி! யாம் மார்கழி நீர் ஆடு—ஏல் ஓர் எம்பாவாய்!

கோயில் மூத்த திருப்பதிகம்

உடையான், உன்-தன் நடுவு, இருக்கும்;
உடையாள் நடுவுள், நீ இருத்தி;
அடியேன் நடுவுள், இருவீரும்
இருப்பதானால், அடியேன், உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய்—பொன்னம்பலத்து எம்
முடியா முதலே! என் கருத்து
முடியும் வண்ணம், முன் நின்றே!

'அரைசே! பொன்னம்பலத்து ஆடும்
அமுதே! என்று உன் அருள் நோக்கி,
இரை தேர் கொக்கு ஒத்து, இரவு பகல்,
ஏசற்று இருந்தே, வேசற்றேன்;

கரை சேர் அடியார் களி சிறப்ப,
காட்சி கொடுத்து, உன் அடியேன்பால்,
பிரை சேர் பாலின் நெய் போல,
பேசாது இருந்தால், ஏசாரோ?

ஏசா நிற்பர், என்னை; உனக்கு
அடியான் என்று, பிறர் எல்லாம்
பேசா நிற்பர்; யான்-தானும்
பேணு நிற்பேன், நின் அருளே;
தேசா! நேசர் சூழ்ந்து இருக்கும்
திருவோலக்கம் சேவிக்க,
ஈசா! பொன்னம்பலத்து ஆடும்
எந்தாய்! இனித்தான் இரங்காயே!

'இரங்கும் நமக்கு அம்பலக் கூத்தன்'
என்று-என்று, ஏமாந்திருப்பேனை
அரும் கற்பனை கற்பித்து, ஆண்டாய்;
ஆள்வார் இலி மாடு ஆவேனோ?
நெருங்கும் அடியார்களும், நீயும்,
நின்று, நிலாவி, விளையாடும்
மருங்கே சார்ந்து. 'வர' எங்கள்
வாழ்வே, 'வா' என்று அருளாயே!

அருளாது ஒழிந்தால். அடியேனை,
'அஞ்சேல்' என்பார் ஆர், இங்கு?
பொருளா, என்னைப் புகுந்து, ஆண்ட
பொன்னே! பொன்னம்பலக் கூத்தா!
மருள் ஆர் மனத்தோடு, உனைப் பிரிந்து,
வருந்துவேனை, 'வா' என்று, உன்
தெருள் ஆர் கூட்டம் காட்டாயேல்
செத்தே போனுல், சிரியாரோ?

கோயில் திருப்பதிகம்

மாறி நின்று. என்னை மயக்கிடும் வஞ்சப்
புலன் ஐந்தின் வழி அடைத்து; அமுதே
ஊறி நின்று; என் உள் எழு பரஞ்சோதி!
உள்ளவா காண வந்தருளாய்:
தேறலின் தெளிவே! சிவபெருமானே!
திருப்பெருந்துறை உறை சிவனே!

ஈறு இலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடைய அன்பே!
அன்பினால், அடியேன் ஆவியோடு, ஆக்கை
ஆனந்தமாய்க் கசிந்து உருக
என் பரம் அல்லா, இன் அருள் தந்தாய்;
யான், இதற்கு இலன் ஓர் கைம்மாறு
முன்பும் ஆய், பின்பும், முழுதும், ஆய், பரந்த
முத்தனே! முடிவு இலா முதலே!
தென் பெருந்துறையாய்! சிவபெருமானே!
சீர் உடைச் சிவபுரத்து அரைசே!

இன்று, எனக்கு அருளி, இருள் கடிந்து, உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பு அற நினைந்தேன்;
நீ அலால் பிறிது மற்று இன்மை;
சென்று-சென்று, அணுவாய்த் தேய்ந்து-தேய்ந்து, ஒன்று ஆம்
திருப்பெருந்துறை உறை சிவனே!
ஒன்றும் நீ அல்லை; அன்றி, ஒன்று இல்லை;
யார் உன்னை அறியகிற்பாரே?

தந்தது, உன்-தன்னை; கொண்டது, என்-தன்னை;
சங்கரா! ஆர்-கொலோ, சதுரர்?
அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்;
யாது நீ பெற்றது ஒன்று. என்பால்?
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்!
திருப்பெருந்துறை உறை சிவனே!
எந்தையே! ஈசா! உடல் இடம் கொண்டாய்:
யான் இதற்கு இலன், ஓர் கைம்மாறே!

புணர்ச்சிப் பத்து

ஆற்றகில்லேன் அடியேன்; அரசே!
அவனி-தலத்து ஐம் புலன் ஆய
சேற்றில் அழுந்தாச் சிந்தை செய்து
'சிவன், எம்பெருமான்', என்று ஏத்தி
ஊற்று மணல் பால், நெக்கு-நெக்கு
உள்ளே உருகி, ஓலம் இட்டு
போற்றிப் புகழ்வது என்று-கொல்லோ—என்
பொல்லா மணியைப் புணர்ந்தே?

செத்திலாப் பத்து

பொய்யனேன் அகம் நெகப் புகுந்து, அமுது ஊறும்,
புது மலர்க் கழல் இணை-அடி பிரிந்தும்
கையனேன், இன்னும் செத்திலேன்; அந்தோ!
விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன்
ஐயனே! அரசே! அருள் பெரும் கடலே!
அத்தனே! அயன், மாற்கு, அறி ஒண்ணாச்
செய்ய மேனியனே! செய்வகை அறியேன்;
திருப்பெருந்துறை மேவிய சிவனே!

அருள் பத்து

சோதியே! சுடரே! சூழ் ஒளி விளக்கே!
சுரி குழல், பணை முலை மடந்தை
பாதியே! பரனே! பால் கொள் வெள் நீற்றாய்!
பங்கயத்து அயனும், மால், அறியா
நீதியே! செல்வத் திருப்பெருந்துறையில்
நிறை மலர்க் குருந்தம் மேவிய சீர்
ஆதியே! அடியேன் ஆதரித்து அழைத்தால்
'அதெந்துவே?' என்று, அருளாயே!

யாத்திரைப் பத்து

பூ ஆர் சென்னி மன்னன், எம்
புயங்கப் பெருமான், சிறியோமை
ஓவாது உள்ளம் கலந்து, உணர்வு ஆய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்,
ஆ! ஆ!' என்னப் பட்டு, அன்பு ஆய்
ஆட்பட்டீர், வந்து ஒருப்படுமின்;
போவோம்; காலம் வந்தது காண்;
பொய் விட்டு, உடையான் கழல் புகவே.

வாழாப் பத்து

பாரொடு, விண்ணாய், பரந்த, எம் பரனே!
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய், சிவபுரத்து அரசே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
ஆரொடு நோகேன்? ஆர்க்கு எடுத்து உரைக்கேன்?
ஆண்ட நீ அருளிலையானால்

வார் கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்;
'வருக' என்று, அருள் புரியாயே.

கண்ட பத்து

இந்திரிய வயம் மயங்கி, இறப்பதற்கே காரணம் ஆய்,
அந்தரமே திரிந்து போய், அரு நரகில் வீழ்வேனைச்
சிந்தை-தனைத் தெளிவித்து, சிவம் ஆக்கி, எனை ஆண்ட
அந்தம் இலா ஆனந்தம்—அணி கொள் தில்லைக் கண்டேனே!

சாதி, குலம், பிறப்பு, என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதம் இலி நாயேனை, அல்லல் அறுத்து; ஆட்கொண்டு;
பேதை குணம், பிறர் உருவம், யான், எனது, என் உரை
மாய்த்து;
கோது இல் அமுது ஆனானை—குலாவு தில்லைக் கண்டேனே!

திரு வெண்பா

வெய்ய வினை இரண்டும் வெந்து அகல, மெய் உருகி
பொய்யும் பொடி ஆகாது; என் செய்கேன்?—செய்ய
திரு ஆர் பெருந்துறையான் தேன் உந்து செம் தீ
மருவாது இருந்தேன் மனத்து.

ஆர்க்கோ? அரற்றுகோ? ஆடுகோ? பாடுகோ?
பார்க்கோ? பரம்பரனே, என் செய்கேன்?—தீர்ப்பு-அரிய
ஆனந்த மால் ஏற்றும் அத்தன், 'பெருந்துறையான்-
தான்' என்பார் ஆர் ஒருவர் தாழ்ந்து?

பண்டு ஆய நான்மறை

பண்டு ஆய நான்மறையும் பால் அணுகா; மால், அயனும்
கண்டாரும் இல்லை; கடையேனைத் தொண்டு ஆகக்
கொண்டருளும் கோகழி எம் கோமாற்கு, நெஞ்சமே!
உண்டாமோ கைம்மாறு? உரை.

உள்ள மலம் மூன்றும் மாய, உகு பெரும் தேன்
வெள்ளம் தரும், பரியின் மேல் வந்த, வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள்; வாழ்த்த
கருவும் கெடும், பிறவிக் காடு.

திருப்படை ஆட்சி

கண்கள் இரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதே?
காரிகையார்கள்-தம் வாழ்வில் என் வாழ்வு கடைப்படும்
ஆகாதே?
மண்களில் வந்து பிறந்திடும் ஆறு மறந்திடும் ஆகாதே?
மால் அறியா மலர்ப் பாதம் இரண்டும் வணங்குதும் ஆகாதே?

பண் களிகூர்தரு பாடலொடு ஆடல் பயின்றிடும் ஆகாதே?
பாண்டி நல்நாடு உடையான் படை-ஆட்சிகள் பாடுதும் ஆகாதே?
விண் களி கூர்வது ஓர் வேதகம் வந்து வெளிப்படும் ஆகாதே?
மீன் வலை வீசிய கானவன் வந்து வெளிப்படும் ஆயிடிலே!

ஆனந்த மாலை

என்னால் அறியாப் பதம் தந்தாய்;
யான் அது அறியாதே கெட்டேன்:
உன்னால் ஒன்றும் குறைவு இல்லை;
உடையாய், அடிமைக்கு யார்? என்பேன்;
பல் நாள் உன்னைப் பணிந்து ஏத்து
பழைய அடியரொடும் கூடாது
என் நாயகமே! பிற்பட்டு, இங்கு
இருந்தேன்—நோய்க்கு விருந்தாயே.

அச்சோப் பதிகம்

முத்தி நெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனை
பத்தி நெறி அறிவித்து, பழ வினைகள் பாறும் வண்ணம்
சித்த மலம் அறுவித்து, சிவம் ஆக்கி, எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளிய ஆறு, ஆர் பெறுவார்? அச்சோவே!

செம்மை நலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மை மலம் அறுவித்து, முதல் ஆய முதல்வன்-தான்
நம்மையும் ஓர் பொருள் ஆக்கி, நாய் சிவிகை ஏற்றுவித்த
அம்மை எனக்கு அருளிய ஆறு, ஆர் பெறுவார்? அச்சோவே!

தில்லைச் சிதம்பரத்தின் சிறப்பும் திருநடனத்தின் சமய தத்துவமும்

சிதம்பர வழிபாடு

சிதம்பர வரலாறு

தில்லைத் திருத்தலம் தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம் வட்டத்தில் அதன் தலைநகராக அமைந்துள்ளது. மேற்கே நாகச்சேரியும், வடக்கே வெள்ளாறும், கிழக்கே திருவேட்களமும் அண்ணாமலை நகரும், தெற்கே திருநெல்வாயிலும் திருக்கழிப்பாலையும் கொள்ளிடப் பேராறும் இதற்கெல்லைகளாக அமைந்துள்ளன. இந்நான்கெல்லைக்குட்பட்ட இந்நகர் 1871-இல் முனிசிபல் நகரமாயிற்று. நகரின் பரப்பு 1.84 சதுர மைல். மக்கள் தொகை 1961-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 40694.

தில்லைச்சிதம்பரம் மிகப் பழைமையானது. இதன் வரலாறு வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டது. தில்லை என்பது ஊரின் பெயர். சிதம்பரம் என்பது கோயிலின் பெயர். கோயிலின் பெயரே இப்போது ஊர்ப்பெயராக வழங்குகிறது. கோயில், சிற்றம்பலம், புலியூர், பெரும்பற்றப்புலியூர் என்பன இதன் வேறு பெயர்கள். இது சோழநாட்டு, காவிரி வடகரைத் தலம். பஞ்சபூதத் தலங்களுள் ஆகாயத் தலம். ஆறுதாரத் தலங்களுள் அநாகதத் தலம்.

பதஞ்சலியும் வியாக்கிரபாதரும் தில்லையை வழிபட்டுத் திருநடனங் கண்டனர். சமயகுரவர் நால்வரும் இதனை வழிபட்டுப் பாடியுள்ளனர். திருஞானசம்பந்தர் பதிகம் 2,

திருநாவுக்கரசர் பதிகம் 8, சுந்தரர் பதிகம் 1, ஆகப் 11 பதிகங்கள் இதற்கு உள்ளன. திருவாசகப் பதிகங்கள் 51-இல் 25 பதிகங்கள் தில்லையில் அருளியவையே. 'தில்லை பாதி திருவாசகத்தில்' என்பது பழமொழி. திருக்கோவையார் திருச்சிற்றம்பலவரையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டமையால் திருச்சிற்றம்பலக் கோவையார் என்றும் வழங்கப்படும். திருமூலர், பட்டினத்தார், அருணகிரியார், தாயுமானுர், இராமலிங்க அடிகள் ஆகிய ஞானிகளும் இதனை வழிபட்டுப் பாடியுள்ளனர். இதனை வழிபடாத ஞானிகளும் பெரியோர்களும் இல்லை எனலாம்.

தில்லைத் திருக்கோயில் 40 ஏக்கர் பரப்புடையது. பல காலங்களில் பல மன்னர்களால் திருப்பணி செய்யப்பெற்று விளங்குவது. இறைவன் லிங்க வடிவில் எழுந்தருளியுள்ள மூலத்தானம் திருமூலட்டானம் எனப்படும். இறைவன் திருப்பெயர் திருமூலட்டானேசுவரர். கூத்தப்பெருமான் எழுந்தருளித் திருநடனம் புரியும் இடம் சிற்சபை. தமிழகத்தின் ஐம்பெருஞ் சபைகளுள் இதுவே தலைமையானது. ஐம்பெருஞ் சபைகளுள் ஒன்றான இச்சிதம்பரம் தனக்குள்ளும் ஐந்து சபைகளை உடையது.

நடராசப் பெருமானது சந்நிதிக்கருகில் திருமால், கோவிந்தராசர் என்னும் திருநாமத்துடன் விளங்குகிறார். கோவிந்தராசர் எழுந்தருளியுள்ள இடம் திருச்சித்ரகூடம் எனப்படும். 108 வைணவத் திருப்பதிகளுள் இத்திருச்சித்ரகூடமும் ஒன்று. இதனைக் குலசேகரப் பெருமாளும் திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனஞ் செய்துள்ளனர்.

தல வரலாற்றைக் கூறும் புராணங்களும் நூல்களும் பல. கோயிற்புராணம், சிதம்பர புராணம், தில்லைவன மான்மியம், சிதம்பர விலாசம், சிதம்பர ரகசியம், தில்லை உலா, தில்லைக் கலம்பகம் என்பன அவற்றுட் சில. வடமொழியிலும் பல நூல்களும் புராணங்களும் உள. இதன் வரலாறாகக் கூறவேண்டியன இன்னும் பல உளவெனினும் விரிவஞ்சி விடுத்தாம். அடுத்துக் கூறப்பெறும் சிதம்பரச் சிறப்புகளாலும் வரலாற்றுச் செய்திகள் சிலவற்றை அறியலாம்.

சிதம்பரச் சிறப்புகள்

தலங்களுட் சிறந்தது சிதம்பரம். இதன் சிறப்புகள் பல. பெயர்ச் சிறப்பு, பழைமைச்சிறப்பு, தலைமைச்சிறப்பு, முதன்மைச் சிறப்பு, எதற்கும் முன்னும் சிறப்பு, பூதச்சிறப்பு, ஆதாரச்

சிறப்பு, சபைச்சிறப்பு, ஆடற்சிறப்பு, ரகசியச்சிறப்பு, இருசமயக் கடவுளர் இருப்பாம் சிறப்பு, திருமுறைகள் சேமித்து வைக்கப்பெற்றிருந்த சிறப்பு, மாணிக்கவாசகர் சபையுட் புகுந்து இறைவனோடிரண்டறக் கலந்தருளிய சிறப்பு, சேக்கிழார்க்கு அடியெடுத்துக் கொடுத்த சிறப்பு, சமயப் பொதுவாம் சிறப்பு, பலர் தொழுதேத்திய சிறப்பு என்பன அவற்றுட் சிலவாம். இவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

பெயர்

தில்லை, சிற்றம்பலம், சிதம்பரம், கோயில், புலியூர், பெரும் பற்றப் புலியூர், குகை, தகராகாசம், புண்டரீகபுரம், பொன்னம் பலம், பொது என்பன இதன் பெயர்கள்.

தில்லை: கடற்கரையோரச் சதுப்பு நிலங்களில் வளரும் ஒரு வகைச் செடிக்குத் தில்லை என்று பெயர். இச்செடி புதராக வளரும்; பெரிய மரமாக வளருவதில்லை. ஆதியில் தில்லைச் செடிகள் நிறைந்த ஊராதலின் இவ்வூர் தில்லை எனப் பெயர் பெற்றது. தில்லைவனம் எனப் புராணங்களாற் கூறப்பெறும். தில்லை என்பது இவ்வூர்க்குத் தலமரத்தால் வந்த பெயர். தில்லைத் தலத்தின் தல விருட்சம் தில்லைச் செடி. தல விருட்சம் ஆல் என்பாரும் உளர். தில்லை என்பது ஊரின் (தலத்தின்) பெயரென் றும், சிதம்பரம், சிற்றம்பலம் என்பன கோயிலின் பெயரென்றும், கோயிற் பெயராகிய சிதம்பரமே இப்போது ஊர்க்கும் வழங்கி வருகிறது என்றும் முன்னர் கூறினோம். தலப்பெயர் தில்லையும் கோயிற்பெயர் சிற்றம்பலமும் ஆகுமென்பது:

'தில்லையுட்......செய்யானுறை கோயில் சிற்றம்பலந்தானே'
'தில்லை தன்னுள் ஏறு தொல்புகழேந்து சிற்றம்பலத் தீசனே'
—திருஞானசம்பந்தர்

'தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனூர்'
'தில்லை தன்னுள் திகழ்ந்த சிற்றம்பலத்தே'
'தில்லை தன்னுள் நவின்ற சிற்றம்பலத்தே'
'தில்லை தன்னுட் கருது சிற்றம்பலத்தே'
'தில்லை தன்னுள் மல்கு சிற்றம்பலத்தே'
'புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே'
—திருநாவுக்கரசர்

'புலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமானை'
—சுந்தரர்

'தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்'

—குலசேகராழ்வார்

என்னுந் திருவாக்குகளாற் பெறப்படும். சிற்றம்பலமும் சிதம்பரமும் ஒன்றே.

சிதம்பரம்: சித் + அம்பரம் = சிதம்பரம். சித்-அறிவு; அம்பரம்-ஆகாயம், பரவெளி, அம்பலம். சிதம்பரம்-ஞானகாசம், சிதாகாசம்.

சிற்றம்பலம்: சிறு + அம்பலம் = சிறிய அம்பலம், சிற்றம்பலம். சிறுமை-நுண்மை, சூக்கும நிலை. சிற்றம்பலம்-சூக்குமாகாயம், பரவெளி.

கோயில்: இது தலைமை பற்றி வந்த சிறப்புப்பெயர். சைவ உலகில் கோயில் என்பது சிதம்பரம். வைணவ உலகில் கோயில் என்பது திருவரங்கம். இரு சாராரும் தத்தம் தலைமைத் தலத்தைக் 'கோயில்' என்றே வழங்குவர். கோயில் என்பது எல்லாக் கோயில்களுக்கும் உரிய பொதுப்பெயராயினும் தில்லைக்கும் திருவரங்கத்திற்கும் அவற்றின் தலைமை பற்றிச் சிறப்பாக வழங்கப்பட்டது. சிதம்பரத்தின் புராணம் ஒன்றிற்குக் கோயிற்புராணம் என்றே பெயர். அது உமாபதி சிவத்தாற் செய்யப்பட்டது. கோயில் திருப்பதிகம், கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் நான்மணிமாலை, கோயில் திருப்பண்ணியர் விருத்தம் என்னும் பெயர்களை காண்க. திருவரங்கக் கலம்பகத்தைக் கோயிற்கலம்பக மென்பதுமுண்டு. கோ + இல் = கோயில். கோ-தலைவன் (இறைவன்), இல்-உறைவிடம். கோயில்-இறைவனின் உறைவிடம்.

புலியூர்: புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதரால் பூசிக்கப் பெற்றதனால் புலியூர் எனப் பெயர்பெற்றது.

'புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே'

—திருநாவுக்கரசர்

'புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானைப் பெற்றாமன்றே'

—சுந்தரர்

பெரும்பற்றப்புலியூர்: பெரும்பற்றினாற் புலிக்கால் முனிவர் பூசித்தவூர்.

'பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம்
பிறவாநாளே'

– திருநாவுக்கரசர்

குகை, தகராகாசம்: அண்டமாகிய உலகத்திற்கும் பிண்டமாகிய நமது உடம்புக்கும் இது இருதயமாக விருப்பதால் குகை, தகராகாசம், புண்டரீகபுரம் எனப் பெயர் பெற்றது. குகை-நெஞ்சக்குகை. தகராகாசம்-இருதயாகாசம். புண்டரீகம்-தாமரை, நெஞ்சத்தாமரை.

பொன்னம்பலம்: கூரைக்குப் பொன்வேயப் பெற்றதாதலின் பொன்னம்பலம், பொற்சபை, கனகசபை எனப் பெயர்பெற்றது.

போது: பொது, சபை, மன்றம் என்பன ஒருபொருட் சொற்கள். இது சபைக் கோயிலாதலின் பொது எனப்பட்டது.

'வயங்குமணிப் பொது விளங்க வளர்ந்த சிவக்கொழுந்தே'

—இராமலிங்க அடிகள்

இவ்வாறாக இத்தில்லைத் திருக்கோயிலின் திருப்பெயர்கள் தத்துவப்பொருள் வாய்ந்தனவாயுள்ளமையும், ஊர்ப்பெயர் அருகிவழங்கக் கோயிற்பெயரே ஊர்ப் பெயராக விளங்கு கின்றமையும் சிறப்புடைத்தாம்.

பழைமை

சிதம்பரம் மிகப் பழைமையானது. மாணிக்கவாசகப் பெருமான் இதனைத் 'தில்லை மூதூர்' என்பர்.

'தில்லை மூதூர் ஆடிய திருவடி'

—திருவாசகம் 2

மாணிக்கவாசகர் காலத்திலேயே இது மூதூராகக் கருதப் பட்டதனின்றும் இதன் பழைமையை உணரலாம்.

மிகப் பழங்காலத்தில் கோயில்கள் மண்ணாலும் மரத்தாலும் கட்டப்பட்டன. மண்ணாலான அக்கோயில்கள் மண் தளி (மண்டளி) என வழங்கப்பெற்றன. தளி—கோயில். பழையாறை வடதளி, பரவையுண் மண்டளி, திருக்கச்சிமேற்றளி, ஓண காந்தன்றளி என்பன காண்க. திருவாரூர்ப் பரவையுள் மண் தளி ஆதியில் மண்கோயிலாகவே இருந்திருத்தல் வேண்டும். அங்கெழுந்தருளியுள்ள இறைவனின் திருப்பெயராகிய மண்டலேசுவரர் என்பதும் இதனை வலியுறுத்தும். மண்ணாலும் மரத்தாலும் கட்டப்பெற்ற கோயில்கள் காலப்போக்கில் நிலைபெறுமற் போகவே செங்கல், சுண்ணாம்பு, மரம் ஆகியவற்றால் கோயில் கட்டும் வழக்கம் ஏற்பட்டது. சங்ககாலக் கோயில்கள் செங்கற்

கோயில்களே. சுவர்கள் இடிந்தும் விட்டம் வீழ்ந்தும் சிதைந்து போன செங்கற்கோயி லொன்றைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்ற சங்ககாலப் புலவர் குறிப்பிடுகிறார்.

> இட்டிகை நெஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
> மணிப்புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து
> எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று
> ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை
>
> —அகநானூறு 167

(இட்டிகை—செங்கல்)

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் காலத்தில் இருந்தன வெல்லாம் செங்கற் கோயில்களே. பெரிய மலைப்பாறைகளைக் குடைந்து குகைக்கோயில்களை முதன்முதலிற் கட்டியவன் மகேந்திரவர்மனே. திருச்சிராப்பள்ளி, சித்தன்னவாசல், சீயமங்கலம், சிங்கவரம், குரங்கணிமுட்டம், திருக்கழுக்குன்றம், மண்டபப்பட்டு, தளவானூர், மகேந்திரவாடி, வல்லம், பல்லாவரம், மாமல்லபுரம் ஆகிய ஊர்களிலுள்ள குகைக்கோயில்கள் மகேந்திரவர்மனால் குடையப் பெற்றவை. செங்கல், சுண்ணம்பு, சுதை ஆகியவற்றால் கட்டப்படும் பழைய முறையை மாற்றிப் பாறையைக் குடைந்து கோயில் அமைக்கும் புதிய முறையைக் கையாண்ட மகேந்திரவர்மன் 'விசித்ர சித்தன்' எனப் புகழ்ப் பெற்றான். மண்டபப்பட்டுக் குகைக்கோயிலிலுள்ள வடமொழிக் கல்வெட்டொன்று "செங்கல்லும், சுண்ணம்பும், மரமும், உலோகமும் இல்லாமலேயே பிரம ஈசுவர விஷ்ணுக்களுக்கு விசித்திர சித்தன் என்னும் அரசனால் இக்கோயில் அமைக்கப் பட்டது" எனக் கூறுகிறது.

இதன் பின்னர் இராசசிம்மன் காலத்திற்றான் கருங்கல் துண்டு களை ஒன்றன் மேலொன்றாக அடுக்கிக் கோயில் கட்டும் வழக்கம் உண்டாயிற்று. இராசசிம்மனால் முதன்முதலாகக் கட்டப் பெற்ற கற்றளி காஞ்சிக் கைலாசநாதர் கோயிலாகும். கற்றளிகள் கட்டத் தொடங்கிய பின் பழைய செங்கற் கோயில்களெல்லாம் கற்றளிகளாக்கப் பெற்றன.

கோயிற் கட்டிடக்கலையின் வரலாற்றை, மண்தளிக்காலம் செங்கற் கோயிற் காலம், குகைக்கோயிற் காலம், கற்றளிக்காலம் என நான்கு காலப் பகுதிகளாகப் பிரிக்கலாம். தில்லைக்கோயில் மண் தளிக் காலத்தில் தோன்றிச் சிறிதாக விளங்கியது பின்னர்;

செங்கற் கோயிலாகக் கட்டப்பெற்றது; காலப்போக்கில் கற்றளி யாக்கப்பட்டது. சிற்றம்பலத்துள் இன்றும் காணப்படுகின்ற பழமையான மரவேலைப்பாடுகள் கோயிலின் பழமையைக் காட்டுவனவாகும். செங்கற்கோயில்களின் மரக்கூரைகளுக்குச் செப்புத்தகடு வேய்தல் பண்டை வழக்கு. மழையினாலும் வெயிலினாலும் பழுதுபடாதிருப்பதற்காக இங்ஙனம் தகடு வேய்வர். சிற்றம்பலம் பொற்றகடு வேய்ப்பெற்றது. இதனால் கனகசபை என்றும், பொன்னம்பலம் என்றும் பெயர்பெற்றது. கூரை அமைப்பும் பழைமையைக் காட்டுவதாகும். சுருங்கக்கூறின் சிதம்பரக்கோயில்வரலாற்றிற்கு முற்பட்ட பழமையுடையதாகும்

தலைமையும் முதன்மையும் : தலங்களுள் தலைமையானதும் முதன்மையானதும் இதுவே. பாடல்பெற்ற தலங்களை வரிசைப் படுத்துங்கால் முதலில் வைத்தெண்ணப்படுவது இதுவே. தலங்களின் அட்டவணையையும், அடங்கல்முறை (தலமுறை) யையும் காண்பார் இதனை எளிதிலறியலாம்.

எதற்கும் முன்னிற்றல்

திருமுறைகளை ஓதும்போது 'திருச்சிற்றம்பலம்' எழுவாயாகவும் இறுவாயாகவும் ஓதுதல் வேண்டும். அஃதாவது ஓதத் தொடங்கும்போது 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லித் தொடங்கி, ஓதிமுடிக்கும்போது 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லி முடிக்கவேண்டும். திருமுறைகளை எழுதும்போது தொடக்கத்திலும் முடிவிலும் 'திருச்சிற்றம்பலம்' என எழுத வேண்டும். திருமுறை ஏடுகளிலும் நூல்களிலும் பதிகந்தோறும் முதலிலும் முடிவிலும் 'திருச்சிற்றம்பலம்' என்றெழுதப்பட்டிருப்பதையும் அச்சிடப் பட்டிருப்பதையும் காணலாம்.

வள்ளற்பெருமானும் தமது பாடல்களை எழுதும்போது பதிக முதலிலும் ஈற்றிலும் 'திருச்சிற்றம்பலம்' என எழுதும் வழக்கமுடையவர். இதனைப் பெருமான் திருக்கரஞ்சாத்திய திருவேடுகளிற் காணலாம். மேலும் பெருமான் திருச்சிற்றம்பல ஞானிகட்கு எழுதிய இலக்கணக் கடிதத்தில் அவரது பெயரை மறை பொருள் வகையாற் குறிக்குமிடத்து :

உணர்ந்தோரா னியல் வகைய வின்ன வென்றவற்றிற் பின்மொழி
மதிக்குமுன்மொழி மறைக்கு முதலீறு விளங்க முடிப்பதாய பின்
மொழியடைசார் முன்மொழி ஞாங்கர்விளங்கியஞானிகட்கு

எனக் குறித்துள்ள விடத்திலும் 'திருச்சிற்றம்பலம்' என்னும் சொல்லின் இச்சிறப்பினைக் குறிப்பிட்டுள்ளமை காண்க.

சிவஞான முனிவரது வாழ்க்கையில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சியொன்றும் ஈண்டறியத்தக்கது. வடநூற் கடலுந் தமிழ் நூற் கடலும் நிலை கண்டுணர்ந்த சிவஞான முனிவர் தாமியற்றிய காஞ்சிப்புராணத்தைக் காஞ்சியில் அரங்கேற்றினர். அரங்கேற்றத் தொடக்கத்தில் நூன் முதலிலுள்ள நடராசத்துதி படித்து முடிக்கப்பட்டவுடனேயே அவையிலிருந்த ஒருவர் எழுந்து தடை நிகழ்த்தினர். காஞ்சிப்புராணம் பாடத் தொடங்கியவர் முதலில் தலத்து இறைவனுகிய ஏகாம்பரேசரைத் துதித்துப் பாடாமல் சிதம்பரேசரைத் துதிக்கலாமா என்பதே அவரது மறுப்பு. இம்மறுப்புப் பொருளற்றதென்றும் அற்பமான தென்றும் அவர் அறியாதவரல்லர். இருந்தும் ஏதாவது கூறித் தமது இருப்பையும் அறிவையும் விளக்கஞ்செய்ய வேண்டுமென்னும் கருத்தால் எழுந்து மறுத்து விட்டார். இதனைக் கேட்டதும் சிவஞான முனிவரது மாணக்கராகிய கச்சியப்பர் எழுந்து முனிவரை வணங்கித் தடைக்கு விடை கூறத் தம்மை அனுமதிக்க வேண்டினர். அனுமதி பெற்றபின் அவையிலிருந்த தல ஓதுவரை அழைத்துத் தலத் தேவாரப் பதிகத்தை ஓதுமின் என்ருர். ஓதுவாரும் அவை முன் வந்து 'திருச்சிற்றம்பலம்' எனத் தொடங்கித் தலப் பதிகத்தை ஓதப் புகுந்தார். கச்சியப்பர் உடனே அவரைத் தடுத்து நிறுத்தி, ஐயா! காஞ்சிபுரத் தேவாரத்தை ஓதத் தொடங்கிய நீர் 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லித் தொடங்குவானேன்? 'பிருதிவியம்பலம்' என்றல்லவா சொல்லித் தொடங்க வேண்டும் என்ருர். அவையோர் வியப்புற்றனர். திருமுறைகளுள் எதனை ஓதினும் எங்கு ஓதினும், எத்தலத்துக்குரியதை ஓதினும் முதலில் திருச்சிற்றம்பலத்தை நினைந்து 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லி ஓதத் தொடங்குவது முறையன்ருே! என ஓதுவார் கூறினர். கச்சியப்பர் மறுத்தவரைக் காட்டி, இதனை அவர்க்குக் கூறும் என்ருர். அந்தப் போலிப் புலவர் வாயடைத்துப் போய் வெட்கித் தலை குனிந்தார். அவையோர் மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்தனர். அரங்கேற்றம் அது முதல் தடையின்றி நடந்தது. சிற்றம்பலத்தின் சிறப்பை அனைவரும் உணர்ந்தனர்.

இன்றும் சைவ நன்மக்கள் கடிதம்முதலியன எழுதும் போதும் தொடக்கத்தில் மேலே 'திருச்சிற்றம்பலம்' என்றெழுதியே

தொடங்குவர். தலைமையும் முதன்மையும் ஆன இத்திருச்சிற்றம் பலத்தை முன்னிட்டே எதனையும் செய்யவேண்டும். திருச்சிற்றம் பலமே எங்கும் எதற்கும் முன்னிற்பது.

ஆகாயத்தலம்

உலகம் பஞ்ச பூதங்களால் ஆனது. மண், நீர், தீ, வளி, வான் என்பன ஐம்பூதங்களாம். இவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்றும் கூறப்பெறும். உலகம் ஐம்பூதங்களா லானதென்பதைத் தொல்காப்பியர்,

நிலந்தீ நீர் வளி விசும்போடு ஐந்துங்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின் (1589)

எனத் தொல்காப்பியம் மரபியலிற் கூறியுள்ளார். உயிர்களது உடம்புகளும் ஐம்பூதங்களின் சேர்க்கையால் ஆனவையே. 'அண்டத்திலுள்ளது பிண்டத்தில்' என்ற பழமொழியும் ஈண்டறியத்தக்கது.

ஐம்பூதங்களைப் பற்றித் தெளிவாகவும் நுட்பமாகவும் உணர்ந்த நமது பெரியோர்கள் ஒவ்வொரு பூதத்தின் பெயராலும் ஒரு தலத்தை ஏற்படுத்தினர். அவை பஞ்சபூதத் தலங்கள் எனப்படும். அவையாவன:

மண்	- பிருதிவித்தலம்	- காஞ்சிபுரம், திருவாரூர்
நீர்	- அப்புத்தலம்	- திருவானைக்கா
தீ	- தேயுத்தலம்	- திருவண்ணாமலை
வளி	- வாயுத்தலம்	- திருக்காளத்தி
வான்	- ஆகாயத்தலம்	- சிதம்பரம்

கடல்விடம் நுகர்ந்த காசினி லிங்கம்
காஞ்சிமா நகருறை லிங்கம்
காவிரி வடபால் வருதிரு ஆனைக்
காவினில் அப்புலிங் கமதாம்
வடதிசை அண்ணா மலையினில் லிங்கம்
வன்னியின் வடிவுகா ளத்தி
வாயுலிங் கமதாம் சிதம்பர லிங்கம்
மாசில் ஆகாயலிங் கமதாம்

—தில்லைக் கலம்பகம் 31

காஞ்சிபுரத்தை மண் தலமாகக் கூறுவதே பெருவழக்கு. திருவாரூரையும் கூறுவதுண்டு. காஞ்சிபுரத்து லிங்கம் பிருதிவி லிங்கம். கம்பையாற்றங் கரையில் மண்ணால் லிங்கம் செய்து உமையம்மையார் வழிபட்டதாக வரலாறு. சுயம்பு லிங்கம் என்பதும் உண்டு. திருவாரூரில் லிங்கம் புற்று வடிவு. புற்றிடங்கொண்டார் என்பது இறைவன் திருப்பெயர்.

நீர்த்தலமாகிய திருவானைக்காவில் அப்புலிங்கம். லிங்கத்தைச் சுற்றித் தண்ணீர் ஊறிக்கொண்டேயிருக்கும். கோடை காலத்திலும் ஊற்று வற்றுவதில்லை. மழைக் காலத்தில் ஊற்றுப்பெருகி மூலத்தானத்தில் நீர் நிறைந்து லிங்கம் மூழ்குவதும் உண்டு. அக்காலங்களில் தண்ணீரை இறைத்து வெளியேற்றுவர்.[64]

திருவண்ணாமலை லிங்கம் தேயுலிங்கம். இறைவன் பேரொளிப் பிழம்பாக இங்கு விளங்குகிறார். திருமாலும் பிரமனும் அடி முடி காண முயன்ற வரலாறு அனைவரும் அறிந்ததே.

திருக்காளத்தியில் காற்று லிங்கம். மூலத்தானத்தில் லிங்கத்தினருகிலுள்ள விளக்கொன்றின் சுடர் மென்காற்றின் இயக்கத்தால் அசைவதுபோல அழகாக அசைந்து கொண்டிருப்பதனை இன்றுங் காணலாம்.

சிதம்பரம் ஆகாயத்தலம். வெட்டவெளி. இங்கு இறைவன் வான் (ஆகாய) வடிவில் ஆகாய லிங்கமாக எழுந்தருளியுள்ளான். இதைக் குறிப்பதே சிதம்பர ரகசியம்.

ஐம்பூதத் தலங்களின் அமைப்பு, தமிழ்-ஞானிகளின் தத்துவ அறிவைக் காட்டுவதாகும். பூதங்களுள் நுண்மையானது ஆகாயம். அதன் வடிவாக விளங்குவது சிதம்பரம்.

அனுகத்தலம் நமது உடலில் ஆறு ஆதாரங்கள் உள்ளன: அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆக்ஞை என்பன. இதுபோன்றே உலகமாகிய விராட புருடனுக்கும் ஆறாதாரங்களாக ஆறு ஊர்களைப் பெரியோர்கள் குறித்துள்ளனர். ஆறு ஆதாரங்களும், நம் உடலில் அவற்றின் இருப்பிடங்களும், ஆறாதாரத் தலங்களும் வருமாறு:

மூலாதாரம் -குதத்திற்கும் கோசத்திற்கும் நடு. 'எருவிடும் வாசற் கிருவிரன் மேலே கருவிடும் வாசற் கிருவிரற் கீழே' என்பது திருமூலர் திருமந்திரம்.

உடம்பு அவரவர் கையால் எட்டுச் சாண். தொண்ணூற்று ரங்குலம். இதில் மேலை நாற்பத்தேழரை அங்குலமும், கீழே நாற்பத் தேழரை அங்குலமும் தள்ள, இடைநின்ற ஓரங்குலத்துள் உள்ளது மூலாதாரம். - காஞ்சி புரம் (மண்).

சுவாதிட்டானம்	-கோசத்திற்கும் நாபிக்கும் நடு	-ஆனைக்கா (நீர்)
மணிபூரகம்	–நாபி (கொப்பூழ்)	-அண்ணாமலை (தீ)
அனாகதம்	-இருதயம்	-தில்லை (வான்)
விசுத்தி	-கண்டம்	-காளத்தி (வளி)
ஆக்ஞை	-புருவமத்தி	-காசி

ஆறாதாரத் தலங்களில் ஐந்து, பஞ்ச பூதத் தலமாகவிருப்பது கருதற்குரியது. சிதம்பரம் இருதயத்தலமாக விருப்பதால் குகை, தகராகாசம், புண்டரீகபுரம் என்ற பெயர்களைப் பெற்றது.

சபை-அம்பலம். தமிழகத்தில் இறைவன் திருநடனம் புரியும் சபைகள் ஐந்து அவை:

கனகசபை (பொன்னம்பலம்)	- சிதம்பரம்
ரஜிதசபை (வெள்ளியம்பலம்)	- மதுரை
தாமிரசபை	- திருநெல்வேலி
இரத்தின சபை	- திருவாலங்காடு
சித்திர சபை	- திருக்குற்றாலம்

குடதிசை அதனில் மருவுகுற் றாலம்
　　கோதறு சித்திர சபையாம்
குற்றமில் குணக்கின் பழையனூர் மன்றம்
　　குலநவ ரத்னமன் றெபார்
அடல்விடைப் பாகன்நெல் லையம் பதியில்
　　அம்பலம் தாம்பிர சபையாம்
ஆலவாய் மதுரை வெள்ளியம் பலமாம்
　　அணிதில்லைச் செம்பொனம் பலமே.

—தில்லைக்கலம்பகம் 32

தமிழகத்தின் ஐம்பெருஞ் சபைகளுள் ஒன்றான சிதம்பரம் தனக்குள்ளும் ஐந்து சபைகளை உடையது. அவை சிற்சபை, கனகசபை, தேவசபை, நிருத்தசபை, இராஜசபை என்பனவாம்.

சிற்சபை: இது சிற்றம்பலம் எனப்படும். ஐந்து சபைகளுள் முதன்மையானதும் சிறந்தும் இதுவே. இதுவே நடராசப் பெருமானின் மூலத்தானமாம். இச்சிற்சபையில் நடராசப்பெருமானுக்கு வலப்புறத்தில் சிதம்பர ரகசியம் உள்ளது. உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூன்று நிலையிலும் இறைவன் இச்சிற்சபையிற் காட்சியளிக்கிறன். உருவம் (சகளம்)-நடராசர். அருவம் (நிட்களம்) - சிதம்பர ரகசியம். அருவுருவம் (சகள நிட்களம்) - படிகலிங்கம். படிக லிங்கத்தை அழகிய சிற்றம்பல முடையார் என்பர். இவர்களேயன்றி இரத்தின சபாபதியும், சுவர்ண கால பைரவரும் இங்கெழுந்தருளி யுள்ளனர்.

கனகசபை: இது சிற்றம்பலத்தின் முன் மண்டபம் சிற்சபைக்கு எதிரே உள்ளதால் எதிரம்பலம் என்றும் கூறப் பெறும். இங்கேநின்றுதான் நாம் நடராசப் பெருமானை வழிபடுகிறோம். சிற்றம்பலத்தைப் போல் இதுவும் தெற்கு நோக்கியதே. இவன் வாயிற்படிகள் நேர்ப்புறமாக (தெற்குப்பக்கம்) இல்லாமல் பக்கங்களில் கிழக்கு மேற்கு ஆகிய இருபுறமும் அமைந்துள்ளமை சிறப்பாகும். இங்கு நாள் தோறும் காலையில் (10 மணி யளவில்) அழகிய சிற்றம்பலமுடையார்க்கும் இரத்தின சபாபதிக்கும் அபிடேக ஆராதனைகள் நடைபெறும். இக்கனக சபையிற்றான் ஆண்டில் நான்குமுறை நடராசப்பெருமான் திருமஞ்சனங் கொண்டருளுகிறர்.

தேவசபை: இது பேரம்பலம் எனப்படும். இங்கு உற்சவ மூர்த்திகள் எழுந்தருளி யுள்ளனர். இதுவே தீட்சிதர்கள் கோயில் நிர்வாகம் பற்றிக் கூடிப் பேசுமிடம்.

நிருத்தசபை: இது தேர் அம்பலம் எனப்படும். சித்திர வேலைப் பாடமைந்த தூண்களையும் குதிரைகள் பூட்டிய தேர்போன்ற அமைப்பையும் உடைய இம் மண்டபம் நடராசப் பெருமான் திருமுன்னர் கொடிமரத்தின் தென்பால் உள்ளது.

இராஜசபை: இது ஆயிரக்கால் மண்டபமாகும். இங்கு நடராசப் பெருமான் ஆண்டுக்கு இருமுறை (மார்கழி-திருஆதிரை, ஆனி-உத்தரம்) எழுந்தருளித் திருமஞ்சனம் கொண்டருளுகிறர். ஆருத்ரா தரிசனமும் ஆனித் திருமஞ்சன தரிசனமும் நடைபெறுவது இம்மண்டபத்திலேயேயாகும். சேக்கிழார், தமது பெரிய புராணத்தை ஆயிரக்கால் மண்டபமாகிய இந்த ராஜசபையிலேயே அரங்கேற்றினர் என்பர்.

சிற்சபை, கனகசபை, தேவசபை, நிருத்தசபை, இராஜசபை ஆகிய இவ்வைந்தையும் பஞ்சபூதச் சபைகள் என நம் அடிகள் குறித்தருளுவர்.

மண் - கனகசபை
நீர் - இராஜசபை
தீ - தேவசபை
வளி - நிருத்தசபை
வான் - சிற்சபை

என்பது அடிகளின் உபதேசக் குறிப்பு. இவ்வைந்திலும் சிற்சபை சிறந்தது. அது ஆகாயச் சபையன்றே? நடராசப் பெருமான், சபைக்கு நாயகராதலின் சபாபதி என்றும் சபாநாதர் என்றும் சபாநாயகர் என்றும் வழங்கப்படுவார்.

தில்லைத் திருநடனம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஆதியாய் நடுவு மாகி அளவிலா அளவு மாகிச்
சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியாநிற்கும் தில்லைப்பொது நடம் போற்றிபோற்றி.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின்மேலாம்
சிற்பரவியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன்நடஞ்செய்கின்றபூங்கழல் போற்றிபோற்றி.

- பெரிய புராணம் 1, 350, 351

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் நடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

- திருவிசைப்பா 1

இறைவனைக் கூத்தப்பிரானை, ஆடல் வல்லானை, தாண்டவராயனை நம் பண்டைத் தமிழர் கண்டனர். இறைவனது திருக்கூத்து எங்கும் நீக்கமற நிறைந்திருப்ப தென்பதனைத் திருமூலர்,

எங்குந் திருமேனி எங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருள் தன்விளை யாட்டதே 2722

எனத் தமது திருமந்திரத்தில் அருளுகின்றார். இறைவன் ஆடியருளிய தாண்டவங்கள் பலவாகும். அவற்றுள் ஆனந்தத் தாண்டவம் சிறந்தது. அது தில்லையில் ஆடியருளப் பெற்றது. எல்லாத் தாண்டவங்களையும் பற்றிக் கூறுதற்கு இடமின்மையின் இங்கு ஆனந்தத் தாண்டவத்தை மட்டும் காண்போம்.

இறைவன் ஐந்தொழில் செய்கின்ற நடனம் ஆனந்த நடனம். ஐந்தொழில்களாவன: படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல். இவற்றை வடமொழியில் சிருட்டி, திதி, சங்காரம், திரோபாவம், அனுக்கிரகம் என்பர். இவ்வைந் தொழில்களும் ஆனந்தத் தாண்டவத்தில் ஒருங்கே நிகழ்கின்றன என்பதைத் திருமூலர்.

அரன் துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன் அங்கி தன்னில் அறையிற்சங் காரம்
அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி யென்றும் அனுக்கிரகம் என்னே 2799

எனத் திருமந்திரத்திலும், திருவதிகை மனவாசகங் கடந்தார்

தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு 35

என உண்மை விளக்கத்திலும் அருளுகின்றனர்.

இதனைக் குமரகுருபர சுவாமிகள் தமது சிதம்பர மும்மணிக் கோவையுள்,

பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பில் நானில வளாகமும்
ஏனைப் புவனமும் எண்ணீங் குயிரும்
தானே வகுத்ததுன் தமருகக் கரமே

தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையும் காப்பதுன் அமைத்தபொற் கரமே
தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலும்
மாற்றுவது ஆரழல் வைத்ததோர் கரமே
ஈட்டிய வினைப்பயன் எவற்றையும் மறைத்துநின்று
ஊட்டுவ தாகும்நின் ஊன்றிய பதமே
அடுத்தஇன் னுயிர்கட்கு அளவில்பே ரின்பம்
கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே

என அருளுவர்.

கூத்தப் பெருமானது துடிசேர்கரம், அபயகரம், தீயேந்திய கரம், ஊன்றிய திருவடி, தூக்கிய திருவடி ஆகிய ஐந்தும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்கின்றன.

படைத்தல் (சிருட்டி) - துடிசேர் கரம்

'அரன் துடி தோற்றம்' - திருமந்திரம்
'தோற்றம் துடியதனில்' - உண்மை விளக்கம்
'வகுத்ததுன் தமருகக்கரமே' - சிதம்பரமும்மணிக்கோவை

துடி, தமருகம்-உடுக்கை. உடுக்கையேந்திய கரம் படைத்தல் தொழிலைச் செய்கிறது. உடுக்கை நாத தத்துவத்தைக் குறிக்கும். ஆகாயம் சத்த தன்மாத்திரையினின்றும் தோன்றியது. ஆகாய மாகிய அம்பலத்தில் நடமியற்றும் பெருமான் சத்தத்தின் அறிகுறியாக, நாத தத்துவத்தின் அறிகுறியாக, உடுக்கையை ஏந்தியிருக்கிறார்.

காத்தல் (திதி) - அபய கரம்

'அமைத்தல் திதியாம்' - திருமந்திரம்
'தோயும் திதி அமைப்பில்' - உண்மை விளக்கம்
'அனைத்தையும் காப்பதுன் அமைத்த பொற்கரமே'
— சிதம்பரம் மும்மணிக்கோவை

அமைத்தல், அமைப்பில், அமைத்த பொற்கரம்-அபயஹஸ்தம், அபயகரம். வலக்கை அபய முத்திரை காட்டுகிறது. இது அபயகரம், அபய ஹஸ்தம், அமைத்த கரம் எனப்படும். இடக்கை, வீசிய நிலையில் தூக்கிய திருவடியைக் காட்டுவதாக இருக்கும். இந்த வீசியகரம் கஜ ஹஸ்தம் என்று சொல்லப்படும். அபயங் காட்டுவதான அமைத்த கரம் காத்தல் தொழிலைச் செய்கிறது.

அழித்தல் (சங்காரம்) - தீயேந்திய கை

'அங்கிதன்னில் அறையில் சங்காரம்' - திருமந்திரம்
'சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - உண்மை விளக்கம்
'அடங்கலும் மாற்றுவது ஆரழல்வைத்ததோர் கரமே'
- சிதம்பர மும்மணிக்கோவை

அங்கி, அழல்-தீ. இடக்கைகளுள் ஒன்று தீச்சுடரை ஏந்தியிருக்கும். இத்தீயேந்திய கரம் அழித்தல் தொழிலைச் செய்வது.

மறைத்தல் (திரோபாவம்) - ஊன்றிய திருவடி

'உற்றணைப்பில் அமருந்திரோதாயி' - திருமந்திரம்
'ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோதம்' - உண்மைவிளக்கம்
'மறைத்து நின்று ஊட்டுவதாகும்நின் ஊன்றியபதமே'
– சிதம்பர மும்மணிக்கோவை

நடராசப் பெருமான் வலக்காலை ஊன்றி நின்று ஆடியருளுகின்றார். ஊன்றிய திருவடியாகிய வலக்கால், மறைத்தல் தொழிலைச் செய்கின்றது.

அருளல் (அனுக்கிரகம்) - தூக்கிய திருவடி

'அடி என்றும் அனுக்கிரகம்' - திருமந்திரம்
'முத்தி நான்ற மலர்ப்பதத்தே' - உண்மை விளக்கம்
'அளவில் பேரின்பம் கொடுப்பது முதல்வ நின் குஞ்சிதபதமே'
- சிதம்பர மும்மணிக்கோவை

பெருமான் இடதுகாலைத் தூக்கி ஆடியருளுகின்றார். இத் தூக்கிய திருவடி குஞ்சிதபாதம் எனப்படும். (நான்ற மலர்ப் பாதம்-தூக்கித் தொங்கவிடப்பட்ட கால்) தூக்கிய திருவடியாகிய இடக்கால் அருளல் தொழிலைச் செய்கிறது.

ஆனந்த நடனம் ஐந்தொழில்களையும் செய்வதாக அமைவதால் பஞ்சகிருத்திய நடனம் எனப்படும். ஐந்தொழில் நடனமாகிய இவ்வானந்தத் தாண்டவத்தில் ஐந்தெழுத்து மறையும் அடங்கியிருப்பதால் பஞ்சாக்கர நடனமும் ஆகும். பஞ்சாக்கர நடனத்தை உண்மை விளக்க ஆசிரியர் மனவாசகங் கடந்தார் அருளுமாறு:

எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள்-சிட்டன்
சிவாயநம என்னும் திருஎழுத்தஞ் சாலே
அவாயமற நின்றுடு வான் - உண்மை விளக்கம் 31

பஞ்சாக்கரமே திருமேனியாகக் கொண்டு இறைவன் ஆடியருளுவான் என்று கூறும் ஆசிரியர் அடுத்த இரண்டு செய்யுள்களில் இறைவனது தூல, சூக்கும பஞ்சாக்கர நடனங்களைக் கூறியருளுகிறார்.

ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம்-கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார். -உண்மை விளக்கம் 32

திருவடி	-	ந
உதரம் (வயிறு)	-	ம
தோள்கள்	-	சி
முகம்	-	வா
முடி	-	ய

இது தூலபஞ்சாக்கர நடனம். நமசிவாய என்பது தூலபஞ்சாக்கரம்.

சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்-பார்க்கில் இறைச்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான் - உண்மை விளக்கம் 33

துடி (உடுக்கை)	-	சி
வீசியகரம்	-	வா
அபயகரம்	-	ய
தீச்சுடர்	-	ந
ஊன்றிய திருவடி	-	ம

இது சூக்கும பஞ்சாக்கர நடனம். சிவாயநம என்பது சூக்கும பஞ்சாக்கரம். நமசிவாய என்னும் தூலபஞ்சாக்கர நடனம் ஊன நடனமும், சிவாயநம என்னும் சூக்கும பஞ்சாக்கர நடனம் ஞான நடனமும் ஆகும்.

திருநாவுக்கரசர்

எம்பெருமான் தில்லையில் திருநடனஞ் செய்கின்ற அழகு, தம்மைக் கண்டு தொழ வருவாரை 'என்று வந்தாய்' என்று கேட்டு உபசரிப்பது போன்றுள்ளதென்று நாவுக்கரசர் கூறும் நயம் அனுபவத் திருவாக்காகும்.

ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவற்காச்

சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாய்என்னும் எம்பெரு மான்றன் திருக்குறிப்பே.
-(4-81-2) 4939

குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.
-(4-81-4) 4941

திருநடனத்தைக் காணப்பெறுவதானால் உலகில் மனிதப் பிறவியும் வேண்டுவதே என அருளும் நாவுக்கரசர் அடுத்த திருப்பாட்டில் 'வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி, மதித்திடுமின்' என்றும் 'தில்லையம்பலத்துக் கூத்தனுக்கு ஆட்பட்டிருப்பதன்றோ நந்தம் கூழைமையே' என்றும் அருளுவர்.

வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசு பதமருள் செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரந் தீவளைத் தான் தில்லை யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட் டிருப்பதன் றோநந்தங் கூழைமையே.
(கூழைமை-கடைமை) -(4-81-5) 4942

சேக்கிழார்

ஆளுடைய நம்பிகளாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லைத் திருக் கூத்தைக் கண்டபோது அடைந்த அனுபவத்தைச் சேக்கிழார் பெருமான்,

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார் 252

எனத் திருத்தொண்டர் புராணத்துள் அருளுவர்.

நடராச வடிவம்

எல்லாத் திருவுருவங்களிலும் நடராசத் திருவுரு சிறப்பு வாய்ந்தது. இதன் கலைச்சிறப்பில் மேலை நாட்டவரும் சிந்தையைப் பறிகொடுத்துள்ளனர். நடராசத்திருவுரு கலைச்சிறப்பால்

மட்டுமின்றித் தத்துவச் சிறப்பாலும் உயர்ந்தது. போர இயற்கையின் ஓயா இயக்கமே ஆண்டவனின் திருக்கூத்து. இத்திருக்கூத்தின் தத்துவங்களைக் காட்டுவதே நடராச வடிவம்.

பனித்த சடை-அதில் விளங்கும் பிறை, கங்கை, கொக்கிறகு, வெண்தலை-முக்கண்-குனித்த புருவம்-கொவ்வைச் செவ்வாய், அதிற் குமிண் சிரிப்பு-துடிவைத்த கை-அழலேந்திய கை-அபய கரம்-வீசியகரம்-எடுத்த பொற்பாதம்-ஊன்றிய திருவடி-பவள மேனி, அதிற் பால் வெண்ணீறு, பாம்புகள்-மிதியுறும் முயலகன்-சுற்றியுள்ள திருவாசி-இவையே நடராச வடிவமாம்.

நடராச வடிவத்தில் திருவாசி ஓங்காரத்தைக் குறிப்பது. திருவாசியிலுள்ள சுடர்கள் (தீக்கொழுந்துகள்) எழுத்துகளாம்.

ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம்-ஆங்காரம்
அற்றார் அறிவர் அணி அம்பலத்தான் ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின்

—உண்மை விளக்கம் 34

மற்ற திருவுருவங்களில் திருவாசி தனியாக இருக்கும். கூத்தப் பெருமான் திருவுருவில் திருவாசி திருவுருவோடு சேர்ந்தே யிருக்கும். இவ்வாறு தத்துவத்தாலும் கலைச் சிறப்பாலும் சிறந்த இந்நடராச வடிவம் தமிழ்நாட்டிற்கே உரியது. நடராச வடிவத்தைக் கண்டவர்கள் தமிழர்களே. வடநாட்டுக் கோயில் களில் நடராசர் திருவுருவம் இல்லை. சபைகள் ஐந்தும் தென்றமிழ் நாட்டிலேயே இருப்பதும் கருதத்தக்கது.

தென்தில்லை மன்றினுள் ஆடீ போற்றி
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

-திருவாசகம்

(நன்றி: தவத்திரு ஊரன் அடிகள்)

சைவ சமய சாரம்

1. கடவுள்

அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன்

—திருவண்டப்பகுதி

ஆகாயத்தை இராக்காலத்திலே அண்ணாந்து பார்த்தால் அதிலே எண்ணில்லாத நட்சத்திரங்கள் மின்னி விளங்குவதைக் காணலாம். இந்த நட்சத்திரங்கள் வெகு தூரத்திலே இருத்தலாற் சிறியவைகளாகத் தோன்றுகின்றன. அவைகள் உள்ளபடி மிகப் பெரியவைகளேயாம். சூரியன் பூமியிலும் பதின்மூன்று லட்சம் மடங்கு பெரியது. எல்லா நட்சத்திரங்களும் சூரியனிலும் பெரிய வைகளே. ஆதலால் இந்தப் பூமியையும், சூரியனையும், எண்ணில்லாத நட்சத்திரங்களையும் மாயையிலிருந்து உண்டாக்கிய கடவுளுடைய பெருமையை யார்தான் சொல்ல வல்லவர்!

இந்த அளவில்லாத பெருமையை உடைய கடவுள் அன்பையே வடிவமாக உடையவர்.

"அன்புசிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்திலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே."

ஆதலால், அவர் நம்மிடத்திற் கொண்ட அன்பும் அளவில்லாததாகவே இருக்கும். பெற்ற தாயானவள் குழந்தையிடத்தே எவ்வளவு அன்புடையவளாய் இருக்கிறாள். கடவுளுடைய அன்பு தாயினுடைய அன்பினும் கோடானுகோடி மடங்கு அதிகமாய் இருக்குமல்லவா? தாயைக் காணும்போது குழந்தை எவ்வளவு ஆனந்தம் அடைகிறது. ஆதலால், தாயினும் பார்க்க அதிகமான அன்பையுடைய கடவுளை நினைக்கும் போதும், அவரைக் கோயிலிலே காணும் போதும் நாம் எல்லையில்லாத ஆனந்தம் அடைய வேண்டும்; நமது மனம் கரைந்து உருகுதல் வேண்டும்.

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
 துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
 ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
 சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடை
 யாயென்னைக் கண்டுகொள்ளே.

தாய்தந்தையர் குழந்தைக்கு வேண்டிய ஊண், உடை முதலியவற்றை, அக்குழந்தை கேளாமலிருக்கவே கொடுத்து விடுகிறார்கள். குழந்தைக்கு வேண்டியவற்றுட் சிலவற்றை அவர்கள் அறிய மாட்டார்கள். அவற்றைக் குழந்தை அவர்களுக்குச் சொல்லியபின்பு அவர்கள் கொடுக்கிறார்கள். கடவுள் எல்லாம் அறிபவர் ஆதலால், நமக்கு வேண்டிய யாவற்றையும் அவர் தாமாகவே தருவார். நாம் அவரை ஒன்றுங் கேட்க வேண்டியதில்லை. அவரை வணங்குதலும், துதித்தலும், நினைத்தலும், பூசித்தலுமே நாம் செய்யவேண்டியவை.

"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
 பரிந்துநீ பாவி யேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
 உலப்பிலா ஆநந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
 செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
 எங்கெழுந் தருளுவ தினியே."

இந்த உடம்பு நம்மோடு எப்போதும் இருப்பதன்று. ஒரு நாளைக்கு நாம் இதைவிட்டு விலக வேண்டிவரும். அப்போது நமது தாய் தந்தையரும், சுற்றத்தவரும், நண்பரும் நம்மை விட்டுப் பிரிந்து விடுவார்கள். நமது பொருள் பண்டங்களும் தொடர்பற்றுப்போம். கடவுள் ஒருவரே எக்காலத்திலும் எல்லையில்லாத அன்பைச் சொரிந்துகொண்டு நம்மோடு துணையாய் நிற்கும் மெய்ப்பொருள்.

"ஈன்றாளு மாய்எனக் கெந்தையு
 மாயுடன் தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்துகந்
 தான்மனத் துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க் கன்பன்
 திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன்
 தன்னடி யோங்களுக்கே."

ஆதலால், நம்முடைய மனம் அவரையே நாடுதல் வேண்டும். நமது சீவனத்துக்கு வேண்டிய தொழில்களை நாம் செய்யும்போது நமது மனம் அவற்றிலே செல்லுமாயினும் அதன் நாட்டம் எப்போதும் கடவுளிடத்திலேயே இருத்தல் வேண்டும்.

"நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே யிடையறா வன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே."
—திருவாசகம்

இரவும் பகலும் துதிசெய் திருநாள்
பரவும் பரிசே பரிசின் றருள்வாய்
கரவுண் டெழுசூர் களையக் கதிர்போல்
விரவுஞ் சுடர்வேல் விடுசே வகனே.
—கந்தரனுபூதி

2. ஆன்மாக்கள்

ஆன்மாக்கள் என்றும் உள்ளவை. அவற்றின் அறிவை ஆணவம் என்ற ஒரு பொருள் இயல்பாகவே மறைத்துக் கொண்டிருக்கிறது. இந்த ஆணவ மறைப்பை நீக்கி நிறைவான மெய்யறிவெனப்படும் சிவஞானத்தைக் கொடுத்தற்காகவே கடவுள் ஆன்மாக்களுக்கு உடம்புகளைக் கொடுத்தருளுகிறார்.

இந்த உடம்புகள் புழு உடம்பு முதல் மனித உடம்பு ஈருகப் பல வகைப்படும்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"

என்று பாடியருளினுர் மாணிக்கவாசகர். ஒரு ஆன்மாவுக்குக் கிடைக்கும் உடம்பானது அது அப்போது அனுபவிக்கவேண்டிய வினைகளுக்குத் தக்கதாய் இருக்கும். வினைப்பயனை அனுபவித்தால் ஆணவ மறைப்புக் குறையும். ஆதலால் ஒரு ஆன்மா எந்தப் பிறவியை எடுத்தாலும், அந்தப் பிறவியிலே அதனுடைய ஆணவ மறைப்புச் சற்றே குறையும்; மெய்யறிவு சற்றே வளரும்.

ஆகவே, ஆன்மாக்களாகிய நம்முடைய பிரதானமான தொழில் இந்த ஆணவ மறைப்பை நீக்கிச் சிவஞானத்தைப் பெறுதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தலேயாம். சிவஞானத்துக்குக் கடவுளுடைய திருவடிகள் என்றும் பெயர். இதனுலே தான், கடவுளுடைய திருவடிகளை அடைதலே நாம் பிறவி எடுப்பதன் பயன் என்று பெரியோர்கள் சொல்லுகிருர்கள். 'அத்திருவடிகளைத் தருமாறு கடவுளை வேண்டுகிருர்கள்.

ஒருவனே போற்றி ஒப்பி லப்பனே போற்றி வானேர்
குருவனே போற்றி யெங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி தமியனேன் றனிமை தீர்த்தே'

என்று பாடியருளியதும் மாணிக்கவாசக சுவாமிகளேயாம். உயிர்கள் யாவும் அத்திருவடிகளை அடைதற்காகவே யாத்திரை செய்கின்றன. கதிர்காமத்துக்கு வழிநடையாய் யாத்திரை செய்பவர்கள் காலையிலும் மாலையிலும் இயன்ற அளவு நடப்பார்கள்; நடுப்பகலிலும் இரவிலும் ஒரு இடத்திலே தங்கியிருந்து சமைத்துச் சாப்பிட்டுவிட்டு ஓய்வாய் இருப்பார்கள். தங்கியிருக்கும் போதும் சமைக்கும்போதும் அடிக்கடி ''கதிர் வேல்! கதிர்வேல்!!" என்று அலறுவார்கள்; அவர்கள் என்ன தொழில் செய்தாலும், அவர்களுடைய மனம் இடையருது கதிர் காமத்தையவிடத்தேதான் செல்லும். அதுபோலக் கடவுளுடைய திருவடிகளை அடைவதற்கு யாத்திரை செய்பவர்களாகிய நாம் அந்த யாத்திரையையே

முழு நோக்கமாகவும், உண்ணுதலையும் உறங்குதலையும் அதற்குத் துணையாகவும் கொள்ளுதல் வேண்டும்.

கதிர்காம யாத்திரைக்காரர் கூட்டம் கூட்டமாகப் போதல் வழக்கம். ஒவ்வொரு கூட்டத்திலும் ஆண்களும் பெண்களும், பெரியாரும் சிறியாரும், கற்றாரும் கல்லாதாரும், செல்வரும் வறியவரும் உளர். ஆயினும் யாவரும் கதிர்காமத்து ஆண்டவனுடைய அடியார்கள் என்ற கொள்கையை உடையவராய் அன்பும் அருளும் நிறைந்தவராய், யாத்திரை செய்வர். அதுபோலத் திருவடி யாத்திரைக்காரராகிய நாம் எல்லோரும் ஒருவரோடொருவர் நீதியாயும் அன்பாயும் வாழுதல் வேண்டும்.

திருவடி யாத்திரையைப் பற்றி மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய 'யாத்திரைப் பத்து' என்னும் பதிகம் திருவாசகத்திலுள்ளது; அதிலுள்ள பாடல் ஒன்று வருமாறு:

'தாமே தமக்குச் சுற்றமுந்
    தாமே தமக்கு விதிவகையும்
யாமா ரெமதார் பாசமார்
    என்ன மாய மிவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடு
    மவன்றன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப்
    புயங்க னாள்வான் பொன்னடிக்கே.'

3. கடவுள் வழிபாடு

கடவுளுடைய திருவடிகளை அடைதற்காகவே நாம் பிறவி எடுத்தோமாதலால், அத்திருவடிகளைச் சிந்தித்தலும், துதித்தலும், வணங்குதலுமே நமது முக்கியமான கடமையாகும். உடம்பு நயப்படுதற்கு உணவும், மனம் நயப்படுதற்குக் கல்வியும் வேண்டப்படுதல் போல ஆன்மா நயப்படுதற்குக் கடவுள் வழிபாடு வேண்டப்படும். உடம்பும் மனமும் ஆன்மாவின் கருவிகள்; உடம்பு தொழில் செய்தற்கும், மனம் ஆராய்தற்கும் கருவியாயுள்ளவை. கருவிகளினும் பார்க்கக் கருவிகளையுடையவன் மேலானவன். ஆதலால், உடம்பினும் மனத்தினும் மேலானதே ஆன்மா. ஆகவே, உடம்பை நயப்படுத்துதற்கு வேண்டிய உணவினும், மனத்தை நயப்படுத்துதற்கு வேண்டிய கல்வியினும் மேலானது ஆன்மாவை நயப்படுத்துவதாகிய கடவுள் வழிபாடு. அன்றியும், இவைகள் ஆன்மாவுக்குக் கருவியாயிருத்தலால்

இவற்றின் முக்கியமான தொழில் ஆன்மாவுக்கு வேண்டிய கடவுள் வழிபாட்டில் ஈடுபடுதலேயாம். 'திருக்கோயிலை வலம் வந்து சுவாமிக்குப் பூவைச் சாத்தித் தோத்திரம் செய்யாத உடம்பினால் பயனில்லை, என்றார் திருநாவுக்கரசு நாயனார். கடவுளுடைய திருவடிகளைத் தொழுதற்குத் துணையாய் நில்லாத கல்வியினால் பயனில்லை என்றார் திருவள்ளுவ நாயனார்.

"ஆக்கையாற் பயனென்—அரண்
கோயில் வலம்வந்து
பூக்கையாலட்டிப் போற்றி என்னாதவிவ்
வாக்கையாற் பயனென்"

—திருநாவுக்கரசு நாயனார்

"கற்றதனா லாயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்."

—திருவள்ளுவ நாயனார்

கடவுள் வழிபாட்டிற்கு உரிய நேரங்கள் காலையும் மாலையுமாம். இவ்வழிபாடு பலவாறாகச் செய்யப்படுகின்றது. சிலர் தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களைப் பாடிக் கடவுளைத் தோத்திரம் செய்து தியானித்துச் சிந்தித்து வணங்குவர். வேறு சிலர் இவற்றோடு திரு ஐந்தெழுத்தை ஓதுவர். சுப்பிரமணியர் தொண்டர் திருப்புகழ் முதலிய அருட்பாக்களையும் திரு ஆறெழுத்தையும் ஓதுவர். வேறு சிலர் சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளுள் ஒன்றுக்குப் பூசை செய்வர். மற்றுஞ் சிலர் சிவலிங்க பூசை செய்வர். இன்னுஞ்சிலர் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து வழிபடுவர்.

கடவுளை நாம் தரிசிக்கும்போதும் பூசிக்கும் போதும் எங்கும் வியாபகமாயுள்ள இறைவனே! சிறியேனுடைய வழிபாட்டிற் காக இங்கு எழுந்தருளியிருக்கும் இப்பெருங்கருணையை நான் எவ்வாறுதான் துதிப்பேன்!! உன்னுடைய திருமுன்னிலையில் நின்று உன்னுடைய கருணையைப் பருகும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததே; உன்னை நான் மறந்து விடுகிறேனே!!!

பனைக்கை மும்மத வேழ முரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமா மம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்போது மறந் துய்வனோ.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்னடி யென்மனத்தே

வழுவா திருக்க வரந்தர
வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள்
செய்பா திரிபபுலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை
மேல்வைத்த தீவண்ணனே. —தேவாரம்

என்று அந்த அந்த நேரம் மனதிலே வருவனவற்றைச் சொல்லி ஆனந்திப்போம். கடவுள் வழிபாடு இவ்வளவோடு நில்லாமல் நமது பிற செயல்களிலும் செறிந்திருக்கின்றது. நித்திரை விட்டெழும்பும்போது 'சிவ சிவ' என்று சொல்லி எழுந்திருக் கிறோம். உடனே கை வாய் கழுவி 'சிவ சிவ' என்று சொல்லித் திருநீறு பூசுகிறோம். குளிக்கும்போது கடவுளைச் சிந்திக்கிறோம். சாப்பிடும்போது கடவுளுக்கு நிவேதித்துச் சாப்பிடுகிறோம். சாப்பாடு முடிந்தவுடனே 'சிவ சிவ' என்று சொல்லித் திருநீறு பூசுகிறோம். வெளியே போகும் போதும் அப்படியே செய்கிறோம். நித்திரைக்குப் போகும்போது சிவபிரானைத் தோத்திரித்துத் திரு ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டு உறங்குகிறோம்.

கடவுள் வழிபாடு நமது ஒழுக்கத்தையும் சீர்படுத்தக் கூடியது. தீய ஆசைகளேனும், தீய எண்ணங்களேனும் எழும் போது சிவ சிந்தனை செய்தால், அச்சிந்தனை இவற்றைக் கருக்கி மீளவிடாமல் அழித்துவிடும். அது மனத்தைத் தூயதாக்கி இறைவன் எழுந்தருளியிருத்தற்குத் தகுதி வாய்ந்த இடமாக்கும். இவ்வுண்மையை,

'தேடிக் கண்டுகொண்டேன்—திரு
மாலொடு நான்முகனுந்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன்
நாடி நாரண னுன்முக னென்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே'.

என்னும் திருநாவுக்கரசு நாயனார் திருவாக்குகளிற் காண்க.

நாம் எதை அதிகமாகச் சிந்திக்கிறோமோ, அதனிடத்தில் நமக்கு உறுதியான பற்று உண்டாகின்றது. கள்ளை அதிகமாக நினைக்கிறவனுக்குக் கள்ளுண்ணல் ஒரு பைத்தியமாகின்றது. அறிவிலே அதிகமான விசாரமுள்ளவனுடைய மனம் கல்வி

யிலன்றி வேறென்றிலும் செல்லாது. சங்கீதத்தை அதிகமாகச் சிந்திப்பவன் சங்கீத மயமாகின்றான். கடவுளிடத்திலே சிந்தனையைச் செலுத்துபவன் கடவுளின் அருள் மயமாகின்றான்.

" நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றியென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே."

—தேவாரம்

4. நல்வினை தீவினைகள்

கடவுள் எல்லா உயிர்களுக்கும் பரம பிதா. ஆதலால் மற்றைய உயிர்கள் யாவும் நமக்குச் சகோதரர்கள்; நமது அன்புக்கும் ஆதரவுக்கும் உரிமை உடையவர்கள். நாம் இதை முற்றாக மறந்து, சிலரை வெறுக்கின்றோம்; வேறு சிலரைப் பகைக்கின்றோம்; சில உயிர்களுக்குத் துன்பம் செய்கின்றோம்; சிலவற்றைக் கெடுக்கின்றோம். இப்படி முறைகேடாய் நாம் நடப்பதற்குக் காரணம் நமது ஆசைகள். ஆசைகள் உண்டாவதற்குக் காரணமாயுள்ளது நம்மை மயக்கிக் கொண்டிருப்பதாகிய ஆணவம்.

ஆசைகளை நாம் எல்லைப்படுத்தி வைத்துக் கொள்வோமாயின், மற்றைய உயிர்களைச் சகோதரர்களாகப் பாவித்தல் இலகுவாய்க் கைகூடும். நமக்குப் பொருளிலே ஆசை உண்டு. இந்த ஆசைக்கு எல்லையாய் இருக்கவேண்டியது நாம் நன்முயற்சியாற் சம்பாதிக்கும் பொருளேயாம். அந்த எல்லையைக் கடந்து பிறர் பொருளிலே இந்த ஆசை செல்லுதல் தகாது. நமக்கு உணவிலே ஆசை உண்டு. இந்த ஆசைக்கு எல்லையாயுள்ளது பிற உயிர்களை வருத்தாமல் வரும் உணவுகளாம். அவையாவன:– அரிசி முதலிய தானியங்களும், காய், கனி, கிழங்கு முதலியவைகளுமாம். இந்த ஆசையானது மீன், விலங்கு, பட்சி முதலியவற்றின் ஊனிலும் இவற்றுட் சிலவற்றின் கருவாயுள்ள முட்டைகளிலும் செல்லலாகாது. நம்முடைய கலவியாசை விவாக எல்லையுள் அடங்கி நிற்க வேண்டியது; அப்பாற் செல்லுதல் தகாது.

ஆசையானது எல்லையைக் கடக்கும்போது நாம் செய்யும் செயல் தீவினையாகும். தீவினை செய்பவர்களுக்குக் கடவுள் இப்பிறவியிலேனும் மறு பிறவியிலேனும் துன்பமான வாழ்க்கையைக் கொடுத்தருளுவார். இப்பிறவியிலே குருடாய், செவிடாய், நொண்டியாய்ப் பிறக்கிறவர்களும், பிறந்த பின்பு வறுமையாலும், நோயினாலும், அறிவின்மையாலும் வருந்துகிறவர்களும் முற் பிறவியிலே தீவினை செய்தவர்களாம். இவர்கள் வருந்துவதைக் காணும்போது நாம் தீவினை செய்ய அஞ்சுகின்றோம்.

வலிய ஆசைகள் எல்லையைக் கடக்கும்போது அவைகளை அடக்குதல் அரிது. ஆதலால், அவைகள் எல்லையைக் கடக்க மாட்டாத விதமாக நம்மைப் பழக்கி வருதல் வேண்டும். அப்படியான பழக்கத்தை நாம் கைக்கொண்டால் நமது மனம் தீய வழியிலேயே செல்லமாட்டாது. இப்பழக்கத்தைச் சிறுவயதிலேயே மேற்கொள்ளுதல் எளிது. சின்ன வயதிலேயே சத்தியம், நேர்மை, மன அடக்கம், மன உறுதி மனத்திருப்தியாகிய இவற்றைப் பழக்கிக் கொண்டால், இறக்கும் வரைக்கும் இவைகள் நிலைத்திருக்கத் தக்கவை. அறப்பற்றும், பிற உயிர்களில் இரக்கமும், யாவரும் கடவுளுடைய குழந்தைகள் என்ற எண்ணமும் உறுதிப்பட்டால் ஆசைகள் தாமாகவே அடங்கி நிற்கும். அப்படி அடங்கி நின்றால் நாம் தீவினைகளைச் செய்யமாட்டோம்.

நல்லவர்களுடைய சரித்திரங்களைப் படித்தலும் கேட்டலும், அவர்களை நயத்தலும் தாய் தந்தை ஆசிரியர் முதலியோருக்குப் பணிந்து நடத்தலும், அவர்களுடைய அன்பை விரும்புதலும்; தீவினை செய்யாமைக்குத் துணையானவைகளாம். எங்கும் நிறைந்திருப்பவரும் எல்லாம் அறிபவரும் நமது நெஞ்சிலே எப்போதும் வீற்றிருப்பவருமாகிய சிவபிரானை வணங்கிப் பணிந்து நடத்தலே தீவினையினின்றும் நீங்குதற்குச் சிறந்த சாதனமாம்.

அறிவாளிகள் ஆசைகளை இலகுவாகக் களைந்துவிடுவார்கள். நமது உடம்பும் மற்றைய பொருள்களும் இந்த உலகமும் மாயையால் ஆக்கப்பட்டவை; மாயையையும் கைவிட்டால்தான் நாம் கடவுளுடைய திருவடிகளை அடையலாம்; ஆதலால் மாயை நம்மால் விலக்கப்பட வேண்டியபொருள். நாம் ஆசைப்படும் பொருள்களெல்லாம் மாயையிலிருந்து தோன்றியவை; ஆதலால் இப்பொருள்களிலே ஆசை கொள்ளுதல் தவறாகும். அன்றியும், ஆன்மாவானது மாயையிலும் பார்க்கக் கோடானு கோடி மடங்கு மேலான பொருள்; ஆதலால் அது மாயைப்

பொருள்களாகிய பொன்னுக்கும் புலத்துக்கும், பூணுக்கும் புலாலுக்கும், பேருக்கும் பெருமைக்கும் அடிமையாதல் தகாது என்று கருதி அறிவாளிகள் ஆசைகளை அறுப்பார்கள்.

இனி நல்வினையாவது யாதெனில்:— நாம் கடவுளிடத்திற் கொண்ட அன்பினாலும் மற்றைய உயிர்களிடத்திற் கொண்ட இரக்கத்தினாலும் உந்தப்பட்டு நாம் செய்யும் நற்செயல்களாம். அவையாவன:— கடவுள் வழிபாடும், இன்சொல்லும், வறியவர்களது பசிநோய்களைத் தீர்த்தலும் பிறர் செய்யும் பிழைகளைப் பொறுத்தலும், நற்போதனை செய்தலும் இவைபோல்வனவுமாம். நல்வினை செய்பவர்களைக் கடவுள் அப்பிறவியிலும் மறுபிறவியிலும் சுகமாக வாழ வைப்பார். அதனால் அவர்களுக்கு நல்வினையிலுள்ள பற்று மேலும் மேலும் வளர்ந்து ஓங்கும்; ஆணவ மறைப்புக் குறைந்து குறைந்து போகும்; மெய்யறிவு ஏறி ஏறி வரும்.

தீவினை செய்பவர்களுக்குக் கடவுள் துன்பத்தை ஊட்டியருளுவர். அத் துன்பத்தினாலே அவர்களுக்குத் தீவினையில் வெறுப்பும் நல்வினையிலே விருப்பும் உண்டாகும். அதனால் ஆணவ மறைப்புக் குறையும்; மெய்யறிவு வளரும்.

"கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற்
குத்திரம் கோள்களவு
கல்லாமற் கைதவ ரோடிணங்
காமற் கனவிலும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமல்
தோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வத் தருவாய்
சிதம்பர தேசிகனே."

—பட்டினத்தார்

5. சைவ வாழ்க்கை

நாம் விரும்பியபடி ஒன்றைப் பெறும்போது நம் மனத்திலே இன்பம் உண்டாகின்றது. நாம் மாம்பழம் தின்ன விரும்பும் போது அது கிடைக்குமாயின், இன்புறுகின்றோம். கள்ளுணவை விரும்புகிறவன், அதைப் பருகும்போது இன்புறுகின்றான். அன்றியும் நாம் விரும்பமாட்டாத ஒன்று நம்மைச் சேரா விட்டாலும் நாம் இன்புறுகின்றோம். களவு செய்தவன் அகப்படாமல் தப்பி விட்டானாயின் மிகவும் சந்தோசப் படுகிறான்.

இப்படியின்றி நாம் விரும்பிய ஒன்று கிடையாவிட்டாலும், விரும்பாதது வந்து சேர்ந்தாலும் துன்பம் உண்டாகின்றது. எனக்காயினும், என்னைச் சேர்ந்தவர்க்காயினும், என்னுடைய பொருளுக்காயினும் இடர் நேர்ந்தால் துக்கம் உண்டாகின்றது. யாராயினும் இடர் செய்தால் அவரிடத்திலே கோபம் உண்டாகின்றது. ஏதாயினும் இடர் வரப்போகிறதென்று கண்டால் அச்சம் உண்டாகின்றது.

சைவ வாழ்க்கையிலே துன்பத்துக்காயினும், துக்கத்துக் காயினும், கோபத்துக்காயினும், அச்சத்துக்காயினும் இடம் வராது. பச்சைக் கண்ணாடியை அணிந்து கொண்டு எதைப் பார்த்தாலும் அது பச்சையாகவே தோன்றும். வெண்மையான பாலும், செம்மையான இரத்தமும், நீலமான ஆகாயமும், கரியதாகிய காகமும் பச்சையாகவே தோன்றும். அதுபோலச் சைவமாகிய கண்ணாடியாற் பார்த்தால், யாவும் உவப்பானவைகளாகவே தோன்றும். நான் விரும்பிய பொருள் கிடையாவிடில் துன்பமில்லை; எனது கப்பல் ஆழ்ந்து போனால் துக்கமில்லை. என் குழந்தை இறந்துபோம் என்று அஞ்சுவதில்லை; என் பயிரை அழிப்பவனைத் தடுத்தலும் கண்டித்தலுமேயன்றிக் கோபித்தலில்லை.

சைவ சமயத்தின்படி நாம் ஆணவமென்னும் வியாதியினாலே பிடிக்கப்பட்டிருக்கிறோம். இந்த வியாதியைத் தீர்க்கும் வைத்தியர் சிவபெருமான்; ஆதலால் அவருக்கு "வைத்தியநாதன்" என்று பெயர். நோயாளி தனக்குப் பொருந்தாத உணவுகளை விரும்புதல் உண்டு. ஆயினும் வைத்தியன் அந்த உணவுகளைக் கொடுக்க மாட்டான். அதுபோல, நமக்கு ஆகாத பொருள்களை நாம் விரும்புதல் உண்டு; வைத்தியநாதராகிய கடவுள் அவற்றை நமக்கு அருளமாட்டார். ஆதலால் நாம் விரும்பிய பொருள் நமக்குக் கிடையாவிடில், அது நமக்கு ஆகாதென்று உணர்ந்து, அது கிடையாமற் போனதைப்பற்றி நாம் சந்தோஷப்படல் வேண்டும். நோயாளி விரும்பமாட்டாத பலவற்றை வைத்தியன் அவனுக்குச் செய்கிறான்; ஆமணக்கெண்ணெய் போன்ற கசப்பானவற்றை உண்ணச் செய்கிறான்; பெரியகொப்புளத்தைக் கத்தியினாலே கீறி வேதனையை ஆக்குகிறான்; அதுபோலச் சிவபிரானாகிய வைத்தியநாதர் நாம் விரும்பமாட்டாதவற்றை நமக்குச் சேர்த்தலும், கொடிய வேதனைகளை ஆக்குதலும், நமது ஆணவமாகிய நோயை நீக்கி நம்மைச் சுகமாக வாழும்படி

வைத்தற்கேயாம். ஆதலால், நம்முயற்சிகளைக் கடந்து, நாம் வெறுப்பவைகள் நம்மை அடைந்தாலும், நாம் வேதனைகளில் அகப்பட்டாலும், அவைகள் நமது நன்மைக்காகக் கடவுளால் அருளப்பட்டவை என்பதை உணர்ந்து அவைகளைப்பற்றி இன் புறுதலே தக்கதாம். எனது கப்பல் ஆழ்ந்து போனதும், குழந்தை இறந்து போவதும் நன்மையானவைகளே. அவைகள் எனக்கு எப்படி நன்மையாகும் என்பதை நாம் அறியவேண்டியதில்லை. 'யாவும் அவருடைய செயலே; அவர் செய்வதெல்லாம் நன்மையே' என்ற நம்பிக்கை உறுதியாயிருந்தால் அப்பர் சுவாமி கள் பாடியருளியபடி,

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரனற்
சங்கவெண் குழை யோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா வாளாய்க்
கொய்ம் மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே."

"சுண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை உடையும்
வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முரண் ஏறும்
அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை"

என்றும் எப்போதும் ஆனந்தமாய் வாழலாம். துக்கம், கோபம், அச்சம் ஆகிய மூன்றும் உடலுக்கே தீமையானவை. என்னுடைய கப்பல் ஆழ்ந்து போனால், பெருமுயற்சி செய்து பொருளைத்தேடி நட்டத்தைத் தீர்த்தலும், எனக்கு யாராவது இடர்செய்ய வரும் போது கோபங்கொள்ளுதலின்றி அவனைத் தடுத்தலும், குழந்தை யானது கொடிய நோயின் வாயில் அகப்பட்டால் அஞ்சுதலின்றி நல்ல வைத்தியம் செய்தலும், அது இறந்து போனால் 'பிறந்தவர்

இறக்கை திண்ணம்' என்பதைக் கண்டு மனங்கலங்காதிருத்தலும் சைவர்களல்லாதாரும் செய்யத் தக்கவைகளாம்.

6. சைவ ஒழுக்கங்கள்

1. சைவ ஒழுக்கங்களுள் இன்றியமையாதது திருநீறு அணிதல். அதை அணியும்போது சிவபிரானை நினைத்தலும் திருவைந்தெழுத்தை உச்சரித்தலும் அவசியமானவை.

"கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்ற னாமம் பயின்றே னுனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரரனே."

2. திருவைந்தெழுத்தை ஆறுதலாயும் அமைதியாகவும் அன்போடு ஒவ்வொருநாளும் ஓதுதல்.

"காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே."

3. தேவாரம் அல்லது திருவாசகம் ஒவ்வொருநாளும் ஓதுதல்; திருவாசகப் புத்தகம் ஒன்று வீட்டில் வைத்துக் கொள்ளுதல்.

4. சிவபெருமான், உமாதேவியார், விநாயகர், வைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகளுள் ஒன்றிலே விசேஷ பற்றுவைத்து நாள்தோறும் தியானித்துத் தோத்திரம் சொல்லி வணங்குதல். சிவத்தியானத்துக்கு நடராச வடிவம் மிகவும் பொருத்தமானது.

"தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோத முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

—உண்மை விளக்கம்

அதிலுள்ள ஒவ்வொன்றும் அரிய உண்மைகளை விளக்கி, நம்மை நல்வழியிற் செலுத்தத் தக்கது. ஒரு திருக்கரத்திலேயுள்ள துடியானது படைத்தலாகிய தொழிலைக் குறிக்கின்றது. கடவுள்

நம்மைப் படைத்தது நாம் மெய்ப்பொருளாகிய அவரை அடைந்து பேரானந்தத்தைப் பெறுதற்காக என்பதை அது காட்டத்தக்கது. ஆதலால், அதைக்காணும்போது,

"உற்றாரை யான்வேண்டே னூர்வேண்டேன்
பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு
மினியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன்
குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக
வேண்டுவனே."

என்று எண்ணலாம்.

அவருடைய வேறொரு திருக்கரம் அபயகரம் எனப்படும். அது "நாம் உன்னைக் காப்போம்; ஒன்றுக்கும் பயப்படாதே" என்னும் குறிப்புடையது.

"மண்பா தலம்புக்கு மால்கடல்
மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர்
வீழினு மஞ்சல்நெஞ்சே
திண்பா னமக்கொன்று கண்டோம்
திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட்
சுடரான் கழலிணையே." - தேவாரம்

என்னும் மனவுறுதியை ஆக்கத்தக்கது. திருவடிகளுள் ஒன்று முயலகனை மிதித்து ஆணவத்தை நசித்தலைக் குறிக்கும். அதை நாம் காணும்போது அவருடைய திருவடித்துணையைக் கொண்டு ஆணவத்தாலுண்டாகும் ஆசைகளை அடக்கவேண்டும் என்னும் விருப்பும் உண்டாகும். மற்றத் திருவடி அவர் நம்மைத் தம்மோடு சேர்த்துத் தம்மைப் போல் ஆக்குவார் என்பதைக் குறிக்கும். இது:—

"புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தாளே புந்திவைத்திட்
டிகழ்மின் எல்லா அல்லலையு
மினியோ ரிடையூ றடையாமே

திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்றாள் வணங்கிநாம்
நிகழு மடியார் முன்சென்று
நெஞ்ச முருகி நிற்போமே.''

—திருவாசகம்

என்னும் மனப்பான்மையை ஆக்கத்தக்கது.

5. சிவனடியார்களது திருநாட்களைக் கொண்டாடி அவர்களுடைய திருச்சரித்திரங்களைச் சொல்லி அல்லது கேட்டு அவர்களை வழிபடல்.

''தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் மடியேன்
திருநீலகண்டத்துக் குயவனுர்க் கடியேன்
இல்லையே யென்னுத இயற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற்கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.''

—தேவாரம்.

6. நாள்தோறும் அல்லது வாரந்தோறும் கோயிலுக்குப் போதல்.

7. சைவ சமய முறைப்படி எப்போதும் நடக்கமாட்டாதவர்கள் வாரத்திற்கொரு முறையேனும், பக்கத்திற்கொரு முறையேனும் மாசத்திற்கொரு முறையேனும் முறைப்படி தவருது நடத்தல். இப்படி நடத்தல் விரத நாட்களிற் பொருந்தும். மாசி மாதத்தில் வரும் சிவராத்திரி விரதம் சைவர் யாவரும் அனுட்டிக்கத்தக்கது.

8. நாம் ஒருவரைக் காணும்போது அவர் சிவபிரானது திருவடிகளைச் சேருதற்கு யாத்திரை செய்பவர் என்ற எண்ணமே நமது மனத்தில் முதல் உண்டாதல். அவர் நம்மிடம் வந்த தொழிற்றொடர்பு இரண்டாவதாக எண்ணத் தக்கது.

7. சைவத்தின் மேன்மை

1. எல்லா ஆன்மாக்களும் மோட்சத்தைப் பெறுமென்று சொல்லுவது சைவ சமயம் மாத்திரமேயாம்.

உமாபதி சிவம் உயிர்களை வகுக்கும்போது (1) இதுவரையில் மோட்சத்தைப் பெற்றவர்கள் (2) இனிமேல் மோட்சத்தைப் பெறுவோர்கள்என இரண்டாகப் பிரிக்கின்றார். "துறந்தோர் துறப்போர்" என்பது அவருடைய திருவாக்கு. மற்றைய சமயத் தவர்கள் தங்கள் தங்கள் சமயத்தவர்களே ஈடேறுவார்கள் என்றும் வேறு சமயத்தவர்கள் நித்திய நரகத்தை அடைவார்கள் என்றும் சொல்லுகிறார்கள்.

2. ஒரு பள்ளிக்கூடத்தை ஆக்குபவர் மாணுக்கர்களது அறிவுக்குத் தக்கதாக ஒன்றுக்கொன்று மேற்பட்ட பல வகுப்புகளை வைப்பதுபோல, கடவுள் ஆன்மாக்களது நிலைக்குத் தக்கதாக ஒன்றுக்கொன்று மேற்பட்ட பல சமயங்களை ஆக்கினார் என்று சொல்லுவது சைவசமயம் மாத்திரமேயாம். "அறுவகை நெறிகளும் பிறவுமாக்கிய இறைவி" என்றார் கச்சியப்ப சிவம். "அறுவகை நெறி" என்றது. அறுவகைச் சமயம். இவை நான்கு வகைப்படும்.

கீழ் வகுப்பாகிய அறுவகைச் சமயங்கள் சமண சமயம் முதலியவை. இவற்றுட் பல கடவுள் உண்டென்று சொல்வதில்லை. மேற்பட்ட அறுவகைச் சமயங்கள் ஏகான்மவாதம் முதலியவை இவற்றுட்பல ஆன்மாவின் வேருகக் கடவுள் இல்லை என்று கூறும்.

இவற்றுக்கு மேற்பட்ட அறுவகைச் சமயங்கள் சாக்தம் முதலியவை. இவைகள் கூறும் கடவுளின் இலக்கணம் நிறைவான தன்று. இவற்றுக்கு மேற்பட்ட அறுவகைச் சமயங்கள் சிவசம வாதம் முதலியவை. இவற்றுக்கும் சைவத்திற்கும் வேறுபாடு அற்பமானது. இவற்றுக்கு மேற்பட்டது சைவ சமயமாம்.

3. மற்றைய சமயத்தவர்கள் தங்கள் தங்கள் சமயமே கடவுளால் ஆக்கப்பட்டதென்றும் ஏனைய சமயங்கள் கெட்ட சமயங்கள் என்றும் சொல்லுவார்கள்.

எந்தச் சமயத்தவரும் தமது சமயக் கடவுளை வழிபடும்போது அவ்வழிபாட்டைக் கடவுள் ஏற்று அருள்செய்வாரென்று சொல்லுவது சைவ சமயம் மாத்திரமே.

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி
ஆங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்."

என்றார் அருணந்தி சிவம்.

4. மோட்சம் அடைதற்குச் சாதனமாகச் சமய அநுட்டானத்தைப் படிப்படியாக நிரைப்படுத்தியுள்ளது சைவ சமயம் மாத்திரமேயாம்.

சர்வகலா சாலைகளிலே இளம் பட்ட வகுப்புகள் (graduate course)முது பட்ட வகுப்புகள்(Post-graduate course)என இரண்டு பெரிய படிகள் இருப்பதுபோலச் சைவ சமயத்திலே உபாய மார்க்கம், உண்மை மார்க்கம் என இரண்டு பெரும்படிகள் உண்டு.

உபாய மார்க்கமாவது உலகப்பற்றோடு செய்யும் சைவ அநுட்டானங்கள். நம்மைப் போன்றவர்கள் சைவசமய அநுட்டானங்களைச் செய்வாராயின் அவர்கள் உபாய மார்க்கத் தவராவர். உண்மை மார்க்கமாவது உலகப்பற்றுச் சிறிதுமின்றிச் செய்யப்படும் சைவ அநுட்டானங்கள். தாயுமானவர் முதலியோர் உண்மை மார்க்கத்தவர். இளம்பட்ட வகுப்புகள் முதலாண்டு வகுப்பு முதல் நான்காமாண்டு வகுப்பு வரையும் நாலுபடிகளாதல்போல,உபாய மார்க்கமானது உபாயச்சரியை, உபாயக்கிரியை, உபாயயோகம், உபாயஞானமென நான்குபடி களையுடையது. முதுபட்டப் படிப்பிலே பலபடிகள் இருத்தல் போல (M. Sc; Ph. D.; D. Sc.) உண்மை மார்க்கத்திலே உண்மைச்சரியை, உண்மைக்கிரியை, உண்மையோகம் என மூன்று படிகள் உள. முதுபட்டப் படிப்பில் உன்னத நிலையடைந்தோர் இராசசபை அங்கத்தவராதல்போல (F.R.S.) உண்மை மார்க்கத்தில் உன்னத நிலையடைந்தோர் உண்மை ஞானமாகிய உன்னதபடியை அடைவர்.

இவற்றுள் சரியையாவது:- சிவாலயத் தொண்டுசெய்தலும், விநாயகர் முதலிய உருவத்திருமேனிகளுள் ஒன்றுக்குப் பூஜை செய்தலுமாம். கிரியையாவது:-சிவலிங்க பூஜை செய்தல். யோகமாவது:- சிவயோகம். ஞானமாவது:- ஞான நூல்களை ஞானசாரியரிடம் கேட்டு அறிந்து சிவஞானத்தைப் பெறுதல்.

"சங்கரனை யடையும்
நன் மார்க்கம்நாலு அவைதாம் ஞான யோக நற்கிரியா
சரியை என நவிற்றுவதும் செய்வர்."

என்றார் அருணந்தி சிவம்.

மற்றைய சமயங்கள் இவ்வாறுனபடிகளொன்றுமின்றி எளிதிலே மோட்சத்தைத் தருவோம் என்கின்றன. அப்படியாயின் அவர்களுடைய மோட்சம் என்ன பெறும்!

5. எல்லா விதமான தீவினைகளையும் விலக்குவது சைவ சமயம் மாத்திரமேயாம். ஏனைய தீவினைகளோடு கள்ளுண்ணல், புலாலுண்ணல், கொலையாகிய மூன்றையும் விலக்குவது சைவ சமயமே.

புலாலுண்ணலைப் புத்த சமயம் விலக்கவில்லை. புலாலுண்ணலையேனும் கொலையையேனும் இஸ்லாம் சமயம் விலக்கவில்லை. புலாலுண்ணலையேனும் கள்ளுண்ணலையேனும், கொலையையேனும் கிறிஸ்து சமயம் விலக்கவில்லை.

6. ஆன்மாக்கள் ஆணவமென்னும் வியாதியினாற் பீடிக்கப் பட்ட நோயாளிகள் என்றும், அவைகள் செய்யும் பிழைகள் யாவும் அந்த நோயினால் வருவன என்றும், அவைகள் இயல்பாக நல்லவை என்றும், கடவுள் அந்த நோயைத் தீர்க்கும் வைத்திய நாதர் என்றும், அவர் ஆன்மாக்களுக்கு ஊட்டும் இன்ப துன்பங் கள் அந்நோயைத் தீர்க்கும் மருந்துகள் என்றும் சொல்வது சைவ சமயம் ஒன்றேயாம்.

"அருளினால் உரைத்த நூலின்
வழிவரா ததன்மஞ் செய்யின்
இருளுலா நிரயத் துன்பத்
திட்டிரும் பாவந் தீர்ப்பன்
பொருளுலாம் சுவர்க்க மாதி
போகத்தாற் புணியம் தீர்ப்பன்
மருளுவாம் மலங்கள் தீர்க்கும்
மருந்திவை வைத்திய நாதன்."

என்றார் அருணந்தி சிவம்.

மற்றைய சமயங்கள் மனிதர்கள் இயல்பாகக் கெட்டவர்கள் என்றும், கடவுள் அவர்கள் செய்யும் குற்றத்துக்காக அவர்களைத் தண்டிக்கும் நீதிபதி என்றும் கூறும்.

7. புறச்சமயத்தவரை வலிந்து இழுக்காதது சைவசமயம் மாத்திரமேயாம். மற்றைய சமயத்தவர்கள் ஏனைய சமயத்தவர் களைத் தங்கள் சமயத்துக்கு இழுப்பதே தமது பெரியமுயற்சி யாகக் கொள்வார்கள்.

மனிதர்காள்! இங்கேவம் ஒன்று சொல்லுகேன்;
கனிதந்தாற் கனி உண்ணவும் வல்லிரே?
புனிதன் பொற்கழ லீசன் எனுங்கனி
இனிது சாலவும் ஏசற் றவர்கட்கே.

—திருநாவுக்கரசு நாயனர்

மழை வழங்குக மன்னவ னேங்குக
பிழையில் பல்வள னெல்லாம் பிறங்குக
தழைக வஞ்செழுத் தோசை தரையெலாம்
பழைய வைதிக சைவம் பரக்கவே.

—உமாபதி சிவம்

திருச்சிற்றம்பலம்

சைவசித்தாந்த சாகரம்

நன்றி: சு. சிவபாதசுந்தரம் அவர்கள்

இணைப்பு

தமிழில் மலர் வழிபாடு (அர்ச்சனை)

பிள்ளையார் வழிபாடு

நூற்றெட்டுப் போற்றி

ஓம்எனும் பொருளாய் உள்ளோய் போற்றி
பூமனும் பொருள்தொறும் பொலிவாய்போற்றி
அகரம் முதலென ஆனாய் போற்றி
அகர உகர ஆதி போற்றி
மகரமாய் நின்ற வானவ போற்றி
பகர்முன் னவனும் பரனே போற்றி
மண்ணாய் விண்ணாய் மலர்ந்தாய் போற்றி
கண்ணுள் மணியாய்க் கலந்தாய் போற்றி
நீர்தீக் காற்றாய் நின்றாய் போற்றி
கார்குளி ராகக் கனிந்தாய் போற்றி
பகலவன் நிலவாய்ப் பரந்தாய் போற்றி
நிகர்மீன் கணமாய் நிலைத்தாய் போற்றி
மழைபொழி இமய வல்லிசேய் போற்றி
தழைசெவி எண்தோள் தலைவ போற்றி
திங்கட் சடையோன் செல்வ போற்றி
எங்கட் கருளும் இறைவா போற்றி
அறுமுகச் செவ்வேட்கு அண்ணா போற்றி
சிறுகண் களிற்றுத் திருமுக போற்றி
செம்பொன் மேனிச் செம்மால் போற்றி
உம்பர் போற்றும் உம்பல் போற்றி

பண்ணியம் ஏந்துகைப் பண்ணவ போற்றி
எண்ணிய எண்ணியாங் கிசைப்பாய் போற்றி
அப்பமும் அவலும் கப்புவாய் போற்றி
முப்புரி நூல்மார்பு அப்பா போற்றி
எள்ளுருண் டைபொரி ஏற்போய் போற்றி
தெள்ளுறு தெவிட்டாத் தேனே போற்றி
மூவர் மொழியிடம் மொழிந்தாய் போற்றி
தேவர்க் கரிய தேவா போற்றி
மாலுக் கரிய மதகரி போற்றி
பாலெனக் கடல்நீர் பருகினாய் போற்றி
பாரதம் எழுதிய பரூஉக்கர போற்றி
மாரதம் அச்சொடி மதவலி போற்றி
மாங்கனி அரன்பால் வாங்கினோய் போற்றி
ஈங்கினி எம்பால் எழுந்தருள் போற்றி
கரும்பா யிரங்கொள் கள்வா போற்றி
அரும்பொரு ளேயெம் ஐயா! போற்றி
திணைபால் கடந்த தேவே போற்றி
புணையாய் இடர்க்கடல் போக்குவோய் போற்றி
பேழை வயிற்றுப் பெம்மான் போற்றி
ஏழைக் கிரங்கும் எம்மிறை போற்றி
அடியவர் உள்ளம் அமர்ந்தாய் போற்றி
அடிமலர் எம்தலை அணிவாய் போற்றி
திருநீற் றொளிசேர் செம்மால் போற்றி
இருவே றுருவ ஈசா போற்றி
உள்ளத் திருளை ஒழிப்பாய் போற்றி
கள்ளப் புலனைக் களைப்பாய் போற்றி
நம்பியாண் டார்க்கருள் நல்லாய் போற்றி
எம்பிரா னாக இசைந்தாய் போற்றி
உருகுவோ ருள்ளத் தொளியே போற்றி
பெருகருள் சுரக்கும் பெருமான் போற்றி
தம்பிக்கு வள்ளியைத் தந்தாய் போற்றி
உம்பர் கட் கரசே ஒருவ போற்றி
பிள்ளையார்ப் பெயர்கொண் டுள்ளாய் போற்றி
வள்ளலாய் நலங்கள் வழங்குவாய் போற்றி
மூவாச் சாவா முத்தா போற்றி
ஆவா எங்களுக் கருள்வாய் போற்றி
தமிழ்ச்சுவை சார்திருச் செவியாய் போற்றி

அமிழ்தாய் எம்மகத் தானாய் போற்றி
மழவிளங் களிறே மணியே போற்றி
குழவியாய்ச் சிவன்மடி குலவுவோய் போற்றி
பெருச்சா ளியூரும் பிரானே போற்றி
நரிச்செய லார்பால் நண்ணாய் போற்றி
செந்தா மரைத்தாள் தேவா போற்றி
நந்தா மணியே நாயக போற்றி
இருள்சேர் இருவினை எறிவாய் போற்றி
கரிமுகத் தெந்தாய் காப்போய் போற்றி
ஆங்கா ரம்முளை அறுப்பாய் போற்றி
பாங்கார் இன்பப் பராபர போற்றி
கற்றவர் விழுங்கும் கனியே போற்றி
மற்றவர் காணா மலையே போற்றி
சொல்லொடு பொருளின் தொடர்பே போற்றி
கல்லும் கரைக்க வல்லோய் போற்றி
தொந்தி வயிற்றுத் தந்தி போற்றி
முந்திய பொருட்கு முந்தியோய் போற்றி
ஐந்துகை யுடைய ஐய போற்றி
ஐந்தொழில் ஆற்றும் அமர போற்றி
அருளாய் அருள்வாய் ஆண்டவ போற்றி
தருவாய் மணமலர்த் தாராய் போற்றி
கயமுக அசுரனைக் காய்ந்தாய் போற்றி
மயலறும் இன்ப வாழ்வே போற்றி
ஆனையாய்ப் புழுவாய் ஆனாய் போற்றி
பானை வயிற்றுப் பரமே போற்றி
கடம்பொழி யானைக் கன்றே போற்றி
மடம்ஒழி **அறிவின்** வளனே போற்றி
பாலொடு தேனும் பருகுவோய் போற்றி
மேலொடு கீழாய் மிளிர்வோய் போற்றி
எய்ப்பில் வைப்பாய் இருந்தோய் போற்றி
மெய்ப்பொருள் வேழ முகத்தாய் போற்றி
நல்லார்க் கெட்டும் நாதா போற்றி
பொல்லா மணியே புராதன போற்றி
அறிவின் வரம்பை அகன்றாய் போற்றி
குறிகுணங் கடந்த குன்றே போற்றி
எட்டு வான்குணத் தெந்தாய் போற்றி

கட்டறு களிற்று முகத்தாய் போற்றி
மலரில் மணமாய் வளர்ந்தாய் போற்றி
அலர்கதிர் ஒளியின் அமர்வோய் போற்றி
ஓங்கா ரம்முகத் தொடுத்தல் போற்றி
ஏங்கா துயிர்க்கருள் இயற்கை போற்றி
எண்ணும் எழுத்துமாய் இசைந்தாய் போற்றி
பண்ணும் பயனுமாய்ப் பரந்தாய் போற்றி
அருவே உருவே அருவுரு போற்றி
பொருளே பொருளின் புணர்ப்பே போற்றி
புகர்முகக் களிற்றுப் புண்ணிய போற்றி
அகலிடம் நிறைய அமர்ந்தோய் போற்றி
செல்வம் அருள்க தேவா போற்றி
நல்லன எமக்கருள் நாயக போற்றி
ஆக்கமும் ஊக்கமும் அருள்வாய் போற்றி
காக்கஎங் களையுன் கழலிணை போற்றியே

திருச்சிற்றம்பலம்

முருகப்பெருமான் வழிபாடு

நூற்றெட்டுப் போற்றி

அருவாம் உருவாம் முருகா போற்றி
திருவார் மறையின் செம்பொருள் போற்றி
ஆறு முகத்தெம் அரசே போற்றி
மாறுகொள் சூரரை வதைத்தாய் போற்றி
இருள்கெடுத் தின்பருள் எந்தாய் போற்றி
உருள்பூங் கடம்பணி உரவோய் போற்றி
ஈசற் கினிய சேயே போற்றி
மாசறு திருவடி மலரோய் போற்றி
உறுநர்த் தாங்கும் உறவோய் போற்றி
செறுநர்த் தேய்த்த செவ்வேள் போற்றி
ஊனில் ஆவியாய் உயிர்ப்போய் போற்றி
கானில் வள்ளியின் கணவ போற்றி
எழில்கொள் இன்ப வாரிதி போற்றி
அழிவிலாக் கந்தனும் அண்ணல் போற்றி
ஏறு மயிலூர்ந்தேகுவாய் போற்றி

கூறுமன் பர்க்குக் குழைவாய் போற்றி
ஐயனாய் உலகை ஆக்குவாய் போற்றி
செய்யமே னியனே தேவே போற்றி
ஒருவனாய் உலகெலாம் ஒளிர்வாய் போற்றி
பருவம் முதிராப் பண்பே போற்றி
ஓவற இமைக்கும் ஒளியே போற்றி
மாமுதல் தடிந்த மறவ போற்றி
ஔவியம் அறுத்தோர்க் கருள்வோய் போற்றி
தெய்வம் எலாந்தொழும் செய்யாய் போற்றி
அஃகுதல் இல்லா அறிவே போற்றி
வெஃகுதல் அற்றார் விளக்கே போற்றி
கந்தா மணமார் கடம்பா போற்றி
நந்தா விளக்கே நாயக போற்றி
காப்பாய் படைப்பாய் கழிப்பாய் போற்றி
மூட்பீ றற்ற முதல்வா போற்றி
கிள்ளை மொழியுமை பிள்ளாய் போற்றி
கள்ளப் புலனைக் களைவாய் போற்றி
கீழறும் அடியர் கிழவோய் போற்றி
ஏழுல குந்தொழும் இறைவா போற்றி
குன்றும் குழைதோட் குமர போற்றி
என்றும் இளைய ஏறே போற்றி
கூம்புகைத் தேவர் கோவே போற்றி
பாம்பணி சிவனார் பாலக போற்றி
கெஞ்சடைக் கண்ணியர் கேள்வ போற்றி
அண்டினர்க் கருளும் அங்கண போற்றி
கேடில் முருகனாய்க் கிளர்ந்தாய் போற்றி
வீடில் வீடருள் விமல போற்றி
கைவேல் கொண்ட காவல போற்றி
நைவேற் கருள்வாய் நாயக போற்றி
கொடைக்கடன் கொண்ட குழக போற்றி
படைக்கடல் தலைவ பரனே போற்றி
கோதில் அமிழ்தே குருமணி போற்றி
போதில் அமர்ந்த பொன்னே போற்றி
சிவபிரான் கண்வரு சேயே போற்றி
நவசர வனத்தில் நகர்ந்தாய் போற்றி

அறுவுரு அமைந்தே ஆடினாய் போற்றி
அறுமீன் பாலுண் அமர போற்றி
உருவமை சேர்க்க உற்றாய் போற்றி
பெருமை பிறங்கு பெரியோய் போற்றி
நான்முகனைச்சிறை நாட்டினாய் போற்றி
மான்மகள் வள்ளியை மணந்தாய் போற்றி
செங்கண் கடாவைச் செலுத்தினாய் போற்றி
அங்கண் குறிஞ்சிக் கரசே போற்றி
இறைவனுக் கரும்பொருள் இசைத்தாய் போற்றி
மறையிடைப் பொருளாய் வளர்ந்தாய் போற்றி
பரங்குன் றமர்ந்த பரம்பர போற்றி
திருச்செந்தில் வள்ர் சேவக போற்றி
ஆவி னன்குடி ஆண்டாய் போற்றி
மேவிஏ ரகம்வாழ் மிக்கவ போற்றி
குன்றுதோறாடும் குழந்தாய் போற்றி
துனறு பழமுதிர் சோலையாய் போற்றி
திசை முகம் விளக்கும் செம்முக போற்றி
இசைபெரு வேள்வி இனமுக போற்றி
செங்களம் ஓர்க்கும் திருமுக போற்றி
மங்கல மான வானவ போற்றி
வள்ளிபால் நகைகொள் மாமுக போற்றி
திங்களின் ஒளிரும் சீர்முக போற்றி
ஆர்வலர் ஏத்த அருள்முக போற்றி
சீர்வளர் அழகின் செல்வா போற்றி
மணிமுடி புனையா நணிமுடி போற்றி
துணையடி தொழுவார்க் கணைவாய் போற்றி
செவியீ ராறுடைச் செம்மால் போற்றி
கவித்தொடை புனைதோட் கந்தா போற்றி
பன்னிரு கண்ணுடைப் பண்ணவ போற்றி
என்னிரு கண்ணின் இலகுவோய் போற்றி
பொருவில் ஒருவனும் புலவ போற்றி
அருண கிரிக்கருள் அமல போற்றி
நக்கீ ரற்கருள் நாதா போற்றி
தக்கசங் கத்தமிழ்த் தந்தாய் போற்றி
குமர குருபரற் கருளினை போற்றி
அமரர் அஞர்களை அளியோய் போற்றி

பந்த பாசங்களைப் பறிப்போய் போற்றி
கந்த புரிவாழ் வுகந்தோய் போற்றி
தெய்வானை யம்மையைச் சேர்ந்தோய் போற்றி
பொய்யிலா மனத்துட் புகுவோய் போற்றி
கோழி வெல்கொடிக் கோவே போற்றி
ஊழிதோ றூழி உள்ளாய் போற்றி
செய்யாய் சிவந்த ஆடையாய் போற்றி
மேய்யெலாம் வெண்ணீ றணிவோய் போற்றி
மேவலர் மடங்காலம் விசாக போற்றி
மூவர்கள் போற்றும் முத்த போற்றி
தேவர்கள் சிறைமீள் சீர்வலாய் போற்றி
சேவலும் மயிலும் சேர்த்தோய் போற்றி
போர்மிகு-பொருந புரவல போற்றி
ஏர்மிகு இளஞ்சேய் எம்மிறை போற்றி 100
தாரகற் கொன்ற தாழ்விலாய் போற்றி
பாரகம் அடங்கலும் பரவுவோய் போற்றி
தமிழ்மொழி இன்பில் தழைப்பாய் போற்றி
அமிழ்திற் குழைத்த அழகா போற்றி
கல்வியும் செல்வமும் கனிந்தருள் போற்றி
பல்வகை வளனும் பணித்தருள் போற்றி
இன்பார் இளைய ஏந்தால் போற்றி
என்பால் அருள்புரி என்றும் போற்றியே. 108

அம்பலவாணர் வழிபாடு

நூற்றெட்டுப் போற்றி

வேண்டுகோள்

திருச்சிற்றம்பலம்

அன்பாய் அருட்கூத் தாடுவோய் போற்றி
என்பால் கலந்த இறைவா போற்றி
ஆகம முடிமேல் அமர்ந்தாய் போற்றி
ஏகமும் நடஞ்செய் எம்மான் போற்றி
இகபரம் அருளும் ஈசா போற்றி
அகங்கரை நடனத் தரசே போற்றி
ஈறில் மறைமுதல் இடையோய் போற்றி
மாறில் நடமிகு வள்ளால் போற்றி

உரையுணர் விகந்த ஒருவ போற்றி
அரைபுலித் தோலணி அப்பா போற்றி
ஊழி ஊழி உள்ளோய் போற்றி
ஆழியான் காணு அடியோய் போற்றி
எல்லையில் இன்ப நடத்தாய் போற்றி
தொல்லை வினைதீர் சுடரே போற்றி
ஏனோர்க் கரிய ஏந்தால் போற்றி
மானேர் கைக்கொள் மன்னே போற்றி
ஐயா நமர்ந்த அரசே போற்றி
வைகொள் சூலக் கையா போற்றி
ஒருகால் தொழினும் உவப்போய் போற்றி
இருகால் இசைய ஆடுவோய் போற்றி
ஓங்கா ரப்பொருள் உடையாய் போற்றி
பாங்காய் நடனிடு பரனே போற்றி
ஔவியம் இல்லா அரனே போற்றி
தெய்வச் சீர்பெறு செம்பொருள் போற்றி
கற்பார்க் கருள்நடம் காட்டுவோய் போற்றி
சொற்பதங் கடந்த தொல்லோய் போற்றி
காமனைக் காய்ந்த கண்ணுதல் போற்றி
தூமன அடியார் தொடர்போய் போற்றி
கிளரொளி அம்பலக் கிழவோய் போற்றி
வளர்வெளி ஆடிய மாதவ போற்றி
குறுங்கணிக் கொன்றை முடியாய் போற்றி
உறுநடஞ் செய்யும் உரவோய் போற்றி
கூடல் விளங்கு குருமணி போற்றி
ஆடல் அரசே அமர போற்றி
கொளக்கொளக் குறையா நிறைவே போற்றி
அளக்கொணு அன்பர் அமிழ்தே போற்றி
கோவே கூத்தா குணமலை போற்றி
சேவேற் றுக்கொடித் தேவா போற்றி
அஞ்செழுத் துட்பொருள் ஆனாய் போற்றி
நஞ்சமர் கண்ட நாயக போற்றி
மும்மலம் முருக்கும் செம்மால் போற்றி
செம்மைசேர் நிறத்துச் சேவக போற்றி
அரதன சபைநடம் ஆடியோய் போற்றி
அருளுரு வாகிய அண்ணல் போற்றி

பொன்னம் பலநடம் புரிவோய் போற்றி
இன்தா மிரசபை இசைந்தாய் போற்றி
நெல்வே லியில்நடம் நிலைத்தாய் போற்றி
பல்வே றுருவாய்ப் பரந்தாய் போற்றி
குற்றா லத்துறை கூத்தா போற்றி
உற்றபே ரூர்நடம் உகந்தாய் போற்றி
மதுரையில் மாறி ஆடியோய் போற்றி
குதிரை விற்ற கோவே போற்றி
திருபுத் தூர்நடஞ் செய்தாய் போற்றி
புலிக்கால் முனிக்கருள் பொன்னடி போற்றி
நிலைக்கப் பதஞ்சலி நேர்ந்தாய் போற்றி
உடுக்கின் ஒருகையால் படைப்பாய் போற்றி
அடுக்குங் கையால் அமைப்பாய் போற்றி
அனல்சேர் கையால் அழிப்பாய் போற்றி
புனல்சேர் செஞ்சடைப் புனித போற்றி
ஊன்றிய அடியால் ஒடுக்குவோய் போற்றி
நான்றநற் காலால் நல்குவோய் போற்றி
இத்தொழில் ஐந்தும் ஏற்றாய் போற்றி
முத்தொழில் முகக்கும் முகிலே போற்றி
மைப்படி கண்ணி மணாள போற்றி
முப்புரம் எரித்த முதல்வ போற்றி
சங்கக் குழையணி தாயே போற்றி
செங்கண் ஏறுடைச் செல்வா போற்றி
எண்ணொடும் எழுத்தாம் இயலே போற்றி
பண்ணொடு பயனார் பாட்டே போற்றி
புயலே பெயலே புரிவாய் போற்றி
அயலே வெயிலே ஆவாய் போற்றி
கரியுரிப் போர்வைக் கண்ணுதல் போற்றி
எரியுரு அன்ன இயற்கை போற்றி
மலைமகள் இடங்கொள் மலையே போற்றி
அலைநஞ் சயின்ற ஆதி போற்றி
தெண்ணிலாச் செஞ்சடைச் சீரோய் போற்றி
எண்ணிலா நடம்பயில் எங்கோன் போற்றி
உயிர்வெளி இடையே உறைந்தாய் போற்றி
தயிர்நெய் போலத் தணவாய் போற்றி
கண்ணுள் மணியாய்க் கலந்தாய் போற்றி

பெண்ணுள் அழகாய்ப் பிரியாய் போற்றி
அண்ட உண்டையில் அணுவே போற்றி
மண்டிலந் தோறும் வளர்ந்தாய் போற்றி
ஊற்றாய் உள்ளே ஊறுவோய் போற்றி
காற்றாய் எங்கும் கலந்தாய் போற்றி
ஆறுசேர் சென்னி ஐயா போற்றி
நீறுசேர் மேனி நித்தா போற்றி
அரவொடும் பிறைமுடி அணியாய் போற்றி
இரவொடு பகல்நடம் இசைப்போய் போற்றி
கொடுகொட்டி ஆடிய கூத்தா போற்றி
படுபாண் டரங்கம் பயின்றாய் போற்றி
காபாலம் ஆடிய காலோய் போற்றி
பூபா தந்தரு புகழோய் போற்றி
மன்றில் ஆடும் மணியே போற்றி
என்றுமெம் நெஞ்சில் இருப்போய் போற்றி
மீன்வலை வீசிய மீனவ போற்றி
கான்மா றியாடும் கற்பகம் போற்றி
அத்தா அம்பலத் தாடி போற்றி
முத்தா முதல்வா முக்கண போற்றி
எட்டுரு வாக இசைந்தாய் போற்றி
நட்டம் பயிலும் நாதா போற்றி
இமயவில் வாங்கிய ஈசா போற்றி
உமையிடம் பிரியா ஒருவ போற்றி
வாழ்க உலகம் வரமருள் போற்றி
சூழ்கநல் லனவந் துறவருள் போற்றி
நடத்தாய் போற்றி நாயக போற்றி
போற்றி பொன்னடிப் புதுமலர் போற்றி
போற்றி நடமிடு திருத்தாள் போற்றியே.

திருச்சிற்றம்பலம்

உமையம்மை வழிபாடு

நூற்றெட்டுப் போற்றி

வேண்டுகோள்

திருச்சிற்றம்பலம்

[நிலைமண்டில ஆசிரியப்பா]

திருநிலை நாயகி தேவி போற்றி
கருந்தார்க் குழலுமை கௌரி போற்றி

மங்கள நாயகி மாமணி போற்றி
எங்கும் நிறைந்த இன்பொருள் போற்றி
இளமை நாயகி எந்தாய் போற்றி
வளமை நல்கும் வல்லியே போற்றி
யாழைப் போல்மொழி யாயே போற்றி
பேழை வயிற்றனைப் பெற்றாய் போற்றி
பால்வளை நாயகி பார்ப்பதி போற்றி
சூல்கொண் டுலகெலாம் தோற்றினாய் போற்றி
அறம்வளர் நாயகி அம்மே போற்றி
மறங் கடி கடைக்கண் மனோன்மணி போற்றி
போகம் ஆர்த்த பொற்கொடி போற்றி
பாகம் பிரியாப் பராபரை போற்றி
உலகுயிர் வளர்க்கும் ஒருத்தி போற்றி
மலர்தல் குவிதலில் மணமலர் போற்றி
கத்து கடல்வரா முத்தே போற்றி
நத்தும் அடியார் நட்பே போற்றி
கற்றவர்க் கின்பக் கடலே போற்றி
மற்றவர்க் கெட்டா வான்வெளி போற்றி
சிவகாமி யம்மைச் செல்வி போற்றி
புவனப் பொருள்களிற் பொருந்தினாய் போற்றி
வலிதா யத்தமர் வண்தாய் போற்றி
கலிசூ ழாவகை காப்பாய் போற்றி
வண்டுவார் குழலி மாதா போற்றி
செண்டா டும்விடைச் சிவையே போற்றி
உண்ணா முலையெம் உயர்தாய் போற்றி
கண்ணார் கமுகுக் கழுத்தாய் போற்றி
பெருந்துறை அரசி பெண்கனி போற்றி
முருந்தேர் முறுவல் முதல்வி போற்றி
வேற்கண் அம்மை மீன்கணி போற்றி
நாற்பெரும் பயன்தரும் நங்காய் போற்றி
மின்னொளி யம்மையாம் விளக்கே போற்றி
மன்னொளிப் பிழம்பாய் வளர்ந்தாய் போற்றி
பச்சை நிறத்துப் பைங்கிளி போற்றி
இச்சைக் கிசைந்த இன்பே போற்றி
குவளைக் கண்மலர்க் கொம்பே போற்றி
தவளவெண் நீற்றோன் தலைவி போற்றி

பவள வரைமேற் பசுங்கொடி போற்றி
துவளிடை சிறுத்த தூயோய் போற்றி
குயில்மொழி மிழற்றும் மயிலியல் போற்றி
எயில்மூன் றெரித்த இலங்கிழை போற்றி
தையல் நாயகித் தாயே போற்றி
வையமீன் றளிக்கும் வளத்தாய் போற்றி
மெய்யுரு கடியர் விருப்பே போற்றி
ஆவுடை நாயகி அன்னாய் போற்றி
தேவிற் சிறந்த திருமகள் போற்றி
தொண்டர் அகத்தமர் தூமணி போற்றி
அண்டர் அருந்தா அமிழ்தே போற்றி
பனங்காட் டுருறை பவளே போற்றி
அனங்காட் டும்நடை அழகி போற்றி
தமிழினும் இனிமை சார்ந்தோய் போற்றி
குமிழ்தா மரைமலர் கொடியிடை போற்றி
அமரி குமரி ஆனாய் போற்றி
இமவான் பெற்ற இளையாய் போற்றி
மலையத் துவசன் மகளே போற்றி
கலையாய்க் கனிந்த தலைமகள் போற்றி
தக்கன் மகளாய்த் தனித்தாய் போற்றி
முக்கட் சுடரின் முதல்வி போற்றி
அலைமகள் அடிபணி நலமகள் போற்றி
கலைமகள் தலைபணி கருத்தே போற்றி
திருவார் கூடலில் திகழ்வாய் போற்றி
அருமறைப் பொருளாம் ஆதி போற்றி
உயிருள் ஓவிய உருவே போற்றி
செயிரில் காட்சிச் சேயிழை போற்றி
செந்தமிழ்ப் பாவின் தெளிவே போற்றி
எந்தம் மனத்தில் இருப்பாய் போற்றி
நீலி சூலி நெடுங்கணி போற்றி
மேலை வினைகடி விமலை போற்றி
ஒளிக்குள் ஒளியாய் உயர்வாய் போற்றி
வெளிக்குள் வெளியாய் மிளிர்வாய் போற்றி
நீல மேனி வாலிழை போற்றி
கோலக் கொண்டல் நிறத்தாய் போற்றி
மண்முதல் ஐம்பொருள் வளனே போற்றி

பெண்ஆண் அலியுருப் பெற்றேய் போற்றி
ஆப்பனூர் மேவிய ஆத்தாள் போற்றி
மூப்பிறப் பற்ற முதல்வி போற்றி
எண்குணத் தொருவன் இடத்தோய் போற்றி
பண்கனி மென்சொற் பாவாய் போற்றி
பச்சிளம் பெண்ணுயப் பகர்வோய் போற்றி
எச்சம யத்தும் இசைந்தாய் போற்றி
யாழிசைப் பண்ணு யமர்ந்தாய் போற்றி
ஏழிசைப் பயனும் இருந்தாய் போற்றி
அருள்மலி கண்ணுடை ஆயே போற்றி
மருளினர் காணு வான்பொருள் போற்றி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை போற்றி
பற்றிலா நற்றவர் பற்றே போற்றி
இழையாய் நன்மை இழைப்பாய் போற்றி
குழையாய் அகத்தைக் குழைப்பாய் போற்றி
திருநணு மங்கைச் செல்வி போற்றி
உருவும் திருவும் உடையாய் போற்றி
அருந்தவர்க் குதவும் அருளே போற்றி
அருந்துறைத் தமிழின் அமைபொருள் போற்றி
கருநிற ஒளிவளர் கடலே போற்றி
பருவரை மருந்தே பகவதி போற்றி
சூளா மணியே சுடரொளி போற்றி
ஆளாம் அடியர்க் கருள்வாய் போற்றி
மதுரை அரசியாய் வந்தோய் போற்றி
குதிரைச் சேவகன் கொண்டோய் போற்றி
உலகம் உவப்புற வாழ்வருள் போற்றி
பலநல் லனநீ படைத்தருள் போற்றி
உயிர்களின் பசிப்பிணி ஒழித்தருள் போற்றி
பயிர்கள் பயன்தரப் பரிந்தருள் போற்றி
செல்வம் கல்விச் சிறப்பருள் போற்றி
நல்லன் பொழுக்கம் நல்குவாய் போற்றி
போற்றிஉன் பொன்னடிப் போது போற்றி
போற்றி புகழ்நிறை திருத்தாள் போற்றி
போற்றிதா யுமையே போற்றி போற்றியே.

திருச்சிற்றம்பலம்

குரு நமச்சிவாய தேவர் அருளிச் செய்த

நமச்சிவாய மாலை

காப்பு

மந்திர நமச்சிவாய மாலை நான் செப்புதற்குக்
கந்தவேலனுக்கு மூத்த கணபதி காப்புத்தானே.

1 அறைமறை யயனுமாலும் அமரரு முனிவர் தாமும், முறைமுறை வணங்கியேத்தும் முதல்வனே நமச்சிவாய.

2 ஆதியாய் வேதநான்காய் அடிமுடி தெரியா வண்ணஞ், சோதியாய் நிறைவாய் நின்றதுணைவனே நமச்சிவாய.

3 இணையடி தேடிக்காணு ஏழுலகளந்த மாயன், கணையதா வெயின் மூன்றெய்த கடவுளே நமச்சிவாய.

4 ஈட்டிய பொருள்போலுன்றன் இணையடி பணிவார் துன்பம், வாட்டிய செம்பொன்மேனி வள்ளலே நமச்சிவாய.

5 உமையொரு பாகம் வைத்த உம்பர் கடம்பிரானே, அமைதரு மணியே முத்தே அண்ணலே நமச்சிவாய.

6 ஊனுமாயுயிருமாகி உள்ளுமாய்ப் புறம்புமாகித், தாணு வாய்ச் சகத்துக் கெல்லாந் தந்தையே நமச்சிவாய.

7 எழுபிறப் பதனுள் மாழ்கும் ஈனுயிர்க் கிரங்கிவந்து, பழுதற வாண்டுகொள்ளும் பரமனே நமச்சிவாய.

8 ஏடவிழ் கோதைமார் இளமுலை மயக்கப்பட்டு, நீடுதலொழிக்கவல்ல நிமலனே நமச்சிவாய.

9 ஐயமேற் றுண்டாய் பாதம் அன்பிலேன் றலைமேல் வைத்த, செய்யனே வானோர் போற்றுந் தேவனே நமச்சிவாய.

10 ஒன்பது வாயிற்கூட்டில் ஓடுங்குயி ருய்யும் வண்ணம், பொன் பொதி மலர்த்தாள் காட்டும் புனிதனே நமச்சிவாய.

11 ஓமெனு மெழுத்தி னுள்ளே ஒளியதாய் விளங்குகின்ற, வாமனே கருணை நல்கும் வள்ளலே நமச்சிவாய.

12 ஔவியம் பேசாவண்ணம் அடிமையைத் தடுத்தாட் கொள்ளுந், திவ்விய மணியே முத்தே தேவனே நமச்சிவாய.

13 சுக்கிலைப் பூண்டு கொண்டே சுரிய வெண்ணீறு பூசுஞ், சொக்கனே செக்கர்மேனித் தூயனே நமச்சிவாய,

14 கம்பமார் களிலுரித்த கச்சியேகம்பா செம்பொன், அம்பலத் தாடுகின்ற அண்ணலே நமச்சிவாய.

15 நகரம்போல் வளைந்துழன்று நாயினேனுணவு தேடும், பகரொணா வின்னறீர்க்கும் பரமனே நமச்சிவாய.

16 சத்தியுஞ் சிவமுமாகித் தாணுவாய்ச் சகத்துக் கெல்லாம், முத்தியே யளிப்பாயாதி முதல்வனே நமச்சிவாய.

17 ஞமனுட னிந்திரற்கும் நாரணற் காரணற்குஞ், சமனுற முதலாய் நின்ற தாணுவாய் நமச்சிவாய.

18 இடவிய கபாலமேந்தி ஏழிரண் டுலக மெல்லாந் தடவியுங் காணவொண்ணாச் சங்கரா நமச்சிவாய.

19 இணங்கிய கமலப் பொற்றாள் இருவரு மேத்தி நின்று, வணங்க வம்பலத் துள்ளாடும் வானவா நமச்சிவாய.

20 தண்டமிழ் முனிவன்றன்னைச் சமமுறத் தென்பாலேவும், அண்டரோ டயன்மால்காணா ஆதியே நமச்சிவாய.

21 நஞ்சணி கண்டத்தானே நதிமதிச் சடையினானே கொஞ்சுபச் சிளம்பெண் பாகங் கொண்டவா நமச்சிவாய.

22 பண்டுல களந்த மாலும் பங்கயத் தயனுந் தேடிக் கொண்டுசென் றறிய வொண்ணாக் குரவனே நமச்சிவாய.

23 மங்கையோர் பாகம் வைத்து வளர்பிறை முடிமேல் வைத்துச், செங்கையின் மழுமான் வைத்த தேவனே நமச்சிவாய.

24 இயக்கரு முனிவர்தாமும் இருகரங் குவித்து நின்று வியக்கவம் பலத்திலாடும் விமலனே நமச்சிவாய.

25 அரகர சிவனே யென்றும் அம்பலத் தாடி யென்றும் பரவுவார் துயரந் தீர்க்கும் பரமனே நமச்சிவாய.

26 இலவிதழ் மடவார் தங்கள் ஏவலுக் குரியனாகி, அலமரு மென்னை யாண்ட அமலனே நமச்சிவாய.

இணைப்பு V

MADURAI—V-International Tamil Conference,
January 4 to 10, 1981

விடுதலையும் வீடுபேறும்

VEETUPERU AND VIDUTHALAI

ARADICAL NEW APPROACH IN TAMIL RESEARCH

A comparative study based on the meaning and treatment of the twin concepts of Freedom Viz *Veetuperu* (Salvation) and *Viduthalai* (Socio-Political Freedom) in Tamil Saiva Bhakti Literature with special reference to their interdependence.

by

K. Gnanasoorian, M. Sc. (Lond),
Honarary Editor, LONDON MURASU
Director, Institute for international Tamil Renaissance
London, United Kingdom

Read at the

V-INTERNATIONAL CONFERENCE-SEMINAR OF TAMIL STUDIES
MADURAI, TAMIL NADU
4 to 10 January, 1981.

விடுதலையின்றேல் வீடுபேறு இல்லை
Veetuperu and Viduthalai

A comparative study based on the meaning and treatment of the twin concepts of freedom, viz: *Veetuperu* (salvation) and *Viduthalai* (socio-political freedom) in Tamil Saiva Bhakti Literature with special reference to their interdependence.

SUMMARY

Serious students of Tamil Saiva Bhakti Literature cannot fail to see an unmistakable element of interdependence in the twin concepts of *veetuperu* and *viduthalai*. Contrary to popular belief, Tamil Bhakti Literature does not limit itself to praise the glory of Lord Siva, to guide the devotees and to pave the way for *veetuperu* or personal salvation. Indeed it goes far beyond the constraint of this basic premise to look at the Tamil peoples, socio-political freedom in realistic and mundane terms as well and to spearhead a reformist and protestant movement against all forms of oppression both from within (eg: against caste, and lifeless rituals) and from without (eg: foreign invaders and foreign religions, which undermined basic Tamil values). With singular devotion and unswerving faith in God, the Saiva Nayanmars donned, for a time, the role of social leadership and even went so far as to challenge the very authority of the accredited rulers of the time, eg: "நாமார்க்கும் குடியல்லோம்"— Appar; "ஆணை நமதே"— Sampanthar; "மண்ணுளவான் மதித்துமிரேன்"— Manickavacagar. This study pinpoints the numerous references to the recognition of these vital social and political freedom struggles in the Bhakti literature and which, in turn, vitalised the Saiva cult and its quest for *veetuperu*. Thus the Keynote of this literature is its breadth of vision in building a spiritual Saiva edifice on the realistic foundation of social and political freedom.

The concept that *veetuperu* or *muththi* is only a path and not a destination we proceed to, is also brought out significantly in Tamil Saiva Bhakti literature, not in isolation but in the living context of *viduthalai* (socio-political freedom) which the

Saint-composers considered vital for the consummation of *muththi* as a path and indeed as a way of living. It is concluded from this study that in the Bhakti literature, the twin concepts of freedom-*veetuperu* and *viduthalai*—and their interdependence (one nourishing the other, as it were) are very firmly rooted in the *Thevarams* and the *Thiruvacagams* with the Nayanmars themselves personally involved in this balanced approach. This synthesis find a measure of fulfilment only in the literature of the period following the golden age of the later Cholas, exemplified by the *Periyapuranam* of Sekkilar and again in the period of Pandya supremacy, but perhaps to a lesser extent, in the *Kanthapuranam* of Kachchiappar. Whenever this interdependence aspect was shaken to the roots, then decline in political and social freedom was matched by the degeneracy of Bhakti, evident in the paucity and lack of vitality in the Bhakti literature of the final phases of the medaeival period even right up to the Bharathi—era of the modern period. The lofty religious fervour displayed by the later Siddhars (Pattinattar, Arunakiri nathar, Thayumanavar) are indeed a sad but brave commentary on the progressive polarization and eclipse of socio-political freedom (*viduthalai*) much to the *detriment* of any real quest for salvation (*veetuperu*). Their were the lone but majestic voices of Bhakti, praying to the Almighty for *veetuperu* in a social climate where *viduthalai* was virtually non-existent; impassioned cries of an imbalance in society but transformed as the challenge of the inner soul rising against both the prolonged oppression from without and the onsetting decadence and lethargy from within.

Possible hopes for a new Tamil regeneration thus seem to rest on the recognition of this aspect of interdependence of the two concepts of freedom—*veetuperu* and *viduthalai*—so well reiterated in early Saiva Bhakti Literature.

K. GNANASOORIAN, M.Sc (Lond)
INSTITUTE FOR INTERNATIONAL TAMIL
RENAISSANCE, LONDON.

[Some related correspondance and appeals are annexed hereto)

Institute for International Tamil Renaissance

உலகத் தமிழர் மறுமலர்ச்சி நிலையம்

From the Director
K. GNANASOORIAN
M.Sc (Lond), M.R.I.C., A.M.I. Corr. T.
Chartered Chemist
Honorary Editor: 'London Murasu'
Vice-President: I. M. T. C, Malaysia.

London Headquarters
72, King Edward Road
London E17 6HZ
10th November 1980

An Appeal from the International Tamil Community to the Tamil Nadu Government.

TO: The Hon'ble Chief Minister Thiru M. G. Ramachandran
Hon'ble Thiru V. R. Nedunchezhian, Minister for Finance
Hon'ble Thiru C. Aranganayagam, Minister for Education
Madras, Tamil Nadu, India.

தமிழகத்தின் மாண்புமிகு தலைவர்களே,

MADURAI: International Tamil Conference AND the urgent need for the creation of an *INTERNATIONAL TAMIL CULTURAL CONSULTATIVE BODY under the aegis of the Tamil Nadu Government.*

While sending you our Best Wishes from London for the success of the forthcoming Madurai Conference, we do so with a renewed sense of Tamil pride in a growing spirits of international Tamil solidarity and understanding which rose to new heights following the Hon'ble Finance Minister's recent visit to London, after attending the 2nd International Tamil Cultural Conference in Mauritius together with the Hon'ble Thiru C. Aranganayagam and Dr. S. V. Subramanian.

As emphasized by the Hon'ble Thiru Nedunchezhian in his stimulating Addresses in London, there is a growing consensus of opinion among the world Tamil communities that the need for the creation of such a high-level Body, to be funded and

administered by the Tamil Nadu Government, is more urgent now than ever before. In fact, we hasten to agree wholeheartedly with the general view of the Hon'ble Finance Minister that there cannot be a more appropriate international forum, timing, and venue than the forthcoming Madurai IATR Conference in January, 1981, to discuss and lay down the framework for the creation of such an international Body. There is no doubt that *such an organization will foster international goodwill and understanding, at the grassaroots level, among the culturally starved and linguistically alienated Tamil communities throughout the world,* under the cultural guidance and assistance of the Tamil Nadu Government.

We take this opportunity to make this humble *Appeal* to you, as the present political Leaders of Tamil Nadu, to give this matter your utmost and urgent consideration.

Indeed, we do so to promote World Tamil welfare and understanding, remembering our own Sanga-Tamil motto: "*Yathum Ooray; Yavarum Kelir*"—so that our long cherished language and cultural values can reach and nourish our Tamil fraternity throughout the world.

"IF NOT WE, WHO? IF NOT NOW, WHEN?"

Thanking you.

Yours in Tamil Service,

கி. ஞானசூரியன்

(*K. GNANASOORIAN*)

Director.

The institute is a voluntary, charitable organisation for the promotion of education and culture among Tamils throughout the world, covering the fields of Tamil history, language and the Arts including Tamil research studies.

Co-operating organisations:

1. "*London Murasu*"—The International Tamil Monthly Magazine.
2. *The International Movement for Tamil Culture*—with its headquarters in Malaysia.
3. *The World Tamil Youth Organisation*, Madras, Tamil Nadu.

முனைவர் சாலை இளந்திரையன்

Dr. Saalai Ilanthiraian
(University of Delhi)
97/7 W.E.A. Karolbagh
New Delhi-110 005

27-11-80

1. தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர் அவர்கள்
2. நிதி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள்
3. கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள்

தமிழ்ப் பல்கலைக்கழகம் / உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கலந்தாய்வுக் கழகம்

அன்புடையவர்களே,

வணக்கம், நலம். தமிழ்ப் பல்கலைக்கழக அமைப்பு வல்லுநர் குழுவில் என்னையும் நியமித்திருக்கிறீர்கள். இதுபோல், எதிர்கால நல்விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய பெருந் தமிழ்ப் பணிகளில் எனது ஆற்றலும் அனுபவமும் பயன்பட வேண்டும் என்பதே என் விருப்பம். எனவே, மேற்படிக் குழுவில் என்னை நியமித்த உங்கள் நற்றகைமைக்கு என் இனிய நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

நிற்க. லண்டன் மாநகரில் இயங்கிவரும் உலகத் தமிழர் மறுமலர்ச்சி நிலையத்தின் இயக்குநர், தோழர் கி. ஞானசூரியன் அவர்கள் உங்களுக்கெல்லாம் அனுப்பியுள்ள கோரிக்கைக் குறிப்பின் பிரதியை எனக்கும் அனுப்பியிருந்தார். அவர் தெரிவித்துள்ள "உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கலந்தாய்வுக் கழகம்" ஒன்று தமிழகத் தலைநகரில் அமைந்து இயங்க வேண்டியது மிகமிக அவசியம் என்றே நானும் கருதுகிறேன்.

உலகு தழுவிய தமிழ்த் தொடர்புறவுகளைக் கவனிப்பது என்பதே ஒரு பெரும்பணி; அதுவே, எதிர்காலத்தில் பல கிளைகளாகப் படர்ந்து பரவவும் வாய்ப்பு உள்ளது. ஏற்கனவே இருந்து வருகிற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமோ, விரைவில் தோன்றப்போகும் தமிழ்ப் பல்கலைக்கழகமோ, இத்தகைய தொரு கலந்தாய்வு அமைப்பின் பணிகளைத் தன்னகத்தே இணைத்துக் கொள்ள இயலாது. ஆகவே, உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கலந்தாய்வுக் கழகம் தனியே அமைவதே நல்லது என்று எண்ணுகிறேன். இதுபோன்ற கருத்துடைய உலகத் தமிழ் அறிஞர்கள் பலர் (மதுரை) ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருவார்கள். அந்தச் சமயத்திலேயே இந்தக் கழகத்தை உருவாக்கத் தமிழக அரசு முயல வேண்டும் என்று விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அன்புடன்,

(ஒ-ம்)
(முனைவர் சாலை இளந்திரையன்)

படி: திரு. கி. ஞானசூரியன்

Institute for International Tamil Renaissance

From the Director:
K. GNANASOORIAN
M. Sc (Lond). M R.I.C. A. M. I. Corr. T.
Chartered Chemist
Honarary Editor "London Murasu"

London Headquarters
72 King Edward Road
London E 17 6 HZ
December 6, 1980

Congressman. Hon. Mario Riaggi of New York
U. S. House of Representatives
Washington

Dear Hon. Riaggi,

Proceedings of the U. S. 96th Congress: H. Con. Res. 334 of 8-‑-80 Tamils of Eelam in U.K. express their gratitude

We take this opportunity of the recent visit to London of the Hon. Marie Howe, State Representative, Massachusetts, to extend to you our thanks for taking up the noble task of defending Human Rights for the TAMILS of Sri Lanka and for passing successfully *the above HISTORIC RESOLUTION in the U. S. Congress.*

The TAMILS of Sri Lanka, while expressing their heart-felt gratitude, to you, are deeply conscious of the historic step you have taken to bring their struggle into the International Focus.

By your concerted action in the self-determination struggle for Human Rights *for the TAMILS OF EELAM*, you have amply vindicated the corner-stones of U.S. Policy viz: *Freedom* and *Equality*, together, with an abiding concern for the promotion and protection of basic Human Rights, everywhere in the world.

With Best Wishes for a Merry X'mas and a Happy New Year.

Yours Sincerely,
K. GNANASOORIAN

Copy to:

State Representative: The Hon. Marie Howe, Masachusetts, U.S.A.

Mr. T. Sritharan, Secretary-General, E. T. A., Somerville, U.S.A.

Mr. K. Vaikunthavasan, Convener, T.C.C., London. U. K.

Saiva Siddhanta Church
Post Office Box 10
Kapaa, Hawaii 96746
808/822-3012

October 20, 1980

Mr. K. Gnanasoorian, M. Sc.
President
London Saiva Siddhanta Centre
72 King Edward Road
London E 17, England

Vanakkam Mr. Gnanasoorian,

Om Vighnesvaraya Namaha. Adoration to the Ruler of Obstacles.

Gurudeva, Sivaya Subramuniyaswami, was pleased to receive your letter and learn about the work that the London Saiva Siddhanta Centre is doing. He congratulates you on the publishing of the Centre's first book ***A Date with Destiny*** and hopes many more are forthcoming.

Gurudeva feels that the Saiva sangams all over the world should work together to uplift mankind, most especially members of the Saiva Samayam. He therefore welcome the establishing of a direct link with your organization as part of this international alliance of Saivite Hindu Organizations that you and he envision.

Gurudeva looks forward to meeting you in person as well as the other members of the Centre during his next visit to England.

Gurudeva sends his blessings and support to you in the good work the London Saiva Siddhanta Centre is doing in the service of Lord Siva.

Om Shanti,

SAIVA SIDDHANTA CHURCH
(Sd.)
Rev. Swami Sivayogam Veylan
Master Subramuniya's Secretary

யார் இந்த ஞானசூரியன்?

["லண்டன் முரசு" சிறப்பாசிரியர் திரு அரங்க முருகையன் அவர்கள் "தெரிந்த பெயர், தெரியாத செய்திகள்" என்ற உலகத் தமிழ்த் தொண்டர்கள் பற்றிய தனது நூலில் அறிமுகப் படுத்துகிறார்.]

மக்கள் தொண்டர், பல்துறைச் சிந்தனையாளர்
சைவத் தமிழ்மணி திரு கி. ஞானசூரியன்
M.Sc. (Lond), M.R.I.C.

திரு. ஞானசூரியன் பல்துறைச் சிந்தனையாளர்; உணர்ச்சி ஆர்வம் மிகுந்த எழுத்தாளர். அரசியல், மதம், கலை, வரலாறு தொடர்பான பல நூல்களையும், கட்டுரைகளையும் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக அவர் எழுதிக் குவித்துள்ளதே மேற்கண்ட கூற்றை மெய்ப்பிக்கும். "இலண்டன் முரசு" இதழ் கிடைத்ததும் சிலர் முதலில் தாய் நாட்டுச் செய்திகளைப் பார்ப்பர். "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந்தன" அல்லவா? இன்னுஞ் சிலர் திரைப்படச் செய்திகளைப் படிப்பர். என்னைப் போன்ற சிலர், திரு. ஞானசூரியன் இம் முறை என்ன எழுதியிருக்கிறார் என்று சுவைத்துப் படிப்போம்.

இலண்டன் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி மாணவர்களின் தகுதித் திறனை ஆய்ந்து நிலைப்படுத்தவும் தேர்வு நடாத்தவும் திரு. ஞானசூரியனும் நானும் அப்பள்ளிக்குப் பல ஆண்டுகட்கு முன் சென்றிருந்தோம். நாங்கள் செய்யும் பணிபற்றிப் பேச்சு வந்தபோது பள்ளி நெறியாளரிடம் இவர் அறிவியல் ஆராய்ச்சி அதிகாரியாகப் (Research Scientist) பணியாற்றுபவர் என்று திரு. ஞானசூரியனை அறிமுகப்படுத்தினேன். பள்ளி நெறியாளர், திரு. ஞானசூரியன் தமிழாராய்ச்சித்துறை அதிகாரி என எண்ணி "எந்தப் பலகலைக் கழகத்தில் பணியாற்றுகிறீர்கள்?" என்றார். அந்நிகழ்ச்சியைப் பின்னர் நினைத்துப் பார்த்தபோது பள்ளி நெறியாளர் எண்ணியதிலும் நயன்மை (நியாயம்) இருக்கிறது என எண்ணி மகிழ்ந்தேன்.

தோற்றமும் கல்வியும்

11-7-1929 அன்று யாழ்ப்பாணம் காரை நகரில் திரு கிருட்டிணப் பிள்ளைக்கும் திருவாட்டி இலக்குமி அம்மை

யாருக்கும் மூன்றாவது மகவாய்த் தோன்றிய திரு. ஞானசூரியன் தம் இளமைக் கல்வியை அளவெட்டியிலும், பின்னர் கொழும்பு இராயல்கல் லூரியிலுமாகக்கற்றார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இயல்பியல் (இரசாயனம்) துறையில் முதல் நிலை (B.Sc.) பட்டம் பெற்றுப் பின்னர் இலண்டன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து அத் துறையில் உயர்நிலை (M.Sc.) பட்டம் பெற்று இலங்கை அரசாங்கத் தொழிலமைச்சின் கீழ் கனரகத் தொழிற்சாலைப் பிரிவில் தலைமை இயல்பியற்றுறை அதிகாரியாகப் பல்லாண்டுகள் பணியாற்றிப் பின் இலண்டன் வந்து, இங்கு மாநகராட்சி நிறுவனத்தில் அறிவியற்றுறை ஆராய்ச்சியாளராகக் கடமை யாற்றுகிறார்.

பொதுத் தொண்டு

தமிழ் ஈழத்தில் 1965 அளவெட்டி மல்லாகம் உள்ளூராட்சி மன்றத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதிலிருந்து இவர் தம் பொதுத் தொண்டு தொடங்கியதெனலாம். இவ்வாறு உள்ளூராட்சி மன்றத் தலைவராகக் கடமையுணர்வோடு செயலாற்றிய காலத்துக் காந்திய நெறிகளையும், சிரமதான இயக்க முறையையும் பயன்படுத்தி வெற்றி கண்டவர் திரு. ஞானசூரியன். உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?

உலகத் தமிழர் வேற்றுமையின்றி ஒன்றுபட்டு இயங்கி, ஒருவர்க்கொருவர் உதவிச் சிறப்புறவேண்டும் என்பது இவர் தம் தணியா விருப்பம். ஆகவே, உலகத் தமிழர் கலை, மொழி, பண்பாட்டுத் துறைகளில் மேம்பாடுற்றுச் சிறக்கப் பாடுபடும் உலகத் தமிழர் பண்பாட்டியக்கத்தின் துணைத் தலைவராக இவர் இலங்குவதில் வியப்பில்லை அல்லவா? இதே நோக்குடைய உலகத் தமிழர் மறுமலர்ச்சி நிலையமும் இவரை இயக்குநராகக் கொண்டு செயற்பட்டுப் பல திட்டங்களில் வெற்றியீட்டியுள்ளது. உலகெங்கணும் தமிழ்ப் பள்ளிகள்—குறிப்பாக இலண்டனில் தமிழ்ப் பள்ளிகள் தமிழர் கணிசமான அளவில் வாழும் பகுதிகளில் எல்லாம் நடைபெற வேண்டுமென்பது இவர்தம் தணியா ஆவல். இலண்டன் கிழக்குப் பகுதியில் இயங்கி வரும் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியின் தேர்வாளரான இவர் சிறப்பாகத் தேறும் பள்ளிப் பிள்ளைகளுக்கு வருடா வருடம் பரிசுகள் வழங்கி ஊக்குவிப்பதோடு, மற்றைய இதர தமிழ்ப் பள்ளிகளிலும் தொடர்பு கொண்டு ஆவன செய்து வருகிறார்.

இலண்டன் நூலகங்களில் தமிழ் நூற்கள்
சைவப் பணியாக ஆங்கில நூல்

இலண்டன் நூல் நிலையங்களில் தமிழ்மொழி நூற்கள் இடம் பெற்றிடச் செய்தது இவரது ஏற்பாடே. சைவ சமயத்தின் மீது ஆழ்ந்த பற்றுண்டு இவருக்கு. இலண்டன் சைவ சித்தாந்த நிலையத்தின் நெறியாளரான இவர் மேற்கு நாடுகளில் சைவ நெறியைப் பரப்பும் நோக்குடன் ஆங்கிலத்தில் சைவ சித்தாந்த விளக்கமாக "A Date with Destiny" என்ற நூலை இயற்றி வெளியிட்டுள்ளார்.

தமிழ் மொழி, தமிழர் மேம்பாட்டுக்காக நிகழும் செயல் எதுவாயினும் அதில் திரு. ஞானசூரியனுக்கும் பங்கிருக்கும். மாரிசியசுத் தீவில் 1980 ஆக்ஸ்டில் நிகழ்வுற்ற உ. த. ப. இயக்க மாநாடு சிறப்புற அமையப் பெருமளவில் ஒத்துழைப்பு, அறிவுரை நல்கிய இவர் ஏதிலிக் (அனாதை) குழந்தைகள் நல்வாழ்வுக்கெனப் பெருந்தொகையொன்றைத் திரட்டி அனுப்பியுள்ளார். அத்தகு நற்றொண்டுக்கென இவருக்கு அண்மையில் "சைவத் தமிழ் மணி" என்ற சிறப்புப் பட்டமும் வழங்கப் பெற்றது. அடுத்த அனைத்துலகத் தமிழ் மாநாடு இலண்டனில் நடைபெறத் தக்க முன்னேற்பாடுகளைச் செய்யும் பணியில் தற்போது ஈடு பட்டுள்ளார் திரு. ஞானசூரியன்.

திருக்குறள் விளக்கிய இலண்டன் தமிழ்க் காந்தி

உலகெங்கணும் வாழும் தமிழர் நலன் கருதி ஆதாய நோக்கின்றி இயங்கும் "இலண்டன் முரசின்" சிறப்பாசிரியரான இவர், தமிழ் மறையான திருக்குறளை ஆங்கிலத்தில் தக்க விளக்கங்களோடு எளிய, இனிய நடையில் தொடர்ந்து வெளியிட்டது நாமெல்லாம் ஒரு முகமாகப் பாராட்ட வேண்டிய நற்செயலாகும். உலகத் தமிழர் சாதி, சமய, அரசியல் வேறு பாடுகளை மறந்து ஒன்றுபட வேண்டுமென மாதத்துக்கு ஒரு முறை ஒரு நாள் உண்ணா நோன்பு நோற்கும் இந்த இலண்டன் தமிழ்க் காந்திக்கு புகழ்மிக்க தமிழறிஞர், அரசியலாளர்களை எல்லாம் நன்கு தெரிந்திருக்கும். தமிழ் ஈழ விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்த காலந்தொட்டே இவருக்கு நன்கு அறிமுகமானவர். தவத்திரு

தனி நாயக அடிகளார், பேராசிரியர் ச. வே. சுப்ரமணியன் (நெறியாளர், அனைத்துலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்), பேரா க. ப. அறவாணன் (திராவிட-ஆப்பிரிக்க மாந்தவியல் துறை தாக்கார் பல்கலைக் கழகம், செனிகல்) ஆகியோரெல்லாம் இவரது நண்பர்கள்.

அடக்கம் அமரருள் உய்க்கும்

பழகுவதற்கு இனியவரான திரு ஞானசூரியன் மிகுந்த தன்னடக்கமுடையவர். "என் முழுமையான பொதுப்பணி இனிமேல்தான் விரைவில் தொடங்கவுள்ளது. அதற்காகவே இதுவரை என்னை அணியப் (தயார்ப்) படுத்திக் கொண்டுள்ளேன் மக்கள் சேவையே மகேசுவரன் பணி என்பது மட்டுமல்ல—மக்கள் சேவையை மிஞ்சிய மகேசுவரன் பணி உலகில் வேறு இருக்க முடியாது என்ற காந்தியடிகளின் கூற்றைச் சிந்தனையிலிருந்திச் செயலில் மலர வைக்க வேண்டுமென்பது என் பேராவல்" என்கிறார் அடக்கமாக.

தமிழுக்கும் தமிழர்க்கும் சிறந்த முறையில் தொண்டாற்றி வரும் ஞானசூரியன் நலத்தோடு நீடு வாழ்ந்திடத் தமிழன்னையை இறைஞ்சுகிறோம்.

—அரங்க முருகையன்

சொல்லகராதி

(எண் : பக்க எண்)

London Saiva Siddhanta Centre

Estd : Hindu New Year, 14—4—79

Phone : 01-531-6435

72 King Edward Road, LONDON E 17,

United Kingdom

OUR AIMS in brief

1. To uphold our motto: "Compassionate service for the welfare of all and a devout life of discipline and voluntary self-denial".
2. To propagate the tenets of Saiva Siddhanta through Temple Service, Gurupoojahs, religious discourses and publications.
3. To inculcate the spirit and practice of Saiva Bhakti and an ethical way of life inherent in a resident Ashrama-life of total dedication through religious service and self-discipline.
4. To emphasize and widen the scope of social relevance and humanitarian service, enshrined in Saiva doctrine, to gain a new momentum in the hitherto neglected areas of community and national welfare.

MAY GOD BLESS YOU ALL



''லண்டன் முரசு'' சிறப்பாசிரியர்

சைவத் தமிழ்மணி: கிருஷ்ண ஞானசூரியன் M.Sc.,

எழுதிய பிற நூல்கள்

1. ''அஞ்சா நெஞ்சம்'' – தமிழ் இலக்கியம்
2. TAMIL CULTURE – an Introduction.
3. THIRUK-KURAL – with selected Translations and Commentary
4. "A DATE WITH DESTINY" – on Saiva Bhakti and Saiva Siddhanta Philosophy
5. ''தமிழா விழித்தெழு!'' உலகத்தமிழ் அரசியல் பற்றியது

Institute for International Tamil Renaissance

72, King Edward Road, London E 17.